
லயன் Top 10 ஸ்பெஷல்! விலை ரூ. 25/-




Tamil Comics Ulagam - King Viswa



மே '95

வெளியீடு நிர்: 112

# ஹாட்-லைன்!

வாசக நண்பர்களே,

வணக்கம். புதிதாய் எதாவது செய்து கொண்டேயிருக்க வேண்டுமென்ற எங்களது ஆசையில் மலர்ந்துள்ள latest brain child தான் நமது லயன் Top 10 ஸ்பெஷல்! சென்ற வருடம் ரூ. 20/- விலையில் சென்சுவரி - ஸ்பெஷல் வெளியிட்டபோது வரவேற்பு எப்படியிருக்குமோ என்ற தயக்கம் நிறையவே இருந்தது! அதிரடியாய் வந்த வெற்றி - நமது வாசகக் குடும்பத்தினருக்கு லயன் மீதுள்ள பிரியத்தை மிக பலமாகப் பறைசாற்றியது! அன்றே தீர்மானித்து விட்டேன் - அடுத்த வருடம் இதைவிடப் பெரியதொரு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று! அந்த எண்ணமும்; தொடர்ந்திட்ட பல நூறு மணி நேர உழைப்பின் பலனும் இப்போது லயன் Top 10 ஸ்பெஷாக உங்கள் கரங்களில்!

கொளுத்தும் கோடை வெயிலில் - பொழுதுபோக்குக்கு டி.வி. மட்டுமே கதி என்றில்லாமல் ரசித்துப் படித்திட பத்து Top ஹீரோக்களின் கதைகளை தேர்வு செய்து வெளியிட்டுள்ளேன்! எனது கதைத் தேர்வை யூகிக்கச் சொல்லி முந்தைய இதழ்களில் போட்டி வைத்திருந்தது நினைவிருக்கலாம்! பத்திற்கு 8 கதைகளை சரியாக யூகித்து எழுதியுள்ள வாசகர்கள் ஏராளம்! ஒரேயொரு வாசகர் (G. ஆனந்த், தாசநாயக்கன்பட்டி) ஒன்பது கதைகளை சரியாக எழுதியுள்ளார். எவருமே 10/10 ஸ்கோர் பண்ணவில்லை என்பதில் எனக்கு வருத்தமே! எனது கதை செலக்ஷனுக்கான காரணங்களை இதழின் பின் பகுதியில் விளக்கமாக எழுதியிருக்கிறேன்! கதைகள் அனைத்தையும் ரசித்து முடித்த பிறகு அந்தப் பகுதியினை படித்துப் பாருங்கள்! இதழின் அமைப்பைப் பற்றியும்; கதைகளைப் பற்றியும் உங்கள் விளக்கமான விமர்சனங்களை தவறாமல் அனுப்புங்கள்! ப்ளீஸ்!

பக்கம் 300ல் 'மாதம் ஒரு ஹீரோ' என்று ஒரு புதிய பகுதியினை அறிமுகப்படுத்தியுள்ளேன்; சுவையாக இருக்கிறதா என்பதை நீங்கள்தான் தீர்மானித்தாக வேண்டும்! தொடரும் மாதங்களில் ஆர்ச்சி; லக்கி லூக்; மாடஸ்டி; XIII போன்ற நமது ஹீரோக்களை இதே பாணியில் விமர்சித்தால் நன்றாக இருக்குமென்பது என் எண்ணம்! நீங்களும் கூட "மாதம் ஒரு ஹீரோ" பயோ-டேட்டா எழுதியனுப்பலாம் - சுவையாக இருந்தால் பிரசுரிக்கப்படும்!

அடுத்த மாதம் ரிப் கிர்பியின் "இரத்தக் கரம்" வரயிருக்கிறது! எப்போதோ வந்திருக்க வேண்டிய இதழ் இது! பல்வேறு காரணங்களால் தள்ளிப் போய் விட்டது!

*ஜூலையில் நமது லயனின் 11வது பிறந்த நாள் வருவது நினைவிருக்கலாம்! பிறந்த நாள் என்றால் ஆண்டு மலரும் உண்டு தானே? லக்கி லூக் தோன்றும் "பூம் - பூம் படலம் !" (காமெடி ஸ்பெஷல் II ) வண்ணத்தில் ஆண்டு மலராக மலரயிருக்கிறது! லக்கி லூக் வரிசையில் இது ஒரு* Top Story! *படிப்பதற்குள் சிரிப்பில் வயிறு புண்ணாகி விடும் - ஜாக்கிரதை!*

*ஹாட்-லைன் பகுதியில் முந்தைய மாதத்து இதழ்களை* review *பண்ணுவது வழக்கம்! ஆனால் இம்முறையோ இரு காரணங்களால் அதைச் செய்திட முடியவில்லை:*

**காரணம் நம்பர் 1:**

*மார்ச் வெளியீடான இரத்தப் படலம்* V & *ஏப்ரல் வெளியீடான 'குற்றத் தொழிற்சாலை' (மறுபதிப்பு) வெளிவருவதில் தாமதமாகி விட்டது!* So - *உங்களது விமர்சனக் கடிதங்களும்* late...!

**காரணம் நம்பர் 2:**

*சென்ற அக்டோபரில் தடைப்பட்ட எனது ஐரோப்பப் பயணத்தை ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் மேற்கொள்வது என்ற எண்ணத்தில்* - Top 10 *ஸ்பெஷல் பணிகளை விரைவாக முடித்துள்ளேன். இந்தப் பகுதியை எழுதும்போது தேதி மார்ச் 30 தான்!*

So - *இரத்தப்படலம்* V *பற்றியும், 'குற்றத் தொழிற்சாலை' பற்றியும் அடுத்த இதழில் எழுதுகிறேன்!*


*ஐரோப்பிய பயணத்தின்போது நமது படைப்பாளர்களை சந்தித்து புதிய பல கதைகளை லயனுக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறேன்! முயற்சிகள் திருவினையாக - ஆண்டவன் அருளும், நண்பர்களாகிய உங்களின் ஆதரவையும் எப்போதும் போல் - இப்போதும் நாடுகிறேன்!*

*மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை* Just take it easy!

*அன்புடன்,*

*ஆசிரியர்*

P.S: இந்த இதழில் இடம் பெறும் ஸ்பைடர் கதையை முதலில் பாருங்களேன்!



"லயன் காமிக்ஸ்" மாத இதழ் வெளியிடுவோர்: பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
தபால் பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 20619
ஆசிரியர்: S. விஜயன்
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 189, போன்: 31159

# மாதம் ஒரு வாசகர்



| | |
|---|---|
| வாசகர் பெயர | : எஸ். எஸ். செந்தமிழ்ச் செல்வன் |
| முகவரி | : No 53, Vihara Lane, Wellawatta, Colombo - 6, Sri Lanka |
| கல்வித்தகுதி | : G.C.E. A/L (கல்விப் பொது தராதர உயர்தர வர்த்தகம்) |
| பொழுதுபோக்குகள் | : ஓவியம் வரைதல், வாசித்தல், ஆக்கங்கள், எழுதுதல். |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : நிச்சயமாக தெரியவில்லை. சுமார் மூன்று வருடங்கள் |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | விடுதியில் தங்கி படிக்கும் போது சக மாணவர்களால். |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரி கைகள் | : Novel Time, India Today, மேகலா, முத்துக் காமிக்ஸ் |
| இதுவரை வந்த கதைகளில் மிகவும் பிடித்தது | : மரண மண்டலம், மரண ராகம், டிராகன் நகரம் |
| உங்களைத் தவிர வீட்டில் வேறு யாரும் படிக்கிறார்களா? | சகோதரர்கள் இல்லாததால் நான் மட்டுமே. |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள் | விரும்பியதை சேகரித்து வைப்பேன். |


காயமடைந்த கார்ஸனை நண்பர்களின் பராமரிப்பில் விட்டுவிட்டு, ப்ரெண்டிடம் விடை பெற்றுக் கொண்டு ஜிலா பாலைவனப் பகுதியை நோக்கி பயணமானார் டெக்ஸ் வில்லர்...
சோர்வடையாதே டைனமைட்! இன்னும் அரை மணி நேரத்தில் நாம் அதோ தெரிகிற மலைத் தொடரின் அடிவாரத்தை சென்றடைந்து விடலாம், அங்கே நீ வயிறு முட்ட சுனை நீரை பருகலாம்... வேண்டியமட்டிலும் ஓய்வெடுக்கலாம்.
டெக்ஸ் வில்லர் தோன்றும்
பாலைவனப் பரலோகம்!
ஆனால் இலக்கை சென்றடைவதற்கு சற்று முன்னதாக...
ஹே... என்ன இது? - விநோதமாக...!
எல்லையை குறிக்கும் அடையாள கம்பமா...? இருக்க முடியாதே!
அதனருகே தெரிகிற தடங்கள் -ராட்சஸத்தனமாய் இருக்கின்றனவே!
மனிதனின் காலடித் தடங்கள் அல்ல... ஏதோ ஒரு ராட்சஸ விலங்கினுடையது!
இது மாதிரி ஒன்றை நான் என் வாழ்நாளில் பார்த்ததேயில்லை...


ம்... கிளம்பு டைனமைட்! என் ஆர்வத்தை தூண்டுகின்றன இந்த புதிரான காலடி தடங்கள்..! பின்பற்றிச் சென்றுதான் பார்ப்போமே!
ஆனால் மலையடிவாரத்தை தொட்டதும் பாறை பகுதியில் அந்த தடங்கள் புலப்படவில்லை.
சே.. அவ்வளவுதானா?
எனினும் முயற்சியை நாளை தொடரலாம்... நேரமாகிவிட்டது.. இரவை கழிக்க பழைய சுனை அருகே முகாம் அமைத்துக் கொள்ளப் போகிறேன்.
சாப்பாட்டை எளிய முறையில் முடித்துக் கொண்டு படுத்த டெக்ஸ் வில்லர் சீக்கிரமே அயர்ந்து தூங்கலானார். சுமார் இரண்டு மணி நேரம் கழித்து...
ஹீஹீஹீ...
ம்ம்... டைனமைட் எதையோ கேட்டிருக்க வேண்டும்!
எல்லா புலன்களையும் கூர்மையாக்கிக் கொண்டு, விசுவாசமிக்க டைனமைட்டை மிரளச் செய்த, ஆபத்து என்ன என்று கண்டறிய முயன்றார்.
டைனமைட்.... சற்று அமைதியாக இரு!
இங்கே முகாமிட்டுத் தங்கியது தவறோ என்று இப்போது உறுத்துகிறது... ஆனால் அக்கம் பக்கத்தில் வேறெங்கும் இந்த அளவு தண்ணீர் வசதி கிடையாது - அதுமட்டுமல்ல...



சட்டென்று அவருடைய நினைவோட்டம் தடைப்பட்டது...
ஹாயீயீயீ....
?
டுமீல்
டுமீல்
டெக்ஸ் வில்லரின் துப்பாக்கி முழக்கத்தைத் தொடர்ந்து தொலைவில் கிறீச்சிடும் ஓலமும் கிளைகள் முறிந்து விழும் ஓசையும் இணைந்து கேட்டது!
கிறிச்!
க்ராக்!
அதைத் தொடர்ந்து எதிரொலி ஒன்று தூரத்தில் கேட்டது... பின்னர் விநோதமான அந்த ஓலம் விலகிச் சென்று தேய்ந்து ஓய்ந்து போனது...
இரவு வேளை விருந்தாளி போய்விட்டார்!
சரியாக தாக்கினேனா... இல்லை சும்மா மிரண்டோடச் செய்தேனா? அது என்ன வகையை சேர்ந்த விலங்கோ தெரியவில்லை!
அதன் பிறகு விடியும் வரை வேறு அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. பகல் வெளிச்சத்தில் சுற்றுப் புறத்தை தீவிரமாக ஆராய்ந்தார்... டெக்ஸ் வில்லர்
ம்ம்.. ஓலம் இந்த திசையிலிருந்துதான் வந்தது - இன்னும் சுமார் பத்து மீட்டர் தள்ளி என்று நினைக்கிறேன்! ஓ.. கண்டு பிடித்துவிட்டேன்


இதோ - முறிந்து விழுந்த கிளை... இரத்தச் சொட்டுக்கள்
காலடி தடங்கள்
இந்த பிராந்தியம் என்ன சபிக்கப்பட்ட பிரதேசமா? இல்லை நான்தான் தீக்கனவு கண்டு கொண்டிருக் கின்றேனா?
இந்த தடங்கள் இயற்கையாகத் தெரியவில்லை... இதில் ஏதோ புதிர் இருக்கிறது!
..இவை மலைச் சிங்கத்தின் காலடித் தடங்கள் என்பதில் சந்தேகமேயில்லை!
ஆனால் - தடம் இவ்வளவு பெரியது என்றால் அந்த மிருகம் காட்டெருமை அளவுக்கும் பிரம்மாண்டமானதாக அல்லவோ இருக்க வேண்டும்!
ரெட் விங்கின் கிராமம் இங்கிருந்து மூன்று மணி நேர பயண தொலைவில்தான் இருக்கிறது... உடனடியாக அங்கே நான் போக வேண்டும்.
பயண முடிவில்...
ம்ம்... மனித நடமாட்டத்தையே காணோமே... கிராமம் சிதிலமடைந்து கிடக்கிறது.



நெருங்கிச் சென்று பார்த்த போது, புதிரான கம்பம் ஒன்று அங்கேயும் நிறுத்தப் பட்டிருந்ததை டெக்ஸ் கண்டார்..
இங்கேயும் இருக்கிறதே!
கிராமத்தை யாரோ வெறித்தனமாக தாக்கி அழித்திருந்தார்கள்.
இங்கேயும் அந்த மிருகத்தின் காலடித் தடங்கள் தென்படுகின்றன. தவிர மனித காலடி தடங்களும் உள்ளன.. வெளியேறிச் சென்ற கிராம மக்களுடையதாக இருக்கலாம்.
தடங்கள் இரண்டு நாள் பழயதாக உள்ளன மக்கள் கனத்த சுமையோடு சென்றதாக தெரிகிறது... விரட்டிப் பிடிப்பதில் சிரமம் இராது!
மறுநாள் பிற்பகல் வேளையின் தொடக்கத்தில் ரெட்விங்கின் கூட்டத்தை டெக்ஸ் விரட்டிப் பிடித்து விட்டார்...
அதோ போகிறார்கள்


ஓடு.. சீக்கிரம்!
சற்றைக் கெல்லாம்..
வேர்.. மாண்புமிகு பான்ஹைக்கு என் வணக்கங்கள்
ஹோ... தீரபுருஷர் 'இரவுக் கழுகு'க்கு என் வாழ்த்துக்கள்
டெக்ஸ் வில்லருக்கு இரவுக் கழுகு என்று செவ்விந்தியர்களிடையே ஒரு பெயருண்டு
ம: ந்திரீக வைத்தியரே... ரெட் விங் எங்கே காணோம்?
'இரவுக் கழுகு' மீண்டும் ரெட் விங்கை காண இயலாது.
என்னதான் நடந்தது?
தலைவர் மானிடோ தேவதையின் காலடியை சென்றடைந்து விட்டார்.
தங்கள் பிராந்தியத்தினுள் ஊடுருவிய எதிரிகளை வீராவேசமாக எதிர்த்தனர் பைவ்ட்ஸ்... விளைவு - தங்கள் பூமியை இழந்தனர்... தலைவனை இழந்தனர்.. இளம் வீரர்களை பறி கொடுத்தனர்.
பைவ்ட்ஸ் - செவ்விந்தியர் பழங்குடியினம்
கொஞ்சம் தெளிவாகத்தான் சொல்லுங்களேன்!
வேர!


வந்த எம தூதர்களின் பலத்திற்கு பைவ்ட்ஸ் ஈடு கொடுக்க முடியவில்லை... நாசம் விளைந்தது...
எமதூதர்கள் என்றால்?... வழியில் விநோதமான ராட்சஸ தடங்களை கண்டேன் -அதற்கும்.. இதற்கும்..
ஆம்... சம்பந்தமுண்டு! 'இரவுக் கழுகு'க்கு ஆயுள் கெட்டி... இல்லை என்றால் முந்தைய இரவில் விபரீதம் நிகழ்ந்திருக்கும்.
கொடூரமான முகங்கள்... நெருப்பை உமிழும் விழிகள்... காற்றைவிட வேகமாக பாயும் ராட்சஸ விலங்குகளோடு...
...விண்ணிலிருந்து வந்தார்கள் - பூமியை உடைமையாக்கிக் கொள்ள.. பணிந்தவர்களுக்கு உயிர்பிச்சை உண்டு...அவர்கள் மட்டுமே நிம்மதியாக வாழலாம்.
பான்ஹை பேசும் பேச்சா இது?
இல்லை... அந்த எமதூதர்கள் விடுத்த செய்தியின் வாசகம் இது..
வேறு என்னவெல்லாம் சொன்னார்கள்?
அந்த புனித கம்பங்களை இரவுக் கழுகு' பரர்த்தாரா?
பார்த்தேன் - இரு வேறு இடங்களில்!
அப்படியானால் இதை கவனமாக கேளுங்கள்!



செவ்விந்தியனே அல்லது இங்கிலீஷ் வீரனே அந்த பிராந்தியத்தினுள் ஊடுருவினால் விபரீத விளைவுகளை சந்திக்க நேரிடும்.
அந்த எமதூதர்களின் அடிமைகளான ராட்சஸ விலங்குகள் இரவில் நாலாதிசைகளிலும் ரோந்து போகின்றன.. எதிர்ப்பட்டோரை கடித்து குதற தவறுவதேயில்லை.
இந்த எச்சரிக்கையை நான் நன்கு நினைவில் இருத்திக் கொள்வேன்!
பைவ்ட்ஸ் இப்போது போவது எங்கே?
அமைதிப் பூமியைத் தேடி!
கானகப் பகுதிக்குச் சென்றுவிட உத்தேசம்!
இறைவன் விட்ட வழி என்று கிளம்பி விட்டோம்!
எனக்கும் ஒரு உபகாரம் செய்ய முடியுமா?
சொல்லுங்கள்!
நீங்கள் சொல்லும் பாதையில்தான் நவஜோக்களின் பூமி இருக்கிறது என்னிடமிருந்து ஒரு செய்தியை நீங்கள் அங்கே எடுத்துச் சென்றால்...
...உங்களுக்கு அங்கே தடபுடலான உபசரிப்பு கிடைக்கும்
செய்தி என்ன... சொல்லுங்கள்!


என்னிடம் சொன்ன தகவல் அனைத்தையும் நவஜோக்களிடம் விவரிப்பதோடு 'இரவுக் கழுகு' போராட்டத்தில் இறங்கிவிட்டார் என்றும் தெரிவிக்க வேண்டும்!
அவர்களிடமிருந்து விலகி கிழக்கு நோக்கி பயணமானார் டெக்ஸ்..
சற்று மிகைப்படுத்தி சொல்கிறான் கிழவன் என்று தோன்றுகிறது. ஆனாலும் நான் சில முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்து கொள்வதுதான் விவேகம்!
இதற்கிடையில் - ஜிலா, யுமா ஆகிய இரு பாலைவன பரப்புகளுக்குமிடையே செங்குத்தான பக்கங்களை கொண்ட ஒரு மேட்டுப் பகுதியின் மையத்தில்...
வேண்டாம்.. சொன்னால் கேள் என்டபென்... ஆபத்தான சங்கதி!
வேறு வழி இல்லை கரோஸ்... எனக்கு பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது... வின்டெக்ஸின் நோக்கம் இன்னுமமா உனக்கு புரியவில்லை?
புரியாமலென்ன!
நாம் என்ன ஆயுள் முழுக்க இவரோடு இருக்கப் போகிறோமா என்ன... கொழுத்த சம்பளம் தருகிறார்... ஒரு வருடம் இருப்போம். பிறகு பணக்காரர்களாகிவிடலாம்
காலம் கடந்த செயலாகி விடும் அப்போது
நீயும் என்னோடு புறப்படு கரோஸ்! இன்றிரவு வெளியே காவல் காக்கும் பொறுப்பு என்னுடையது!
இல்லை!
ஏற்கனவே நான் சொன்னதுதான்... இந்த கொடிய நரகத்திலிருந்து இவ்வருட கடைசியில் கழிற்றிக் கொள்வேன்!
சரி.. உன்னோடு இனியும் விவாதிப்பதில் அர்த்தமில்லை!



சற்று நேரம் கழித்து -
..எஸ்டபென் இன்றிரவு தப்பியோட திட்டமிட்டிருக் கிறான்..
நாய்... நன்றி கெட்ட நாய்..
ஜூமாக்களை அனுப்பி கைது செய்யட்டுமா..?
தப்பியோடட்டும்.. பிறகு அழித்து விடுவோம் இந்த ராஜாங்கத்தின் காவலர்களை!
அன்றிரவு -
நான் தப்பிச் சென்று விட்டதை அவர்கள் மூன்று மணி நேரம் கழித்துத்தான் தெரிந்து கொள்வார்கள்!
..அதற்குள் நான் அந்த ராட்சஸ பிறவிகள் என்னை நெருங்க முடியாத பாதுகாப்பான தொலைவுக்கு சென்று விடுவேன்.
ஆனால்
அதோ போகிறான்.
அடுத்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய் ஜார்!
அப்படியே ஆகட்டும் பிரபு!
போ!


அந்த முரடன் அங்கிருந்த பிரம்மாண்டமான சக்கரத்தை நெருங்கி அதை சுழற்றத் தொடங்கினான்...
ஒரிரு நிமிடங்களுக்குப் பின் கீழே இரண்டு ராட்சஸ மலைச் சிங்கங்கள் ஆக்ரோஷ உறுமலோடு வெளிப்போந்தன..
கர்ர்ர்.....
ஐயோ... அது ராட்சஸ விலங்குகளின் உறுமல் அல்லவா நான் தொலைந்தேன்!
உர்ர்ர்ர்...
மர்ம மனிதர்கள்
மரணத்தோடு நடக்கும் பந்தயம் இது - ஓடு...!


உனக்கும்தான் ஆபத்து... ஓடு
-உச்ச வேகத்தில்!
கிரிரிரி.......
சைத்தான்கள்.. நெருங்கி வந்து விட்டனவே!
டுமீல்! டுமீல்!
ராரரார....
டுமீல்!
உர்ர்ர்ர்....


ஆஆஆஆ
கிரிரிரி.....
ஹீஹீஹீஹீ...
ஆஆஆஆஆ...
பிரபு! ராஜாங்த காவலர்கள் தங்கள் கடமையை செவ்வனே நிறைவேற்றி விட்டனர்!
இன்றிரவு முழுக்க சுதந்திரமாக அலைய விட்டு விடு!
நாளை விடிகாலையில் அந்த துரோகியின் சடலத்தை மீட்டுவர இரண்டு அடிமைகளை அனுப்புகிறேன். அதைப் பார்த்து மற்றவர்கள் தெரிந்து கொள்ளட்டும் - தப்பியோட நினைத்தால் என்ன சம்பவிக்கும் என்று!
உத்தரவு பிரபு!



சில திமிடங்களுக்குப் பின் அந்த விநோத பேர்வழி பிரமிட் போன்ற அமைப்பினுள் நுழைந்தான்...
நன்றி கெட்ட ஜென்மங்கள்... இவர்களுடைய சந்தோஷத்திற்கு நான் பாடுபடுகிறேன்... இவர்களானால் நம்பிக்கைத் துரோகத்துக்கு நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
திற!
இதோ.. பிரபு!
பூம்ம்ம்!
ம்ம்... என் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரே நபர்... ஆனால் ஒரு துரதிர்ஷ்டம் என்னவென்றால் இவன் மெக்ஸிகன் வம்சாவளியை சேர்ந்தவனல்ல... இன்னொரு பரிதாபம் - என்றைக்கு என் இலட்சியம் ஈடேறுகிறதோ அன்றைக்கு நான் இவனை பலி கொள்ள வேண்டியுள்ளது!


வாழ்த்துக்கள்.. இளைஞனே!
ஓ.. குட் ஈவ்னிங் புரபஸர்!
ஹெர்மான்! புரபஸர் என்று அழைக்காதே என்று உன்னிடம் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன்
ஸாரி... பழக்க தோஷம்... புரப.. ஸாரி - பிரபு!
இதுவும் அவசியமில்லாதது என்னை நீ வின்டெக்ஸ் என்றே விவரிக்கலாம்! நீ என் அடிமைகளில் ஒருவனல்லவே!
விளைவு எப்படியிருக்கிறது?
இது இரண்டாவது இஞ்செக்ஷன்
தாங்க முடியாத நிலை வந்து விட்டதா?
இன்னும் இல்லை
கினியா பன்றிகளிடம் தென்பட்ட விளைவை நீங்கள் நினைவு கூர வேண்டும்... மருந்தின் அளவு அதீதமானதோ என்பது என் கருத்து
இருபது ஆண்டு கால கடும் ஆராய்ச்சியின் முடிவை நீ சந்தேகிக்கிறாயா
அப்படிச் சொல்லவில்லை ஆனால் சென்ற வாரம் நடந்த சம்பவத்தை என்னால் மறக்க முடியவில்லை
ம்ம்... அது ஒரு விதிவிலக்கு!


நான் கடுமையாக எச்சரித்திருந்தும் அவன் அளவுக்கு மிஞ்சி மதுவை உட்கொண்டிருந்ததுதான் காரணம்... அது மனமயக்கத்தை தோற்றுவித்திருக்கிறது.
இருக்க-லாம்!
ஆனால் திடீரென்று பித்துப் பிடித்த நிலை ஏற்பட்டதற்கு அதீதமாக மது உட்கொண்டது மட்டுமே காரணம் என்று நான் நினைக்கவில்லை. அப்போது நான் தற்செயலாக அங்கே இருந்தேன் -அவனிடமிருந்து சுமார் இருபது அடி தூரத்தில்! தன் தலையை இருகரங்களாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தான்.
வேதனை தாளாமல் அவன் முனகுவதையும் என்னால் கேட்க முடிந்தது... என்னவாயிற்று என்று கேட்க நான் அவன் அருகே போனேன்...
?
ம்ம்ம்...
சட்டென்று சிலிர்த்தெழுந்தான்... கண்மூடித் திறப்பதற்குள் மேட்டின் விளிம்பை நோக்கி ஓடியவன் அப்படியே பாய்ந்து விட்டான்.
ஐயோ... அம்மா...
மனப் பிரமையினால் ஏற்பட்ட விபரீதம் அது.. மை டியர் ஹெர்மான்!
இருக்கலாம்!
வாதிட்டது போதும் ஹெர்மான்! என் கருத்துக்களை சர்ச்சைக் குரியதாக்க வேண்டாம்!
உனக்கு கௌரவம் மிக்க பதவி கொடுத்திருக்கிறேன். உனக்கு கிடைத்த பெருமையாக அதை நீ கருத வேண்டும். நான் யார் என்பதை நீ எப்போதும் மறந்து விடலாகாது.
?


என் ராஜாங்கம் இன்னமும் சிறியதுதான்.. ஆனால் என்னைக் கண்டு இந்த பூவுலகம் நடுநடுங்கப் போகும் நாள் அதிக தொலைவில் இல்லை!
மகோன்னதமான இந்த ராஜாங்கத்துக்கு வித்திட்டவன் இந்த வின்டெக்ஸ்..!
மன்னாதி மன்னன்... இந்த வின்டெக்ஸ்.
கடவுளே!
நீ..? எல்லாம் வல்ல வின்டெக்ஸுக்கு மரியாதை செலுத்த மறுக்கிறாயா.. என் காலில் விழு... மண்டியிட்டு வணங்கு.
?
என் ராஜாங்கத்தை அங்கீகரிக்கத் தவறினாலும், என் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய மறுத்தாலும் என் காவலர்களின் கோரைப் பற்களால் கிழிபட்டு சின்னாபின்னமடைவார்கள். மன்னாதி மன்னன்.. இந்த வின்டெக்ஸ்!
ஓ.. தேவனே -என்னை மன்னியுங்கள்!
நான் பயந்தது நடந்துவிடும் போலிருக்கிறது. புரபஸர் கார்மஜேஸுக்கு சித்தம் பேதலித்து விட்டது!
அதே வேளையில் - ஸரிடாவிலுள்ள ஒரு உணவுச் சாலையில்...
உன்னை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன் வில்லர்... ஆனால் உன் மனம் புண் படுமே என்றுதான் -
இழுக்க வேண்டாம். பளிச்சென்று விஷயத்துக்கு வாருங்கள் ஷெரீப்!


கடை முதலாளி மாக் டெர்மாட் சொன்னார் - நீ அவரிடமிருந்து ஏகப்பட்ட டைனமைட் குச்சிகளை வாங்கினாயாமே
வாஸ்தவம்! அதனால் என்ன?
இல்லை.. வந்து - நீ என் நிலைமையை கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும்
எதுவுமே எனக்கு விளங்கவில்லை... கொஞ்சம் தெளிவாகத்தான் சொல்லுங்களேன்!
ம்ம்..வந்து
பில்... ஏன் சுற்றி வளைக்கிறீர்கள்... எனக்கு தெளிவாக புரிந்து விட்டது... இந்த குள்ளநரிப் புத்தியுடைய ஆசாமிக்கு ஸ்பானிஷ் சுரங்கம் இருக்குமிடம் தெரிந்து விட்டிருக்கிறது...
அந்தக் காலத்தில் ஸ்பெயினிலிருந்து வந்து குடியேறிய ஒரு குழு பெரியதொரு தங்கச் சுரங்கத்தைக் கண்டு பிடித்ததாக வதந்தி நிலவியது. அனைவருக்குமே அந்தச் சுரங்கத்தைக் கண்டு பிடித்திட தீரா வெறி
..தேட்டை மொத்தத்தையும் தனக்கே சொந்தமாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறான்... இல்லை என்று சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம்.
அ..ஹ்!
கும்!
இதுவரை யாரும் என்னை எத்தன் என்று சொன்னது கிடையாது. வேறு யாருக்காவது அதைச் சொல்லத் துணிவிருந்தால் மீண்டும் நான்
அமைதி அமைதி!


நீ அடித்து வீழ்த்திய ப்ரான்ஸன் ஒரு உளறுவாயன்... உன் மீது பழி போட வேண்டும் என்று அவன் அப்படி சொல்லவில்லை!
தொலைகிறான்!
அனைவருக்கும் குட்... நைட்!
?
ஷெரீப்... அவனை உங்களுக்கு நன்றாகத் தெரியுமா... எப்படிப் பட்ட பேர்வழி?
யார்.. வில்லரா? பார்த்திருக்கிறேன்... அவருடைய பெருமைகளை கேட்டிருக்கிறேன்..
தனக்கு நியாயம் என்று தோன்றிய எதையும் செய்யத் தயங்காதவர்... ரேஞ்சராக, ஷெரீப்பாக இப்படி வெவ்வேறு பதவிகளில் இருந்திருக்கிறார்... நவஜோக்களின் தலைவர் என்று கூட சொல்லக் கேள்வி!
நீங்கள் அவரை விட்டு விலகியே இருப்பதுதான் உங்களுக்கு நல்லது...
எங்களுக்கு ஒரு விஷயம் தெரிய வேண்டும் ஷெரீப்..
வில்லருக்கு ஸ்பானிஷ் சுரங்கம் இருக்குமிடம் தெரியுமா?
யெஸ்!
செவ்விந்தியர்களுக்குத்தான் அந்த இடம் சரியாகத் தெரியுமாம்... இவர்தான் அவர்களுடைய நண்பராயிற்றே


இவ்வளவு தெரிந்தால் போதும் எங்களுக்கு!
ஆமாம்... வேறெதுவும் தேவையில்லை!
இதற்கிடையே இரவை ஸரிடாவில் கழிக்காமல் உடனே புறப்படத் தீர்மானித்தார் டெக்ஸ்
உதவாக்கரை ஆசாமிகள்!
சாமான்களை சுமந்து வர கழுதைக்கு பதிலாக நல்ல குதிரை ஒன்றை நான் வாங்கியது நல்லதாகப் போயிற்று.. கழுதை என்றால் அதை நகர வைக்கவே பெரும்பாடாகியிருக்கும்.
இப்போது நான் வேகமாக விலகிப் போய்விட முடியும்! ஸ்டோன் பாலைவனப் பகுதியைச் சென்றடைந்து விட்டால் பிறகு என் தடத்தைப் பின் தொடர யாருக்கும் வாய்ப்பில்லாது போகும்
ஸ்பானிஷ் சுரங்கங்கள்...? ப்பூ...!
?
?


பார்த்தர்யா? விடியும் வரை காத்திருக்கக் கூட பயலுக்கு பொறுமையில்லை!
நாமும் உடனே கிளம்பலாம்!
வேகமாக தேவையான சமான்களை சேகரித்துக் கொண்டு இருபது பேர் அடங்கிய அந்தக் கும்பம் டெக்ஸ் சென்ற வழித்தடத்தை பின்பற்றி விரைந்தது.
இதற்கிடையே சில மைல் தொலைவு வடக்காகச் சென்ற டெக்ஸ் வில்லர், ரியோ ஸ்லாடோ நோக்கி திரும்பினார்
ஆற்றைக் கடந்து அதன் கரையோரமாகவே மேல் நோக்கி ஐந்து மைல் தொலைவு சென்றார்.
அந்த மூடர்களின் நேரத்தை வீணடிக்கவே இந்த யுக்தி
என் தடத்தை காண முடியாமல் அவர்கள் தவிக்கும் போது அவர்களுடைய மூஞ்சி போகிற போக்கை கண்டு ரசிக்க முடியாதே என்று வருத்தமாக இருக்கிறது.
ஏகப்பட்ட நபர்கள் என்னை பின் தொடர்ந்து வருவது சர்வ நிச்சயம்!


அதே சமயம் -ஸ்டோன் பாலைவனத்தின் எல்லையோரத்தில்
கொன்று விட்டால் என்ன?
அவசியமில்லை... ஸ்டோன் பாலைவனம் வரை கொண்டு போய் கடாசி விட்டால் போதுமானது!
பாலை வனத் திருடர்கள்
மெக்ஸிகோவுக்கு நீ திரும்பிச் செல்லும் போது கிராமவாசிகளின் தோட்டா உன்னை வரவேற்பது உறுதி... உன் பித்தலாட்டம் உடனே இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் வெளிப்பட்டு விடும். அப்போது நீ அபகரித்த இந்தப் பணம் உன் உயிரை காப்பாற்றிக் கொள்ள உதவாது..
கிராமவாசிகள் அவ்வளவு புத்திசாலிகள் இல்லை..
அத்தோடு, ப்யூப்லோவுக்கு திரும்பிச் செல்லும் அளவுக்கு நாம் என்ன அடிமுட்டாள்களா?
சரி.. கிளம்பு!
ஏன் இப்படி ஓடுகிறாய்... யாரோ நம்மை விரட்டிக் கொண்டு வருகிற மாதிரி?
தெரியும்.. ஆனால் நெடுந்தூரம் நாம் போக வேண்டு மில்லையா?



கால் மணி நேரம் கழித்து -
லோபோ.. இவனை இங்கே போட்டு விடலாமா?
இல்லை... கல்லுடைக்கும்
இதற்கிடையே, சில மைல் தொலைவில்..
ம்ம்.. சற்று நேரத்திற்கு முன் இங்கே யாரோ தங்கிச் சென்றிருக்கிறார்கள்.
சாம்பல் இன்னமும் சூடாக இருக்கிறது.. கைகலப்பு நடந்த தடயம் மணலில் தென்படுகிறது..
ம்ம்.. காலணி தடங்களும் வெற்றுப் பாதங்களின் தடங்களும்... ஒரு வெள்ளையன் - இரு செவ்விந்தியர்கள்.
இந்த தடங்கள் யாஹூஸ் இன செவ்விந்தியர்களுடையது என்று நம்ப காரணம் இருக்கிறது..
இதோ... அந்த வெள்ளையனை தூக்கி குதிரை மேல் ஏற்றியிருக்கிறார்கள் விவகாரம் சற்று புதிராக இருக்கிறதே!



அவர்களை விரட்டிச் செல்வதை தவிர வேறு வழியில்லை... அத்தோடு ஸ்டோன் பாலைவனப் பகுதிக்கு நான் இவ்வழியாகத்தான் பயணம் செய்தாக வேண்டும்.
இந்த பிராந்தியத்தில் விவகாரமாக ஏதேதோ நடந்து கொண்டிருக்கிறது என்பதில் இரு வேறு கருத்து இருக்கவே முடியாது.
அதே வேளையில் -
அவனை தூக்கி பள்ளத்தில் கடாசு. ஸிகோ!
பொறுங்கள்.
நான் பெரும் பணக்காரன்... என்னை மெக்ஸிகோவுக்கு நீங்கள் அழைத்துப் போனால் இப்போது நீங்கள் என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டதைப் போல பத்து மடங்கு பணம் தருவேன்!
யே...!
ஊஹூம் மீண்டும் மெக்ஸிகோ பக்கம் இந்த ஸிகோவோ அவனுடைய நண்பன் லோபோவோ போகத் தயாரில்லை மிஸ்டர்...
என் பேச்சை நம்புங்கள்...
அந்த தருணத்தில் -
ஸிகோ.. யாரோ வருகிற சப்தம் கேட்கிறது... சீக்கிரம்
இதோ.. - போய்த் தொலை!
காப்பாற்றுங்கள்!


குதிரையில் ஏறி விரைய அவகாசமில்லை!
ஐ..யோ யோ..!
ஸிகோ.. வா... பாறையின் பின்னால் ஒளிந்து கொள்வோம்
ஓடு... சீக்கிரம்!
ஆஆஆ..!
சப்தம் இந்தத் திசையிலிருந்து வருகிறது... ஓடு.. டைனமைட்
டுமீல் டுமீல்
டுமீல்
சண்டாளர்கள்! இங்கேயே இரு... டைனமைட்!
விஷ்! விஷ்!
ஏய்.. நீயும்தான்! உன் முதுகில் உள்ள சரக்கை ஒரு தோட்டா தாக்கினால் அவ்வளவுதான்.. அனைவரும் கூண்டோடு கைலாசம் போக வேண்டும்!


டுமீல்
டுமீல்
டுமீல்
நான் ரொம்ப சாமர்த்தியமாக செயல்பட வேண்டும்!
பூம்!
பூம்!
தோட்டாக்களை அநியாயமாக வீணடிக்கிறார்கள்... இப்படியொரு அடிமடையர்களை நான் கண்டதில்லை.
அவனை தாக்கி விட்டோம் என்று நினைக்கிறேன்... பாறையை நோக்கி ஓடும் போது அவன் தட்டுத் தடுமாறியதை கண்டேன்.
அவன் மீது கண்ணாக இரு... நான் சுற்றி வந்து பின்னாலிருந்து அவனை மடக்குகிறேன்!


இருவரும் பாறையின் அடிவாரத்திலேயே கண்ணாக இருந்தனர்...
...ஆனால் டெக்ஸ் மேலே உயரமான இடத்துக்கு போய்விட்டிருந்தார்... அத்தோடு, கச்சிதமாக குறி வைப்பதிலும் வல்லவராயிற்றே!
க்ராக்!
ஆஆஆ...
அவன் எப்படி மேலே போனான்..!
டுமீல்! டுமீல்
யீஈஈ...!
ஆயுதமிழந்த நிலையில் மிரண்டு போய் உயிர் பிழைக்கும் எண்ணத்தோடு தாறுமாறாக ஓடத் தொடங்கினான் அந்த செவ்விந்தியன்...
விஷ்!
விஷ்!
விஷ்!
அவனை குறி வைக்காமல், அவனருகே சீறிக் கொண்டு போகுமாறு தோட்டாக்களை அனுப்பி அவனை பீதியடையச் செய்தார் டெக்ஸ்.
விஷ்!
விஷ்!


யீயீ..யா...
ஹா ஆஆ!
மெக்ஸிகனை சுமந்து வந்த குதிரையின் கடிவாளத்தை பற்றிக் கொண்டு பாறைகளினூடே புகுந்து விரைந்தான் அவன்.. அந்தக் குதிரையின் முதுகில்தான் அவர்கள் மெக்ஸிகனிடமிருந்து பறித்துக் கொண்ட பணப்பை இருந்தது.
சில நிமிடங்களுக்குப் பின் -
ஹே..! யார் அங்கே கீழே இருப்பது?
நா..நான்தான்.. இங்கே இந்தப் பக்கமாக கிடக்கிறேன்!
இவனுடைய குரல்வளையை அறுக்க நான் அவகாசம் தரவில்லை என்பது நிச்சயமாகி விட்டது!
குரல் வந்த திசையை நிர்ணயித்து, ஒரு சுருக்கு கயிற்றை பாறையில் கட்டி அதன் வழியாக கீழே இறங்கத் தீர்மானித்தார் டெக்ஸ்...
தெரியும்... முதலில் கயிற்றை பிடித்து இழுத்து உறுதி செய்து கொள்வேன்
கீழே வராதே மிஸ்டர்... இங்கே பாறைகள் கெட்டியாக இல்லை!
மறு நிமிடம் -
உனக்கு பலமாக அடிபட்டிருக் கிறதா?
இல்லை மிஸ்டர்


பசியினால் நான் நிச்சயம் செத்துப் போவேன் என்று கணித்து என்னை இங்கே தூக்கிப் போட்டு விட்டுப் போய் விட்டார்கள். நான் அமர்த்திய யாஹூல் கைடுகள்.
கைடுகளை தேர்ந்தெடுத்ததில் நீ இன்னும் கொஞ்சம் மூளையை உபயோகித்திருக்க வேண்டும்.
ஏறு மேலே..! ஒருத்தன் செத்துப் போனான்.. மற்றவன் தப்பியோடி விட்டான். என்றாலும் நாம் சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்!
உப்ப்...
பின்னர் -
என் பெயர் கார்லோஸ் ஹெர்மான்.. என்னை காப்பாற்றிய உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை.
அதைப் பற்றி இப்போது அலட்டிக் கொள்ள வேண்டாம்.. மிஸ்டர் ஹெர்மான்! நீ ஒரு ஜெர்மானியன் அப்படித்தானே?
என் தந்தை ஒரு ஜெர்மானியர் மிஸ்டர்...
...வில்லர்! நீ என்னை டெக்ஸ் என்றே அழைக்கலாம்!
நீங்களும் என்னை கார்லோஸ் என்று அழைப்பதையே நான் விரும்புகிறேன். என்னை நண்பனாக நீங்கள் பாவித்தால் அது என் பாக்கியம்.
சரி.. இனி ஆகவேண்டியதை பார்ப்போம்!
உனக்கு குறிப்பிட்ட பணி வேறு ஏதுமில்லை என்றால் ஸ்டோன் பாலைவனம் வரை என்னோடு வரலாமா?
நிச்சயமாக வருகிறேன்!



சரி.. அப்படியானால் புறப்படு... என் தடத்திலேயே நீ வரவேண்டியது அவசியம்.. விலகி வேறு பாதையில் போனால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை.
புரிந்து கொண்டேன்
வேறு எதுவும் பேசாமல் டெக்ஸ் வடகிழக்கு திசையில் குதிரையை செலுத்திக் கொண்டு போனார்...
ஒரு மணி நேர பயணத்திற்குப் பின் டெக்ஸ் ஒரு ஆற்றுப் படுகையை நோக்கிச் சென்றார்..
ஸ்டோன் பாலைவனம் இங்கே முடிவுறுகிறது.. ஆனாலும் ஆபத்து விலகிய பாடில்லை... எனவே என் தடத்திலேயே வா
ஓ.கே!
இதற்கிடையே, பின்னால் சுமார் ஐந்து மைல் தொலைவில் -
நான் சொன்னது சரியாகிவிட்டது டாம்! பார்... இதுதான் ஸ்டோன் பாலைவனம்!
ப்சு..! ஆனால் இந்த பிரதேசத்திலா ஸ்பானிஷ் சுரங்கம் இருக்க முடியும்?
அப்படி நான் சொன்னேனா...? நம்மை திசை திருப்பவே டெக்ஸ் இந்தப் பக்கம் வந்திருக்க வேண்டும்!
நம்மை எல்லாம் கோழைகள்; முட்டாள்கள் என்று டெக்ஸ் தீர்மானித்திருந்தால் அது தவறு என்று புரிய வைப்போம் - என்னை பின் தொடர்ந்து வாருங்கள்!


இந்த கல்லுடைக்குமிடத்தை சுற்றிக் கொண்டு போவோம் - நிச்சயமாக டெக்ஸின் வழித்தடத்தை கண்டு பிடித்து விடலாம்!
ஓடு!
ஒரு மணி நேரம் கழித்து -
நில்லுங்கள்..! இதோ பார்த்தீர்களா.. நான் சொன்ன மாதிரியே கண்டு பிடித்து விட்டோம்... தடங்கள் தெள்ளத் தெளிவாக தென்படுகின்றன!
ஏறத்தாழ இரண்டு மணி நேரத்திற்கு முன் டெக்ஸ் இவ்வழியாக போயிருக்கக் கூடும்!
ஆமாம்.. வெகு வேகமாக போயிருப்பதாக தோன்றுகிறது!
அது டெக்ஸ் வில்லரின் தடங்கள் அல்ல - தப்பி ஓடிய செவ்விந்தியரின் தடம் என்பது அவர்களுக்குத் தெரியாது.
உச்ச வேகத்தில் சென்றாலும் நாம் விரட்டிப் பிடிக்காமல் விடப் போவதில்லை -
ஆமாம்.. முன்னேறுங்கள்!
அதே தருணத்தில் -
!
போ.. வேகமாக! அன்ன நடை போட இதுவல்ல தருணம்!


ஆனால் அவன் இழுத்துச் சென்ற குதிரை சட்டென்று திமிறி கடிவாளத்தை அறுத்துக் கொண்டு...
ஹீஹீஹீ....
யே யே -
..அவனிடமிருந்து விலகி ஓடத் தொடங்கியது... புயல் வேகத்தில்
ஐயோ... என் பணம்!
ஹீ...
ஹீ...
பணத்தை இழக்கச் சம்மதிக்காத யாஹு தன் குதிரையை திருப்பினான்..
திரும்பு
அதே சமயம் இரு ராட்சஸ உருவங்கள் அவன் எதிரே வெளிப்பட்டன.. அங்கு நிலவிய ஆழ்ந்த நிசப்தத்தை கிழித்துக் கொண்டு எதிரொலித்தன அவை எழுப்பிய கர்ஜனைகள்.
யாயீஹீ..
கர்ர்...
உர்ர்ர்...
ஐயோ தெய்வமே... இது என்ன சோதனை!
யீயீ ஆஆஹீ..
யீயீயா....


மரண
தாண்டவம்
ஹீஹீஹீ...
யயயா....
கர்ர்ர்ர்....
ஓடு..! ஓட்டம் பிடி...!
ஆனால் ஒரு சில விநாடிகளுக்குப் பின், மின்னல் பாய்ச்சலாக அவன் மீது பாய்ந்தது அந்த மலைச் சிங்கங்களில் ஒன்று
ஆ..ஆ..ஆ..!
ஹீஹீ...


ஹீஹீ....
இதற்கிடையே, டெக்ஸின் தடத்தை பின்பற்றி முன்னேறுவதாக எண்ணிக் கொண்டு இந்த யாஹீவின் தடத்தில் வந்து கொண்டிருந்த ஸரிடா பேராசைக்கார கும்பல் அவ்விடத்தை வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது.
ம்ம்.. வேகமாக வாருங்கள்! தடம் புத்தம் புதிதாக இருக்கிறது... வெகு சீக்கிரமே அந்த ஆசாமியை நாம் பிடித்து விடலாம்!
உர்ர்ர்ர்.....
ஹே.. பில் - அந்த சப்தம்..?
எனக்கும் கேட்டது... நாம் சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்!



க்ர்ர்ர்ர்.....
உர்ர்ர்ர்....
இரண்டு விலங்குகள்... தொலைவில் நிழலோட்டமாக தெரிந்தது..
நானும் பார்த்தேன்... ஆனால் அவை விலங்குகளாக இருக்க முடியாது..
ஏன் அப்படி சொல்கிறாய்?
அவ்வளவு பெரிய விலங்கு எதையும் நான் கேள்விப் பட்டதில்லை..
அதே சமயம் தின்று கொண்டிருந்த இரையை புறக்கணித்து விட்டு புது வேட்டைக்கு கிளம்பி விட்டன அவ்விரு மலைச் சிங்கங்களும்..
அப்போதுதான் அந்த ஸரிடா பேராசை கும்பலுக்கு உண்மை உறைத்தது..
ராட்சஸ விலங்குகள்
தொலைந்தோம்!
நம்பவே முடியவில்லை! மலைச் சிங்கங்கள் போல் இருக்கின்றன - ஆனால்..
சுடுங்கள்..! அவை நம் மீது பாய்ந்தால் நாம் தொலைந்தோம்!
டுமீல்



டுமீல்
டுமீல்
சைத்தானே...
செத்தொழி!
க்ர்ர்ர்ர்....
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல் க்ர்ர்ர்ர்.....
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
உர்ர்ர்ர்.....
சரமாரியாக வந்த தோட்டாக்களால் மோசமாக காயமடைந்த அவ்விரு ராட்சஸ விலங்குகளும் பின் வாங்கி விலகி ஓடத் தொடங்கின...
ஒரு வழியாக ஓடிப் போய் விட்டன..
அவற்றை உயிரோடு விட்டு வைப்பது ஆபத்து
BANG


இவை இரண்டு மட்டுமே இங்கே தனித்து இருப்பதாக எண்ணிவிட முடியாது... மேலே தொடர்ந்து முன்னேறிச் சென்றால் நம் உயிருக்கு உத்தரவாதம் இருக்காது..
?
ஆனால் அவற்றை பின் தொடர்ந்து செல்வது தற்கொலை முயற்சிக்கு ஒப்பாகும்.. நாம் லரிடாவுக்கே திரும்பி விடுவோம்!
அப்படியானால் வில்லர்?
கிறுக்குத்தனமான கேள்வி எல்லாம் கேட்காதே டான்! குதிரையின் சடலத்தினருகே கிடக்கும் எலும்புக் குவியல் வேறு யாருடையது என்று நினைக்கிறாய்?
நான் சொல்வதைக் கேளுங்கள் தோழர்களே! மரியாதையாக ஊர் திரும்புவோம். டெக்ஸின் மரணத்தோடு ஸ்பானிஷ் சுரங்கம் பற்றிய மர்மமும் நரகத்தின் அதளபாதாளத்தில் புதைந்து போய்விட்டது... அது அங்கேயே இருந்துவிட்டுப் போகட்டும்..
ஒத்துக் கொள்கிறேன்!
அதன் பின் சில நிமிடங்களுக்கு டெக்ஸும், கார்லோஸும் கற்சிலை என நின்று கொண்டிருந்தனர். பின்னர் டெக்ஸ் தன் பைனுக்குலரை வெளியில் எடுத்தார்.
என் யூகம் சரிதான்! சம்பந்தமில்லா விஷயத்தில் மூக்கை நுழைக்கும் ஷெரீப்பும், அவருடைய செம்பறியாட்டுக் கூட்டமும்தான் அவர்கள்!
ஏதாவது ஆபத்தா!


புத்தியில்லாத பேராசைக் கும்பல் அது... என்னைப் பின் தொடர்ந்து வந்தால் ஸ்பானிஷ் சுரங்கத்தின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டு விடலாம் என்று அவர்கள் நம்பியதுதான் காரணம்!
கிழிந்தது போ!
நான் கேள்விப்பட்ட வரை அந்த சுரங்கங்களில் தங்கம் பாளம் பாளமாக கொட்டிக் கிடக்கிறதாம்.. கொஞ்சமும் நம்பும்படியாக இல்லை!
விஷயம் முழுக்க முழுக்க கற்பனையோ என்ற சந்தேகம் கூட எனக்கு உண்டு..
ஆனால்.. நீங்களே -
ஆமாம்... நிஜமாகத்தான் சொல்கிறேன் கார்லோஸ்... அந்த சுரங்கங்கள் பற்றி உனக்குத் தெரிந்த அளவுதான் எனக்கும் தெரியும்.
நான் ஸரிடாவில் ஆயுதங்கள், உணவுப் பொருட்கள், கணிசமான டைனமைட் குச்சிகள் ஆகியவற்றை சேகரித்தேன்... சுரங்கங்கள் நிறைந்த பகுதியில் ஒருவன் எதற்காக டைனமைட் வாங்குவான்..? ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று தீர்மானித்து என்னைப் பின் தொடர்ந்து கிளம்பிவிட்டார்கள் - இரகசியமாக!
அவர்களுடைய அனுமானம் தப்பு என்று நான் சொல்ல மாட்டேன்..
ம்ம்...
விலை மதிப்பற்ற புதையலை சொந்தமாக்கிக் கொள்ள யாருக்குத்தான் ஆசை வராது?
நான் இருக்கிறேனே.. - காரணங்கள் இரண்டு!



ஒன்று - நான் முன்பே சொன்ன மாதிரி அது வெறும் கட்டுக் கதை! இரண்டு - தங்கம் தோண்டி எடுக்க வேண்டுமானால் என் பிராந்தியத்தை விட்டு வெளியே வெகு தொலைவு போக வேண்டிய அவசியம் இல்லை.
கரெக்ட்!
இரண்டாவது காரணத்தை நான் மறுத்துவாதிடப் போவதில்லை.. ஆனால் முதல் காரணம் - சரியல்ல
அந்த சுரங்கங்கள் இருந்திருக்கின்றன... பல்வேறு காரணங்களினால் அவற்றின் இருப்பிடம் சரியாக தெரிந்து கொள்ள முடியாதவாறு புதிராகிப் போனது.
ஹே...
அந்த சுரங்கங்கள் பற்றி உனக்கு எந்தவிதமான கருத்தும் இருப்பது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை..! ஆனால் ஒன்று - அது பற்றி மறுபடியும் பேச்செடுக்காதே!
மாறாக, நீ இங்கே வந்ததன் நோக்கம் என்ன என்று சொல் கேட்க ஆவலாக இருக்கிறேன்!
அது ஒரு நீண்ட கதை - டெக்ஸ்!
நேரம்தான் நிறைய இருக்கிறதே - விரிவாகவே சொல்!
என் தந்தை ஒரு ஜெர்மானியர் என்று ஏற்கனவே சொன்னேன். அவர் தொழில் முறையில் ஒரு விலங்கியல் நிபுணர்
குடிபெயர்ந்து அமெரிக்காவுக்கு வந்தவர் மெக்ஸிகோ சென்றார்.. அங்கே சிகுவாகுவா இனத் தலைவரின் ஒரு மகளை மணந்தார். அதைத் தொடர்ந்து ரியோ சோன்கோ பள்ளத்தாக்கு பகுதியில் ஜாதி கால்நடைகளை இனவிருத்தி செய்து செல்வம் கொழிக்க வழி வகுத்தார்...


நானும், என் அண்ணன் விக்டோரியோவும் அவருடைய குழந்தைகள்... நாங்களும் அவரைப் போலவே கால்நடை அபிவிருத்தி நிபுணர்களாக வரவேண்டும் என விரும்பி மேல் படிப்புக்கு ஐரோப்பாவுக்கு எங்களை அனுப்பினார்.
ஆனால் அந்தத் துறையில் விக்டோரியாவுக்கு நாட்டம் இல்லை. எனவே, இரகசியமாக இரசாயனமும், பிராணி - தாவர ஆராய்ச்சிக் கலையும் பயின்றான். பின்னர் விளைந்த விபரீதங்களுக்கு இதுவே அடிப்படை!
அவனுடைய சில கண்டுபிடிப்புகள் அப்போது பெர்லினில் ஆராய்ச்சி நடத்தி வந்த ஒரு விஞ்ஞானியை கவர்ந்தன. முடிவில் என் சகோதரன் போய் அவரோடு சேர்ந்து கொண்டான்..
என் தந்தைக்கு ஏகப்பட்ட கோபம்.. குடும்பத் தொழிலுக்கு அவனை கொண்டு வர அவர் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றுப் போகவே ஒரேயடியாக அவனை தலைமுழுகி விட்டார்...
அவ்வளவு கறார் பேர்வழியா உன் தந்தை!
எங்களை வைத்து எவ்வளவோ பெரிய பெரிய திட்டங்களை எல்லாம் கனவு கண்டு வந்த அவருக்கு அவனுடைய போக்கு பெரும் துரோகமாக தோன்றியதில் வியப்பில்லையே..
..அவனோடு எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று என்னை அவர் எச்சரித்திருந்தும் நான் தொடர்ந்து அவனுக்கு எழுதிக் கொண்டிருந்தேன்.
..ஆகவேதான், மூன்று வருடங்களுக்கு முன், அந்த விஞ்ஞானியோடு அவன் மெக்ஸிகோ வந்த விஷயம் எனக்கு தெரிந்திருந்தது.



அவனை நான் சந்திக்க விரும்புவதாக குறிப்பிட்டு எழுதிய போது மறுப்பாக பதில் வந்தது.
உன்னை சந்திக்க அவன் இஷ்டப்பட வில்லையா?
அப்படியில்லை... அவனுக்கு வசதிப்படவில்லை அந்த விஞ்ஞானியோடு வடக்கே எங்கோ வெகு தொலைவு போவதாக எழுதியிருந்தான்.
ஒரு மாதம் கழித்து க்விட்டோபாலிலிருந்து அவன் எழுதியதுதான் கடைசியாக வந்த கடிதம்.
வழிகாட்டிகளோடு ஜிலா பாலைவனப் பகுதியினுள்ளே வெகு தொலைவு போவதாக எழுதியிருந்தான்.
மீண்டும் கடிதம் எழுதுவதாக வாக்களித்திருந்தான்.. அத்தோடு புரபஸர் கார்மஞேஸ் ஒரு மகத்தான சாதனை புரியவிருக்கிறார் என்றும் குறிப்பிட்டிருந்தான்.. அதன் பின் இன்று வரை வேறு தகவல் வரவில்லை அவனிடமிருந்து.
ம்ம்...
கார்லோஸ்! உன் சகோதரன் இருக்கும் இடத்தை என்னால் யூகிக்க முடிகிறது... அதே சமயம் என் யூகம் பொய்யாக இருந்துவிடக் கூடாதா என்றும் மனம் விரும்புகிறது!
வெறியன் வின் டெக்ஸ்
கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்கள் டெக்ஸ்! விபரீதமாக ஏதாவது நடந்து விட்டதா?
இல்லை! அப்படி சொல்ல வரவில்லை நான்..
முதலில் நீ மிச்சத்தையும் சொல்லி முடி.. அப்புறம் என் யூகத்தை வெளியிடுகிறேன்.


சென்ற மாதம் என் தந்தைக்கு கடுமையான ஹார்ட் அட்டாக் ஏற்பட்டது.. உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்..
உயிர் போகு முன் விக்டோரியோவை கண்டு பேசி அவனோடு சமரசம் செய்து கொள்ள துடிக்கிறார் என் தந்தை
எங்கே போய் தேடுவது என்று தெரியாமல் அவனுடைய கடைசிக் கடிதம் வந்த இடத்தில் தொடங்கி தேடும் படலத்தை தொடர்ந்தேன்.
புரபலர் கார்மேனேல் தன் பரிவாரங்களோடு அவ்வழியாகச் சென்றார் என்று நினைவு கூர்ந்தனர் க்விட்டோபால் ஊர் ஜனங்கள். ஆனால் ஏனோ எவரும் எனக்கு வழிகாட்டியாக வர விரும்பவில்லை.
திரும்பிவிடலாமா என்று நான் தடுமாறிக் கொண்டிருந்தபோது இரு செவ்விந்தியர்கள் என்னிடம் வந்து என் சகோதரன் இருக்குமிடத்துக்கு என்னை கூட்டிப் போவதாக சொன்னார்கள். ஆனால் பெரும் தொகையை கூலியாக கேட்பார்கள். ஆயிரம் பெசோக்கள் என்பது அதிகம்தான்.
ஆனாலும் நான் சம்மதித்தேன்.. தேவையான சாமான்களை ஒரு மட்டக் குதிரையில் ஏற்றிக் கொண்டு பயணத்தை தொடங்கினோம். மிச்சக்கதைதான் உங்களுக்குத் தெரியுமே.
வழிகாட்டிகளா அவர்கள் - கயவர்கள்!
சரி இப்போது சொல்லுங்கள் - என் சகோதரனின் இருப்பிடம் பற்றிய உங்களுடைய யூகத்தை!
அவசரப்படாதே... கார்லோஸ்!



கடந்த மூன்று தினங்களாக கண்டவற்றை உனக்கு இங்கே நான் சொல்கிறேன் அப்புறம் நீயாகவே ஒரு முடிவுக்கு வரலாம்!
தன் அனுபவத்தை விளக்கமாக எடுத்துரைத்தார் டெக்ஸ். அதைக் கேட்ட கார்லோஸின் விழிகளில் பிரமிப்பும், மிரட்சியும் தாண்டவமாடின
இப்போது சொல் கார்லோஸ் - இந்தக் கதையில் உன் சகோதரனின் பங்கு இராது என்று நீ நினைக்கிறாயா?
கடவுளே! நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது!
என் கேள்விக்கு நீ பதில் சொல்லவில்லை இன்னமும்!
இல்லை.. நான் நம்ப மாட்டேன்.. அப்படி இருக்காது!
உன் இஷ்டம்! ஆனால் ஒன்று -மன உளைச்சலுக்கு ஆளாக உனக்கு துணிவில்லை என்றால் இப்படியே மெக்ஸிகோவுக்கு திரும்பிவிடு!
என் சகோதரனை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்து என் தந்தையிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய கட்டாயம் இருக்கிறதே!
ஸாரி.. கார்லோஸ்! உன் சகோதரனையும் புரபஸர் கார்மேலையும் நான் தேடிப் போகவிருக்கிறேன். அவர்களை தேடிப் பிடித்ததும்...
என்ன செய்வீர்கள்?
யூகிக்க முடியவில்லையா இயற்கையின் விதிமுறைகளை மீறுபவர்கள் விளைவை எதிர் கொள்ளத்தானே வேண்டும்!
நானும் உங்களோடு வருகிறேன்!
யோசித்து முடிவு செய்... கார்லோஸ்!


உன்னை மதிக்கிறேன்.. ஆனால் சட்டத்திற்கு புறம்பாக உன் சகோதரனை நீ மீட்டுச் செல்ல முயன்றால் உனக்கு எதிராக செயல்பட நான் தயங்க மாட்டேன்!
நாம் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வோமா?
நீங்கள் என் அண்ணனை கொல்லக் கூடாது.. பதிலுக்கு நான் அவனை சட்ட பரிபாலன அதிகாரிகளிடம் நீங்கள் கொண்டு போவதில் குறுக்கிட மாட்டேன் - சரிதானா?
சம்மதம்..! கடவுள் துணை புரிவாராக!
நன்றி டெக்ஸ்! எனக்கென்னவோ விக்டோரியோ சட்ட விரோத காரியம் எதையும் செய்திருக்க மாட்டான் என்ற நம்பிக்கை இருக்கிறது!
வெளிச்சம் நன்றாக பரவி விட்டது.. ஆனாலும் நீ ரொம்ப விழிப்போடிருக்க வேண்டும்.. இது நிச்சயமாக ஒரு உல்லாசப் பயணமாக இருக்கப் போவதில்லை - மறந்து விடாதே!
ம்ம்..
சற்று கழித்து -
பார்.. நேற்று மோதல் நடந்த இடம்! அந்த ராட்சஸ விலங்குகளின் கால் தடத்தை கவனி!
அடேயப்பா.. எவ்வளவு பெரிது!
உன் சகோதரன் எப்படிப்பட்ட ஒரு வில்லங்கமான திட்டத்தில் பங்கேற்றிருக்கிறான் என்று இப்போதாவது புரிகிறதா?
தான் செய்வது சட் விரோதமான செய என்று அவனுக்கு தெரியாது இருக்கலாம்!



ஆரம்பத்தில் வேண்டுமானால் நீ சொல்வது சரியாக இருக்கலாம்..
?!
போகப் போக அவர்களுடைய கூட்டு ஆராய்ச்சி ஈட்டிய வெற்றி அவர்களுக்கு புத்தி தடுமாற்றத்தை ஏற்படுத்தி யிருக்கலாம்.
ராட்சஸ விலங்கை உருவாக்க சாத்தியமாகி விட்டதால் இனி மனித இனம் மொத்தத்தையும் தங்களுக்கு அடிமையாக்கிவிட முடியும் என்று அவர்கள் மனப்பால் குடிக்கலாம்.
கடவுளே அவர்களை மன்னியும்!
ஆனால் -அவர்களுக்குரிய தண்டனையை மனிதர்கள் வழங்கிய பிறகே கடவுள் அவர்களை மன்னித்து அருளக் கூடும்!
இதற்கிடையே, மெஸாவில் ஒரு குகை அமைப்பினுள் -
ஒருவாறாக தள்ளாடி தள்ளாடி ..கேட்டை தாண்டி உள்ளே நுழைந்ததுதான் தாமதம் அதன் பிறகு ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை.. இன்னமும் மூச்சு இருக்கிறது... ஆனால் சீக்கிரமே அடங்கிவிடப் போகிறது.
மற்றது?
மற்றது... திரும்பி வரவேயில்லை பிரபு!
இது என்ன சோதனை..! விசுவாசமிக்க என் காவலாளி பாலைவனப் பரப்பில் கழுகுகளுக்கு இரையாவதா.. கூடாது!
நான் போய் தேடிப் பார்த்து அதை மீட்டு வருகிறேன் பிரபு!
வேண்டாம்! அடிமைகளை அனுப்பு. பெருமை மிகு ஜுமா போர் வீரன் நீ - புதை குழி தோண்டும் வெட்டியானாகும் நிலை உனக்கு வரக்கூடாது!


இந்த விலங்கு அதிக நேரம் மரணத்தோடு போராடக் கூடாது - ஆக வேண்டியதை செய்!
விஷ்ஷ்!
ஆஆ!
சில நிமிடங்களுக்குப் பின் - அஸ்டெக் பிரமிட்டின் உள்ளே பிரம்மாண்டமான மத்திய ஹாலில்...
எங்களை அழைத்தீர்களாமே.. பிரபு?
மண்டியிடுங்கள்.. நாய்களே!
தெய்வ சன்னிதானத்தில் இருக்கிறோம் என்பது மறந்து விட்டதா மரமண்டைகளே! இந்த மகோன்னதமான ஜுமா ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கும் மாபுருஷர் வின்டெக்ஸின் முன்னால் எவனும் தலை நிமிர்ந்து நிற்கக் கூடாது.. தெரியுமில்லையா?
அடிமைகளே.. நான் சொல்வதை கவனமாக கேளுங்கள்.. உங்களில் ஒருவன் நேற்றிரவு இந்த புனித பூமியை விட்டு தப்பியோட முயன்றான்


நன்றி கெட்ட நாயின் பைத்தியக் காரத்தனமான செயல் அது.. தண்டனையாக தன் உயிரையே பறி கொடுத்தான்.
மீந்து கிடக்கும் அவனுடைய சடலத்தின் குவியலை சேகரித்து வரவேண்டிய பணி உங்களுடையது..
அதை நம் கோவிலில் வைத்து எரித்து ஆண்டவனுக்கு ஆராதனை நடத்துவோம். அதற்கு இரண்டு பேர் போனால் போதும். மற்றவர்கள் என் விசுவாசம் மிக்க காவல் விலங்கை தேடிப் போக வேண்டும்.
மகாப் பிரபு.. அந்த விலங்கு எங்களை கொன்று விடுமே!
வாயை மூடுடா.. முட்டாள்!
அந்த விலங்கு செத்து விட்டதாக என் ஞான அறிவு கூறுகிறது. அது பாலைவனத்தில் கழுகுகளுக்கு இரையாகிப் போவதில் எனக்கு சம்மதம் இல்லை. ஈனப் பிறவி நீங்கள் அதன் உடலை தேடிக் கண்டு பிடித்து கொண்டு வந்து சேர்க்க வேண்டும் -போங்கள்
சில நிமிடங்களுக்குப் பின் -
முன்னேறுங்கள்.. வேகமாக!
இருள் கவிழுமுன் நம் மலையை திரும்பிச் சென்று அடையாவிடில் நம் கதி என்னவாகும் தெரியுமில்லையா?
ஹூம்.. இங்கே வந்து மாட்டிக் கொண்டு -


மேலே பேசாதே... என்றைக்குமே மெக்ஸிகோவுக்கு நீ திரும்ப முடியாது போய்விடும்.
உனக்கு மட்டும் அது முடியவா போகிறது?
பேச்சை குறைத்துக் கொள் -அவ்வளவுதான் சொல்வேன்!
தெய்வமே.. எங்கள் தலையில் என்னதான் எழுதியிருக்கிறாய்?
இதற் கிடையே -
நாம் என்ன செய்யப் போகிறோம்...?
ம்ம்... இரண்டில் ஒரு மிருகம் படுமோசமாக காயம் பட்டிருக்க வேண்டும். ஏகப்பட்ட இரத்தம் சிந்தியிருக்கிறது.
ஓ.கே!
தொடர்ந்து தடத்தை பின்பற்றிச் செல்வோம்.. ஆனால் நாம் மிக விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம்.
ஒரு மணி நேரம் கழித்து -
அடேயப்பா.. எத்தனை கழுகுகள் - அங்கே பாருங்கள்!
வாய்க்கு ருசியான விருந்து அங்கே கிடைக்கிறது என்ற செய்தி பரவியிருக்கும்!


அதாவது...
ஆமாம் கார்லோஸ்.. அந்த விலங்கு அந்த இடத்தில் உயிரை விட்டிருக்கக் கூடும்!
கழுகுகள் ஏதேனும் மிச்சம் வைத்திருந்தால் அதை நாம் அங்கே காண முடியும்
காணச் சகிக்காது!
ஹும்.. நூற்றுக் கணக்கில் கூடி கும்மாளம் போடுகின்றன.
அவைகளை துரத்த துப்பாக்கியை முழக்க வேண்டுமா என்ன?
தோட்டா முழக்கம் கூடாது கார்லோஸ்.. அதற்கு அவசியமும் இல்லை... நம்மை கண்டதும் விலகிப் போகின்றன பார்
ச்கு...



அதையடுத்து -
இந்த எலும்புக் கூட்டை கவனி... உயிரோடிருக்கும் போது எப்படியொரு அச்சுறுத்தலாக இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்.
பெரிய காட்டெருமை அளவு இருந்திருக்கும்!
இது என்ன வகை விலங்கு?
ம்ம்... மண்டை யோட்டை பார்... ஒரு மலைச் சிங்கம் -ஆனால் அசாதாரண பரிமாணத்தில்!
அடேய்ப்பா.. எத்தனை துளைகள்.. ஏகப்பட்ட தோட்டாக்களை செலவழித்திருக்கிறார்கள்- இதை வீழ்த்த! நம் வழியில் அந்த இன்னொரு மிருகம் காத்திருக்கக் கூடாது. இல்லையேல்...
கிலேசப் பட வேண்டாம் கார்லோஸ்... இது மாதிரியான மிருகங்கள் ஜோடியாக எதிர்பட்டாலும் -
ஐயோ.. வேண்டாம் அத்தோடு முடிந்து விடும் நம் கதை
புலம்பாதே! அந்த விலங்குகளின் கதைதான் முடியும்!
ஸரிடாவில் நான் ஏகப்பட்ட டைனமைட் வாங்கி வந்திருப்பது நினைவில் இல்லையா உனக்கு?
ஓ.. ஆமாம்.. நான் அதை மறந்தே போய்விட்டேன்!
ஸார்.. ஆனாலும் நீங்கள் ரொம்ப சமர்த்து!
உஷ்ஷ்.. யாரோ வருகிற மாதிரி இருக்கிறது!



யாரையும் காணோமே!
தொடு வானில் புழுதிப் படலம் தெரிகிறது - பார்!
அந்த பாறைகளின் பின்னால் போய் பதுங்கிக் கொள்வோம் - வா!
ஐயோ.. ஒரு வேளை அந்த ராட்சஸ விலங்குகளாக இருக்குமோ..!
குதிரைகளை படுக்கை வை.. கார்லோஸ்! நான் டைனமைட்டை எடுத்து எந்த ஒரு அசம்பாவிதத்தையும் எதிர் கொள்ள ஆயத்தம் செய்கிறேன்!
ம்ம்..
ஒரு டஜன் டைனமைட் குச்சிகளை வெளியில் எடுத்து ப்யூஸ்களை பொருத்தினார் டெக்ஸ்
தனக்கு எதிரே டைனமைட்டுகளை வைத்து விட்டு, பைனாகுலரைக் கொண்டு நிலவரத்தை ஆராய்ந்தார்.
இன்னமும் தெளிவாக எதுவும் தெரியவில்லை.
சஸ்பென்ஸ் தாங்கவில்லை டெக்ஸ்..!
பொறு.. அவசரப்படாதே!


சிகரட்டை பற்ற வைத்துக் கொள். எப்போதும் ஒன்று எரிந்து கொண்டிருக்கட்டும்!
அவசியப்பட்டால் சட்டென்று ப்யூஸை கொளுத்த அது உதவும்! நாலைந்து குச்சிகளை கையில் தயாராக வைத்திரு!
மரண பூமி
திரி ரொம்ப குட்டையாக இருக்கிறது ஸார்... நாமே வானில் தூக்கி எறியப் பட்டு விடுவோமோ என்று பயம்
தேவையற்ற பயம். பற்ற வைத்ததும் குச்சியை தூக்கி எறிந்து விடு -நமக்கு ஏதும் நேரிடாது!
அப்படியா சொல்கிறீர்கள்.. ஊஹூம் -எனக்கென்னவோ பயமாகத் தானிருக்கிறது!
இதற்கிடையே -
ஏறத்தாழ நெருங்கி விட்டோம் என்று நினைக்கிறேன்.. எலும்புக் கூடுதான் கிடக்கும்.. மிச்சம் எல்லாம் கழுகுகள் சாப்பிட்டிருக்கும்!
கொண்டு போவது சுலபம்!
மெக்ஸிகோ ஆசாமிகள்.. நேராக இங்கேதான் வருகிறார்கள்.
மெக்ஸிகோ ஆசாமிகளா? ஒரு வேலை என்னைத் தேடித்தான் வருகிறார்களோ? பைனகுலரைக் கொடுங்கள். பார்க்கிறேன்!


அந்த மூன்று குதிரையோட்டி களையும் ஆர்வத்தோடு கூர்ந்து நோக்கினான் கார்லோஸ்.
ச்சு... இவர்கள் அந்நியர்கள்!
சூரிய வெளிச்சம் பைனுகுலரில் பட்டு பிரதிபலித்ததைக் கண்ட அந்த நபர்கள் கலவரமடைந்தனர்.
அந்த மேட்டுக்கு பின்னாலிருந்து யாரோ நம்மை கவனித்துக் கொண்டிருக் கிறார்கள்!
அப்படியா?
கரோஸ்.. நீ பின்புறமாக வந்து மடக்கு.. நானும் நிஜேவும் அவனுடைய கவனத்தை இப்பக்கமாக திசை திருப்பி வைத்திருக்கிறோம்!
ஆல்ரைட்!
நம்மை கவனித்து விட்டார்கள்.. ஜாக்கிரதை.. கொஞ்ச நேரத்தில் இங்கே பட்டாசு வேடிக்கை தடபுடல் படப் போகிறது!
டுமீல்
டுமீல்
படு பாவிகளா..!
டாங்
நீ பதுங்கியே கிட..! மூவரையும் நான் கவனித்துக் கொள்கிறேன்!



டுமீல்
மெஸாவுக்கு திரும்பாமல் ஓடிப் போக இந்தக் காரணம் ஒன்று போதுமே!
ஹே.. மிஸ்டர்! சுடாதே..! நான் சரணடைகிறேன்!
அடேய்.. துரோகி!
சுடாதே...!
டுமீல் டுமீல்
ஆஆஆ..!
தங்களுக்குள்ளே அடித்துக் கொள்ளுகிறார்கள்!
டுமீல்


ஆஆஆ..! என் கை
பட்!
நிராயுதபாணியை பின்னாலிருந்து தாக்கும் உன் வீரத்திற்கு பரிசு இது!
எப்படி இவ்வளவு கச்சிதமாக குறி வைக்க முடிகிறது -உங்களால்?
தோட்டாக்களை வீணடிக்க இப்போது வசதி போதாது நமக்கு
எதிரிகளின் எண்ணிக்கை திட்டமாக தெரியாத நிலையில் ஒவ்வொரு தோட்டாவையும் நாம் அர்த்தத்தோடுதான் செலவிட வேண்டும்..
எஎ.. என்னை -எதுவும்...
பயப்படாதே.. அவர்களிடமிருந்து கழற்றிக் கொள்ள நீ யத்தனித்தாய் -இல்லையா?
இங்கே சாக விருப்பமில்லை எனக்கு.தொலை தூரம் எடுத்துச் செல்லுங்கள் என்னை!
இரு... முதலில் உன் காயத்தை கவனிப்போம்!


மேலோட்டமாக பார்த்ததுமே டெக்ஸுக்கு தெளிவாக புரிந்து விட்டது - ஆசாமி அதிக நேரம் உயிர் வாழப் போவதில்லை என்று!
ஹூம்.. இரு தோட்டாக்களும் நுரையீரலை சிதறடித்திருக்கின்றன..
விஸ்கி இருக்கும் என் ப்ளாஸ்க்கை எடுத்து வா கார்லோஸ். அப்படியே போர்வையையும் கொண்டு வா!
என்னை இங்கிருந்து தூக்கிப் போங்கள்...
நிச்சயமாக!
ஸாரி.. தம்பி -முதலில் இரத்தப் போக்கை நிறுத்த ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்!
நான் பிழைக்க மாட்டேனு?
பொய் சொல்லச் சொல்கிறாயா -என்னை?
வேண்டாம்.. வேண்டாம் மிஸ்டர்!
சில நிமிடங்களுக்குப் பின் -
நன்றி... மிஸ்டர்!
ஏகப்பட்ட பணத்தோடு மெக்ஸிகோ திரும்பலாம் என்ற நம்பிக்கையோடு இருந்தேன்.. ஆனால் மெஸா.. அந்த பாவ பூமி... என்னை பலி கொண்டு விட்டது!
நீ குறிப்பிடுவது எந்தப் பகுதியை?


பெயர் தெரியவில்லை! அந்த இடம் இங்கிருந்து மூன்று மணி நேர குதிரைப் பயணத் தொலைவில் இருக்கிறது..!
ஒரு யாஹூ வழிகாட்டி இரண்டு வருடங்களுக்கு முன்.. எங்களை.. அதாவது என்னையும் என் ஐந்து சகாக்களையும் அங்கே... கூட்டிப் போனான்...
கடுமையாக உழைத்தோம்.. அங்கிருந்து இரண்டு பேர்களுக்காக.. அதிமேதாவிகள்...
ஓ.. தெய்வமே!
ஆமாம்.. மகா புத்திசாலிகள்.. அதே சமயம் சரியான பைத்தியங்கள்.. விலங்குகளை பிடித்தோம்..
சில மலைச் சிங்கக் குட்டிகளை மெஸாவுக்கு கொண்டு போனோம்.. அந்த கிழட்டு மேதை.. ஏதோ பில்லி சூனிய வேலை பண்ணினான்..
மிஸ்டர்.. அந்த மெஸாவை விட்டு விலகி ஓடிப் போங்கள்.. உடனடியாக... உங்கள் நாட்டுக்கே திரும்பிச் சென்று விடுங்கள்.
மெஸா.. சபிக்கப்பட்ட பூமி.. முரட்டு ஜூமா வீரர்கள் அங்கே இருக்கிறார்கள்..
அத்தோடு ராட்சஸ விலங்குகள்.. வின்டெக்ஸின் சைத்தான்கள் வேறு.. படுபயங்கர சைத்தான்கள்.. மிஸ்டர்..
மெஸாவை கண்காணிப்பது யார்?
பகலில் பராக்கிரம ஜூமா வீரர்கள்..


இரவில் வின்டெக்ஸ் ராட்சஸ விலங்குகளை அவிழ்த்து விட்டு விடுவார்.. அங்கே போகாதீர்கள்..
யாரது வின்டெக்ஸ்?
கிழவன்.. ஆனால் புத்திமான்!.. அத்தனைக்கும் அவனே சூத்ரதாரி...
இருவர் இருப்பதாக குறிப்பிட்டாய்.. இரண்டாவது நபரின் பெயர் என்ன?
கடவுளே.. விக்டோரியா என்று இவன் சொல்லிவிடக் கூடாது!
பெயர்.. ஹெர்மான்.. ஆனால் அவன்.. அப்படிப்பட்ட.. -ஆஆ.. ஹா!
ஹும்.. உயிர் பிரிந்து விட்டது!
கடவுளே.. என் சகோதரனாக இருக்காது என்று கடைசி வரை நம்பிக்கையோடிருந்தேனே!
இன்னமும் அவனை நீ சரியாக புரிந்து கொள்ள வில்லையா - உனக்காக வருத்தப் படுகிறேன் கார்லோஸ்!
உனக்கு பயமாக இருந்தால்.. இப்போது கூட நீ திரும்பி போய் விடலாம் கார்லோஸ்..
நோ.. நோ
அவனை அதிகாரிகளிடம் ஒப்படைப்பதாக இருந்தாலும் கூட தேடிக் கண்டு பிடிப்பதாக சபதம் பூண்டிருக்கிறேன்.



உன் சகோதரனின் எதிர்கால்ம் பற்றி நீ உணர்ச்சி வசப்படத் தேவையில்லை கார்லோஸ்! இந்த பாலைவனப் பிரதேசத்திலிருந்து நாமும் கூட உயிரோடு திரும்புவோமா என்ற உத்தரவாதம் இல்லை!
மூன்று ஆசாமிகளையும் ஒட்டு மொத்தமாக ஒரே குழியில் போட்டு புதைது விட்டு அவ்விருவரும் குதிரைகளை கிளப்பினர்.
நேராக மெஸா நோக்கி போகிறோமா!
இல்லை..!
என்னை பின் தொடர்ந்து வா.. முதலில் ஒரு பாதுகாப்பான இடத்துக்குப் போய் அடுத்து என்ன செய்வது என்று நிதானமாக திட்டமிடுவோம்!
இதற்கிடையே -
ஏன் இன்னமும் வரக் காணோம்..
புரியவில்லை.. பிரபு!
ஒரு வேளை, உங்கள் எதிரிகளிடம் ஓடிப் போயிருப் பார்களோ.. பிரபு
இருக்காது - ஜார்..! அடித்துச் சொல்வேன்!
மானுவல் விசுவாசமுள்ள அடிமை.. அவனும் அவர்களோடு போயிருக்கிறான்.
மானுவலை அவர்கள் கொன்றிருந்தால்?
கடவுளே..! அப்படியும் இருக்குமோ?


ஓடிப் போய் பெலிஃப்பையும் ஸாண்டோஸையும் அழைத்து வா..
இதோ போகிறேன் பிரபு!
கால் மணி நேரம் கழித்து -
வின்டெக்ஸ் என்னமாய் கொதித்துப் போயிருக்கிறார்
நம்மையே மலைச் சிங்கங்களுக்கு இரையாக தூக்கிப் போட்டு விடுவாரோ என்று கூட ஒரு கணம் பயந்து விட்டேன்.
மானுவேல் குழுவினரைப் பற்றிய தகவலோடு நாம் திரும்பி வரத் தவறினால், அக்கதிதான் கிடைக்கும் நமக்கு
பெலிஃப்.. ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போவதாக என் உள்ளுணர்வு கூறுகிறது!
விபரீதமான திட்டத்தை என்றைக்கு வின்டெக்ஸ் தொடங்கினாரோ அப்போதே எனக்கு அப்படியொரு பயம் வந்தாயிற்று!
அவர் வழியில் செல்ல நாம் தீர்மானித்த போதே சாபக்கேடு ஆரம்பமாகி விட்டது நமக்கு.
மூன்று மணி நேரம் கழித்து -
தடங்கள் தெளிவாக உள்ளன.. இரண்டு நபர்கள் அவர்களை தீர்த்துக் கட்டியிருக்கிறார்கள்
மானுவலுக்கும் மற்றவர்களுக்கும் நேரிட்ட கதி புரிகிறதா உனக்கு
யாஹுக்களாக இருக்கலாம்!
இல்லை.. காலணி தடங்களும், குதிரையின் லாடமணிந்த குளம்பு தடங்களும் உள்ளன பார்...


இவை தென்புறமிருந்து வரும் மனிதர் களுடையவை
..நம் ஆட்களை சுட்டுக் கொன்ற பின் இத்திசையில் திரும்பிச் சென்றிருக் கிறார்கள்.
செவ்விந்தியர்களின் பழைய முகாம் நோக்கி போயிருப் பார்களோ..
கிளம்பு.. அதை நாம் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.
அவசரப்படாதே! நம் தோழர்களுக்கு ஏற்பட்ட கதி நமக்கும் ஏற்பட்டு விடக் கூடாது!
நாம் வெகு ஜாக்கிரதையாக செல்வோம்.. இங்கே நமக்கு எந்த ஆபத்தும் வரப்போவதில்லை.
அதற்காக குதிரையை நாம் இப்படி விரட்டத் தேவையில்லை..
ஏறத்தாழ பத்து மைல் தொலைவுக்கு வெட்டவெளி பரப்புதான். மறைந்திருந்து யாரும் நம்மை திடீர் என்று தாக்க வாய்ப்பே இல்லை.
அத்தோடு அஸ்தமனத்திற்குள் நாம் மெஸாவிற்கு திரும்பி போய்ச் சேர வேண்டிய நெருக்கடி வேறு இருக்கிறது.
பெலிஃப்.. நாம் அங்கே திரும்பி போகத்தான் வேண்டுமா..?



உனக்கென்ன பைத்தியமா..? எஸ்டபென்னுக்கு நேரிட்ட கதியை அதற்குள் மறந்து விட்டாயா?
நமக்கு கிடைத்திருக்கிற இந்த கூடுதல் மூன்று மணி நேர அவகாசம் எஸ்டபென்னுக்கு இருக்கவில்லை..
ஏய்.. எனக்கு ஆசை மூட்டாதே... அந்த பயங்கர மலைச் சிங்கங்களிடமிருந்து நாம் தப்பிச் செல்வது என்பது கனவிலும் நடவாத காரியம்.
நன்றாக யோசித்துப் பார்.. இப்படியொரு அரிய வாய்ப்பு இன்னொரு முறை கிட்டாது.
அதே சமயம்..
நம் தடத்தை பின்பற்றி வரும் அவ்விரு ஆசாமிகளுக்கும் உரிய முறையில் வரவேற்பு கொடுப்போம்.
ஆமாம்.. நம் தடத்தைத்தான் அவர்கள் பின்தொடர்ந்து வருகிறார்கள்..
சதி வலை
நேராக நரகத்திற்கு அனுப்பி வைப்போமா?
இல்லை... பயப் பிராந்தியை உண்டு பண்ணுவோம் - நம் அறிவுரைகளை ஏற்க வேண்டிய அவசியத்தை உணரச் செய்யும் வகையில்!


மரணத்தின் பிடியிலிருந்த மெக்ஸிகன் தெரிவித்த தகவல் வின்டெக்ஸின் நாச ஆற்றலை அளவிட போதுமானதாக இல்லை...
கூடுதல் தகவல்களை இவர்களிடமிருந்து பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.
அவர்கள் பேச மறுத்தால்?
நாம் தரப்போகும் வரவேற்பை அனுபவித்த பின் அவர்கள் நிச்சயம் வாயை மூடிக் கொண்டு இருக்கப் போவதில்லை.
!
நான் என்ன செய்ய வேண்டும்?
ஒரே ஒரு காரியம்.. நாம் குதிரைகளை விட்டு வைத்திருக்கும் இடத்திற்கு ஓடிப் போய் சிறிய அளவில் தீயை மூட்டு..
வந்து..
நான் சொல்கிறபடி செய் கார்லோஸ்.. எல்லாம் நல்லபடியாக நடந்து முடியும்!
கார்லோஸை அனுப்பி விட்டு டெக்ஸ் வேறு திசையில் ஓடலானார்..
அவர்களை உயிரோடு பிடிக்க வேண்டியது அவசியம்!


அதே சமயம்...
அவர்கள் இருவரும் எங்கே போயிருப்பார்கள் என்ற சந்தேகம் இனியும் நமக்கு இருக்க காரணமில்லை.
என்ன சொல்கிறாய்?
அந்த மேட்டில்தான் இருக்க வேண்டும்.. சுலபமாக வளைத்துப் பிடித்து விடலாம்!
அவர்கள் அங்கேதான் இருக்கிறார்கள் என்று நீ நம்பக் காரணம்?
தடங்களின் ஆழத்தை நீ கவனிக்க வில்லையா?
கவனித்தேன்..! அதனால் - ?
மூளையை பிரயோகிக்க வேண்டும் தம்பி! முகாம் தளவாடங்களையும் ஏகமாக உணவுப் பொருட்களையும் குதிரை மீது ஏற்றிக் கொண்டு யார் இங்கே வருவார்கள்!
ம்ம்...
அவசரமாக போகும் பயணிகளாக இராது அல்லவா? நிதானமாக இப்பகுதியை ஆராயும் பேர்வழிகள் என்றால்..
ஓ.. புரிந்து விட்டது!
தங்கத்தை தேடும் பேர்வழிகள்!
சமர்த்து!
தங்கத்தை தேடுபவர்கள் மானுவல் குழுவை எதிர் கொள்ள நேர்ந்தபோது என்ன நடந்திருக்கும்!


செத்துப் போன நம் தோழர்கள்தான் முதலில் அவர்களை நோக்கி சுடத் தொடங்கி யிருப்பார்கள்..
அவர்கள் பதிலடி கொடுத்திருப் பார்கள்.
யாரும் பின் தொடர்வார்கள் என்று எதிர்பார்க்க மாட்டார்கள்!
அவர்களை சுலபமாக பிடித்து விட முடியும் என்று நம்ப இது காரணமாகாதே!
..அவர்களுக்கு தங்களுடைய தடத்தை அழித்து விட்டுச் செல்லக் கூடத் தோன்றவில்லை. அத்தோடு இதையும் கவனி..
புகை..! தங்கள் முகாமை அங்கே அமைத்திருக் கிறார்கள்
ஆமாம்! பத்திரமாக இருப்பதாக நம்பிக் கொண்டிருக் கிறார்கள்.
அண்ணாந்து பார்க்கிறார்கள்.. புகை மண்டலத்தை நோக்குகிறார்கள் போலும்..
எங்களை பிடிக்கத்தான் வருகிறார்கள் என்பது நிச்சயம்! குதிரையை உச்ச வேகத்தில் விரட்டிக் கொண்டு வருகிறார்கள்.



குதிரையை கணவாய் முகப்பில் நிறுத்திவிட்டு நாம் மேலே ஏறிப் போவோம்!
நேரத்தை வீணடிக்கக் கூடாது!
எல்லையை நோக்கிச் செல்ல நீ சம்மதிக்காத பட்சத்தில் நாம் அஸ்தமனத்திற்குள் மெஸாவை திரும்பச் சென்றடைய வேண்டிய நெருக்கடி இருப்பதை மறந்து விடாதே!
தப்பிச் செல்லும் எண்ணத்தை அடியோடு மறந்து விடு!
வலை விரிக்கப் பட்டிருப்பதை அறியாத மெக்ஸிகன்கள் கணவாயினுள் நுழைந்தனர்..
.. டெக்ஸ் பட்டாசு வேடிக்கையை தொடங்கி வைத்தார்..
ஹே.. ஜாக்கிரதை!
?!
பூம்!
நாசமாகப் போக!
கடவுளே!


திரும்பு சீக்கிரம்
ஊஹூம்.. அவசரப்படாதீர்கள்!
சண்டாளா!
டுமீல்
என்னை சந்திக்க வந்துவிட்டு இப்படி கை எட்டும் தொலைவில் நான் வந்து விட்டால் தலைதெறிக்க திரும்பி ஓடுவது ஏன்?
நிஜம்.. அதுவல்ல மிஸ்டர்!
டுமீல்
என்னை ஏமாற்ற இன்னொரு பொய்யை நீ உளறினால் உடம்பில் உயிர் இருக்காது -ஜாக்கிரதை!
கைகளை உயர்த்தியவாறே கீழே இறங்குங்கள்..
தொலைந்தோம்.. பெலிஃப்! நீ மட்டும் என் யோசனையை கேட்டிருந்தால்


டெக்ஸ்.. ஒத்தாசைக்கு வரட்டுமா?
வந்து இவர்களிடம் உள்ள ஆயுதங்களை பிடுங்கு!
அதையடுத்து -
சரி.. விஷயத்திற்கு வருவோமா?
நாங்கள் சொல்லப் போகும் விஷயம் அவ்வளவு நல்லதாக இராது.
இன்னும் சில மணி நேரம்தான் - இருள் கவிழ்ந்து விடும்! அப்புறம் நாங்களோ நீங்களோ உதயத்தை காண உயிரோடிருக்கப் போவதில்லை!
வின்டெக்ஸின் மலைச் சிங்கங்களை குறிப்பிடுகிறாயா!
ஆமாம்! அதைப் பற்றி ஏற்கனவே உங்களுக்கு தெரிந்திருப்பதால் நம்மை எதிர் நோக்கியுள்ள ஆபத்தைப் பற்றி விளக்கிச் சொல்லி நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை.
அப்படியில்லை!
பல விஷயங்கள் எனக்குத் தெரியும்தான்.. ஆனால் முழுமையாக தெரியாது... அதனால் நமக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள நினைக்கிறேன்.
?
?
வின்டெக்ஸ் பற்றியும், மெஸாவில் என்னதான் நடக்கிறது என்றும் விளக்கமாக சொல்லுங்கள். பத்திரமாக தொலைதூரம் செல்ல உங்களுக்கு நான் ஒத்தாசை செய்கிறேன்.
ஆலோசிக்க வேண்டிய விஷயம்தான்!


பெலிஃப்! இவர் நம்மை சீக்கிரமே விடுவித்து அனுப்பினால் மலைச் சிங்கங்கள் வந்து சேருமுன் பாலைவனப் பகுதியை விட்டு நாம் வெளியேறிவிட வாய்ப்பிருக்கிறது.
இல்லை.. ஸாண்டோஸ்.. காலம் கடந்து விட்டது!
பொறு! நான் கேட்ட தகவலை கொடுக்க அந்த மலைச் சிங்கங்கள் பற்றிய அச்சம் தடையாக இருப்பதாக நீங்கள் கருதினால் ஒப்பந்த வாசகத்தை நான் மாற்றுகிறேன்!
அந்த ராட்சஸ சைத்தான்களிட மிருந்து நாங்கள் தப்பித்துக் கொள்ள முடியுமா என்ன?
எத்தனை இருக்கின்றன?
துல்லியமாக தெரியவில்லை! ஆனால் - பத்துக்குக் குறையாது!
துப்பாக்கியால் வீழ்த்திவிட முடியாது.. அசாதாரண பலம் உடையவை!
அந்த அசாதாரண பலம் இதற்கு ஈடு கொடுக்க முடியுமா.. சொல்?
இம்மாதிரி 'முறுக்கு' நூறுக்கு குறையாமல் வைத்திருக்கிறேன். அந்த சைத்தான்களுக்கு அஜீரணத்தை ஏற்படுத்த இவை போதாதா?
ம்ம்.. டைனமைட் நம்மை நிச்சயம் காப்பாற்றும்!
சரி.. சீக்கிரம் ஒரு தீர்மானத்துக்கு வாருங்கள் விலங்குகள் வந்து விடும் அபாயம் வினாடிக்கு வினாடி நெருங்கிக் கொண்டிருக்கிறது..



மிஸ்டர்... இன்றிரவு அந்த விலங்குகளிடமிருந்து எங்களை காப்பாற்றி காலையில் நாங்கள் எங்கள் வழியில் போக அனுமதிப்பீர்களா?
சத்தியமாக!
ஆனால்.. நீங்கள் தப்பான தகவல் தருவதாக எனக்கு சந்தேகம் வந்தால்..
தாயின் மீது சத்தியம்.. நாங்கள் பொய் சொல்லப் போவதில்லை..
இதற்கிடையே மேஸாவில் -
பிரபு..! இரண்டு வீரர்களோடு நான் அவர்கள் போன பாதையில் போய்..
வேண்டாம்
உன் சந்தேகம் சரியாகிவிட்டது ஜார்.. ஈனப்பிறவிகள் தப்பியோடிப் போய்விட்டார்கள்.
நீங்கள் நினைத்தால் இப்போதும் அவர்களை கொன்றுவிட முடியும் பிரபு!
சரியாகச் சொன்னாய் ஜார்..!
தங்களுடைய செயல் எவ்வளவு தப்பானது என்று புரிய வைக்கிறேன்.. விசுவாச காவலாளிகளை உடனே அனுப்பி வை.. ஜார்!
அனைத்தையுமா.. பிரபு?


ஆமாம்..
அனைத்தையும்
தான்..!
சில நிமிடங்களுக்குப் பின் கனமான கிராதிக் கதவு மேலே எழும்பியதை தொடர்ந்து, ஆக்ரோஷமாகக் கர்ஜித்துக் கொண்டு இரத்த வெறி பிடித்த மலைச் சிங்கங்கள் பாலைவனம் நோக்கி பாய்ந்தோடலாயின..
உர்ர்ர்....
கர்ர்.....
இதற்கிடையே -
மொத்தம் பன்னிரண்டு வீரர்கள்தான்!.. ஜார்தான் அவர்களின் தலைவன்!
அவர்களுக்காகவும் நான் சில டைனமைட்டு குச்சிகளை ஒதுக்கி வைப்பது நல்லது!
டாக்டர் ஹெர்மான் பற்றி நீங்கள் சொன்ன தெல்லாம் சரியான தகவல்கள்தானா?
ஆமாம்.. மிஸ்டர்! அவர் வின்டெக்ஸோடு ஆக்ரோஷமாக அடிக்கடி விவாதம் செய்வதுண்டு..!
செவ்விந்திய ஜுமாக்களை ஆய்வுக்கு உட்படுத்துவதை ஹெர்மான் தீவிரமாக எதிர்த்தார். மறுத்தால் மலைச் சிங்கங்களுக்கு இரையாக தூக்கிப் போட்டு விடுவேன் என்று வின்டெக்ஸ் அவரை அச்சுறுத்தினார்.
அதன் பின் கடந்த ஓராண்டு காலமாக வின்டெக்ஸ் கோவிலுக்குள் பிரவேசிக்க ஹெர்மானுக்கு அனுமதி மறுக்கப்பட்டது
பிறகு அவர் எங்கள் பார்வையில் தென்படவே யில்லை!
ஆண்டவன் கருணை மிக்கவர்!


டெக்ஸ்.. இவர் சொன்னதை கேட்டீர்களா.. என் சகோதரன் தானாக எந்த சட்ட விரோத செயலையும் செய்யவில்லை.
இவர்கள் சொல்வது நிஜமாக இருந்தால் நீயோ உன் தந்தையோ விக்டோரியோ பற்றி விசாரப்பட தேவையே இல்லை.
பைவ்ட்கள் படுகொலை செய்யப்பட்டதில் உங்களிருவருக்கும் பங்கு இராத பட்சத்தில் -
சத்தியமாக அதில் எங்களுக்கு பங்கில்லை மிஸ்டர்.. பைவ்ட்களின் கிராமத்தைத் தாக்கி அழித்தது ஜுமாக்கள்தான்.
உங்களை நம்புகிறேன்! நாளை காலை நீங்கள் உங்களிஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் போகலாம்!
அப்போதும் உயிரோடு இருந்தால்!
இன்னமும் அந்த விலங்குகளை பற்றிய அச்சம் போக வில்லையா உங்களுக்கு... அவைகள் வரட்டும்... அப்புறம் பாருங்கள் -என்ன நடக்கிறதென்று!
இறைவன் துணை நிற்பாராக!
அதே கணத்தில் -
உர்ர்ர்ர்...... உர்ர்ர்....
மிஸ்டர் - மலைச் சிங்கங்கள்!
நாம் தொலைந்தோம்!
பதறாதீர்கள்! வெகு தொலைவில்தான் கர்ஜனை கேட்கிறது!


உர்ர்ர்ர்....

# சிங்க வேட்டை


சொன்னோமில்லையா.. நாம் யாருமே உதயத்தை பார்க்கப் போவதில்லை என்று
பிதற்றாதே! துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடி வாருங்கள் எங்கள் பின்னே!


குதிரை மீது ஏறு கார்லோஸ்! இங்கிருந்து நூறு மீட்டர் தொலைவில் ஒரு முட்டுக் கணவாய் இருக்கிறது. இரவு கவிழுமுன் அங்கே போய்விடத்தான் நான் தீர்மானித்திருந்தேன். ஆனால் இந்த சைத்தான்கள் முந்திக் கொண்டு விட்டன..


கர்ர்ர்ர்....


ம்ம்.. வேகமாக வாருங்கள்!
!
கர்ர்ர்ர்....
நெருங்கி வந்து விட்டன!
இதோ.. நான் சொன்ன இடம்!
கீழே இறங்குங்கள்!
கார்லோஸ்.. டைனமைட் உள்ள பெட்டியை இறக்கி விட்டு என்னருகிலேயே இரு!
சமாளித்து விட முடியுமா நம்மால்!


நிச்சயம் நாம் சாதித்து விட முடியும் - ஆனால் நிதானத்தோடு செயல்பட வேண்டும்! ரைபிளை கையாளத் தெரியுமா..?
பரவாயில்லாமல் செய்வேன்!
குறி வைப்பதில் வல்லவன் இல்லை - ஆனால் இலக்கு பெரியதாக இருந்தால்..
குட்..! வந்து நம்மை தாக்கப் போகும் மலைச் சிங்கங்களின் அளவுக்கு பெரிய இலக்கு வேறு எதையும் நீ இதுவரை குறி வைத்திருக்க மாட்டாய்!
உர்ர்ர்....
கர்ர்ர்..
என்ன நடக்குமோ.. கடவுளே!
கணவாயின் முகப்பில் அவை தென்பட்டதும் கடத் தயாராக இருங்கள்..!
கர்ர்ர்...
அதோ.. வந்து விட்டன..! கடவுளே!
சைத்தான்கள்!


டுமீல் டுமீல்
பூம்!
தொடர்ந்து சுடுங்கள்! நாசமாகப் போக -
உர்ர்ர்...
டுமீல்
டைனமைட் வெடியோசையால் பீதியும் அதிர்ச்சியும் அடைந்த சிங்கங்கள் மறுகணமே உயிர் பிழைத்தால் போதும் என்று திரும்பி ஓட்டம் பிடித்தன..
பூம்! பூம்!


பிரயோகம் செய்தார் டெக்ஸ்.
க்ராஷ்!
இப்படியொரு வரவேற்பை கொஞ்சமும் எதிர்பார்க்க
அவை திரும்பி வரலாம் என நினைக்கிறீர்களா?
உர்ர்ர்.....
எங்கேயும் போய்விட வில்லை.. இரத்த வெறி பிடித்து அலைகின்றன போலும்!
நமக்கு சாதகமான அம்சம் இது!


சரி.. இங்கேயே இருக்கும் வரை நாம் நம் அடுத்த திட்டத்தை தெளிவாக மேற்கொள்ளலாம்!
ஹே.. தோழர்களே உங்களுடைய சட்டைகளை சுற்றிக் கொடுங்கள்
என்ன செய்ய உத்தேசம்?
அந்த சைத்தான்களின் எண்ணிக்கையை குறைக்கவே இந்த ஏற்பாடு
அந்த சட்டைகளில் ஒரு டஜன் டைனமைட் குச்சிகளை சுற்றி எடுத்துக் கொண்ட டெக்ஸ் மற்றவர்கள் பக்கம் திரும்பினார்..
முடிந்த வரை நெருங்கிச் செல்லப் போகிறேன்.. எனக்கு பாதுகாப்புக் கொடுங்கள்
உங்களுடைய துப்பாக்கிகள் தோட்டாக்களை உமிழ்ந்து கொண்டிருக்கும் வரை எனக்கு எதுவும் நிகழ்ந்து விடாது!
படு ஆபத்தான முயற்சி!
டுமீல் டுமீல்


கணவாயின் வாயில் வரை சென்று கையிலிருந்த பார்சலை வெளியே உருட்டி விட்டார் டெக்ஸ்
சுடுவதை நிறுத்தி விட்டு நீங்கள் பின் வாங்குங்கள்
உன் ரைபிளை கொடு - சீக்கிரம்!
உங்களுடைய திட்டம் புரிகிறது!
நல்லதே நடக்கும் என்று நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்யுங்கள்
இதற்கிடையே, மனித வாடை கலந்திருந்த அந்தப் புதிய பொருளை, ஒரு வித ஆர்வத்தோடு நெருங்கின அந்த விலங்குகள்
அருகில் வருகின்றன..
இன்னமும் நெருங்கி வரட்டும்.. நீங்கள் தரையோடு தரையாக படுத்துக் கொள்ளுங்கள்.



ம்ப்ப்...
ம்ப்ப்ப்...
அவை அந்தப் பார்சலை நான் குறி வைக்க இடைஞ்சலாக மறைத்துக் கொண்டு நிற்கின்றன.
இதோ.. இடைவெளி!
டுமீல் டுமீல்
படார்
கர்ர்ர்...
அத்தனையும் கொத்துக் கறியாகிப் போயிருப்பது உறுதி!
சற்று நேரத்தில் தெரிந்து விடும்!
எழுந்த புழுதிப் படலம் அடங்கியதும் டெக்ஸும் கார்ஸனும் கணவாயின் முகப்பு நோக்கி நடந்தனர்.


வெளியே -
மூன்று மட்டுமே பலியாகி யிருக்கின்றன'
ரொம்பவும் விழிப்போடு இரு. கார்லோஸ்
மற்ற இரண்டும் நாம் கணிப்பதைவிட மிக அருகாமையில் இருந்து விடலாம்!
காத தூரம் ஓடிப் போயிருக்கும் என்பது என் கணிப்பு!
டைனமைட்டு குச்சிகள் கையில் இரண்டும்,பையில் மூன்றும் இருக்கின்றன.
ம்ம்..
அந்த இரு விலங்குகளையும் தேடிச் செல்லப் போகிறேன் - வர சம்மதமா?
ஆபத்தான காரியம் என்ற போதிலும் மறுப்புக் கூற மனம் வரவில்லை.
இதற்கிடையே, கொந்தளித்துப் போயிருந்த சிங்கங்கள் இரண்டும் ஆங்காரத்தோடு மலை மேட்டை நோக்கி ஏறலாயின..
..மனித வாடை கவர்ந்திழுக்க, பாறைகளினூடே தென்பட்ட ஒரு குகை அமைப்பினுள் வேகமாக புகுந்தன..


முடிவில் அவை இரண்டும் கணவாயின் பக்கவாட்டு சுவர் ஒன்றின் விளிம்பை வந்தடைந்தன. இதை கொஞ்சமும் அறியாத இரு மெக்ஸிகன்களும் மறுபக்கம் திரும்பி நின்று கொண்டிருந்தனர்.
பெலிஃப், அந்த ஆசாமி நம்மை ராட்சஸ சைத்தான்களிடமிருந்து எப்படியும் காப்பாற்றி விடுவார் என்ற நம்பிக்கை எனக்கு வந்து விட்டது!
ம்ம்.. எனக்கும்தான்!
உர்ர்ர்ர்......
பெலிஃப்!
ஆ.. ஐயோ - தெய்வமே!
ஆ.. ஆ.. ஆ
அடக் கடவுளே! அவை இரண்டும் கணவாயினுள்ளே இருக்கின்றன
?
ஆஆஆ



ஆ..ஆ..ஆ..ஆ...
ஓடி வா - சீக்கிரம்!
ஐயோ.. கொடுமை!
அங்கே பாருங்கள்!
நான் டைனமைட்டை உபயோகிக்க முடியாது!
அவர்கள் இருவருக்கும் இன்னமும் மூச்சு இருக்கலாம்!
சரேலென்று கார்லோஸின் கையிலிருந்த ரைபிளை பறித்தார் டெக்ஸ்
கார்லோஸ், தப்பி ஓடு!
மரணத்தை நேருக்கு நேர் சந்தித்து விட்டதான பிரமையில் உறைந்து போன கார்லோஸ் பீதியால் முகத்தை கரங்களால் பொத்திக் கொண்டு விட, டெக்ஸ் மனம் தளராமல் அந்த விலங்கை நோக்கி சரமாரியாக சுடலானார்!
ஆயிற்று.. எங்களுக்கு சமாதி இங்கேதான்!


புலிகளுக்குப் பாடம்!
கச்சிதமாக நான் கண்களை குறி வைக்க வேண்டும்...!
டுமீல்
க்ர்ர்ர்ர்.....
பார்வையிழந்த விலங்கு வேதனை தாளாமல் பயங்கரமாக கதறியவாறு அசுரத்தனமாக பாய்ந்தது...
கர்ர்ர்ர்ர்...!
இம்முறை அதன் நெஞ்சை குறி வைத்தார் டெக்ஸ்.
க்ராக்!
பின்னல் வேகத்தில் ரைபிளை பறித்த டெக்ஸ் அந்த சைத்தானின் கபாலத்தினுள் தோட்டாக்களை செலுத்தினார்.
டுமீல் டுமீல் டுமீல்
மரண ஓலத்தோடு தரையில் விழுந்தது அந்த ராட்சஸ விலங்கு.
?
படீர்!


இதற்கிடையே உயிரோடு இருந்த கடைசி சிங்கம் ஆவேசத்தோடு பாய்ந்தது.
க்ர்ர்ர்ர்...
மின்னல் வேகத்தில் விலகிக் கொண்டதால் டெக்ஸ் பிழைத்துக் கொண்டு விட்டார்.
கார்லோஸ்... ஓடு.. எங்கேயாவது போய் பதுங்கிக் கொள்..
டுமீல்
காயமடைந்திருந்த போதிலும் மீண்டும் தாக்க முனையும் எண்ணத்தோடு திரும்பிய சிங்கம், எதிரியின் பலத்தை சரிவர கணிக்க தவறிவிட்டது.
க்ர்ர்ர்ர்...
முதலில் கண்ணை குறி வைத்து சுட்ட டெக்ஸ், அவ்விலங்கு வேதனையும், கோபமுமாக வாயை அகல திறந்த போது, துப்பாக்கியிலிருந்த அத்தனை தோட்டாக்களையும் தொண்டைக்குள் உமிழ்ந்தார்.
டுமீல் டுமீல்
ப..ப்..பப்.. பயங்கரம்!
விலங்கின் மூச்சு அடங்கி அதன் தலை சாய்ந்த பிறகு டெக்ஸ் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.
சே.. ஒரு ஜீவ மரண போராட்டமே நடத்தும் படியாகி விட்டது!
!


டெக்ஸ்! நாம் இன்னமும் உயிரோடிருப்பது தெய்வாதீனமான செயல்தான்!
சந்தேகமில்லாமல்!
வா.. போய் அந்த அப்பாவிகளை பார்ப்போம்... காப்பாற்ற துளி வாய்ப்பிருந்தாலும் இருக்கலாம்!
பாவம்.. கணவாயினுள் பத்திரமாக இருப்பதாக நப்புக் கணக்கு போட்டு விட்டார்கள்!
போய் பார்த்தவுடனே டெக்ஸுக்கு விளங்கிவிட்டது. இனி செய்வதற்கு ஒன்றுமில்லை என்று..
புதைக்க வேண்டியதுதான் பாக்கி!
ஐயோ.. பாவம்
ஒரு மணி நேரம் கழித்து -
இது மாதிரியான சைத்தான்கள் இனி மேலும் வரக்கூடும் என்று சந்தேகிக்கிறீர்களா..
இல்லை..!
ஆனாலும் நாம் தொடர்ந்து-விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம்!
அந்த ஜூமாக்கள்?
அவர்களைப் பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை... ஏனென்றால் ராட்சஸதனமாகவோ, கோரமாகவோ இருந்தாலும் அவர்கள் மானிடர்கள்தானே... மெக்ஸிகன்கள் சொன்னதை நினைவு படுத்திப்பார்..


ராட்சஸ மலைச் சிங்கங்கள் திரும்பிய பிறகு விடியலில்தான் மெஸாவில் தங்கள் காவல் பணியை தொடங்குவார்கள் அவர்கள்!
அதனால்..?
இன்றிரவே வின்டெக்ஸின் கோட்டையினுள் ஊடுருவத் தீர்மானித்து விட்டேன்!
ஆனாலும் உங்களுடைய மனத் திண்மைக்கு ஈடு இணையே கிடையாது ஸார்!
சற்று முன்னர்தான் சாவின் பிடியிலிருந்து மீண்டிருக்கிறோம்.. மீண்டும் ஆபத்தை நோக்கிப் போகத் துணிந்து விட்டீர்களே!
இப்போது இல்லாவிடினும் பிறகாவது எதிர் கொள்ளத் தானே வேண்டும்!
அதனால், தன் விலங்குகளுக்கு நேர்ந்த கதியை வின்டெக்ஸ் அறியுமுன்னரே தாக்குதலை நாம் தொடங்குவதுதான் சாணக்கியம்! இல்லையேல், நாளை பகலில் உண்மை தெரிந்து ஆசாமி உஷாராகி விடுவார்!
கரெக்ட்!
அதிரடி தாக்குதல் எப்போதுமே சாலச் சிறந்தது..
வெற்றிக்கு வழி!
உற்சாகமாக குதிரை மீது ஏறி உட்கார்... இரவு இப்போது தான் தொடங்கியிருக்கிறது... அதிர்ஷ்டம் நம் பக்கம் இருந்தால் விடிவதற்குள் நாம் வின்டெக்ஸை ஒரு வழி பண்ணிவிட முடியலாம்!


இதற்கிடையே மெஸா பரிசோதனை கூடத்தில் -
ரொம்பவும் சுவாரஸ்யமான சோதனைதான் இது - இல்லையா?
பயங்கரமானது!
இருக்கலாம்! மனித மூளையை விலங்கின் தலைக்குள் வைத்து விளைவை ஆராயும் இந்த முயற்சியை நினைக்கும் போதே எனக்கு புல்லரிக்கிறது!
!
விலங்கின் செயல் வேகமும் மனிதனின் அறிவாற்றலும் ஒருங்கிணைந்த ஓர் புது உயிரினத்தை நம்மால் உருவாக்கிட முடியலாம்!
விபரீதமான முயற்சி!
மை டியர் ஹெர்மான்... நான் போய் ஓய்வெடுக்கிறேன்.. என் திட்டத்தை நிதானமாக சிந்தித்துப்பார்... என்னை பாராட்டவே தோன்றும் உனக்கு!
சிந்திக்கிறேன்!
சரி.. நாளை சந்திப்போம் நண்பனே!
குட் நைட்
வின்டெக்ஸ் அப்பால் அகன்றதும் உள்ளே கனன்று கொண்டிருந்த தன் கோபத்துக்கு ஒரு வடிகால் தேடிக் கொண்டான் ஹெர்மான்.
சரியான அரைக்கிறுக்கு! நாளுக்குநாள் இவனுடைய முட்டாள்தனமான யோசனைகள் படு ஆபத்தான வழியில் போய்க் கொண்டிருக்கின்றன..


ஆரம்பத்தில், மனிதனுக்கு உபயோகப்படும் வகையில் புது வகை தாவரத்தை கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி நடத்தியது சரிதான். பிறகு சாதாரண விலங்குகளை ராட்சஸ வடிவில் உருப் பெருக்கம் செய்தான்.. இச்சோதனைகள் தந்த வெற்றிகள் கிழவனுக்கு ஒரு சாம்ராஜ்யத்தையே தோற்றுவிக்கும் பேராசையை கிளப்பிவிட்டன.
சர்வ வல்லமை படைத்தவனுக்கும் கனவு நனவாகும் முன்னரே, படுபயங்கர ராட்சஸத் தன்மை கொண்ட புதுவகை உயிரினங்களை உருவாக்கும் எண்ணம் முளைத்து விட்டது இப்போது... ஊஹூம்.. கூடாது!
க்ராஷ்
..இம்மனிதனின் கிறுக்குத்தனமான ஆராய்ச்சிகளை தடுத்து நிறுத்த ஏதாவது தடை முளைக்கும் என்று நான் இத்தனை நாளும் நம்பி வந்தது பொய்த்துப் போய்விட்டது... அம்மாதிரி ஒரு அற்புதம் நிகழப் போவதில்லை என்று நிச்சயமாகத் தெரிகிறது..
..புத்திமானாக இருந்த புரபஸர் கார்மனேஸ் இப்போது படு ஆபத்தான கிரிமினலாக மாறிப் போய்விட்டார்..
..அவருடைய முயற்சிகள் நாசத்தை விளைவிக்கு முன் அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய சமுதாய கடமை எனக்கு இருக்கிறது... நிச்சயம் என்னைத் தூக்கி விலங்குகளுக்கு இரையாக போட்டு விடுவார் - போடட்டுமே!
நான் இல்லாமல், ஆய்வுக்கு தேவையான பயோ - கெமிக்கல் பொருட்களை தயாரிக்க வகையற்ற நிலையில், தன் பித்துக்குளித்தனமான கனவுகளை வின்டெக்ஸ் நனவாக்கவே முடியாது.
க்ராஷ்
க்ராஷ்


க்ராஷ்
நீயே ஒரு கிறுக்கன்..! உனக்கு ஒரு சாம்ராஜ்யமா. ? நடக்காது -வின்டெக்ஸ்!
க்ராஷ்
தரையில் வழிந்தோடிய திரவத்தை விளக்கின் சுடர் தொட்டதும் அங்கே தீப்பற்றிக் கொண்டு விட்டது.
..ஓரிரு நிமிடங்களிலே மூச்சை திணற வைக்கும் நெடி அறை முழுவதுமாக பரவியது...
ஐயோ.. என் கண்... எரிச்சல் தாங்கவில்லை!
லொக் லொக்.. என்று படுபயங்கரமாக இருமிக் கொண்டு அங்கிருந்து வெளியேற வழி தேடி ஓடினான் ஹெர்மான்.
இங்கிருந்து ஓடிப் போய்விட வேண்டும்.. இல்லையேல், வறுவலாகிப் போய்விடுவேன்!


ஆனால் துரதிர்ஷ்டவசமாக நுழை வாயிலை தாண்டும் முன்னரே விஷப் புகை காரணமாக் மயங்கி விழுந்து விட்டான்..
ஆ-ஆ
அதே சமயம் -
கடவுளே.. பரிசோதனைக் கூடத்தில் தீ!
ஜார்.. ஜார்.. ஓடிவா!
வீரர்களே ஓடிவாருங்கள் இங்கே.. ஜார்.. ஜார்!
பிரபு! என்ன ஆயிற்று?
பரிசோதனைக் கூடத்தில் தீப்பற்றிக் கொண்டு விட்டது.. கதவை என்னால் திறக்க முடியவில்லை -வந்து உடைத்துத் திறங்கள்!


க்ராஷ்
ஹெர்மான்..! தூக்கிச் செல்லுங்கள் - வெளியே!
புதிய சோதனையை இவன் நடத்திக் கொண்டிருக்கையில் ஏதோ ஒன்று வெடித்து விட்டது போலும்!
ஹூம்.. சோதனை கூடம் சுடுகாடாகிப் போய்விட்டது... அடுத்த ஆறுமாத காலத்திற்கு சோதனை தொடரவே முடியாது!
அடி பலமா?
இல்லை பிரபு.. வெறும் மயக்கம்தான்!
நல்லது! அவன் ஓய்வெடுக்கட்டும்.. நீங்கள் கோவிலுக்கு திரும்புங்கள்! அடுத்து என்ன செய்வது என்று முடிந்த பிறகு ஆலோசிப்போம்!
சரி... பிரபு!



அதே தருணத்தில்...
அங்கே பாருங்கள்.. மேட்டில் ஏதோ பற்றி எரிகிறது!
வின்டெக்ஸ் வக்கிரமான சோதனை எதையும் செய்து கொண்டிருக்கிறானோ என்னவோ!
நாம் இரு மடங்கு எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்!
ஹூம்... என்ன ஒரு துரதிர்ஷ்டம்.. இப்படியொரு விபத்து நடந்து விட்டதே! புது சாதனங்கள் வாங்கிவர ஹெர்மானை அனுப்பி வைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது!
இந்த விபத்து எப்படி நிகழ்ந்திருக்கும்.. ம்ம் - அடக் கடவுளே.. யார் அங்கே குதிரைகளில் வருவது?
நில்! குதிரைகளை இங்கேயே நிறுத்தி விட்டு நாம் மிச்ச தூரத்தை கால் நடையாகவே கடப்பதுதான் நல்லது!
டைனமைட்டுகளை எடுத்துப் போகிறோமா?
நிச்சயமாக! குறைந்த பட்சம் ஆளுக்கு நான்கு எடுத்துக் கொள்வோம்.. துப்பாக்கிகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.
இங்கிருந்து எப்போது திரும்பி ஓடிப் போவோம் என்றிருக்கிறது எனக்கு.



எல்லாம் நல்ல படியாக நடந்து முடிந்தால் விடியலுக்குள் நாம் இங்கிருந்து திரும்பி விடலாம்...
இவர்களால் எப்படி இங்கே வர முடிந்தது? விசுவாசம் மிக்க என் காவல் விலங்குகளை எப்படி இவர்களால் தவிர்த்துக் கொள்ள முடிந்தது?
சற்றைக் கெல்லாம்...
ஜாக்கிரதை! அந்த அப்பாவிகள் குறிப்பிட்ட ராட்சஸ விலங்குகளின் குகை வாசல் இதுவாகத் தானிருக்கும்! நிதானமாக முன்னேறுவோம்! கிராதி கதவு தூக்கிய நிலையிலேயே இருக்கிறது... இதை வைத்து வேறு விலங்கு ஏதும் இங்கே இல்லை என்று முடிவு கட்டி விட முடியாது!
தப்புக் கணக்கு போட்டால் -தொலைந்தோம்!
சிங்கத்தின் குகையில்
கிராதிக் கதவு திறந்த நிலையில் இருப்பது ஒரு சூழ்ச்சி ஏற்பாடோ-என்ற சந்தேகம் எனக்கு!
நான் அப்படி நினைக்கவில்லை. அந்நியர் எவரும் இவ்வளவு தூரம் வரமுடியாது என்ற வின்டெக்ஸின் அசட்டு நம்பிக்கைக்கு சான்று இது... அவ்வளவுதான்!


நம்மிடம் டைனமைட் இல்லாதிருந்தால் நாம் அங்கேயே விலங்குகளுக்கு பலியாகித்தானே போயிருப்போம்!
அந்த விலங்குகள் திரும்பி வருவதை எதிர்பார்த்தே கதவு திறந்த நிலையில் வைக்கப் பட்டிருக்கிறது... குழ்ச்சி ஏற்பாடு என்றால் நாம் வெளியேறுவதை தடுக்கும் நோக்கமாக இருக்க வேண்டும்... நாம் ஏதாவது ஒரு யுக்தியை மேற்கொள்வோம்!
என்ன யுக்தி?
ம்ம்... அந்தப் பாறைகளை நகர்த்தி கதவின் கீழ் வைப்போம். கதவு இறங்கினாலும் முழுவதுமாக அடைத்துக் கொள்ளாது அல்லவா?
சில நிமிடங்களிலேயே பாறைகளை நகர்த்தி முடித்து விட்டார்கள்..
அப்பப்பா.. என்ன ஒரு துர்நாற்றம்?
விலங்குகளின் வாசஸ்தலத்தில் பின்னே மல்லிகைப் பூ வாசமா வரும்?
வேறு வாசல் எதுவுமில்லை...! எனவே, வேறு எந்த விலங்கும் எதிர்ப்படாது என்று நிச்சயமாக நம்பலாம்!
மேலே கவனியுங்கள்!


ஓ..! அது வின்டெக்ஸும் அவனுடைய ஆட்களும் வந்து போகும் பாதை போலும்!
ஒரு சுருக்குக் கயிறு மட்டும் இப்போது நம் வசம் இருந்தால்?
ஊஹூம்.. பிரயோஜனப் படாது... கொக்கி எதுவும் இல்லை இங்கே என்பதை நீ கவனி!
வெளிச்சம் காட்டு... நான் மேலே போக முயற்சிக்கிறேன் -போன பின் உன்னையும் ஏற்றுகிறேன்!
ஓ.கே.
அந்த பாறை மீது நிதானமாக மேலே ஏறினார் டெக்ஸ்.
சற்றைக்கெல்லாம் தோற்றிக் கொள்ள வாகாக கைப்பிடிச் சுவர் அகப்பட்டது..
ஒரு வழியாக மேலே வந்து விட்டேன்!
ஆனால் அவர் எகிறி உள்ளே குதித்த போது எதன் மீதோ காலை வைத்துவிட பேரொலி எழுந்தது அங்கே...
கிறிச்!
ஹே..! என்ன இழவு கிடக்கிறது இங்கே?


அடடே... என்ன ஒரு அதிர்ஷ்டம் பாரேன்... கார்லோஸ் விரும்பியவாறே கயிறு ஒன்று கிடக்கிறது இங்கே!
கார்லோஸ்.. என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டக்காரன் தான்!
பலே.. பலே.. எப்படி மேலே ஏறப் போகிறேனோ என்று திணறிக் கொண்டிருந்தேன்!
அதையடுத்து -
அதோ.. ஒரு தீவட்டி! அது -
அங்கேயே இருந்து விட்டுப் போகட்டும் - தொடாதே!
தீவட்டி வெளிச்சம் நம் வரவை காட்டிக் கொடுத்து விடலாம்.. அவ்வப்போது தீக்குச்சியை கொளுத்திக் கொண்டு நிதானமாக முன்னேறுவோம்!
ம்ம்...
அதே சமயம் -
ஓடி வாருங்கள்.. அவர்களை உயிரோடு பிடிக்க வேண்டும்.
ஜாரும் நான்கு ஜுமா வீரர்களும் மலைச் சிங்கங்களின் குகையை விரைந்து நெருங்கினார்கள். ஆனால் -
யாரையும் காணோமே!



..அவ்விருவரையும் காணாத ஜார் வின்டெக்ஸிடம் போகத் தீர்மானித்தான்..
நான் சொல்லும் வரை இங்கேயே இருங்கள்.
அந்நியர் இருவரும் தென்பட்டால்?
பிடியுங்கள் -அதிகமாக காயப்படுத்தாமல்!
ஒவ்!
சில நிமிடங்களுக்குப் பின் -
என்ன ஆயிற்று?
குகை காலியாக கிடக்கிறது பிரபு... மாயமாக மறைந்து விட்டார்கள்.
ஓகோ! அப்படியானால் மேலே ஏறிச் சென்றிருக்கக் கூடும்! இந்தக் கணத்தில் கோவிலின் கர்ப்பக் கிருகத்தை நெருங்கி யிருக்கலாம்!
அவர்கள் உள்ளே போக இயலாது பிரபு!
நேற்று அஸ்தமன வேளையில் நானே கதவை மூடி தாழிட்டேன்!
ஓடு ஜார்..! போய் அதை திறந்து வை!
உன்னோடு இரண்டு வீரர்களை அழைத்துச் செல்... அவ்விருவரும் உள்ளே நுழைந்ததும் என்ன செய்ய வேண்டும் என்று உனக்குத் தெரியுமில்லையா?
தெரியும் பிரபு... அது ஒன்றும் கஷ்டமான காரியமேயில்லை!



இதற்கிடையே கார்லோஸ் ஒரு படியில் இடித்துக் கொண்டு விட்டான்..
உஷ்ஷ்.. கத்தாதே! தீக்குச்சியை பற்ற வைக்கிறேன்!
ஆவ்..!
என்ன ஆயிற்று?
என் காலில் அடிபட்டு விட்டது.
மெள்ளப் பேசு.. கார்லோஸ்!
சற்று ஓய்வெடுத்த பின் இருவரும் மீண்டும் மேலே ஏறத் தொடங்கினார்கள்.. முடிவில் பிரம்மாண்டமான கதவு ஒன்று எதிர்ப்பட்டது..
ஹூம்.. உடைத்துத்தான் திறக்க வேண்டியிருக்கும்! டைனமைட் கைவசம் இருந்தும் பயன்படுத்த முடியாத நிலை!
தள்ளித்தான் பார்ப்போமே என்று டெக்ஸ் முயன்ற போது வியத்தகு வகையில் கதவு சுலபமாக திறந்து கொண்டது..
அடடே.. சும்மாதான் சாத்தியிருக்கிறது!
அது ஒரு சூழ்ச்சியாக இருக்கலாம் என்ற எண்ணத்தோடு ஜாக்கிரதையாக உள்ளே காலடி எடுத்து வைத்த டெக்ஸ் நிதானமாக முன்னேறினார்.
எங்கேயோ உதைக்கிறதே?
?
ஆனால் உள்ளே யாரும் இல்லை என்று நிச்சயித்துக் கொண்ட பின் கார்லோஸையும் பின் தொடரச் சொன்னார்
சிலைகள்தான் நிற்கின்றன... யாரையும் காணோம்!



டெக்ஸ்.. இந்த இடம்?
ஆமாம்.. அந்த மெக்ஸிகன்கள் குறிப்பிட்டார்களே..
..வின்டெக்ஸின் சூழ்ச்சிப் பொறி பற்றி - அது இந்த இடம்தான்
இருவரும் வராந்தா நோக்கி ஓட யத்தனித்த போது -
மடேர்!
கைமிஞ்சிப் போய் விட்டது.. அகப்பட்டுக் கொண்டு விட்டோம்
மறுகணம் பின் புறமும் ஒரு கிராதி கதவு கீழிறங்கியது..
டெக்ஸ்.. தொலைந்தோம்!
நாம் இங்கே தனித்து இல்லை!
எவனாவது மூஞ்சியை காட்டட்டும்.. பரலோகம் அனுப்பி வைக்கிறேன்!
ஆனால் டெக்ஸ் இதைச் சொல்லி முடிக்குமுன் அங்கே அசரீரியாக பயங்கர சிரிப்பு ஒன்று எழுந்தது..
ஹா..ஹா..ஹா..! வாய்ச் சவடால் பேசாதே.. - என் அடிமை நீ!



உயிர் பிழைக்க உங்களுக்கு ஒரே ஒரு வாய்ப்புத்தான்! இருவரும் கையிலுள்ள ஆயுதங்களை தூர எறியுங்கள்..
கோழையே.. தைரியமிருந்தால் நேரில் வந்து பேசு!
அந்த சவாலுக்கு பதில் வார்த்தைகளில் வரவில்லை! மாறாக கூரையிலிருந்து துளைகளின் வழியாக இரும்புக் கழிகள் கீழிறங்கத் தொடங்கின.
நாசமாகப் போக...!
கடவுளே.. என்ன இது!
மேலும் மேலும் கழிகள் இறங்கிய வண்ணமிருந்தன..
சில நிமிட அவகாசம்தான் உங்களுக்கு - ஒரு நல்ல தீர்மானத்திற்கு வர!
சண்டாளன்.. நம்மை குத்திக் கொன்று விடுவான் போலிருக்கிறதே!
தப்பிக்க வாய்ப்பே இல்லை..!
விரைவிலேயே அறை முழுக்க கழிகள் இடத்தை அடைத்துக் கொண்டு விட்டன..
அவர்கள் நிற்க மட்டுமே இடைவெளி மிஞ்சியிருந்தது.
டெக்ஸ்.. ஏதாவது செய்தாக வேண்டும்!
நிறுத்து! ஆயுதங்களை எறிந்துவிடச் சம்மதிக்கிறோம்!



அதே சமயம்...
ரெட் விங்கின் கிராமம் இருந்த இடம்தான் இது... தடங்களை கவனியுங்கள்.. அந்த மாந்த்ரீக வைத்தியன் விலங்குகளைப் பற்றி சொன்னது அத்தனையும் நிஜம்தான் என்பது புரியும்!
ம்ம்... மலைச் சிங்கங்களின் தடங்கள் - ஆனால் காட்டெருமையின் தடங்கள் அளவுக்கு பெரியவை!
எதிரிகளின் பொறியில் டாடி மாட்டிக் கொண்டு விடலாகாது!
'இரவுக் கழுகு' லேசுப்பட்ட வரல்லவே!
என் தந்தையின் திறமையில் எனக்கு ஐயம் ஏதுமில்லை! நம் வரவை அவர் எதிர்பார்ப்பாரேயானால் அது வரை சாதுரியமாகவே செயல்படுவார்!
இன்னமும் எதிரியின் தடத்தை பின்பற்றி போய்க் கொண்டிருக்கக் கூடும்.
அப்படியே நம்புவோமாக! குதிரைகள் களைத்து விட்டன... இரவை இங்கே கழித்து விட்டுப் போவோம்!
எதிர்பாராத விருந்தாளிகள் இங்கே வரும் ஆபத்து உண்டல்லவா
அந்த விலங்குகளை குறிப்பிடுகிறாயா.. காவலுக்கு ஆட்களை நிறுத்துவோம்!
சாதாரண விலங்குகள் அல்ல.. ராட்சஸ சைத்தான்கள் அவை!



ஆமாம்.. அவ்விலங்குகள் காட்டெருமை அளவு பிரம்மாண்ட மானவை என்று அந்த செவ்விந்தியன் சொன்னான்..
இவ்வளவு பயப்படுகிறவன் ஏன் எங்களோடு கிளம்பி வந்தாய்?
என் நண்பர் டெக்ஸைத் தேடி நீயும், இந்த செவ்விந்திய தோழர்களும் புறப்பட்டு விட்ட பின் எனக்கு அந்த நவஜோ கிராமத்தில் தனித்திருக்க இஷ்டமில்லை..
சரியான புலம்பல் கேஸ் நீ!
சரி.. சரி.. பதினெட்டு மணி நேர இடைவிடாத பிரயாணத்தினால் உடம்பெல்லாம் நோகிறது... ஓய்வெடுக்க வேண்டும்...
தாராளமாக - யார் வேண்டாம் என்றது?
அதன் பின்னர் பாதிப் பேர் பைவ்ட்ஸ் கிராமத்தில் தங்கிவிட மற்றவர்கள் ஐவர் குழுவாகப் பிரிந்து நாலாதிசைகளிலும் ரோந்து போகத் தொடங்கினர்.
ஒரு குழு கணவாயின் விளிம்பில் டெக்ஸை தாக்கிய ராட்சஸ விலங்குகளின் காலடி தடங்களை கண்டது..
வோவ்..! புதிய தடங்கள்!
ஓவ்!
அதோ அங்கே கணவாயின் வெளி வாயில் அருகே பாருங்கள்.
யாராவது ஓடிப் போய் டைகரிடம் இதை தெரிவியுங்கள்.



பத்துப் பன்னிரண்டு நிமிடங்களுக்குப் பின் -
துளியும் சந்தேகம் இல்லை!
நிச்சயம் இது 'இரவுக் கழுகின்' சாதனைதான்!
ரைபிளை பயன்படுத்தி யிருப்பாரோ?
இல்லை... டைனமைட்டை உபயோகித் திருக்கிறார்.. இப்போதும் கூட
டைனமைட்டுகளை கைவசம் வைத்திருப்பார் என்று நிச்சயமாக நம்புகிறேன்.
இவை டெக்ஸின் தடங்கள் எனில் நாம் ஏன் இவற்றை பின் தொடர்ந்து செல்லக் கூடாது?
பாட்! நம் குதிரைகள் படுமோசமாக களைப்பு ற்றிருப்பதை அதற்குள் மறந்து விட்டாயா?
இதற்கிடையே -
என் ராஜ்ஜியத்தினுள் ஊடுருவியதன் நோக்கத்தை வெளியிட உங்களுக்கு இஷ்டமில்லை அப்படித்தானே?
அதைப் பற்றிப் பேசி என்ன பயன்? நாங்கள் உங்கள் பிடியில் இருக்கிறோம்.. வீண் காலவிரயம் தானே!
திமிர் பிடித்தவனே! நீ சொல்லப் போகும் பதிலை வைத்துத் தான் எவ்வகையில் மரணத்தை உங்களுக்கு அறிமுகப் படுத்துவது என்று தீர்மானிக்கப் போகிறேன்..
வீரன் ஒரு முறைதான் சாகிறான்.. வின்டெக்ஸ்!
இருக்கலாம்! ஆணவக்காரனே... சாவது ஒருமுறைதான் என்றாலும் வழிமுறை வேறுபடலாமில்லையா... உடனடி மரணம்... அல்லது வடைபட்டுச் சாவது - இப்படியாக!
சரிதான்.. கொக்கரிக்காதே!


கொண்டு போங்கள் இருவரையும்.. நிலவறைக்கு! நாளை தீர்மானிக்கிறேன்.. இவர்களை என்ன செய்ய வேண்டும் என்று!
உன் பூச்சாண்டி செல்லுபடியாகாது வின்டெக்ஸ்.. எங்களை நீ கொன்றால் விரைவிலேயே பழி வாங்கப் படுவாய்.. ஜாக்கிரதை!

# பறக்கும் பட்சிகள்


முட்டாள்கள்..! வின்டெக்ஸையே எதிர்த்துப் பேசத் துணிந்த அறிவிலிகள்!


அதையடுத்து டெக்ஸும் கார்லோஸும் ஒரு சிறு அறையினுள் தள்ளப்பட்டனர்..


அதே சமயம் -
ஹா.. தன் தலை -என்னமாய் வலிக்கிறது! நான் இப்போது எங்கே இருக்கிறேன்?


எனக்கு ஞாபகம் இருப்பதெல்லாம்.. -ஓ.. வின்டெக்ஸ் வருகிறார்!
இளைஞனே.. நலமாக இருக்கிறாயா?
விபத்து நிகழ்ந்த போது நான் தூங்காமல் விழித்திருந்தது உன் அதிர்ஷ்டம்தான்... இல்லையேல், சோதனைச் சாலையை கபளீகரம் செய்த தீயில் நீயும் வெந்து மாண்டு போயிருப்பாய்.
வுளே! அதை தற்செயலான விபத்து என்று நினைக்கிறானா இந்தக் கிழவன்!
அப்படி விபரீதமாக ஏதேனும் நிகழ்ந்திருந்தால் உன் மாதிரி விசுவாசமிக்க, மதிநுட்பமான கூட்டாளியை இழந்ததினால் பெரிதும் வேதனைப் பட்டிருப்பேன்..!, எப்படி நிகழ்ந்தது அந்த விபத்து?
தெளிவாக ஞாபகம் இல்லை!
புது வகை கெமிக்கல் ஒன்றின் செயல்திறனை சோதித்துக் கொண்டிருந்தேன்.. படீரென்று ஏதோ வெடிக்கும் ஓசை கேட்டது. மறுகணம் புகை மூட்டம் என்னை சூழ்ந்து கொண்டது.. அடுத்து என்ன நடந்ததோ எனக்கு நினைவில்லை.
ம்ம்.. துரதிர்ஷ்ட வசமான சம்பவம்!
நம் ஆராய்ச்சியை குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்காகவது ஒத்திப் போட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது... அழிந்து போன உபகரணங்களுக்கு மாற்றுப் பொருட்களை சேகரிக்கும் பொறுப்பு உன்னைச் சேர்ந்தது -
என் மீது கொஞ்சம் கூட சந்தேகம் எழவில்லை கிழவனுக்கு - நான் பிழைத்தேன்.
விக்டர் ஹெர்மான்.. ஏன் பதிலேதும் பேசாமலிருக் கிறாய்?
என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்.. நான் அதிர்ந்து போயிருக்கிறேன்... இப்படியொரு விபத்து நிகழ்ந்திருக்கவே கூடாது. சரி.. எதையாவது மீட்க முடிந்ததா?


இல்லை..! மெக்ஸிகன் ஒருவன் தப்பியோட முயன்ற நாளிலிருந்து எல்லாமே துரதிர்ஷ்டமாகத்தான் சம்பவித்துக் கொண்டிருக்கிறது.
என் விசுவாசம் மிக்க விலங்குகளில் ஒன்று குற்றுயிராக திரும்பி வந்தது..
..மற்றது காணாமலே போய்விட்டது... அதைத் தொடர்ந்து என் அடிமை நாய்களும் எங்கேயோ தொலைந்து போய்விட்டார்கள்.
?
நேற்றிரவு சோதனைக் கூடத்தில் தீ விபத்து நிகழ்ந்தது மட்டுமின்றி இரு அந்நியர்கள் நம் புனித பூமியினுள் நுழைந்து விட்டிருக்கிறார்கள்... இதுவரை இம்மாதிரி நிகழ்ந்ததேயில்லை...
அதெப்படி இவ்வளவு தூரம் வர முடிந்தது அவர்களால்?
புரியாத புதிர்தான்! என்றைக்குமே கடமையில் தவறாத என் விசுவாசம் மிக்க காவலர்களை எப்படித்தான் இவர்களால் சமாளிக்க முடிந்ததோ..?
அவர்களை கொன்று விட்டீர்களா?
இன்னும் இல்லை! அவர்கள் யார்.. இங்கே வந்த நோக்கம் என்ன என்று முதலில் கேட்டறிய வேண்டும்?
வாயைத் திறக்க மறுக்கிறார்கள்.. அவர்களை பேச வைக்க எனக்கா தெரியாது?
அவர்கள் இங்கே வந்து சேர்ந்தது தற்செயலான சம்பவம் அல்ல.
அப்படி நீங்கள் சொல்லக் காரணம்?


என் எதிரே வரும் முன்னரே என் பெயர் தெரிந்திருக்கிறது அவர்களுக்கு...
ஏதோ ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடுதான் அவர்கள் இங்கே வந்திருக்க வேண்டும்..
விநோதமாக இருக்கிறது!
நீ கிலேசமடைய வேண்டாம்! நமக்கு எதிரான ஏதோ ஒரு திட்டத்தோடு வந்திருக்கிறார்களா என்று விரைவிலேயே தெரிந்துவிடும்!
அவர்களுக்கு எதிராக நாம் சேர்ந்தே போராடுவோம்..! இப்போது நீங்கள் போய் ஓய்வெடுங்கள் வின்டெக்ஸ்!
நானும் துணைக்கு உடன் வருகிறேன்... உங்களுடைய பாதுகாப்புத்தான் எனக்கு முக்கியம்.
நன்றி
என் வம்சாவளியினரின் இரத்தம் உன் உடம்பில் ஓடாதது துரதிர்ஷ்ட வசமானது..
இல்லையேல், உன்னையே என் வாரிசாக சுவீகரித்துக் கொண்டு விடுவேன்!
சரியான கிறுக்கன்!
ஆனாலும், மகோன்னதமான சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் நான் அமரும் போது
உன்னை நன்றியோடு நினைவு கூற நிச்சயம் தவற மாட்டேன்!
நன்றி! சரி.. தூங்கி ஓய்வெடுங்கள்!
அந்த இரு அந்நியர்களையும் நீதான் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். தப்பியோடிவிடப் போகிறார்கள்!
அந்தக் கவலை வேண்டாம் உங்களுக்கு! எப்போதும் நான் அவர்கள் மீது ஒரு கண் வைத்திருப்பேன்!



ஓ.. என் தலை.. வெடித்து விடும் போலிருக்கிறது நண்பனே..
நன்றாக தூங்கி ஓய்வெடுங்கள் -சரியாகி விடும்!
ஹூம்.. வெறுப்பதா இல்லை பரிதாபப்படுவதா என்றே தெரியவில்லை எனக்கு! சில வேளைகளில் இயல்பாக நடந்து கொள்கிறார்.. ஆனால் ஒன்று - இவருடைய செயல்களுக்கு முழுக்க இவர் மட்டுமே பொறுப்பாக மாட்டார்!
அடுத்த ஆறுமாத காலத்திற்கு ஆராய்ச்சிப் பணி இல்லை என்பது உற்சாக மூட்டும் சங்கதி... வின்டெக்ஸ் அதன் பிறகும் உயிரோடு இருப்பார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது..
கடுமையான தலைவலி இப்போது அடிக்கடி வருகிறது அவருக்கு!
அதனால் ஆங்காரமாக ஏதேதோ கத்துவதும் வாடிக்கையாகி விட்டது... இதெல்லாம் எதற்கு ஒரு தொடக்கம் என்பதைச் சொல்ல ஒருவர் மனோதத்துவ நிபுணராகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை!
சிற்றறைகள் இருந்த வராந்தா பகுதிக்குச் சென்ற ஹெர்மான் அங்கே காவல் நின்ற காவலாளியிடம் மிடுக்காகச் சென்றான்.
கதவை திற! ஒரு விளக்கையும் தா..! கைதிகளை நான் பார்க்க வேண்டும்!
மிஸ்டர்... ஜுர் கடுமையாக எச்சரித்து -
மூடு வாயை! கைதிகளை விசாரிக்கச் சொல்லி வின்டெக்ஸ் என்னை அனுப்பியிருக் கிறார்!
டெக்ஸ்!


அது.. என் சகோதரன் விக்டோரியோவின் குரல் - சந்தேகமே இல்லை..
அப்படியானால்... உள்ளே -கார்லோஸ்..!
?
ஒரு நிமிடத்தைக்கூட வீணடிக்காமல், மிகுந்த கோபத்தோடு இருப்பதாக காட்டிக் கொண்டு, கைதிகளை நோக்கி மளமளவென்று ஆங்கிலத்தில் பேசலானான் ஹெர்மான்..
உஷ்ஷ்... காவலாளிக்கு ஸ்பானிஷ் மட்டும்தான் தெரியும்.. கலவரமடைந்து போயிருப்பதாக காட்டிக் கொண்டு பேசுவதை ஆங்கிலத்தில் மட்டுமே பேசுங்கள்!
?!
நான் உங்களுக்கு உதவி செய்யப் போகிற விஷயம் வெளிப்படாதவாறு என்னைப் போல் நீங்களும் நடியுங்கள்...
கார்லோஸ் நீ வாயை திறக்காதே - உணர்ச்சி வசப்பட்டுப் போயிருக்கிற நீ எதையாவது உளறிக் கொட்டி விடுவாய்!
இந்த குத்தீட்டிகளின் நெருக்கடியிலிருந்து எங்களை நீ விடுவிக்க முடியுமா?
நிச்சயமாக முடியும்!
ராட்சஸ விலங்குகளிடமிருந்து எப்படித் தப்பினீர்கள்?
இருந்த அத்தனை சைத்தான்களையும் டைனமைட்டை வைத்து பரலோகம் அனுப்பி விட்டோம்!
ஓ..! கேட்க தேனாக இனிக்கிறது! இங்கிருந்து தப்பி வெளியேற தடையாக இருந்ததே அந்த மலைச் சிங்கங்கள்தான்
ஜூமா வீரர்கள்?


மெஸாவின் அடிவாரத்தை எப்படியாவது போய்ச் சேர்ந்து விட்டால் அதன் பின்னர் அவர்களால் தொல்லை ஏதும் வராது. உற்சாகமாக இருங்கள்... இதோ.. சற்று நேரத்தில் திருப்பி வருகிறேன்.
எங்களுக்கு ஆயுதம் ஏதாவது கொண்டு வர முயற்சி செய்!
வேறெதுவும பேசாமல் அறையை விட்டு ஹெர்மான் வெளியேறியதைத் தொடர்ந்து கதவை சாத்தி தாழிட்டான் காவலாளி..
வித்தியாசமான பாஷையில் உரையாடினீர்களே.. என்னதான் சொன்னார்கள்?
கருணை காட்டுமாறு கெஞ்சுகிறார்கள்.. முதலில் தண்ணீர் வேண்டுமாம்!
ஓஃ..! அதாவது நான் போய்..
அவசியமில்லை.. நீ இங்கேயே இரு.. நான் பார்த்துக் கொள்கிறேன்
கடவுளின் சித்தம்! என் சகோதரன் இங்கே வந்திருக்கிறான்.. நான் உடனடியாக தப்பி வெளியேற திட்டமிட வேண்டும்!
கோவிலை விட்டு வெளியேறிய ஹெர்மான் மெக்ஸிகன்கள் தங்கியிருந்த பகுதிக்குச் சென்றான்.. அங்கே அவன் தேடி வந்த பொருட்கள் சுலபமாக அகப்பட்டன..
இங்கே இருக்கக் கூடும் என்று நான் யூகித்தது சரியாகிவிட்டது. முடிந்தவரை நிறைய அள்ளிக் கொண்டு போக வேண்டும்!
அதையடுத்து...
இந்தாருங்கள் -நீங்கள் கேட்டது!
?
!


மிஸ்டர்.. விடியும் வரை நான் காவலை இங்கே தொடர வேண்டுமா?
போய் ஜாரை கேட்டு வந்து சொல்கிறேன்.. அதுவரை இந்த இடத்தை விட்டு நகராதே!
தண்ணீர்! ஆனால் அவனிடம் நாம் கேட்டது -
பொறு! குவளையில் தண்ணீர் மட்டும்தான் இருக்கிறது என்று தப்புக் கணக்கு போடாதே!
கலகலவென்ற ஒலி எழுவதை கேட்டாயல்லவா?
இரண்டு கத்திகள்!
அத்தோடு ஒரு சாவியும் இருக்கிறது.
சில நிமிடங்களுக்குப் பின் -
ஆ.. ஐயோ.. அம்மா!
?
என்ன இழவு... எதற்காக இப்படி கத்தித் தொலைக் கிறார்கள்.. அவர்களுக்கு ஒரு ஆபத்து என்றால் பழி என் மீதுதான் விழும்.. திறந்துதான் பார்ப்போமே.
உதவி.. ஆபத்து..
க்ளிக்!


கதவை திறக்கிறான்! தொடர்ந்து கதறு.. என் திட்டம் பலிக்க பிரார்த்தனை செய்!
ஆ..ஆ..ஆ..
காவலாளி கதவை திறந்து, உள்ளே காலடி வைத்ததும் -
ம்ம்.. வெளியேறு கார்லோஸ் - சீக்கிரம்
மடேர்!
காவலாளியின் கையிலிருந்த கனத்த கழியை பிடுங்கி அவனை உக்கிரமாக தாக்கினார் டெக்ஸ்.
க்ராக்!
அவன் மயங்கிச் சரியும் வரை அடிப்பதை டெக்ஸ் நிறுத்த வில்லை!
கொன்று விடட்டுமா?
அவசியமில்லை.. உள்ளே இழுத்துப் போட ஒத்தாசை செய் போதும்.
இவன் சுயவுணர் வடைந்தால் நொடியில் நம் தலைக்கு ஆபத்து வந்து சேரும் இல்லையா?
அலட்டிக் கொள்ளாதே... குற்றுயிராக்கி யிருக்கிறேன் இவனை!
ஓடிவா... உன் சகோதரனோடு போய் ஒட்டிக் கொள்வோம்.. இல்லையேல் மறுபடியும் வின்டெக்ஸின் பொறி ஏதாவது ஒன்றில் அகப்பட்டுக் கொள்ளும் அபாயம் உண்டு.



இதற்கிடையே -
இந்த ஆயுதங்களை எப்படியாவது சிறைக் கூடத்திற்கு கொண்டு போய்ச் சேர்க்க முயல வேண்டும்.
இந்நேரம் கார்லோஸும் அவனுடைய நண்பரும் தங்களை விடுவித்துக் கொண்டிருக்கக் கூடும்.. ஆனால் இரண்டு கத்திகளை மட்டுமே வைத்துக் கொண்டு காவலாளிகளை அவர்களால் சமாளிக்க இயலுமா?
இதுவரை துப்பாக்கியை தொட்டுக்கூட பார்க்காத நான் இப்போது அதை பிரயோகிக்கப் போகிறேன்!
அதே சமயம் ஜாரும் மற்ற வீரர்களும் மெஸாவினுள் ரோந்துப் பணியை முடித்துக் கொண்டு மேல் தளத்தை நோக்கிப் போகும் பாதை வழியே மேலே ஏறிக் கொண்டிருந் தார்கள்.
அவ்விரு குதிரைகளையும் நாம் கைப்பற்றி உள்ளே கொண்டு வந்திருக்க வேண்டும்... ஜார்
ப்பூ...!
சற்று நேரத்தில் விடியப் போகிறது... மலைச் சிங்கங்கள் திரும்பி வரப் போகின்றன... அவைகளுக்கு இவை நல்ல விருந்தாகட்டுமே!
ஓ!
ஆறுபேர் உள்ளே போய் உதய வேளை வரை நன்றாக ஓய்வெடுங்கள்..
..நானும் மற்றவர்களும் மேட்டிலிருந்து கண் காணிக்கிறோம்..
ஏன் பீதியடைகிறீர்கள்? அந்த இரு அந்நியர்களும் தனித்தே இங்கே வந்திருக்கிறார்கள் என்பதுதான் உறுதியாகி விட்டதே!



தடங்களை நாம் கண்டறிந்து வெகுதொலைவுக்கு பின்பற்றிச் சென்று பார்த்துவிட்டோம் அல்லவா? எனவே
அதுபற்றி மேலே பேச வேண்டாம்!
மெஸாவை சுற்றி இருபத்தி நாலுமணி நேரமும் கண்காணிப்பு இருக்க வேண்டும் என்பது வின்டெக்ஸின் புது உத்தரவு.. அதை நிறைவேற்ற வேண்டியது நமது கடமை..
அதே சமயம் -
அதற்குள் எப்படி உங்களை விடுவித்துக் கொண்டீர்கள்.. என்னால் நம்பவே முடியவில்லை... என் அருமை சகோதரனே..
விக்டோரியா..
பேசி பொழுதை வீணடிக்க இது அல்ல சமயம்!
உண்மைதான்! ஜுமாக்கள் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுமுன் நாம் மெஸாவிலிருந்து ஓடிப் போய் விட வேண்டும்.
அந்த பிஸ்டல்களில் ஒன்றை என்னிடம் கொடு!
இதை இடையில் கட்டிக் கொண்டதும் எனக்கு எவ்வளவு தெம்பாக இருக்கிறது தெரியுமா?
என்னோடு வாருங்கள்! ஜுமாக்கள் இன்னமும் தங்களுடைய இடத்திலேயே இருக்கக் கூடும்.. ஆனால் கிழக்கு வெளுத்துக் கொண்டு வருகிறது; - அவர்கள் எந்த நிமிடமும் வெளியேறி வரலாம்!
? ! ?


மரண முடிவு!
அங்கே பார் அந்த அநியாயத்தை... கைதிகள் தப்பியோடப் பார்க்கிறார்கள்
விடாதீர்கள்.. பிடியுங்கள்!
!
ஜுமாக்கள்..!
சண்டாளர்கள்!
ஓடுங்கள் பிரமிட்டை நோக்கி... நான் உங்களுக்கு பாதுகாப்பு தருகிறேன்.
கார்லோஸ் ஓடி வா!
ஆஆ!
டுமீல்
டுமீல் டுமீல்
ஆ!
நாசமாகப் போக!


பரவலாக விலகி வளையுங்கள்
சாக்கடைப் புழுக்கள்..! தடுத்து நிறுத்த பீரங்கியால்தான் முடியுமோ?
டுமீல்
டெக்ஸ்.. நீங்களும் வந்து விடுங்கள்!
பிஸ்டலில் தோட்டா தீர்ந்துவிட்டது.. நான் பின் வாங்கி ஓடி வரப் போகிறேன்... பாதுகாப்புக் கொடுங்கள்.
முன்னேறுங்கள்.. பிரமிட்டை நோக்கி!
டுமீல் டுமீல்
டுமீல் டுமீல்
டெக்ஸ்.. சீக்கிரம்!
டுமீல்


இதற்கிடையே -
தோட்டா முழக்கம்! இது என்ன புது விவகாரம்?
ஜார்.. ஜார்
ஜார்
கடவுளே..!
என்னதான் நடக்கிறது இங்கே? தோட்டா முழக்கம் கேட்டதே - என்ன விபரீதம்?
மேலே பாருங்கள் பிரபு! இரு கைதிகளும் தப்பித்துக் கொண்டு விட்டார்கள்.. விக்டோரியாவும் அவர்களோடு சேர்ந்து கொண்டு விட்டார்!
நீ.. நீ சொல்வது நிஜமா?
ஆமாம் பிரபு.. விக்டோரியோ உங்களுக்கு துரோகமிழைத்து விட்டார்!


சீக்கிரம் ஏறி வாருங்கள்.. எந்த வினாடியிலும் அவர்கள் நம்மை துரத்திக் கொண்டு வந்து விடலாம்!
மேலேறி வர இந்த வழி ஒன்றுதான் உள்ளதா?
ஆமாம்!
நல்லது! நம் மீது கை வைக்க வேண்டுமானால் அவர்கள் கடும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டும்!
துரோகமிழைத்த விக்டோரியோவும் அத்துமீறி நுழைந்த அந்நியர்களும் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்
உத்தரவிடுங்கள் பிரபு!
தங்களுடைய ஆணையை உயிரைக் கொடுத்தாவது நிறைவேற்றி வைப்போம்!
இல்லை..! நீங்கள் துளி ரத்தம் கூட சிந்தக் கூடாது!
பசியும், தாகமும் அவர்களை வாட்டும் போது அவர்களாகவே வலிய நம் கையில் வந்து விழுவார்கள்!
ஏன் நம்மை தாக்க முற்படாமல் பேசிப் பொழுதை வீணடித்துக் கொண்டிருக் கிறார்களோ தெரியவில்லை!
நாம் தப்பியோட முடியாத நிலை.. அவர்கள் சாவகாசமாக வந்து பிடித்துக் கொள்ளலாமே!


மொத்தம் பத்துப் பேர் இருக்கிறார்கள்.. நம்மை பிடிக்க இந்த படிக்கட்டு வழியாகத்தான் ஏறி வரவேண்டும்!
அப்போது அவர்களை குறி வைப்பது சுலபம்!
அதனால்தான் மேலே ஏறி வர தயங்குகிறார்கள்!
விலகிப் போகிறார்கள்...!
பட்டினி போட்டு நம்மை மடக்க தீர்மானித்து விட்டார்கள் போலும்
இதெப்படி சிரித்துக் கொண்டு சொல்ல முடிகிறது - உங்களால்
காரணம் இருக்கிறது... என் நண்பர்கள் எந்த வினாடியிலும் நம் உதவிக்கு இங்கே வந்து சேரக் கூடும்!
செய்தி அனுப்பி விட்டுத்தான் டெக்ஸ் இங்கே வந்திருக்கிறார்.
நம்மை பட்டினி போட்டுக் கொல்ல வின்டெக்ஸ் நினைத்தால் அது அடிமுட்டாள்தனம்!
எதிரியின் பலத்தை அறியாத மதியீனம்!
நமக்கு சாதகமான அம்சம்!
இதற்கிடையே, வின்டெக்ஸின் உத்தரவுப்படி படிக்கட்டில் தடைகளை குவிக்கத் தொடங்கினார்கள் ஜூமா வீரர்கள்..
..ம்ம் இந்த தடையை எழுப்புவதன் மூலம் என்ன சாதிக்க நினைக்கிறார்கள் இந்த மூடர்கள்!
எனக்கும் புரியவில்லை.. டெக்ஸ்!


ஆனால் தடைகளை பரவலாகக்கி அதன இருமுனையில் ஜுமா வீரர்கள் தீ மூட்டியபோது அவர்களுடைய நோக்கம் ஓரளவு விளங்கலாயிற்று.
புகையினால் மூச்சுத் திணறி நாம் செத்துப் போக வேண்டும் என்று எதிர்பார்க் கிறார்கள்!
அது எப்படி சாத்தியம்?
அல்லது நாம் அவர்களை நெருங்கி எதிர்த்து தாக்காமலிருக்க இது ஒரு தடை என்று நினைக் கிறார்களோ?
அப்படித் தானிருக்கும்!
நம் நோக்கத்தை புரிந்து கொள்ளும் சூழ்ச்சியாகவும் இருக்கலாம்!
என்ன செய்யப் போகிறீர்கள்?
மேலும் குழப்பத்தை உண்டு பண்ணப் போகிறேன்..
ஜாக்கிரதை! ஒருவன் இறங்கி வருகிறான்.
தடையின் மத்தியிலும் தீயை வை!
உன் சாதனைக்கு என் பரிசு.. இதோ!
டுமீல்



ஆ-ஆ...
க்ராக்!
வின்டெக்ஸும் அவனுடைய அடிவருடிகளும் தங்களுடைய வாத்து முளையை நன்றாக வெளிச்சம் போட்டு காட்டி விட்டார்கள்.
அந்த தீ நம்மை சில மணி நேரத்திற்கு இங்கே முடக்கிப் போட்டு விட்டது என்பது ஒருபுறம் இருக்க நெருங்கி வரும் என் தோழர்களுக்கு இது ஒரு சமிக்ஞையாகவும் இருக்கும்.
அந்த அளவுக்கு அவர்கள் நெருக்கத்தில் வந்து விட்டிருப்பார்களா?
இந்த அளவு பிரம்மாண்டமான தீ வெகு தொலைவுக்கு புலப்படும் என்பது ஒரு புறம் இருக்க, என் நண்பர்கள் இதை பார்க்கக் கூடிய எல்லைக்குள் ஏற்கனவே வந்து விட்டிருப்பார்கள் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்!
உண்மையில்...
ஓல்..! அங்கே பாருங்கள்!
அந்தப் புகை ஒரு சமிக்ஞை என்பதோடு பெரும் தீயினால் உருவானது என்றும் கணிக்க முடிகிறது..
நாம் வேகத்தை அதிகரிப்பது நல்லது.. கார்ஸன்!


குதிரையை உச்ச வேகத்தில் விரட்டுங்கள்!
யாஹூ... ஈஈ!
காற்று திசை மாறி வீசுவது நம்முடைய அதிர்ஷ்டம்தான் -இல்லையேல் திணறிப் போயிருப்போம்.
வின்டெக்ஸ் வேறு என்ன திட்டம் வைத்திருக் கிறானோ?
பிரபு..! புகை மூட்டத்தை சாதகமாக்கி மேலே போய் அவர்களை நாம் பிடித்தாலென்ன?
அருமையான யோசனை!
புகை நாலாதிசைகளிலும் சூழ்ந்திருப்பதால் நீங்கள் மிக நெருக்கத்தில் செல்லும் வரை அவர்களுக்கு உண்மை நிலவரம் தெரியாது... புறப்படுங்கள்.
ஜார்.. ஜார்! ஆபத்து... ஆபத்து!
என்ன விஷயம்?
ஏகப்பட்ட அந்நியர்கள்.. குதிரைகளில் மெஸாவை நோக்கி வருகிறார்கள்..
நிஜம்தானா?
யாஹீஹீ.. ஈஈ..
டுமீல்
டுமீல்



நடங்கள் அந்த மெஸாவை நோக்கித்தான் போகின்றன.. டெக்ஸ் அந்த மேட்டில்தான் இருக்கக் கூடும்!
விரையுங்கள்
அந்த அற்பர்களுக்கு வின்டெக்ஸின் விசுவாச வீரர்களின் பராக்கிரமத்தை புரிய வையுங்கள்... வருகிறவர்களை எதிர் கொண்டு சென்று அழியுங்கள்... போங்கள்!
வீரர்களே.. என் பின்னே வாருங்கள்!
துப்பாக்கி முழக்கம் உங்கள் காதிலும் விழுந்ததா.. தோழர்களே! என் நண்பர்கள்தான் வந்து விட்டார்கள்..
ஆண்டவனின் கருணை!
சீக்கிரம்..! எதிரிகள் பார்வையில் பட்டதும் கற்களையும் பாறைகளையும் பாதையில் உருட்டி விடுங்கள்..
அதோ..! ஒவ்வொருத்தனும் கிங்கரன் மாதிரி இருக்கிறான்.
கிங்கரனாகவே இருக்கட்டும்.. என் வின்செஸ்டருக்கு பதில் சொல்ல முடியுமா?
கார்ஸன், டைகர், கிட் மூவரும் இலக்கு வைத்து சரமாரியாக தோட்டாக்களை உமிழ்ந்து கொண்டிருக்க நவஜோ வீரர்கள் சிலர் செங்குத்து சரிவில் மேலேற முயன்றனர்.
குமீல்
குமீல்



ஆஆஆ..
ஆவ்!
டுமீல் டுமீல்
ஆஆ..
வாருங்கள் தோழர்களே.. கீழே நடக்கும் ஆட்டத்தில் நாமும் கலந்து கொள்வோம்!
விடாதீர்கள்.. கொல்லுங்கள்.. தீர்த்துக் கட்டுங்கள்
யாஹிஇஇ.
ஆ... ஆ...
ஆஆஆஆஆ....
திரும்பி ஓடி வாருங்கள்.. கோவிலுக்குள் போய்விடலாம்!


ஆனால் மேலே ஏறி வந்த ஜூமா வீரர்களுக்கு டெக்ஸின் பிஸ்டல் உரிய முறையில் வரவேற்பு நல்கியது..
ஆ..ஆ..
டுமீல் டுமீல்
வேறு வழியில்லை. அக்கிரமங்களுக்கு அழிவுதான் முடிவாக இருக்க முடியும்!
சில நிமிடங்களுக்குப் பின், டெக்ஸ், கார்லோஸ், விக்டோரியோ மூவரும் கார்ஸன், கிட் மற்றும் டைகரின் தலைமையில் வந்து சேர்ந்த குழுவினரோடு இணைந்து கொண்டார்கள்.. அடுத்து அங்கே எழுந்த வெற்றி முழக்கம் மெஸாவின் நாலாதிசைகளிலும் எதிரொலித்தது..
நாங்கள் வரும் வரை காத்திருக்கப் பொறுமையில்லாமல் இப்படித்தான் சிக்கலில் மாட்டிக் கொள்வதா? நாங்கள் மட்டும் சற்று தாமதமாக வந்திருந்தால் உங்களை நல்லடக்கம் செய்யும் பணிதான் இங்கே மிஞ்சியிருக்கும்!
அப்படி நடக்கவில்லையே என்ற வருத்தமா உனக்கு..
முற்றும்

# சிரிப்பின் நிறம் சிவப்பு!





மினி சாகஸம்!
ஆர்ட்டிக் பிரதேசத்தில் இரவு வேளை - திடீரென்று எஸ்கிமோக்களின் வேட்டை முகாம்கள் தீப்பற்றிக் கொண்டு விட்டன... இது எப்படி சாத்தியம்?
ஆர்ட்டிக்கில் அர்ச்சி!
நிச்சயம் பில்லி குனிய வேலையாகத்தான் இருக்கும் என்று பீதியடைந்த எஸ்கி மோக்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று நாலா திசைகளிலும் சிதறி ஓடினர்.
இருபத்து நான்கு மணி நேர இடைவெளிக்குப் பின், ஆவேசமாக வீசிக்கொண்டிருந்த பனிப் புயலை ஊடுருவிக் கொண்டு வெளி வந்த எஸ்கிமோக்களின் தலைவன் அக்லக் அருகே தென்பட்ட பிரிட்டிஷ் முகாமை நோக்கி விரைந்தான்...



உண்ண உணவும், நல்ல ஓய்வும் அவனுக்கு தெம்பூட்ட, தங்களுக்கு நேரிட்ட அசம்பாவிதத்தை பிரிட்டிஷ் விஞ்ஞானி டாக்டர் கிம் போர்ஸேயிடம் விவரமாக எடுத்துரைத்தான்...
தீக்கோளங்களா...? வானத்திலிருந்து வந்து விழுந்தனவா - நம்ப முடியவில்லையே!
உலகின் வடகோடியில் இருந்த அந்த முகாமில் சர்வே குழுவினரை தவிர வேறு மூன்று நபர்களும் அப்போது அங்கே இருந்தனர்.. அவர்கள் நமக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமான ஆர்ச்சி, தாம்சன், விக்டர் காம்பினேஷன்தான். தங்கள் நண்பரான டாக்டர் போர்ஸேயை பார்த்து விட்டுப் போக வந்திருந்தனர்...
இவனுடைய பர்கா தீய்ந்து போயிருப்பதை கவனியுங்கள்... மிக உக்கிரமான நெருப்பு போலும்!
அந்தப் புதிரை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டது அந்த மூவர் குழு...
ஆர்ட்டிக்கில் தீ என்பது இயற்கை உற்பாதமாக இருக்க முடியாது தாம்சன்... அங்கே ஏதோ விஷமம் நடக்கிறது... அதை ஏன் நாம் போய் ஆராயக் கூடாது?
ARCH
ஓ.. போவோமே!


எந்த பனிச் சறுக்கு வண்டியாவது இதற்கு முன் இவ்வளவு வேகத்தில் ஓடியிருக்குமா என்றால் சந்தேகம்தான்!
சீக்கிரமே இலக்கை போய்ச் சேர்ந்து விடுவோம் என்று நிச்சயமாகச் சொல்லலாம்!
ARC
இடையில் ஓய்வே எடுத்துக் கொள்ளாமல் துரித கதியில் ஓடிக் கொண்டிருந்த ஆர்ச்சியை, ஏற்கனவே மிரண்டு போயிருந்த எஸ்கிமோ கும்பல் ஒன்று எதிர் கொண்டது.
அங்கே பாரேன்.. ஒரு விசித்திர ஜந்து!
ராட்சஸத்தனமாய் இருக்கிறது... விளைந்த அசம்பாவிதத்துக்கு இதுதான் காரணமோ - ஒழித்துக் கட்டுவோம் வாருங்கள்!
தோட்டாக்கள் சரமாரியாக சீறிக் கொண்டு வந்தன...
ஐயோ பாவம்... நம்மைக் கண்டு பீதியடைந்து தீர்த்துக்கட்ட நினைக்கிறார்கள்.
டுமீல்
டுமீல்
டுமீல்
வா.. பதுங்கிக் கொள்வோம் - தோட்டாக்களை சமாளிக்க ஆர்ச்சியால் மட்டுமே முடியும்!





ஆர்ச்சியை தூண்டும் டிரான்ஸ்மிட்டரை வேகமாக இயக்கினான் தாம்சன்..
அவர்களை நோக்கிப் போ... ஆர்ச்சி! ஆனால் அதிகமாக துன்புறுத்தி விடாதே!
ஆர்ச்சியின் உலோக சரீரத்தில் பட்டு நாலாதிசைகளிலும் தெறித்தன பறந்து வந்த தோட்டாக்கள்... தொடர்ந்து முன்னேறி எஸ்கிமோக்களை நெருங்கியது ஆர்ச்சி.
ஐயோ.. பயங்கரம்! தோட்டாவால் கூட அந்த ராட்சஸ ஜந்துவை வீழ்த்த முடியவில்லை!
டுமீல்
மறுகணம் அவர்களிடையே புகுந்து தூக்கி எறிந்து பந்தாடியது ஆர்ச்சி...
ஆஹ்...!
ஆர்ச்சி ஸ்டைல் மல்யுத்தம் இது!
ஐ..யோ!


தோட்டாக்கள் வருவது ஓய்ந்து போனதால் தாம்சனும், விக்டரும் தைரியமாக முன்னேறி அங்கே வந்து சேர்ந்தனர்...
அவர்களை விடாதே... ஆர்ச்சி - அவர்களோடு கொஞ்சம் பேச் வேண்டும்!
ஆனால் அவர்கள் ஸ்லெட்ஜை விட்டு வெளியே காலடி வைத்த போது அருகாமையிருந்த சரிவிலிருந்து பெரிதாக கூக்குரல் எழுந்தது...
யாரோ ஒருவன் ஆபத்தில் மாட்டிக் கொண்டு விட்டான் போலும்.
ஈஈக்...க்க்!
ஆர்ச்சி அவர்களை விட்டு விட்டு ஓடி வா.. ஏதாவது ஒத்தாசை செய்ய முடியுமா பார்ப்போம்!
டிரான்ஸ்மிட்டரை இயக்கி ஆர்ச்சியை சரிவின் விளிம்புக்கு போகச் செய்தான் தாம்சன்... சரிவில் விழுந்துவிட்ட எஸ்கிமோ ஆசாமி ஆர்டிக் பகுதியில் சகஜமாக காணப்படும் கரடியிடம் அகப்பட்டுக் கொண்டு திணறினான்.
அவனை காப்பாற்ற வேண்டும் - ஆர்ச்சி! போய் முயற்சி செய்!
ஜெய் டார்ஜான்!
நேராக கரடியை குறி வைத்துப் பாய்ந்தது ஆர்ச்சி


மறுகணம் ஆர்ச்சிக்கும், கரடிக்கு மிடையே பலத்த சண்டை நிகழ்ந்தது... ஆர்ச்சியின் உலோக உடலை கரடி ஆக்ரோஷமாக பிறாண்டியதில் நகங்கள் முறிந்து போனதுதான் மிச்சம்... கரடியை அலாக்காக தூக்கி கடாசியது ஆர்ச்சி...
அந்த ரோபோ... நம் எதிரி அல்ல... அங்கே பார் அஹுக்கை அது கரடியிடமிருந்து காப்பாற்றிவிட்டது!
ஆர்ச்சியோடு மோதாதே
தப்பித்தோம் பிழைத்தோம் என்று கரடி அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது...
ஆர்ச்சியையும், அஹுக்கையும் அந்தச் சரிவிலிருந்து மேலே ஏற்ற வேண்டுமே- எப்படி?
ஸ்லெட்ஜிலிருந்த கயிற்றை பயன்படுத்தி முதலில் அஹுக்கையும் பின்னர் ஆர்ச்சியையும் எல்லோருமாக சேர்ந்து மேலே இழுத்தார்கள்..
அந்தக் கரடி... பாவம் - ஆயுளுக்கும் மறக்காது
ஒரு டன் எடை இருக்கும் போலிருக்கிறதே!


தாங்கள் கடும் பசியோடு இருப்பதாக எஸ்கிமோக்களில் ஒருவன் அரை குறை ஆங்கிலத்தில் தட்டுத் தடுமாறி சொன்னான்.
ஓ.. பசிக்கிறதா? விக்டர் நாம் இவர்களுக்கு நண்பர்கள்தான் என்பதை வலியுறுத்த இன்னும் ஒரு வாய்ப்பு கிட்டியிருக்கிறது நமக்கு...
தங்களுடைய ஸ்லெட்ஜிலிருந்த உணவுப் பொருள் அடங்கிய டப்பாக்களை அள்ளி வந்து ஆர்ச்சியிடம் தூக்கிப் போட்டான் விக்டர்...
திறக்கிற சிரமத்தை ஆர்ச்சியிடம் விட்டு விடு.. விக்டர்
ஓ.கே. - ஆர்ச்சி... இந்தா பிடி!
ஏதோ காகிதத்தை கிழிப்பது போல் வெகு அநாயாசமாக அவற்றை திறந்து விட்டது ஆர்ச்சி...
எஸ்கிமோக்கள் அதை வாங்கி இஷ்டத்திற்கு வயிற்றை நிரப்பிக் கொண்டு விட்டனர்.
தீ எப்படி ஏற்பட்டது என்று ஆராய விரும்புகிறோம்.. வந்து நீங்கள் ஒத்தாசை செய்ய வேண்டும்... பயப்படாதீர்கள் ஆர்ச்சி உங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்!


எஸ்கிமோக்கள் வழியை குறிப்பிட, பயணம் தொடங்கியது.
ஆர்ச்சி எக்ஸ்பிரஸ் கிளம்பி விட்டது!
இவ்வளவு வேகத்தில் ஒரு போதும் இவர்கள் இங்கே பயணம் செய்தி ருக்க மாட்டார்கள்..
ஒரு மணி நேரம் கழித்து அந்தக் குழு ஓரிடத்தில் நின்றது. தொலைவில் வானோக்கி தீ எரிந்து கொண்டிருந்த காட்சியை கண்டும் நம்ப முடியாத வியப்பில் திகைத்தது..
பார்த்தீர்களா... அக்கினி பகவான் இன்னமும் ஆக்ரோஷமாக இருக்கிறார்!
நேரில் பார்த்திராவிடில் இதை நான் நம்பியிருக்கவே மாட்டேன். இந்தப் பனிப் பரப்பில் இப்படி பற்றி எரிய அங்கே அப்படி என்னதான் இருக்கும்?
நெருங்கிச் சென்று அதை ஆராய அவர்கள் தீர்மானித்தபோது ஏதோ ஒன்றை தன் ஸ்லெட்ஜிலிருந்து தூக்கி வந்தான் ஒரு எஸ்கிமோ..
இதை வைத்துக் கொண்டால் அக்கினி பகவான் உங்களை பனிப் பரப்பில் கண்டு கொள்ள முடியாது...
புரிகிறது! விலங்கை நெருங்க வேட்டையர் கள் பயன்படுத்தும் கருவி!
ஆர்ச்சி உள்பட எல்லோரும் ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு பதுங்கிப் பதுங்கி முன்னேறினார்கள்.



எஸ்கிமோக்களின் முந்தைய குடியிருப்பு பகுதியை சற்றைக் செ ல்லாம் நெருங்கி விட்ட அந்தக் குழுவுக்கு இப்போது விஷயம் தெளிவாகிவிட்டது...
தீக்கணைகள்!
எஸ்கிமோக்களை துரத்தி யடிக்க இதை பயன்படுத்தியிருக் கிறார்கள்.., ஆனால் காரணம் தான் இன்னமும் புரியவில்லை:
அந்த அந்நியர்களில் ஒருவன் தற்செயலாக திரும்பியபோது ஆர்ச்சியை பார்த்து விட்டான்.
ஐயோ.. அங்கே - பாஸ்.. என்ன அது?
அவர்கள் ஆர்ச்சியை பார்த்து விட்டார்கள்..! ஆர்ச்சி.. போ.. போய் அவர்களை பிடி!
நம்ப முடியவில் லையே... பார்த்தால் கவசமணிந்த ராட்சஸ மனிதன் மாதிரி தெரிகிறது!
ராட்சஸன் இல்லையடா மடையா - அதிசய ஆர்ச்சி நான்!



டுமீல்
டுமீல்
தோட்டாக்கள் தெறித்து பறக்கின்றன. தீக்கணை எய்யும் துப்பாக்கிகளை அவன் பக்கம் திருப்புங்கள்.
அதைத் தொடர்ந்து இரண்டு தீக்கற்றைகள் ஆர்ச்சி மீது பாய்ந்தன...
பயங்கரம்... தீயும் கூட இவனை எதுவும் செய்யக் காணோம்! பனிப்பரப்பை குறிவை- சீக்கிரம்!
தீப்பிழம்புகள் பாய்ந்து பனிப்பரப்பு நொடியில் உருகி அசைந்து கொடுத்த போது ஆர்ச்சி எதிரணியினருக்கு சில மீட்டர்கள் தூரத்தில்தான் இருந்தது.
அப்படித்தான்...! தொடர்ந்து பாய்ச்சு! பயல் எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டான்!
இறுகிய பனிப்பரப்பு உருகிவிட்டதால் ஆர்ச்சி தன் அதீத பளுகாரணமாக அப்படியே உள்ளே இறங்கியது - புதை மணலினுள் விழுந்து விட்டவனைப் போல்!
உருகிய பனி நொடியில் மீண்டும் உறைந்து இறுகிவிடும் - இவன் தன்னை லேசில் விடுவித்துக் கொள்ள முடியாது!


இந்த திடீர் திருப்பத்தினால் செய்வதறியாது திகைத்துவிட்ட தாம்சனும், விக்டரும் தங்களையும் மறந்து கவசத்தை கீழிறக்கியதால் எதிரிகளின் பார்வையில் விழுந்து விட்டனர்.
அங்கே பாருங்கள்... இன்னும் சிலர் வருவதை - துரத்தியடியுங்கள் அவர்களை...!
மீண்டும் தீப்பிழம்புகள் சீறத் தொடங்கின.. ஆனால் அதைப் பார்த்து தாம்சனும் விக்டரும் ஏளனமாக சிரிக்கலாயினர்..
ஐயோ.. பாவம்! தீப் பிழம்புகளை இவ்வளவு தூரத்துக்கு பாய்ச்ச அவர்களிடம் வசதி யில்லை..! நாம் தோட்டாக்களை பயன்படுத்துவோம்



பயந்து ஓடுகிறார்கள் பார்!
இவர்களை விரட்டியடித்து விட்டு நாம் எப்படியாவது ஆர்ச்சியை மீட்க வேண்டும்!
சண்டாளர்கள்...! அவர்களை எப்படியாவது இங்கிருந்து இழுத்துச் சென்று விட வேண்டும்.. பிறகு வந்து சாவகாசமாக முயற்சியை தொடரலாம்!
எதிரணியினர் அவசரம் அவசரமாக தங்கள் வாகனத்தில் தொற்றிக் கொள்ள அது தன்னால் இயன்ற உச்ச வேகத்தில் ஓடத் தொடங்கியது.
ஒரு வழியாக போய்த் தொலைந்தார்கள்.. இனி நாம் ஆர்ச்சியை மீட்கும் முயற்சியை இடையூறு ஏதுமின்றி மேற்கொள்ளலாம்.


ஆர்ச்சி புதைந்து கிடந்த இடத்தை தேடிக் கண்டு பிடிப்பதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை!
அதோ... ஆர்ச்சி!
டிரான்ஸ்மிட்டரின் சிக்னல் பனிப் பரப்பை ஊடுருவும் ஆற்றல் உடையதாக இருக்குமேயானால் ஆர்ச்சி தானுகவே மேலே ஏறி வரச் செய்து விடலாம்!
தாம்சன் டிரான்ஸ் மிட்டரை இயக்க, ஆர்ச்சி புதைந்து கிடந்த இடத்தில் பனிக் கட்டிகள் நொறுங்கும் சப்தம் கேட்கலாயிற்று.
ஆர்ச்சி சிலிர்த் தெழுகிறது... விலகி நில்லுங்கள்.. நம் காலடியில் பனிச் சரிவு ஏற்பட்டாலும் ஏற்படலாம்...
க்ராக்... க்ரிக்...
சற்றைக்கெல்லாம் ஆர்ச்சி வெளிப் பட்டது....
சபாஷ்.. ஆர்ச்சி!
ஆர்ச்சியை ஒரேயடியாக புதைத்து விட்டதாக அந்த கயவர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம்.




பிரமிப்படைந்த எஸ்கிமோக்கள் ... மிக்க தங்கள் புதிய நண்பனை சுற்றி சுற்றி வந்து கொண்டாட்டம் போட்ட வேளையில் விக்டர் ஏதோ ஒரு வித்தியாசமான கருவி அருகில் கிடக்கக் கண்டான்.
என்ன.. இது - வித்தியாசமாய்?
அட... அது 'கேஜர் கவுண்ட்டர்' அல்லவா?
கதிரியக்கத் தாதுக்களைக் கண்டுபிடிக்க உபயோகிக்கப்படுவது கேஜர் கவுண்ட்டர்!
இயர்-போனை காதில் மாட்டிக் கொண்டு அப்படியும் இப்படியுமாக நடந்த விக்டர் திடீரென்று 'டிக்... டிக்' ஓசையை செவிமடுத்தான்...
இங்கே அருகாமையில் எங்கோ யுரேனியம் புதைந்து கிடப்பது நிச்சயம் விக்டர்!
சிக்னல் தெளிவாக கேட்கிறது தாம்சன்..
எதிரிகள் போன தடம் இன்னமும் தெளிவாக தெரிந்ததால் அதை பின் பற்றிச் செல்வதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை.
வாஸ்தவம்தான்! ஆனால் வேறு யாரும் நெருங்காமல் தவிர்க்க கொலை செய்யவும் அவர்கள் துணிந்து விட்டது ஏன்...? அவர்களுடைய முயற்சியில் அப்படி என்ன சூது இருக்கிறது என்பதை நாம் கண்டு பிடிக்க வேண்டும்...
அவர்களுடைய நோக்கம் இப்போது தெளிவாகி விட்டது நமக்கு


வெகு சீக்கிரமே பனி படர்ந்த கடற்கரை பகுதியை வந்தடைந்தது அந்தக் கும்பல்...
அதோ... அவர்கள் அங்கேதான் இருக்கக் கூடும்!
ரோபோ உயிர்த்தெழுந்து தங்களை நோக்கி வருவதைக் கண்ட எதிரிகள் அதிர்ந்து போய் பாய்ந்து ஏறிக் கொண்டார்கள் காத்து நின்ற தங்களுடைய கப்பலினுள்ளே!
அமானுஷ்ய சங்கதி! பனியை சீக்கிரமே உருகச் செய்து கப்பலை நகர்த்தினால் மட்டுமே நாம் தப்பிப் பிழைக்கலாம்..
தீப் பிழம்புகளை பாய்ச்சி சுற்றிலும் உள்ள பனியை உருகச் செய்ய எதிரிகள் முனைப்பாக செயலாற்றினார்கள்...
கப்பல் நகரத் தொடங்கு கிறது... தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.



தாம்சன் டிரான்ஸ்மிட்டரை மாற்றி இயக்கினான்.. ஆர்ச்சி சட்டென்று குனிந்து பெரிய பனிக் கட்டிகளை தூக்கி சரமாரியாக கப்பலை நோக்கி வீசத் தொடங்கியது.
மடேர்!
ஆர்ச்சி என்றுமே குறி தவறியதில்லை
ஆ..ஆ..ஆ...
வந்து விழுந்த பனிக்கட்டிகளின் தாக்கு தலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் எதிரிகள் நிலை குலைந்து தத்தளித்தனர்...
மடேர்!
ஏற்பட்ட கால அவகாசத்தில் சுற்றிலு மிருந்த பனி மீண்டும் உறைந்து போகவே கப்பல் நகர முடியாமல் ஓய்ந்து நின்றுவிட்டது...
இதை என்னால் புரிந்து கொள்ளவே முடிய வில்லை... மனிதனால் ஆகக்கூடிய காரிய மில்லை...
அதில் என்ன சந்தேகம்...! ஆர்ச்சிக்கு ஈடு இணை யாருமே கிடையாது... ஆர்ச்சி! புரியும் படியாக எடுத்துச் சொல்!


நான் ஒரு ஆற்றல் மிக்க ரோபோ! சாதாரண மனிதனைப் போல் என்னை சுலபத்தில் அழித்துவிட முடியாது! நீங்கள் அனைவரும் இப்போது என் கைதிகள்!
பின்னர் - எஸ்கிமோக்கள் கைதிகளை காத்து நிற்க ஆர்ச்சி போய் எதிரிகளின் கபட நாடக இரகசியம் என்ன என்றறியும் முயற்சியில் ஈடுபட்டது... முடிவில் -சிதைந்த விமானம் ஒன்று அங்கே புதைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
அந்த தாடிக்கார தலைவன் என்னிடம் சொன்னான் : இந்த விமானம் சென்ற ஆண்டு இங்கே விழுந்து நொறுங்கிப் போனதாம்! தாடிக் காரனின் நண்பனும், தீய எண்ணம் கொண்டவனுமான துணை விமானி பாரசூட் மூலம தப்பித்துக் கொண்டானாம். பனிப் புயலில் மாயமாக எங்கோ மறைந்து விட்டதாக கருதப்பட்ட இந்த விமானத்தின் இருப்பிடம் அவனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.
பனியிலிருந்து தோண்டி மீட்கப்பட்ட விமானத்திலிருந்து விலை மதிப்பற்ற அரிய சரக்கை ஆர்ச்சி வெளியே தூக்கி வந்தது...
யுரேனியம் தாதுக்கள்- மதிப்பு மில்லியன் பவுண்டுகளுக்கு குறையாது!
விமானத்தை மீட்க தீப்பிழம்புகளை பயன்படுத்திய சாமர்த்தியசாலி களுக்கு ஆர்ச்சியை சமாளிக்கும் திறன் இல்லாமல் போனது தான் பரிதாம்!
முற்றும்.



# ஒரு வாசகனின் ஹாட் - லைன்

உங்கள் கருத்துக்களை, குறைகளை, எங்களுக்குத் தெரியப்படுத்தும் பகுதி ஹாட் - லைன்.

நீங்கள் செய்யும் தவறுகளை சுட்டிக் காட்டுவது வாசகன் ஹாட் - லைன்!

**"மரண மண்டலம்"** இதழில் மறுபதிப்பு வெளியீடுகள் எப்போது வரும் என்பதை அடுத்த ஹாட் - லைனில் எழுதுகிறேன் என்கிறீர்கள்! ஆனால் அதற்கப்புறம் நிறைய புத்தகங்கள் வந்துவிட்டது - ஆனால் மறுபதிப்பு பற்றி ஒரு தகவலும் இல்லை!

லயனின் 100வது இதழில் வருவதாகயிருந்த டெக்ஸ் வில்லர் தோன்றும் "பலி கேட்ட புலிகள்" ஓரிரு மாதங்களில் ரூ. 6/- விலையில் வெளிவரும் என்று கூறினீர்கள். மே '94ல் சொன்னது இப்போது மே '95 ஆகப் போகிறது! இதையும் கவனத்தில் கொள்க.

லயனின் 100வது இதழிலேயே, "மைனஸ் பாய்ண்ட்" என்ற பகுதியில் பழைய ஹீரோக்களை மறந்தது பற்றி எழுதும் போது - ஸ்பைடர், மாடஸ்டி கதைகளை மீண்டும் வெளியிடப் போவதாக தெரிவித்திருந்தீர்களே - என்னாச்சு?

- ஒரு காரைக்கால் வாசகர்.

*நிஜமாகவே 'ஹாட்' (hot) ஆன ஹாட் - லைன் தான்! உரிமையோடு கேள்வி தொடுக்கும் வாசகரின் ஆதங்கம் எனக்குப் புரிகிறது!*

*மறுபதிப்பு பற்றி :-*


*புது வெளியீடுகள் வந்து கொண்டிருக்கும் போது இடையில் மறுபதிப்பையும் வெளியிட்டால் விற்பனையில் குழப்பம் ஏற்படுகிறது. பொதுவாக - மறுபதிப்புகளை அனைத்து வாசகர்களும் வாங்குவார்கள் என்று சொல்ல முடியாது. விற்பனையாளர்களைப் பொறுத்தவரை கூட - இதே கதைதான்! மறுபதிப்பு எனும் போது சில ஏஜெண்டுகள் பிரதிகளின் எண்ணிக்கையைக் குறைத்து விடுவதுண்டு - ஒரு சிலரோ மொத்தத்திற்கு வாங்குவதே கிடையாது. ஆகையால் இது போன்ற தலைவலிக்குப் பயந்து - மறுபதிப்புகளை கோடை விடுமுறைகளின் போது மட்டுமே வெளியிடுவது என்றுள்ளோம். கோடை விடுமுறையின் போது காமிக்ஸ் விற்பனை கூடும் என்பதால் - ஏஜெண்டுகளும் தாராளமாக ஆர்டர் அனுப்புவார்கள். So - மறுபதிப்புகள் நிச்சயம் வரும் - மெதுவாக!*


*பலி கேட்ட புலிகள் பற்றி :-*

*"ப. கே. பு.' தான் பெயர் மாறி 'பாலைவனப் பரலோகமாக' இந்த இதழில் வந்திருக்கிறது! ஓ.கே. தானே?*

*பழைய ஹீரோக்கள் பற்றி :-*

*பழைய ஹீரோக்களில் சிலர் இப்போது [illegible] தானே இருக்கிறார்கள்? [illegible] மாடஸ்டி regular ஆக வருகிறார். [illegible] XIII [illegible]*
*[illegible]*
*திருப்தியா?*




மரண ஒப்பந்தம்!
உச்ச நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தீர்ப்பாகிக் கொண்டிருந்தது.
... பொறுப்பான பதவியிலிருந்த மிஸ் பாலைன் நாட்டின் இராணுவ இரகசியங்களை அந்நிய நாட்டுக்கு விற்ற துரோகத்திற்காக...
...பதினைந்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைவாசம் விதித்து தீர்ப்பளிக்கிறேன்... ...அழைத்துப் போங்கள்
மறுநாள்- ஒரு அந்நிய தூதரகத்தில்...
பாலைன் உளவாளியாக செயல்பட்டது எங்கள் நாட்டிற்குத்தான்! இப்போது பிடிபட்டு இங்கிலாந்தில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறாள்! அவளை நிச்சயம் உங்கள் "அமைப்பால்" மீட்டுத் தர முடியுமா?
வெற்றி கட்டிய பின் பணம் தந்தால் போதும் - சரிதானா?


ஸலமாண்டர் குழுவினரின் செயல்திறன் அபாரமானதுதான்... ஆனால் இந்த விஷயத்தில் பலிக்குமா என்றால்... சந்தேகம்தான்!
இல்லை... உளவாளிக்கு உளவாளி என்று பண்டமாற்று செய்ய உத்தேசித்திருக் கிறார்கள் எங்கள் முதலாளிகள்!
பாலைனை மீட்க இன்னொரு பிரிட்டிஷ் உளவாளியை சிறைப்படுத்தி நாங்கள் உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிறீர்களா?
அவசிய மில்லை.. அந்தப் பொறுப்பு எங்களைச் சேர்ந்தது!
அது யார் என்று கூட தீர்மானித்துவிட்டோம்! மிஸ் பாலைனை சிறையில் அடைக்க மூல காரணமாக இருந்த இளம் பெண் உள்வாளிதான் அவள்!
ரொம்ப பொருத்த மான விஷயம்!
பிரிட்டிஷ் உளவுத் துறையின் தலைமை அதிகாரி ஸர் ஜெரால்டு டார்ரண்ட்...
மிஸ் டில்லரை உள்ளே அனுப்பு!
நீ மட்டும் பாலைனை பெர்லினில் வலைவீசி பிடித்திராவிட்டால் அவள் தப்பியோடிப் போயிருப்பாள்... வெல்டன் டில்லர்!
சீக்கிரமே நீ விடுப்பில் செல்ல ஏற்பாடு செய்கிறேன்...
தாங்க் யூ சார்! என் பாய் - பிரண்ட் வில்லியோடு விடுமுறையைக் கழிக்கப் போகிறேன்!


மறு நாள் -
கார்னிஷ் கடற்கரை பகுதியில் - ஒரு ஹோட்டலில்...
இங்கே சில தினங்களை கழித்துவிட்டு அப்புறம் கால்வாயை கடந்து பாரீஸ் செல்லலாம் என்று திட்டமிட்டு வைத்திருக்கிறேன்!
அருமையான யோசனை... வில்லி!
போன தடவை 'மாடஸ்டி என்ன ஆளுளோ' என்ற குழப்பம் உங்களை அலைக்கழித்துக் கொண்டிருந்தது- இம்முறை எப்படி?
எதைப் பற்றியும் துளி விசாரம் கிடையாது!
இம்முறை - மாடஸ்டியை பற்றிய கவலை உங்களுக்கு இல்லை... நானும் கடமையாற்ற இங்கே வந்திருக்கவில்லை... இந்த பிசிறில்லாத சுதந்திரத்தை என்னால் நம்பவே முடியவில்லை!
நாம் கனவு கண்ட உல்லாச நாட்கள் நிஜமாகவே வந்துவிட்டன என்று தோன்றுகிறது!
நம் சந்தோஷத்திற்கு இடையூறு எதுவும் இங்கே முளைக்க வாய்ப்பில்லை டில்லர்... வா போய் நிம்மதியாக உணவருந்துவோம்


ஆனால் -
தாங்க் யூ.. ஜான்!
போச்சு...! அவர் என்னை பார்த்து விட்டால் அத்தனையும் நாசமாக போய்விடும்!
ஏன் என்ன ஆயிற்று?
அந்த பாதிரியாருக்கு நாமிருவரும் இங்கே சேர்ந்து தங்கியிருப்பது தெரியக் கூடாது!
லாட்ஜில் ரெய்டு நடத்தற தொழிலை எப்போதிருந்து பாதிரியார்களிடம் ஒப்படைத்தார்கள்?
அவர் யாரோ ஒரு பாதிரியார் இல்லை! அவர்..
...ரெவரண்ட் ஹரால்டு ப்ரயண்ட்! என்னோட சித்தப்பா!
கார்ன்வாலில் உள்ள ஏதோ ஒரு மாதா கோவிலுக்கு மாற்றலாகி சென்றதாக கேள்விப்பட்டேன். ஆனால் அது இந்த இடம்தான் என்று இப்போதுதான் புரிகிறது!
அவர் உன் சித்தப்பாவாகவே இருந்தாலும் என்னோடு நீ வந்து தங்கியிருப்பதை விமர்சிக்க அவருக்கு ஏது உரிமை... நீ என்ன இன்னமும் சின்னப் பெண்ணா?


சித்தப்பாவை பொருத்தமட்டில் நான் இன்னமும் உலகம் தெரியாத சின்னப் பெண்தான்... அவருடைய மனத்தை நோகச் செய்துவிடக்கூடாது... வில்லி
ஐயோ... இந்தப் பக்கமாகத்தான் வருகிறார்... என்னை முன்பின் தெரியாத மாதிரி நடந்து கொள்ளுங்கள் வில்லி... அப்புறமாக நாம் சந்திக்கலாம்...
..வந்து..
ஹலோ.. சித்தப்பா!
அடடே... யாரு டில்லரா? இங்கே எப்போ வந்தாய்?
எங்கே தங்கியிருக்கிறாய்? முன்கூட்டியே எனக்கு கடிதம் எழுதுவதற்கென்ன?
நீங்கள் இங்கே இருப்பது தெரியாது... தற்செயலாக வந்தேன்...
அதிர்ஷ்டவசமாக உங்களை பார்க்க முடிந்தது



இன்னமும் நீ அந்த ட்ராவல் ஏஜென்ஸியில்தான் பணி புரிந்து கொண்டிருக்கிறாயா...?
ஆமாம்.. சித்தப்பா! ரொம்ப ஜோரான வேலை அது!
என்னுடைய சமையல்காரருக்கு ஓய்வு கொடுப்பதற்காக வாரம் ஒருமுறை இங்கே சாப்பிட வருவேன்! இன்றைக்கு நீ என்னோடு சாப்பிட வேண்டும்...
அங்கே வில்லி -
ஒரு சின்ன தப்பு நடந்து போச்சுப்பா... எனக்கு ஸாண்ட் விச் போதும்... அதையும் கூட மேலே ரூமுக்கு அனுப்பிவிடு
ஸார்... மேடம் உங்களோடு சாப்பிட வரமாட்டாங்களா?
அடச்சே... கிழம் வந்து கழுத்தை அறுத்து விட்டதே! பாவம் டில்லர்!
ஏமாற்றம்... எனக்கும்தான்! எங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் அவர் ஒருவேளை சீக்கிரம் விடைபெற்றுச் சென்றுவிடலாம்!
இந்தப் படம் சகிக்கலை...! அத்தோடு இது ஏன் சுவரில் படிமானமாக தொங்கவில்லை?


இது என்ன? இங்கே ஒட்டிக் கொண்டிருக்கிறது...!
அது ஒரு ஒட்டுக் கேட்கும் கருவி!
150 கஜம் வரை பயன்படக் கூடியது!
யாருடைய விஷமம் இது?.. எதற்காக?
எனக்கு யாரும் எதிரிகள் இல்லை... டில்லர் ஒரு உளவாளி... அவனை உளவறிய எதிரிகள் யாரும் இதை இங்கே வைத்திருப்பார்களோ?
சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டுப் பார்க்கலாம்.., பொழுதும் போகும்!
அந்த ஹோட்டலை சுற்றி வந்தார் கார்வின்...
அதோ... அங்கே புதர் மறைவில் ஒரு கார் நிற்கிறது!



இரு நிமிடங்களுக்குப் பின்—
அஹ்..
என்ன ஆயிற்று?
காது ஜவ்வு கிழிந்து விடுகிற மாதிரி பயங்கர ஓசை
நான்தான் ஒட்டுக் கேட்கும் கருவியை நொறுக்கினேன்... மறுமுனையில் இருப்பது யார் என்று தெரிந்து கொள்ள...
என் நண்பர்களின் படுக்கையறையில் ஒட்டுக் கேட்கும் கருவியை வைக்கும் துஷ்டர்களை நான் வெறுக்கிறேன்
கொஞ்சம் பொறு..
கும்!
எதிரியின் தாடையில் ஓங்கி ஒரு குத்துவிட்டு வீழ்த்தினார் கார்வின்...
சரி... இப்போது நீ இறங்கி வந்து உங்களை அனுப்பியது யார் என்று சொல்




கார்வின்... நான் சொல்வதை கேள்
அட... என்னை தெரிந்து வைத்திருக் கிறானே
துப்பாக்கியை தூர வை... பேசியே தீர்த்துக் கொள்வோம்
பேசுவோம்... ஆனால் நீ கைகளை மேலே தூக்கியே வைத்திரு... கத்தியை லாவகமாக வீசும் உன் சாமர்த்தியம் எனக்கும் தெரியும்
ஒரு மாறுதலுக்காக இன்றைக்கு மர உருளை!
படீர்!
மின்னல் வேகத்தில் பாய்ந்த மர உருளை எதிரியை நிலைகுலையச் செய்தது.
இவர்களை எங்கேயாவது கண் காணாத இடத்தில் தூக்கிப் போட்டு விட்டால் நல்லது.
இதை இன்றிரவு டில்லரிடம் சொல்லக் கூடாது... அவளுக்கு "மூடு" கெட்டுவிடலாம்!



நம் அதிர்ஷ்டத்தை என்னவென்பது... ஹா.. ஹா.. அந்தப் பெண்ணை நாம் நெருங்க இருந்த தடை நீங்கிவிட்டது இப்போது
டில்லர் தன் சித்தப்பாவோடு உணவருந்திக் கொண்டிருந்தாள்
பழைய மாதா கோவிலை விட இது ரொம்ப சிறியது... ஆனால் ஜனங்கள் ரொம்ப அன்பாக பழகுகிறார்கள்.
ஓகோ!
குழந்தைகளுக்காக விசேட நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பாடாகியிருக்கிறது... நீ இரசிக்கும்படியாக இருக்கும்.. ஆனால் நீதான் தங்கப் போவதில்லையே...
ம்ம்..
பாவம் வில்லி... எப்படித்தான் நேரத்தை கழித்துக் கொண்டிருக்கிறாரோ?
சதுப்பு நிலப் பகுதியில் எங்கேயாவது போட்டுவிடலாம்
ஆனால் புதர் மறைவில்
காரியத்தை கச்சிதமாக முடித்துவிடுவீர்களல்லவா?
நிச்சயமாக!


அவன் திரும்பி வந்து சேருவதற்குள் நாம் காரியத்தை முடித்து விட வேண்டும்...
அந்தக் கிழவன்..?
அறைக்கு தனியாகத்தான் திரும்புவாள்!
வா.. போய் ஒளிந்து காத்திருப் போம்!
உங்களை இந்த மட்டில் விட்டுப் போகிறேனே என்று சந்தோஷப் படுங்கள்... கட்டை கழற்ற ஒரு மணி நேரம் பிடிக்கலாம்... அவ்வளவுதான்!
ஓவோ.. வோ..
ர்வின் திரும்பி நடக்கலானார்
ம்ம்.. ம்ம்ப்.. ப்..
க்ர்ர்... ர்க்..
என்னிடம் ஏதோ சொல்ல விரும்புகிறார்களோ?
ஹோட்டலில்...
நாளை நீ கிளம்புகிறாயாக்கும்... அப்படியானால் இப்போதே விடை பெற்றுக் கொள்கிறேன்... பயணத்தின்போது துணைக்கு யாராவது இருந்தால் நன்றாக இருக்குமே!
உண்மைதான்.... யாராவது கிடைப்பார்களா என்று பார்க்கிறேன்!


டில்லர் தன் அறைக்கு விரைந்தாள்...
வில்லி எங்கே போனார்..? பாவம்.. ரொம்பவும்தான் போரடித்திருக்கும்...
யார் நீ..? கார்வின் எங்கே?
கார்வின் எங்கே இருக்கிறானோ தெரியவில்லை மேடம்!
ஸ்டான்லி இவளை விடாதே பிடி!
அதற்குத் தானே வந்திருக் கிறோம்!
மடேர்
ஓ... சிட்டுக் குருவி மாதிரி இருக்கிறாள்!
அவள் உடலமைப்பை ரசிக்க இதுவல்ல நேரம் தம்பி. ஸூட் கேஸை பாக் பண்ணி எடுத்துக் கொள்.
மறுநாள் விடிகாலை வாக்கிங் போய்விட்டு திரும்பிக் கொண்டிருந்த டார்ரண்ட்டை காதை கிழிக்கும் விசில் ஓசை திரும்பி நோக்கச் செய்தது..


நளினமான பெண் நீ... உன்னால் எப்படித்தான் இப்படி உரக்க விசில் அடிக்க முடிகிறதோ... மாடஸ்டி?
இயற்கை தந்த வரப்பிரசாதம் ஸர் ஜெரால்டு!
சீக்கிரமாக விழித்துக்கொண்டு விட்டேன்.... ஜாலியாக நீந்தி விட்டு வரலாமே என்று இங்கே வந்தேன். நீங்கள் எப்படி இவ்வளவு அதிகாலையில் இங்கே...
ஆபீஸில் ஒரு சின்ன பிரச்னை..
அது ஒன்றும் புதிதல்லவே உங்களுக்கு! வாருங்களேன் என்னோடு சிற்றுண்டி அருந்தி விட்டுப் போகலாம்!
நன்றி!
அந்தப் பிரச்னையில் உனக்கும் ஆர்வம் இருக்குலாம்... ஏனெனில் அது டில்லர் சம்பந்தப்பட்டது... தற்சமயம் கார்லின். டில்லரோடுதான் போயிருக்கிறார் என்று கேள்விப் பட்டேன்.
பிரச்சனை என்னவென்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்!
மாடஸ்டி பிளைஸியின் மாளிகையில்...
சிற்றுண்டி ரெடி.... மேடம்!
சரி....இரண்டு பேருக்கு எடுத்து வை... மைக்கேல்!



நீங்கள் இங்கே இருப்பதை உங்கள் ஆபீஸுக்கு போன் பண்ணி சொல்லலாமே... அதற்குள் நான் உடைமாற்றிக் கொண்டு வந்து வருகிறேன்! பிரச்னை பற்றி நிதானமாக பிறகு பேசலாம்!
ஒரு வகை இறுதி எச்சரிக்கை விவகாரம்!
ஸலமாண்டர் குழு என்று கேள்விப்பட்டிருக் கிறாயா?
ஆம்ஸ்டர்டாமிலிருந்து இயங்கும் சர்வதேச கும்பல்! நாசூக்கான திறமைசாலிகள்... கிராதகர்கள்!
அரசியல் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட உளவு வேலைகள் அவர்களுடைய தனிச் சிறப்பு... யார் என்பது முக்கியமில்லை அவர்களுக்கு - பணத்தில்தான் குறிப்பாக இருப்பார்கள்.
அவர்களை எப்போதாவது நீங்கள் பயன் படுத்திய துண்டோ?
ஒருமுறை - வேறு வழியில்லாமல்!


நாம் சமீபத்தில் சிறைக்கு அனுப்பிய உளவாளி பாலைனை மீட்டுவர அவர்கள் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள் என்று கேள்வி.
நீங்கள் மிகுந்த விழிப்போடிருக்க வேண்டும்!
ஏற்றுக்கொண்ட வேலையை முடிக்காமல் ஓயமாட்டார்கள்!
அதுதான் கவலை யளிக்கிறது!
செய்தி இன்னமும் உறுதி செய்யப்படவில்லை! நமது பெண்டில்லரை கடத்தி வைத்திருக்கிறார்களாம்... பாலைன் ப்ரவுனை நாம் விடுதலை செய்தால் டில்லரை அவர்கள் விடுவிப்பார்களாம்!
ஸலமாண்டர் குழு பொய் சொல்வதில்லை. ஆனால் யானைக்கும் அடிசறுக்கும்... டில்லர் இப்போது கார்வினோடு இருக்கிறாள் ...
விஷயம் லேசாக காதில் விழுந்ததுமே டில்லரை கண்காணிக்க இரண்டு ஆட்களை அனுப்பி வைத்தேன்...


... அவர்களிடமிருந்து ஏனோ நேரப்படி அறிக்கை வந்து சேரவில்லை!
கார்ன்வாலிலிருந்து மிஸ்டர் கார்வின் போன் செய்கிறார் மேடம்!
வில்லி நடந்ததை விவரித்தார்..
நான் திரும்பி வந்து பார்த்தபோது டில்லர் மாயமாக மறைந்து விட்டாள். விஷயம் எங்கேயோ பிசிறடிக்கிறது.
விஷயத்தை நீ மிஸ்டர் ஜெரால்டுக்கு போனில் தெரிவிக்க முடியுமா?
அவர் இப்போது என் அருகில்தான் இருக்கிறார்!-ஒரு நிமிஷம்...
டில்லரை வேவு பார்த்த இரு ஆசாமிகளையும் வில்லி பிடித்து கட்டிக் கொண்டு போய் சதுப்பு நில பகுதியில் போட்டு வந்து விட்டாராம்.
என் ஆட்கள் அவர்கள்! தகவல் வராதது ஏனென்று இப்போது புரிகிறது!



நீங்கள் முடக்கிப் போட்ட இரு ஆசாமிகளும் டில்லரை பாதுகாக்க மிஸ்டர் டார்ரண்ட்டினால் அனுப்பி வைக்கப்பட்ட ஆட்களாம்...!
ஙே..?!
அடக் கடவுளே...! என்னை மன்னிக்கும்படி சொல்! அவர்கள் எந்த நிமிடமும் அவருக்கு போன் செய்யக்கூடும்! அதுசரி - டில்லருக்கு எதிரிகள் யார்?
ஸலமாண்டர் குழு! அவர்கள் கெலித்து விட்டதாக தெரிகிறது! இப்போதே விமானத்தில் அங்கே வந்து சேருகிறேன்.
ஒரு மணி நேரத்தில் நான் கிளம்புகிறேன்... வெங் - போன் பண்ணி டிக்கட்டுக்கு ஏற்பாடு செய்.
சரி.. மேடம்!
டில்லரும் அவரும் தங்கியிருந்த அறையில் ஒட்டுக் கேட்கும் கருவியை வைத்திருந்தார்களாம்!
கார்லின் ஏன் என் ஆட்களை முடக்கிப் போடவேண்டும்?


அவர்கள் அவளுக்கு வேண்டப்பட்டவர்கள் என்ற எண்ணம் துளிகூட ஏற்படவில்லையாம் அவருக்கு!
ஹூம்... நடந்து முடிந்ததை பற்றி இப்போது பேசி என்ன பயன்..?
நான் ஆபீஸுக்குப் போய், தேட ஏற்பாடு செய்கிறேன்.
நானும், வில்லியும் கார்ன்வாலில் ஏதாவது துப்பு கிடைக்கிறதா என்று முயற்சிக்கிறோம்!
ஒருவேளை நாங்கள் டில்லரை கண்டுபிடிக்க முடியாவிட்டால் அவளை திரும்பப் பெற பால்லனை பண்டமாற்று செய்ய சம்மதிப்பீர்களா?
அதை தீர்மானிக்க வேண்டியவர் மந்திரி! நானல்ல!
பரிமாற்றத்திற்கு ஒப்புக் கொள்ளாவிடில் டில்லரை கொன்று விடுவோம் என்று ஸலமாண்டர் குழு எச்சரித்திருக்கிறது. அது வெறும் மிரட்டல் அல்ல...
...பத்து நாள் கெடு வைத்திருக்கிறார்கள்!
ஆம்ஸ்டர்டாமில் ஸலமாண்டர் குழுவினரின் நிர்வாகக் குழுக் கூட்டம்..
திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக முடிந்துள்ளது... நபரை திட்டமிட்டபடி கவர்ந்து வந்து, ஸர் ஜெரால்ட் டார்ரண்ட்டுக்கும் இறுதி எச்சரிக்கை விடுத்தாயிற்று.



நமக்கு ஒத்தாசை செய்யும் உள்ளூர் ஏஜெண்ட் மிஸ்டர் கார்ட்டரிடம் ஏதாவது கேட்டறிய விரும்புபவர்கள் கேட்கலாம்.
வேலை யாரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது
பூட்டே சகோதரர்கள் - திறமைசாலிகள் ஆனால் சமர்த்து போதாது. டில்லரை நாம் விடுவிக்கப் போகிறோம் என்ற பட்சத்தில் தடயங்களே இருக்கக் கூடாது என்பதால் பூட்டே சகோதரர்களையும் நாம் தீர்த்துக் கட்டியாக வேண்டும்! இந்த விஷயம் அந்த மடையன்களுக்குப் புரிபடவில்லை!
டில்லரை நாம் விடுவிக்கப் போவதில்லையா?
அதாவது பாலைன் ப்ரவுனுக்கு டில்லர் ஈடாக மாட்டாள் என்றா நீங்கள் கருதுகிறீர்கள் மிஸ்டர் கார்ட்டர்?
யெஸ்! சிறையிலுள்ள பாலைன், ஒரு அந்நிய நாட்டின் முக்கிய உளவாளி! டில்லரோ சாதாரண பெண் ஏஜெண்ட் தான்! விலை உயர்ந்த உளவாளியை சாதாரண ஏஜெண்டுக்குப் பதிலாக மாற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் சம்மதிக்குமா என்பது சந்தேகமே!
கார்ன்வாலில்-
நான்கு தினங்களாகியும் எந்த துப்பும் கிடைக்கவில்லையே
வாய்ப்பு குறைச்சல்தான்! உடனடியாக இலண்டனுக்கு திரும்புவோம் - அதிக கால அவகாசம் இல்லை நமக்கு!


இலண்டனில் நாம் என்ன செய்யப் போகிறோம்?
டில்லரை மீட்க பாலைனை விடுதலை செய்து அனுப்ப டார்ரண்டுக்கு மந்திரி அனுமதி வழங்குவாரா என்று தெரிந்து கொள்வோம்!
அனுமதி மறுத்தால் டில்லர் கொல்லப்படுவது நிச்சயம்!
அறிவேன்! அந்த உண்மை காரணமாக புதிய கோணத்தில் நாம் செயல்படவேண்டிய அவசியம் வரலாம்!
லெப்ஸ்டோவிலிருந்து சில மைல் தொலைவில் ஒரு பாழடைந்த கட்டிடத்தினுள் -
ஆனால் கையில் விலங்கோடு ஆடுவது வித்தியாசமான அனுபவம்தான்!
பொழுதை கழிக்க ரம்மிக்கு ஈடாக வேறு எந்த ஆட்டமும் கிடையாது!
படுக்கைக்கு போகுமுன் நீ ஒரு டம்ளர் எல்டர்ஸர்ரி ஒயின் குடிக்கலாமே - தூக்கம் அருமையாக வரும்.
போன வருஷம் திருவிழாவில் வாங்கினேன்!
லாபம் ஏழை குழந்தைகளின் பராமரிப்புக்கு போகும் என்றார்கள்.
ஏழைகளுக்கு தொண்டு செய்ய என்றைக்குமே நாங்கள் சோடைபோனதில்லை.


பசுத்தோல் போர்த்திய புலிகள்... இல்லை -ஓநாய்கள்! இவர்களை நம்பக்கூடாது!
எல்லா இரவுகளிலும், கைகளில் விலங்கோடுதான் நான் தூங்க வேண்டுமா?
அவள் தூங்க தனியறை ஏற்பாடாயிருந்தது.
எங்களுக்கு உத்தரவு அப்படி!
உங்கள் பாஸ் யார்?
ஏற்கனவே நீ பலமுறை கேட்ட கேள்வி - பதில் சொல்ல எங்களுக்கு அனுமதியில்லை
ஆமாம்... வாயை திறக்க மாட்டோம்!
பாஸ் யார் என்று வெளியிடக் கூடாதே தவிர உன் நிலைமை என்னவென்று சொல்லத்தடை ஏதுமில்லை
அந்த
சொல்


சிறையில் இருக்கிற குறிப்பிட்ட ஒரு நபர் விடுதலை செய்யப்பட்டால் உனக்கும் விடுதலை கிடைக்கும்... இல்லையேல், உன்னை நாங்கள் கொல்ல வேண்டும் என்பது உத்தரவு!
நாங்களா...? இந்த தடவை கொலை செய்வது என்னுடைய முறை... மறந்து விட்டாயா?
கெடு எதுவரை?
இன்னும் சில தினங்கள் என்று நினைக்கிறோம்.
இன்னும் சில தினங்கள்தான்! கைவிலங்கை தகர்க்கும் யுக்தியை எனக்கு கற்பிக்கத் தவறிவிட்டார்களே!
டார்ரண்ட்டின் ஆபீஸில்...
என் ஆட்களாலும் டில்லரை இதுவரை கண்டு பிடிக்க முடியவில்லை - இனிமேலும் முடியும் என்று தோன்றவில்லை!
அடுத்து?


அன்னொரு கசப்பான சங்கதி..! டில்லரை மீட்க பாலைனை பண்டமாற்று செய்வது சரியான பேரம் அல்ல என்று மந்திரி கருதுகிறார்..
பந்த பாசங்க்ளை ஒதுக்கி வைத்துவிட்டுப் பார்த்தால் உங்களுக்கும்கூட அவர் கூற்று சரிதான் என்று தோன்றும்!
இதோ பாருங்கள்..
ஆத்திரப்படாதீர்கள் பில்லி...
அந்த முடிவு டில்லருக்கு வழங்கப்படும் மரண தண்டனைக்கு ஒப்பாகும் என்று மினிஸ்டருக்குத் தெரியாதா?
தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டேன்!
என்ன இருந்தாலும் அவன் உங்கள் ஊழியை அல்லவா -அவளுக்காக ஏன் நீங்கள் போராடவில்லை?
போராடினேன்.... ஆனால் பலனில்லை -என்னை முறைக்காதே அப்படி!


அவசியப்பட்டால் என் ஆட்கள் பலிகடாக்களாக்கப் படுவது சாதாரண விஷயம்... தொழில்முறை விபத்து அது- உனக்கு இது தெரியாதது அல்ல!
இப்படி ஈவு இரக்கமில்லாமல் பேசுகிறாரே -மனுஷன்.
ஆத்திரப்படாதீர்கள் வில்லி... முடிவெடுப்பது அவர் அல்ல!
டில்லரை மீட்க பாலைனை விடுவிக்க மாட்டார் என்று அவர்களிடம் அடித்துச் சொல்லி விட்டீர்களா ஸர் ஜெரால்டு!
ம்ம்.. மனம் ஒப்பாத விஷயம்!
அடுத்து அவர்களின் நடவடிக்கை என்னவாக இருக்கும்!
தீவிரமாக ஏதாவது செய்ய முயற்சிப்பார்கள் - அதனால் தானே இப்படி சொல்லி அனுப்பினேன்!
பாலைனுக்கு டில்லர் ஈடாக மாட்டாள் என்பதுதான் நிஜம் வில்லி...!


உண்மைதான்..! அவர்களுடைய தீர்மானத்தில் நியாயம் இருக்கலாம். ஆனால் நான் அப்படி அலட்சியமாக இருந்துவிட முடியாது ..டில்லர் என் தோழி!
..எனக்கும் தான்!
ஹலோ...! இவளுடைய பார்வையில் தெரியும் தீவிரம் ஏதோ உள்ளுக்குள் திட்டமிடுகிறாள் என்று சொல்கிறது!
டில்லர் கொல்லப்படும் நெருக்கடி உருவானால் நாம் புதிய கோணத்தில் செயல்பட வேண்டி வரலாம் என்றுநீ சொன்னதன் அர்த்தம் என்ன.. இளவரசி!
பாலைனை டில்லருக்கு பண்ட மாற்று செய்ய அரசுக்கு இஷ்டமில்லை என்றால் அந்தக் காரியத்தை நாமே செய்து முடிப்போம்!
ஹே!
பாலைனை நாம் சிறையிலிருந்து வெளிக் கொணரப் போகிறோமா?
ஆமாம்... அவகாசம் அதிகமில்லை... நாம் விரைந்து செயல்பட வேண்டும்!


முதல் கட்டமாக மாறு வேடத்தில் சென்று நாம் பாலைனை சந்திக்க வேண்டும்.
அவளை சந்திக்க லேசில் அனுமதி கிடைக்காதே!
நாம் ஏதாவது தந்திரம் செய்தால்தான் அது சாத்தியம்!
நீங்கள்தான் பல குரல் மன்னன் ஆயிற்றே... உள்துறை செயலர் மாதிரி பேச முடியுமா?
தெரிந்த குரல்தான் -வெளுத்துக் கட்டி விடுகிறேன்!
ஜெயில் வார்டரின் ஆபீஸில்.
உள்துறை அமைச்சகத்திலிருந்து உங்களுக்கு போன்... ஸார்!
கொடு!
மிஸ்டர் கார்விஷ்? உள்துறை செயலர் உங்களோடு பேச விரும்புகிறார்.. இதோ -



குரலை மாற்றிப் பேசினர் கார்வின்...
குட் மார்னிங், கார்னிஷ் - விஷயம் அந்த பாலைன் ப்ரவுன் பற்றியது..
சொல்லுங் கள் ஸார்!
விஷயம் முக்கியமானது என்பதோடு அவசரமானதும்கூட.. அதனால்தான் நானே உம்மோடு நேரடியாக பேசுகிறேன்! சந்திப்பு நாளை நடைபெறும்.. என் உத்தரவை முறைப்படி கடிதம் மூலமாக அனுப்பி வைக்கத் தவறமாட்டேன்!
பாலைன் ப்ரவுனின் சட்ட ஆலோசகர்களின் பிரதிநிதியாக அங்கே வரப்போகும் மிஸஸ் மாவெஸ் உண்மையில் ஒரு புலனாய்வு அதிகாரி... துருவித் துருவி கேள்வி கேட்பதில் கெட்டிக்காரி - எங்கள் திட்டம் புரிகிறதா?
தெளிவாக -ஸார்!
நல்லது... ஸார்! வசதிப்படுமேயானல் அந்த பெண்மணியை நாளை காலை பத்து மணிக்கு இங்கே அனுப்பி வையுங்கள் ஸார்!
நம் தந்திரம் பலித்து விட்டது - இளவரசி!
உங்கள் பேச்சை உளவுத்துறை செயலர் கேட்டிருந்தால் அயர்ந்து போயிருப்பார்.. வெளுத்துக்கட்டி விட்டீர்கள்!



அடித்துப் பேசினால் பொய் கூட நிஜமாகிவிடும் என்று எனக்கு நீங்கள்தானே கற்றுக் கொடுத்தீர்கள்!
பலித்தால் சரி!
வாருங்கள் நம்முடைய ஸ்டேஷனரி அடுக்கையும் பைல்களையும் கிளறி தேவையான காகிதம், மாதிரி கையெழுத்து ஆகியவற்றை சேகரிப்போம்!
உள்துறை அமைச்சக கடித தாளில் உத்தரவை டைப் செய்தாள் மாடஸ்டி!
"டியர் கார்னிஷ், நான் போனில் உங்களிடம் மிஸஸ் சூஸன் மாவெஸ் பற்றி சொன்னதை உறுதிப் படுத்தவே இந்த கடிதம் அனுப்பப் படுகிறது..."
சரியாக உள்ளதா..?
"... பாலைன் ப்ரவுனை அவள் சந்தித்து உரையாட தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்கவும்!
ம்ம்... உள்துறை செயலரின் கையெழுத்தை சரியாகப் போட நான் கொஞ்சம் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்!
இனி இந்த டைப்ரைட்டரைத் தூக்கி எங்காவது குளம் குட்டையில் போட்டு விட வேண்டியதுதான்!


இருவரும் மறுநாள் காலை மாறு வேடம் புனைந்து கொண்டு சிறைச் சாலைக்குச் சென்றனர்.
நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் இளவரசி!
நீங்கள் அதிகம் பயப்பட தேவையில்லை!
இன்று பாலலனோடு சாதாரணமாகத்தான் உரையாடப் போகிறேன். என்மீது அவர்களுக்கு சந்தேகம் வந்தால் கண்டு கொள்வேன்.
ஆபத்து நெருங்கும்போது முன்கூட்டியே புரிந்து கொள்ளும் அளவுக்கு அனுபவம் வந்துவிட்டது எனக்கு.. வில்லி.
சற்றைக்கெல்லாம்
உன்னுடைய சட்ட ஆலோசகர்களின் பிரதிநிதி நான். உன்னுடைய ஃப்ளாட்டையும் மற்ற உடமைகளையும் ஒழுங்கு செய்வது பற்றி உன்னோடு கலந்தாலோசிக்க வந்திருக்கிறேன்.
நம்ப முடியவில்லை! என்னிடமிருந்து விஷயங்களை கிரகிக்க யுக்தி இது என்று நினைக்கிறேன்.


உன்னை எப்படி நம்ப வைப்பது என்று எனக்குத் தெரிய வில்லை.. சரி.. உன் உடமைகள் பற்றி ஒரு பட்டியல் தயாரிக்கலாவது ஒத்துழைப்பாயல்லவா!
திரும்பும் வழியில்...
நாம் நினைத்ததை நாளை சாதித்து விட முடியும் என்று நம்புகிறேன் வில்லி! வெளியேற வாடிக்கையான பாஸைத்தான் பயன்படுத்துகிறார்கள்.. எனக்கு ஒன்று தேவைப்படும். தயாரித்துத் தருகிறீர்களா?
ஓ... ஷ்யூர்! மாதிரி ஒன்று என்னிடம் உள்ளது!
இநத விக்கும், முக் ரப்பர் அட்டைகளும்... சே.. எரிச்சல் ஏற்படுத்துகின்றன.
டார்ரண்ட்டின் அலுவலகத்தில்
மாடஸ்டியிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா ஸார்?
இல்லை... டில்லர் எங்கே ஒளித்து வைக்கப்பட்டிருக் கிறாள் என்று கண்டறிவதில் முழு மூச்சாக இறங்கி விட்டார்கள் போலிருக்கிறது!
மறு நாளும் மாடஸ்டி சிறைச்சாலைக்குச் சென்றாள்...
உன்னிடமிருந்து போதிய ஒத்துழைப்பு எனக்கு கிடைக்கவில்லை மிஸ் ப்ரவுன்..
புரிந்து கொண்டால் சரி!


காப்பி கிடைக்குமா - இங்கே?
ஸாரி... மிஸஸ் மாவெஸ்! நான் இந்த அறையை விட்டு நகரக் கூடாதென்பது உத்தரவு!
ஓகோ.. அப்படியா?
தான் கொண்டு வந்திருந்த குளோரபாம் குப்பியை கை மறைவில் நொறுக்கினாள் மாடஸ்டி
பெண் காவலாளி மயக்கமுற்று தரையில் சரிந்தாள்.
ஹே.. நீ -
கத்தாதே!
நான் சொல்வதைக் கேள்.. நாமிருவரும் ஏறத்தாழ ஒத்த உடலமைப்பு உடையவர்கள்.. என் உடுப்புகளை நீ மாட்டிக் கொள்.
உன்னைப் போல் வேடமணிந்து நான் வெளியேறிவிட வேண்டுமா? அப்படியானால் நீ எப்படி வெளியேறுவாய்?
நான் உன்னோடுதான் வருவேன்!


ஓ.கே. இந்தக் கண்ணாடியையும் அணிந்து கொள்!
என் காலணிகளையும் மாட்டிக் கொண்டு விடு - எனக்கு வேறு இருக்கிறது!
மாடஸ்டி தான் கொண்டு வந்திருந்த வெள்ளை உடுப்புகளை அணிந்து கொண்டாள்.
நான் இப்போது சொல்லும் வசனத்தை நீ நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்!
அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மாடஸ்டி சொல்லிக் கொடுத்தாள்.
மயக்கம் வருகிற மாதிரி நீ நடிக்க வேண்டும்... அத்தோடு நீ சொல்ல வேண்டிய வசனங்களையும் மறந்து விடாதே
மிஸஸ் மார்வெலுக்கு திடீரென்று உடல் நலக் குறைவு ஏற்பட்டு விட்டது... வீட்டிற்கு போன் செய்து யாரையாவது வரச் சொல்ல வேண்டும்!
அவசிய மில்லை.. டாக்டர்!
சிறைச்சாலை ஆஸ்பத்திரி அது!


யாருக்கும் என்னால் தொல்லை வேண்டாம்! எனக்கு ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்து கொடுங்கள் - போதும்
சற்று நேரம் இங்கே படுத்து ஓய்வெடுத்துக் கொண்டு பிறகு போகலாமே!
வெளியே போய் சுத்தமான காற்றை சுவாசித்தாலே எல்லாம் சரியாகிவிடும்..
அருமையாக நாடகமாடினாள் மாடஸ்டி...
இவளை பத்திரமாக டாக்ஸியில் ஏற்றி அனுப்பி வைத்து விட்டு விடுகிறேன்..! இதோ - மிஸஸ் மாவெஸ்ஸின் பாஸ். இது என்னுடைய அடையாள அட்டை... டாக்டர் பேஜின் அஸிஸ்டண்ட் நான்!
ஓ..யெஸ்! போய் வாருங்கள் டாக்டர்!
நீங்கள் வருவதை முன் கேட்டில் இருப்பவனுக்கு போன் செய்து தெரிவித்து விடுகிறேன்.
நன்றி...! யாராவது என்னை கேட்டால் ஒரிரு நிமிடங்களில் திரும்பி விடுவேன் என்று சொல்லுங்கள்.
மதியத்திற்கு சற்று முன் டார்ரண்ட்டுக்கு ஒரு போன் கால் வந்தது.
நிஜம் தானா..? எப்படி?


ஒரு பெண்ணா? உள்துறை செயலரின் உத்தரவின் பேரிலா? நீங்கள் பரிசீலனை செய்தீர்களா? ஓகோ..
மாடஸ்டி செய்திருக்கும் பித்தலாட்டத்தை வெளியில் சொன்னால் வெட்கக் கேடு! சூழ்ச்சி பண்ணி பாலைன் ப்ரவுணை சிறையிலிருந்து கடத்திப் போயிருக்கிறாள்.
டேவனில் ஒரு காட்டேஜில்..
நீ இங்கே வெங்கின் பராமரிப்பில் தங்கியிரு. ஏதாவது தந்திரம் பண்ணி உன்னை நாங்கள் நாட்டை விட்டு வெளியேற்றும் வரை நீ வாசலில் காலடி வைக்கக் கூடாது.
புரிந்ததா..?
காம்ரேட்! இப்படியொரு கபட நாடகத்தை திட்டமிட்டு, கச்சிதமாக அரங்கேற்றிய உங்கள் திறமையை பாராட்டாமலிருக்க முடியவில்லை!
பெருமையெல்லாம் நம் தலைவர்களுக்கே சேர வேண்டியது!
வாழ்க கம்யூனிஸம்... வெல்க காம்ரேட்ஸ்!



மாடஸ்டியின் மாளிகையை அவர்கள் திரும்ப வந்தடைந்த போது -
ஹே.. மாடஸ்டி!
நினைத் தேன்!
வாருங்கள் ஸர் ஜெரால்டு... எப்போது வந்தீர்கள்?
சற்று முன்தான்! எங்கேயாவது பிரயாணம் போய்விட்டாயோ என்ற சந்தேகம் வந்து விட்டது எனக்கு.
டில்லர் இக்கட்டில் மாட்டிக் கொண்டிருக்கும் போது நாங்கள் எப்படி ஊர் சுற்றப் போக முடியும்? மேலே வாருங்கள்...
எங்கே வெங்கைக் காணோம்?
சில நாட்கள் லீவு கேட்டான் - அனுப்பி வைத்தேன்!
ஓகோ..!
ஸலமாண்டர் குழுவிடமிருந்து பிறகு ஏதாவது செய்தி வந்ததா ஸார்?


நேற்று வந்தது... புதன்கிழமை மதியத்திற்குள் பாலைன் ப்ரவுனை
விடுவிக்காவிடில் டில்லரை கொன்று விடுவார்களாம்... ஆனால் நிலவரம் நேற்றிலிருந்து கைமிஞ்சிப் போய்விட்டது!
பேப்பரில் வராமல் தவிர்த்து விட்டோம்! கேட்டால் வியப்படைவீர்கள் - நேற்று யாரோ ஒரு பெண்மணி பாலைன் ப்ரவுனை சிறையிலிருந்து கடத்திச் சென்று விட்டாளாம்!
ஸலமாண்டர் குழுவினரின் கைவரிசையோ?
இல்லை...! ஆனால் இவ்வுண்மை இந்நேரம் அவர்களுக்கு எட்டியிருக்கும்!
ம்ம்..., பாலைன் இப்போது வேறு யார் வசமோ இருக்கையில் அவர்கள் டில்லரை கொல்வதென்பது அர்த்தமற்ற செயலாகிவிடும் இல்லையா?
உங்களுக்கு ஒரு வகையில் திருப்திதானே?
இனியும் மூடி மறைத்துப் பேச நான் விரும்பவில்லை.. இப்படி ஒரு அடாத காரியத்தை நீ செய்தது சரியல்ல!
என்ன? பாலைனை கடத்திச் சென்றது நான்தான் என்கிறீர்களா?
இப்படியொரு கிறுக்குத்தனமான யோசனை வேறு எவருக்கும் உதிக்காது என்று அடித்துச் சொல்வேன்!



அந்த புதிர் பெண்மணி தப்பித் தவறிக் கூட எந்த இடத்திலும் தன் கைரேகையை விட்டுச் செல்லவில்லை...
சமர்த்துத் தான்!
இந்த சேஷ்டையை செய்தது நீங்களிருவரும்தான் என்றால் டில்லரை மீட்க பாலைனை எதிரிகளிடம் ஒப்படைப்பதுதான் உங்கள் நோக்கமா?
நாங்களாக இருந்தால் எதிரிகள் கண்ணில் மண்ணைத் தூவி பாலைன் ப்ரவுனை இழக்காமலே டில்லரை மீட்கப் பார்ப்போம்.
பாலைன் ப்ரவுனை கைப்பற்றி யிருப்பவர்கள் ஸலமாண்டர் குழுவினரோடு பேரம் பேச முற்படுவார்கள்.
ஆர்ம்ஸ்டர்டாமில் அவர்களுடைய ஆசாமி யாரோ இருப்பதாக கேள்வி - அவர்கள் சார்பில் அவன்தான் பேரம் பேசுவானாம்.
ஓ.. உங்களுக்கும் வான்ஹோட் பற்றித் தெரியுமா...?
மறுநாள் - கார்னிஷ் கடற்கரை பகுதியிலுள்ள ஒரு வீட்டில்
டீ சாப்பிடலாம் - எழுந்து வா!


நிலவரம் வெகுவாக மாறிவிட்டது மிஸ் டில்லர்!
தப்பியோட ஏதாவது யுக்தியை நான் கண்டு பிடிக்க வேண்டும்.
சூடான டீயை இவர்களுடைய மூஞ்சியில் ஊற்றிவிட்டு, கிடைக்கும் அவகாசத்தில் நாற்காலியை தூக்கி அடிக்க முடியலாம்... எனவே..
மிஸ் பிளைஸி, மிஸ்டர் கார்வின் என்று உன்னுடைய நண்பர்கள் யாரோ உன்னோடு பரிமாற்றம் செய்ய வேண்டிய பெண்ணை சிறையிலிருந்து கடத்திச் சென்று விட்டார்களாம்.
நிஜம் தானா?
மிஸ் பிளைஸியோடு பேரம் நடத்தி அந்தப் பெண்ணை அவள் எங்களிடம் ஒப்படைத்தால் உன்னை விடுவித்து அனுப்பி விடுமாறு எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது.
கடவுளே - என் பொருட்டு மாடஸ்டியும், கார்வினும் இப்படியொரு சட்ட விரோதமான காரியத்தை செய்திருக்கிறார்களா?



மாடஸ்டி வஞ்சகமாக எதையாவது செய்ய முனையலாம்.. ஆனால் அதை சமாளிக்க எங்களுக்குத் தெரியும்!
ஹீ.. ஹீ.. பெண்களை கொல்வது எங்களுக்கு இஷ்டமான காரியம்!
விடிகாலை மூன்று மணிக்கு..
யார்.. மிஸ் மாடஸ்டி பிளைஸியா?
ஆமாம்!
மாடஸ்டி இண்டர்-காம் பட்டனை அழுத்தினாள்.
வில்லி.. எழுந்திருங்கள் - அழைப்பு ``அவர்களிடமிருந்து'' தான்!
யெஸ்
எங்களுடைய ஒப்பந்தக்காரர்களுக்கு தேவையான சரக்கு உங்கள் வசம் இருக்கிறது... பண்டமாற்று முறையில் அதைப் பெற விரும்புகிறார்கள்!
வியாபாரத்தை எப்படி நடத்தலாம் -சொல்லுங்கள்!
நாளை மறுநாள் நாம் லெப்ஸ்டோவில் இது பற்றி பேசுவோமே!



சரி... எப்படி சந்திப்பது?
ஆண்டு விழாவுக்கு சேரி குழந்தைகளை வரச் சொல்லி அழைப்பு விடுத்திருக்கிறார் பாதிரியார். அவருக்கு உதவுவதாக சொல்லிக் கொண்டு நீங்கள் அங்கே வரலாம்!
அவருக்கு அங்கே அம்மாதிரி உதவியாளர்கள் நிறைய வேண்டும் என்று கோரிக்கை வெளியிட்டிருக்கிறார்.
சந்திக்க ஏற்பாடு தீர்மானிக்கப் பட்டது!
நீங்கள் அங்கே வந்து சேருங்கள். மிச்சத்தை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்!
அங்கே என்ன வேலை செய்ய வேண்டி வருமோ?
லெப்ஸ்டோ என்றால் டில்லர் பிடிபட்ட இடத்திற்கு வெகு அருகாமையில்தான் சிறை வைக்கப் பட்டிருக்கிறாள் என்றாகிறது.


அதைத் தொடர்ந்து -
லெப்ஸ்டோவின் விழா நடக்கும் மைதானத்தில்...
பாதிரியார் ஸலமாண்டர் குழுவின் கையாளாக இருந்துவிடக் கூடாது!
சேச்சே.. வீணாக அவரை சந்தேகப்படாதே.. அவர் டில்லரின் சித்தப்பா - தெரியுமா உனக்கு?
வாருங்கள்..! உங்களை மாதிரி சேவை மனப்பான்மை உடையவர்களை காண்பது அரிதாகிவிட்டது இந்நாட்களில்!
செயற்கையாக ஜோடனை செய்யப்பட்ட மாயா ஜால உலகப் பகுதியில்..
உங்களோடு இங்கே பணி செய்ய இன்னும் இரு நபர்கள் வரவிருக்கிறார்கள்.
வருகிற சிறுவர்களுக்கு மிஸ் பிளைஸி இந்த மந்திரக் கிணற்றிலிருந்து பரிசுகளை எடுத்து வழங்க வேண்டும்!
மற்றவர்கள்?



மாயா ஜால உலகின் பூர்வீகவாசியாக நீ நடிக்க வேண்டும் கார்வின்.. அதற்கான சிறப்பு உடைகள் தயாராக உள்ளன!
விழா தொடங்கியது...
இருவரும் வேடம் புனைந்து கொண்டு தயாரானார்கள்
இந்த நமுட்டு சிரிப்புத் தானே வேண்டாம் என்கிறேன்!
நானு..? சிரித்தேனு..? சேச்சே - அபாண்டமாக பழி போடாதே!
நான் சொன்னேனே - இவர்கள்தான்!
மிஸ்டர் ஸ்டான்லி... மிஸ்டர் ஹெர்பர்ட் - இவர்கள் மிஸ் பிளைலி.. மிஸ்டர் கார்வின்
வணக்கம்!
நலம்தானு!


சேவை செய்வதே இன்பம் என்று நினைக்கிறவர்கள் இந்த சகோதரர்கள்...
பாராட்டுக்கு நன்றி... பாதர்!
இந்த ரெண்டு கோமாளிகளும் நம் மோடே இருந்தால் ஸலமாண்டர் குழுவினர் பேரம் பேச நெருங்க மாட்டார்களே?!
கார்வின்! நீயும் ஹெர்பர்ட்டும் இங்கே அமர்ந்து பொம்மைகள் செய்வதாக பாவனை செய்து கொண்டிருங்கள்..
சார்வி குழந்தைகளை அழைத்து வரட்டும்... மிஸ் பிளைஸி மந்திரக் கிணற்றிலிருந்து பரிசுகளை எடுத்து வழங்கப்படும்.
குழந்தைகள் வந்த பிறகு இப்படி இளித்தால் போதுமே... இப்போது எதற்கு?
ஹோ... ஹோ...
குழந்தைகள் வருவது ஓய்ந்து போன பிறகு -


ஆண்டவா ஸலமாண்டர் குழு சார்பில் இந்தக் கோமாளிகளே பேரம் பேசப் போகிறார்களா என்ன?
பண்ட மாற்று பற்றி பேசுவோமா.. மிஸ் பிளைஸி?
இரு பெண்களையும் நாம் பரிமாற்றம் செய்து கொள்ளும் போது பிழை ஏதும் ஏற்பட்டு விடக் கூடாது!
நியாயம் தான்!
இந்த வரைபடத்தில் ஒரு சிறிய் பாலத்தை நான் புள்ளி வைத்திருக்கிறேன்.. உங்களில் யாரேனும் மிஸ் ப்ரவுனை அழைத்து வாருங்கள். எங்களில் ஒருவர் மிஸ் டில்லரை கொண்டு வருகிறோம்.
ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொருத்தர் பாலத்தருகே புதர் மறைவில் கையில் துப்பாக்கியேந்தி தயாராக திற்கட்டும்.
நீங்கள் வடபுறமிருந்து வாருங்கள்.. நாங்கள் தெற்கிலிருந்து வருகிறோம்..



பாலைன் ப்ரவுனை இங்கே கொண்டு வந்து சேர்க்க எட்டுமணி நேரம் பிடிக்கும்!
நல்லது! நாளை உதய வேளையில் பரிமாற்றம் செய்வதாக தீர்மானித்துக் கொள்வோம் -சரிதானே!
ஓ.கே. நேரத்திற்கு நாங்கள் வந்து விடுவோம்!
கோல்மால் ஏதும் செய்ய நினைக்காதீர்கள்! புரிகிறதா?
குரல்வளையை நெறிக்க வேண்டும் போல உள்ளது!
ஐந்து நிமிடங்களுக்குப் பின் -
இந்த சகோதரர்கள் எங்கே வசிக்கிறார்கள் என்று பாதரிடமிருந்து கேட்டறிந்தீர்களா.. வில்லி?
கடற்கரை யோரமுள்ள வீட்டில்... இங்கிருந்து மைல் தொலைவில்!
வாருங்கள்.. யார் பார்வையிலும் படாமல் நைஸாக நழுவுவோம்! நம்பிக்கை மோசம் செய்ய நினைப்பது நாம் மட்டும் அல்ல!


அதைத் தொடர்ந்து
பாலைன் ப்ரவுனினால் தொல்லை ஏதுமில்லையே... வெங்?
இல்லை.. மேடம்!
படிக்க நிறைய புத்தகங்கள் கொடுத்தேன். அவள் பாட்டுக்குப் படித்துக் கொண்டு இருக்கிறாள்.
நமக்கு தேவையான உபகரணங்களை காரில் ஏற்றி விட்டேன் இளவரசி!
வாருங்கள்.. திரும்பச் செல்வோம்!
இருட்டிய பிறகு..
அதோ அந்த இடம்தான்! ஆனால் டில்லரை இங்கேதான் வைத்திருக்கிறார்களா என்று தெரியவில்லையே!
சூதாட்டம் மாதிரிதான் - முயன்று பார்த்து விடுவோம்!
ஐந்து நிமிடங்களுக்குப் பின் -
மின் விசை அலார அமைப்பு எதுவுமில்லை இளவரசி..!


வீட்டினுள்ளே -
உன்னுடைய முறை ஹெர்பர்ட்!
தெரியும் எனக்கு -ஸ்டான்லி!
கதவை படீரென்று திறந்து -
கைகளை உயர்த்துங்கள்!
ஹாய்.. மிஸ் பிளைஸி!
எதிர்பார்த்தோம் இதை! அதனால்தான் முன்னெச்சரிக்கையாக ஒரு ஏற்பாடு செய்து வைத்தோம்!
டில்லக் எங்கே?
அதைச் சொல்லத்தான் ஆவலோடு காத்திருந்தேன்.
அருகேயுள்ள ஒரு பாழடைந்த சுரங்கத்தினுள் இருக்கிறாள் -சங்கிலியால் பிணைக்கப்பட்டு! சுரங்கம் கடல் நீர் பரப்பின் கீழ் நீண்டிருக்கிறது. கூரை எப்போதோ தகர்ந்து போய் விட்டது.
...அதனால் அலைகள் சுரங்கத்தினுள்ளே வந்து போய்க் கொண்டிருக்கிறது.. இன்னும் ஒரு மணி நேரத்தில் அலைகள் டில்லரை கபளீகரம் செய்வது நிச்சயம்!


அந்த சுரங்கம் எங்கே இருக்கிறது -சொல்!
ஒப்பந்தத்தை மீறி எங்களுக்கு ஏமாளிப்பட்டம் கட்ட நினைக்கிறாயா? நடக்காது பெண்ணே..
...நேரம் பொன்னானது.. நான் சொல்கிறபடி செய்.. இல்லையேல் டில்லர் மாண்டு போய்விடுவாள்.
பாலைன் ப்ரவுனை காத்து நிற்பவர்களுக்கு போன் செய்து நான் சொல்லும் இடத்திற்கு அவளை கொண்ட வரச் சொல்.
டில்லரை காப்பாற்றும் ஆசை உனக்கிருந்தால் மறு பேச்சின்றி இதை உடனடியாகச் செய்!


ஆல்ரைட்... அவளை எங்கே கொண்டு வந்து உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் - சொல்!
நாங்கள் உன் பிடியில் இருப்பதால் எங்களிடம் கொண்டு வரச் சொல்ல வேண்டாம்.
வேறு வழியில்லை இப் போதைக்கு!
ஸலமாண்டர் குழுவைச் சேர்ந்த மற்ற பிரதிநிகள் உதய வேளையில் நான் முன்பு குறிப்பிட்ட பாலத்தருகே இருப்பார்கள். அங்கே கொண்டு வரச் சொல்!
மாடஸ்டி வெங்கை அழைத்தாள். எக்ஸ்டென்ஷன் போனில் உரையாடலை ஸ்டான்லி கேட்டுக் கொண்டிருந்தான்.
வெங்... நீ பாலைன் ப்ரவுனோடு கிளம்பி வா. லெப்ஸ்டோவிலிருந்து சில மைல் தொலைவில் நான் இப்போது சொல்லப் போகும்... இடத்திற்குக் கொண்டு வந்து விடு!
யெஸ்.. மேடம்!
உதய நேரத்திற்கு அங்கே வந்து விடலாமில்லையா?
சங்கேத வார்த்தையை மேடம் சொல்ல வில்லையே!
நம்பிக்கை மோசம் செய்யக் கூடாது என்ற போதனையை நீ இந்த அனுபவத்தின் மூலம் கற்றுக் கொண்டால் சரி!
...அந்தப் பாலம் கிராமத்திற்கு வடக்கே இருக்கிறது..


பாலைன் வந்து கொண்டிருக்கிறாள் இப்போது உன் முறை -சீக்கிரம் சொல்... டில்லர் இருக்குமிடத்தை!
நாங்கள் ஏமாற்ற மாட்டோம் மிஸ் பிளைஸி.
இவர்களை கட்டிப் போடுங்கள் வில்லி
இங்கிருந்து மேற்கே நானூறு மீட்டர் தூரத்தில் இருக்கிறது அந்த சுரங்கத்தின் நுழைவாயில்... பிரதான சுரங்கத்தின் மறுமுனையில் நீங்கள் டில்லரை பார்க்கலாம்!
அவளை பிணைத்திருக்கும் சங்கிலிக்கு சாவி இது... நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் அங்கே மரணம் அவளை நெருங்கிக் கொண்டிருக்கிறது -மறந்து விடாதீர்கள்.
நாங்கள் வெளியேற முற்படும்போது சுரங்க வாசலில் துப்பாக்கியோடு நீங்கள் எதிர்பார்த்து நிற்கக் கூடாது அல்லவா - அதற்காகத்தான்!
இது அவசிய மில்லாத ஒன்று!
அது மட்டுமல்ல... அங்கே டில்லருக்கு விபரீதமாக ஏதாவது சம்பவித் திருந்தால்..
...எங்களுக்கு நீங்கள் தேவைப் படலாம்!



ஐந்து நிமிடங்களுக்குப் பின் -
அதோ... அந்த இடம்தான் வில்லி!
ஆமாம்..
அந்த சகோதரர்கள் நம்மை ஏறத்தாழ வென்றுவிட்ட மாதிரியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது வில்லி!
ஆனால் வெங்கோடு பேசும் போது சங்கேத வார்த்தையை நீ சொல்லவில்லை.. எனவே, அந்த உத்தரவு நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றில்லை என்று அவன் புரிந்து கொண்டிருப்பான்.
இதுதான் பிரதான சுரங்கப்பகுதி - உரத்து குரல் கொடுங்கள்... டில்லர் தெரிந்து கொள்ளட்டும் நாம் வந்து கொண்டிருப்பதை!
டில்லர்..!
இங்கே இருக்கிறேன்.. வில்லி!

ஆனால -


ஓ... உங்களை காண எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது தெரியுமா?
சற்று தாமதமாகிவிட்டது... நிலவரம் அப்படி!
தப்பான சாவியை கொடுத்து ஏமாற்றி யிருக்கிறார்கள்..
பையில் சங்கிலியை அறுக்க ஆக்ஸா பிளேடு இருக்கிறது.
கைகளை இதன் மேல் வை - சீக்கிரமாக அறுத்து முடிப்போம்
அங்கே -
சீக்கிரம்... ஆகட்டும்!
இந்நிலையில் வேகமாக நகர முடிய வில்லை.. ஸ்டான்லி!
ரேடியோ இயக்க கருவியை உனக்கு பக்கத்தில் இருக்கும் மேஜை அடியில் வைத்திருந்தால் இவ்வளவு அல்லல் பட வேண்டியிருந்திராது!


எப்படி அந்த சுவிட்சை அழுத்தப் போகிறேனோ தெரியவில்லை.
மூக்கினால் முடியுமா பார்!
சுரங்கத்தினுள்ளே -
ஆயிற்று - வாருங்கள் ஓடிப் போகலாம்!
அப்போது - காதைச் செவிடாக்கும் பலத்த ஓசை எழுந்தது.
பூம் பூம்
ஓ... சுரங்கப் பாதையை வெடிவைத்து தகர்த்து விட்டார்கள் போலிருக்கிறது.
சுரங்கப் பாதையில் வெடியை பொருத்தி வைத்திருந்து...
மாட்டிக் கொண்டு விட்டோம்!
தொலைவிசை இயக்கு முறையில் தூண்டி விட்டிருக்கிறார்கள்.
சுற்றி வந்து பார்ப்போம். இன்னொரு வழி இருந்தாலும் இருக்கலாம்.
சந்தேகம்தான்! இந்த பகுதியில் எப்போதோ அலை வந்து போன தடயம் தென்படுகிறதே!



அப்படியானால் நீரினடியில் மூழ்கிக் கிடக்கும் சுரங்கப் பகுதியிலிருந்து நீர்ப்பரப்பை சென்றடைய வழி இருக்கக் கூடும்!
எவ்வளவு தொலைவுக்கு சுரங்கம் நீருக்கு அடியில் நீண்டிருக்கும் என்று நீ யூகிக்கிறாய் இளவரசி?
நானூறு அல்லது ஐநூறு மீட்டர் தொலைவுக்கு!
அவ்வளவு தொலைவு நீரினடியில் நீந்திப் போக எப்படி சாத்தியப்படும்?
விளக்கு எட்டு மணி நேரம் எரிய எரிசக்தி இருக்கிறது.. போய் கிளை சுரங்கங்களை நோட்டம் விட்டு வருகிறேன். ஏதாவது வழி பிறக்கலாம்!
அலை பின் வாங்கியதும் பத்து நிமிடங்கள் நன்றாக மூச்சை உள்வாங்கி இழுத்து விட்டு சுரங்க வழியாக நீந்த முயற்சிக்கப் போகிறேன்.
பாதி தொலைவு கூட நீ இப்படி போக முடியாது மாடஸ்டி.


மிகவும் ஆபத்தான முயற்சி இது அவசியம்தானா?
வேறு வழி? இங்கேயே உயிரை விட்டு விடலாம் என்கிறாயா?
ஹே... இளவரசி! வேறு வாசல் எதுவுமில்லை! ஆனால் இது கண்ணில் பட்டது!
இந்தப் பாரலை வைத்து என்ன செய்வது?
கொள்ளளவு = $\pi r^2 \times$ உயரம்.. ம்ம் ஏறத்தாழ முப்பது கன அடி காற்று உள்ளே இருக்கும்! இதை நீச்சல் குமிழாக பயன்படுத்திச் சென்றால் என்ன?
எங்களை உற்சாகப்படுத்த நீங்கள் முயற்சிப்பது புரிகிறது வில்லி... ஆனால் இது தண்ணீர் புகாததாக இல்லையே?
விளிம்புகளை தார் வைத்து பூசி விடலாம்!
தார் இங்கே சிறு சிறு குவியலாக கிடக்கிறது.


போதிய பலூ இல்லை என்றால் நீருக்குள் மூழ்கி நிற்காதே!
அதற்கொரு யுக்தி இருக்கிறது!
அலை வடிய அதிக நேரம் பிடிக்கும்.. அதற்குள் நாம் இந்த பாரலை தயார் செய்து விடலாம்!
அங்கே -
ஓ.. மிஸ்டர் கார்டர்! வாருங்கள்..!
அந்த மூவருக்கும் ஜல சமாதி உறுதி!
கையால் கொல்ல வாய்ப்பில்லாது போயிற்றே என்று வருத்தம் எனக்கு.
ஸலமாண்டர் குழு பிரதிநிதி வந்து சேர்ந்தான்.
வெங் என்றொரு ஆசாமி பாலைன் ப்ரவுனை கொண்டு வந்து ஒப்படைக்க உதய வேளையில் வந்து சேருவான். ஹெர்பர்ட்டின் கை அரிப்பு தீர அவனை பலி கொள்ளட்டும்!


அதற்கு நிறைய நேரம் இருக்கிறது... அதற்கு முன் நான் ஒரு குட்டித் தூக்கம் போட்டுக் கொள்கிறேன்!
பலமுறை பாரலை நன்றாக பரிசோதித்து செப்பனிட்டு ஒழுங்கு பண்ணி முடித்தார்கள்.
ம்ம்... நான் கிளம்புகிறேன் -இளவரசி!
ஓ.கே.
ஒரு நிமிஷம்!
மனத்தை தளரவிடாதே டில்லர். ஒரு மணி நேரத்தில் நீந்தும் உபகரணங்களோடு இங்கே திரும்பி வருவேன்!
குட் லக்.. வில்லி!
சுரங்கத்தின் கூரையை தொடும் நீர்ப்பரப்பு இடம் வரை பாரலை கொண்டு போனார் கார்வின்.
ம்ம்.. பாரலினுள்ளே நான் இப்போது புகுந்து கொள்ள வேண்டும்
பாரலுக்குள்ளே இருந்த காற்றை சுவாசித்தவாறு முன்னேறினார் கார்வின்.
மெதுவாக நான் சுவாசிக்க வேண்டும்! -இல்லையேல் காற்று பற்றாக்குறை ஏற்பட்டுவிடும்!


வெளியே பார்க்க முடியாதது ஒரு பிரச்னைதான்!
சுரங்கத்தினுள்ளே -
ஒருவேளை சுரங்கம் நாம் கணித்ததை விட நீண்டதாக இருந்து விட்டால்..
வீணாக எதையும் கற்பனை செய்து குழப்பிக் கொள்ளாதே!
கார்வின் சென்ற பத்து நிமிடங்களுக்குப் பின் -
இன்னமும் அவர் சுரங்கத்தினுள்ளே இருந்தால் மூச்சு முட்டி செத்துப் போய் விடும் அபாயம் உண்டு... எனக்கு ஒரே கலக்கமாக இருக்கிறது.
எனக்கும் தான்.. மனதை வெறுமையாக்கிக் கொண்டு விடு!
நிமிடத்துக்கு நாற்பது மீட்டர்தான் நகர முடியும்... அப்படியானால் 500 மீட்டர் தொலைவை கடக்க...
..இப்போது பெருக்கல் வகுத்தல் எல்லாம் எதற்கு?
அவர் வெற்றியடைவாரா இல்லையா என்பதைப் பொறுத்து நம் தலைவிதி அமையும்!
கீழே கரடு முரடாக கிடக்கிறது... கூரை சரிந்து விழுந்த இடம் இதுதானே!


பிராண வாயு ஏறத்தாழ தீர்ந்து விட்டது!
மயக்கம் வருவது போலிருந்த நிலையிலும் தளராது முன்னேறிய கார்வின் சற்றுத் தொலைவில் வெளிச்சத்தைக் கண்டார்.
அப்பாடா..!
நீர்மட்டத்திற்கு மேலே தலை நீட்டிய கார்வின் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்..
ஆண்ட வனே.. நன்றி!
மறைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை நோக்கி விரைந்தார்.
பெண்களிருவரையும் காப்பாற்றி கரை சேர்த்த பிறகு, போய் அந்த அயோக்கியர்களை கவனிக்க வேண்டும்!


சுரங்கத்தினுள் -
போய் வெகு நேரமாகி விட்டதே!
அவ்வளவு சுலபத்தில் தோற்று விடக் கூடியவரல்ல... எதிர் அலை தாமதத்திற்கு காரணமாக இருக்கலாம்.
ஒரு மணி நேரத்திற்கும் மேலாகி விட்டது!
காரில் இருக்கும் நீச்சல் உபகரணங்களை எடுத்துக் கொண்டு மீண்டும் பாதையை கண்டுபிடித்து வரவேண்டுமல்லவா?
கடவுளே! நான் நினைத்துப் பார்க்கவே யில்லை.. நீருக்கு அடியில் உள்ள சுரங்கப் பாதையின் தொடக்க இடத்தை எப்படி அவர் கண்டு பிடிப்பார்!
அடையாள மிதவையாக விட்டுச் செல்ல சுள்ளிக் கட்டு ஒன்றை எடுத்துப் போனார்..
ஆங்.. இந்த இடம் தான்!
உன் போக்கு வித்தியாசமாக இருக்கிறது... அவர் கிளம்பிப் போன போது எதுவுமே பேசவில்லை நீ - வாழ்த்துக்கூறி வழி யனுப்பக் கூட இல்லை.
என்றென்றும் சிரஞ்சீவியாக வாழப் போகிறோம் என்ற நம்பிக்கையோடுதான் நாங்கள் செயல்படுகிறோம் டில்லர்!


அந்த நம்பிக்கைதான் எங்கள் பலம்!
என்னால் அப்படி பொறுமையோடு இருக்க முடியவில்லை!
நீந்த ஆசையுள்ளவர்கள் வரலாம்!
வில்லி!
ஓ... வில்லி! நிச்சயம் பத்திரமாக திரும்பி வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்!
அந்த நிச்சயம் கேள்விக் குறியாக இருந்த கணங்களும் சில இந்தப் பயணத்தில் இருந்தன.. டில்லர்!
ரொம்ப கஷ்டமாக இருந்ததா..?
பிராண வாயு சிலிண்டர் இரண்டுதான் இருக்கின்றன.. நீ முதலில் போ மாடஸ்டி..
அவசியமில்லை. நான் வில்லியோடு தொற்றிக் கொண்டு அவ்வப்போது வாய் குப்பியை அவரிடமிருந்து இரவல் பெற்றுக் கொள்கிறேன்.



ஜல சமாதியிலிருந்து வெளியே வந்தது அந்த மூவர் குழு..
இருபது நிமிடங்களுக்குப் பின் -
விடிய ஒரு மணி நேரமிருக்கிறது... அடுத்த நடவடிக்கை என்ன இளவரசி!
மாற்று உடைகளை வெளியில் எடுங்கள் வில்லி!
அங்கே -
அந்த பாலத்திற்குச் சென்று ஸலமாண்டர் குழுவினரின் வருகைக்கு காத்திருப்போம்..
உதயமாகி பதினைந்து நிமிடங்களாகி விட்டன.. நீ இட்ட கட்டளையை பிளைஸி போனில் சரியாகச் சொன்னாளா?
நானே போனில் கேட்டேன் மிஸ்டர் கார்டர்... மறுமுனையில் சரி என்றும் சொல்லக் கேட்டேன்.
பாலைன் ப்ரவுனை கொண்டு வரும் வெங் என்ற நபரும் ஒரு வேளை நம்மைப் போல் ஏதாவது ஒரு புதர் மறைவில் பதுங்கி நின்று கவனித்துக் கொண்டிருக்கிறானே?


இருக்கலாம்... வாருங்கள் நாம் வெளியேறிச் செல்வோம்!
கார்டர்.. பூட்டே சகோதரர்கள் மற்றும் துப்பாக்கியேந்தி இரு முரடர்கள் பாலத்தை நோக்கிச் சென்றனர்.
ஸ்டான்லி.. இலஞ்சம் பெற்றுக் கொண்டு நீ ஏதாவது நாடகமாடுகிறாயா என்ன?
இதைக் கேட்க என் இரத்தம் கொதிக்கிறது.
அபாண்டமாக பேசாதீர்கள் மிஸ்டர் கார்ட்டர்! உங்கள் விருப்பப்படியே டில்லரையும், மாடஸ்டி பிளைஸி மற்றும் கார்வினையும் நாங்கள் கொன்று விட்டோம்!
ஆனல் -அதோ அங்கே வருவது யார்?
எப்படி இது சாத்தியம்?
குழுவினர் பாலத்தை சென்றடைந்த போது -
அடடே.. அவள் மிஸ் டில்லர் அல்லவா?
அவளை ஜலசமாதி வைத்து விட்டதாக கதை விட்டாயே நீ?



ஏங்களிடமே நயவஞ்சகமா... துரோகிகளே!
இல்லை.. மிஸ்டர் கார்ட்டர்.. வந்து -
தீர்த்துக் கட்டுங்கள் -இருவரையும்!
இது - முறையல்ல...
க்ராக்
சைலன்ஸர் பொருத்திய துப்பாக்கி அவ்விரு சகோதரர்களையும் ஓசையின்றி வீழ்த்தியது..
அவளை யுமா?
பொறு... முதலில் அவளை பேச வைப்போம்.
எங்களுக்கு விட்டு வைக்காமல் இவர்களே அவ்விரு கயவர்களையும் தீர்த்துக் கட்டி விட்டார்கள்.
மாடஸ்டியும் கார்வினும் ஓசை படாமல் பாலத்தினடியிலிருந்து வெளியேறி வந்தனர்!


திரும்பிப் பார்
டில்லர் வருவதில் கவனமாக இருந்த கார்டர் உள்ளுணர்வு விடுத்த எச்சரிக்கையினால் திரும்பிப் பார்த்தான்.
அவனுடைய கூட்டாளி திரும்பிப் பார்ப்பதற்குள் -
ஆஆஆ..
பட்
கார்டர் துப்பாக்கியை உயர்த்திய கணத்தில் டில்லர் சரேலென்று பாய்ந்தான்.
ஹை!
மடேர்
அவனை என்னிடம் விடு.. டில்லர்
அவசியமில்லை... வில்லி - இவனை கவனிக்க நானாயிற்று!



எனக்குள் ஒரு எரிமலையே குமைந்து கொண்டிருக்கிறது.
ஆமாம்... அதற்கு ஒரு வடிகால் அவசியம்தான்!
கொஞ்சம் கூடுதலாக கொடுத்து விட்டேனோ?
கழுத்து மோசமாக பாதிக்கப் பட்டிருக்கலாம்... ஆனால் தப்பு உன்னுடையதல்ல.
சூப்பர் அடி!
எதிரிக்கு வாய்ப்பே கிடையாது!
நூறு மீட்டர் தொலைவில் - ஒரு மர உச்சியிலிருந்து...
டில்லர் உயிரோடு வருவதை பார்த்ததும் பூட்டே சகோதரர்கள் மீது இவர்கள் சந்தேகம் கொண்டு பாயக் கூடும் என்று நீங்கள் கணித்தது சரியாகி விட்டது.



ஆனால் இப்படி ஒரேயடியாக தீர்த்துக் கட்டுவார்கள் என்று நான் எதிர்பார்க்க வில்லை!
அவ்விரு கிராதகர்களுக்கும் இது தேவைதான் -பெண்களை கொல்வதென்றால் அவர்களுக்கு ஏகப்பட்ட குஷி!
இன்னமும் உன் ஆவேசம் அடங்கவில்லையா? -அவர்கள் நமக்கு வேண்டியவர்கள்!
யாரோ வருகிறார்கள்.. இளவரசி!
எதிரிகளா...? துப்பாக்கியை என்னிடம் கொடுங்கள்.
டார்ரண்டும் நான் கட்டிப்போட்ட அவருடைய இரு ஊழியர்களும்தான் என்று நினைக்கிறேன்.
நான்தான் வெங்கிடம் சொல்லியிருந்தேன் -நாம் திரும்பி வர தாமதமானால் அவருக்கு தகவல் சொல்லுமாறு!
குட் மார்னிங்... ஸார்!


இங்கே வந்தால் ஸலமாண்டர் குழுவை பிடிக்க முடியலாம் என்றுதான் வெங் சொன்னான்... ஆனால் நீங்கள் எப்படி இங்கே -
தற்செயலாக வந்தோம்... எங்கள் மீது பாய்ந்தார்கள்.
தற்காப்புக்காக எதிர்த்து தாக்க வேண்டிய நெருக்கடி எழுந்தது..
காயமடைந்தவர் களையும், சடலங்களையும் அங்கிருந்து அகற்றிய பின் -
வாரன்... இவர்களை அப்புறப்படுத்த வழியைப் பார்... மிஸ்டர் கார்வின் உனக்கு ஒத்தாசை செய்வார்.
கார்வினு..? ஐயோ - வேண்டாம் ஸார்! நாங்கள் பட்டது போதும்!
பிரச்னை தீர்ந்தது டில்லர்.. மிச்சமிருக்கிற நாட்களையாவது உல்லாசமாக கழிக்கப் பார்ப்போம்!
அதற்கு தடை ஏது?
டில்லர் என்னோடு இலண்டனுக்கு வரட்டும்.. ஸலமாண்டர் குழுவினர் வசம் சிறைப்பட்டிருந்ததால் தீவிர மருத்துவப் பரிசோதனைக்கு இவளை உட்படுத்த வேண்டும்.



ஸார்.. நான் விடுப்பில் இருப்பது மறந்து விட்டதா?
நேற்றோடு உன் விடுப்பு முடிந்து விட்டது டில்லர்.. எனினும் உனக்கு மறுபடியும் ஓரிரு வாரங்கள் விடுப்பு கொடுத்து அனுப்ப முயற்சி பண்ணுகிறேன்.
டில்லர் விடுவிக்கப்பட்ட இரு வாரங்களுக்குப் பின்
வில்லி! வந்துவிட்டேன்..! மூட்டை முடிச்சுகளை கட்டித் தயாராக வைத்திருக்கிறீர்களல்லவா - பயணத்திற்கு?
ஓ.. ஹலோ மாடஸ்டி - வில்லியும் நானும் ஒரு வழியாக உல்லாசப் பயணம் கிளம்பப் போகிறோம்.. அது சரி - நீ எப்படி - இங்கே?
வில்லிக்கு அம்மை போட்டிருக் கிறது..
..விழாவில் கலந்து கொண்ட போது அந்த சிறு குழந்தைகளிடமிருந்து தொற்றிக் கொண்டு விட்டது போலும்!


வில்லி.. இது உங்களுக்கே நியாயமாக இருக்கிறதா?
என்ன பேச்சு இது - ஏதோ நான் வேண்டுமென்றே அம்மையை வரவழைத்துக் கொண்டது போல்?
ம்ம்.. நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் போலும்.. சமையலறை எங்கே என்று காட்டு... இவருக்கு பணிவிடை செய்கிற சந்தோஷமாவது கிடைக்கட்டும்!
பணிவிடை யோடு நிறுத்திக் கொண்டால் சரி!
கிண்டலா..! என்னை என்ன சபல புத்திக்காரி என்று நினைத்தாயா?
முற்றும்

# வேடிக்கை உலகம் இது!



கி.பி. 812 சுமாருக்கு சீனாவில் பேப்பரால் செய்யப்பட்ட . பணத்தைக் கண்டுபிடித்தனர். சில்லறைக் காசுகளை விட கொண்டு செல்ல இது எளிதானது என்பதால் உடனே பிரபலமானது!






இன்னமும் சட்டபூர்வமாய் அங்கீகரிக்கப்பட்ட ஒரு லட்சம் டாலருக்கான கரென்சி புழக்கத்தில் உள்ளது! (ஒரு லட்சம் டாலர் என்றால் சுமார் 32 லட்சம் ரூபாய்) 1944ல் அமெரிக்காவில் அச்சிடப்பட்ட இந்த நோட்டுகளில் இன்னும் 348 மட்டுமே புழகத்தில் உள்ளன! உலகிலேயே மிக அதிக மதிப்புள்ள கரென்சி இதுதான்!

**வரி.. வட்டி..**

தனிப்பட்ட நபரிடம் மிக அதிகபட்ச வரி வசூலிக்கப்பட்டது அமெரிக்காவில்! பிரபல செல்வந்தர் ஹோவார்டு ஹ்யூஸிற்கு 33.6 கோடி டாலர் வரி விதிக்கப்பட்டது!





பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் நேபாவில் புழங்கப்பட்ட வெள்ளி நாணயம் தான் உலகிலேயே மிக மெல்லிசான - சின்ன நாணயம்! அதன் எடை என்ன இருந்தது தெரியுமா? - .0002 கிராம்!
பாங்கில் இருக்கும் தன் பணத்தை குறிப்பிட்ட நபருக்குப் பட்டுவாடா செய்யச் சொல்லி கட்டளையிடுவதற்கே செக்! சாதாரண தாளில் எழுதிக் கொடுத்தால் கூட ஆரம்பத்தில் பாங்க்கில் பணம் கொடுத்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் ஒரு முறை ஒரு விவசாயி பசு மாட்டின் முதுகில் செக் எழுதி அனுப்பி வைத்தார் என்றால் பாருங்களேன்..!
செக் வேணுமா செக்?
BARCLAYS BANK LTD
ST PAUL'S BRANCH
Pay A.P. Herbert
Sum of Five pounds only



ஜூனியர் & சீனியர்!
கதை: S.விஜயன் ☆ சித்திரம்: சிகாமணி
நான் இன்னைக்கு ரொம்ப மோசமான மூடிலே இருக்கேன்! யாரும் எங்கிட்ட ஏதும் வம்பு வச்சுக்கிட வேணாம்!
இந்தா லயன் காமிக்ஸ்! சோபாவிலே சௌகரியமாக ஏறி உட்கார்ந்துக்கோ! நான் போய் உனக்கு ஒரு கிளாஸ் ஜூஸ் போட்டு கொண்டு வர்றேன்!
ம்ம்ம்... வந்து. சரி!
இந்த அம்மா மார்களுக்குத் தெரியாத சமாச்சாரமே கிடையாதுடா சாமி!


கதை நம்பர் 4

# மின்னல் மனிதன்!





எமெர்ஜென்ஸி! அனைவரும் விமான தளத்திலிருந்து அப்பால் போய்விடவும்... நெருக்கடிப் பணி சிப்பந்திகள் தயார் நிலையில் இருக்கவும்...
ஏதோ விபரீதம்..
திடீரென்று...
கண்ட்ரோல் கோபுரத்திலிருந்து 'ஃபெதர்-ப்ளை' விமானத்திற்கு -உங்களுடைய சக்கரங்கள் இன்னமும் கீழிறங்கவில்லை.
'ஃபெதர்-ப்ளை' யிலிருந்து கண்ட்ரோல் கோபுரத்திற்கு -சக்கரங்கள் சிக்கிக் கொண்டதாக தெரிகிறது... மீண்டும் ஒரு முறை சுற்றி வந்து அதை உலுப்பி கீழிறக்க முயற்சிக்கிறோம்.
'ஃபெதர்-ப்ளை'யிலிருந்து கண்ட்ரோல் கோபுரத்திற்கு -சக்கரங்களை விடுவிக்க இயலவில்லை... வெறும் பத்து நிமிடங்கள் பறக்கவே எரிசக்தி கைவசம் உள்ளது... தடாலடியாக தரையிறங்குவதை தவிர வேறு வழியில்லை... ஏற்பாடு செய்யவும்.
விமான நிலைய கட்டிடத்தின் பின்புறம் -
மின்னல் வீரன் தலையிட்டு தீர்க்க வேண்டிய நெருக்கடி இது


அவனுடைய வியத்தகு கைக்கடிகாரத்தின் விந்தை ஆற்றலால் மேலெழும்பிப் பறந்தான் மின்னல் வீரன்..
ஹே.. ஸ்கிப்பர்... அங்கே பாருங்கள்!
இவனைத் தான் மின்னல் வீரன் என்பார்கள்... சக்கரங்களை ஒழுங்கு பண்ண முயற்சிக்கப் போகிறான் போலிருக்கிறது.
அந்த ராட்சஸ ஜெட்டின் கீழே பாய்ந்தான் மின்னல் வீரன்.
தன் விசேட சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி மின்னல் வீரன் அந்த சக்கரங்களை கீழிறங்கி நிலையில் வைத்தான்.
சாதித்து விட்டேன்
எங்கே போனான்?
விளம்பரத்தை கொஞ்சமும் விரும்பாத செயல் வீரன்!
அதோ போ கிறான்!
மின்னல் வீரனே.. உனக்கு எங்கள் நன்றி கலந்த பாராட்டுக்கள். நீ மட்டும் தலையிட்டிராவிடில் இங்கே இந்நேரம் என்ன விபரீதம் நிகழ்ந்து விட்டிருக்குமோ?


அந்த விந்தை மனிதன் வேகமாக தன் சுய உருவத்துக்கு திரும்பலானான்..
நான் வேகமாக போக வேண்டும்... என் விமானம் எந்த வினாடியிலும் புறப்பட்டு விடலாம்!
மின்னல் வீரன் சாதாரண கான்ஸ்டபிள் மிக்காக மாறினான் -அவனை ஓர் உருவம் கவனித்துக் கொண்டிருந்ததை அறியாதவனாக!
ஓகோ.. மின்னல் வீரன் மாயமாக மறைந்து போவது இப்படித்தானா! மீண்டும் சாதாரண இளைஞனாகிப் போனான்... இந்த இரகசியம் எனக்கு ரொம்ப உதவுமே!
மிக் ஏறியிருந்த அதே விமானத்தில் அந்த முரடன் பில்ஸனும் பயணமானான்..
ஹலோ மிஸ்.. அதோ அங்கே முன் வரிசையில் உட்கார்ந்திருப்பது யார்?
அந்த இங்கிலீஷ் காரரையா கேட்கிறீர்கள்! பெயர் - மிக்... பிரிட்டிஷ் கான்ஸ்டபிள்... நியூயார்க் போகிறார்.

F-8



59வது சரக போலீஸ் ஸ்டேஷன்... அங்கேதான் இவன் பணிபுரிகிறானா... சீக்கிரமே இவனோடு தொடர்பு கொள்வேன்!
காவல் நிலையத்தினுள்ளே போன மிக் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான்..
நான் - சார்ஜண்ட் ஹாரி... எங்களோடு பணியாற்ற வந்திருக்கும் உன்னை வரவேற்கிறேன்.. பிரிட்டிஷ் போலீஸ் எவ்வளவு திறமைசாலிகள் என்று எங்களுக்கு நீ நிரூபித்துக் காட்டுவாய் என்று எதிர்பார்க்கிறேன்.
ஆப்... என் விரல்கள்..! அப் பப்பா.. என்ன ஒரு இரும்புப் பிடி!
சீருடையை மாட்டிக் கொள்ள மிக் உள்ளே போனான்...
சரியான நோஞ்சானுக இருக்கிறானோ... நான் கைகுலுக்கியதைக் கூட தாங்கிக் கொள்ள முடிய்வில்லையே அவனால்
.. அவன் மீது நாம் ஒரு கண் வைத்திருப்பது நல்லது!


அதையடுத்து -
ரொம்ப மோசமான ஏரியா இது.. மிக்! இங்கிருக்கிற பயல்களுக்கு போலீஸை கண்டாலே பிடிக்காது!
ஓகோ.. அதனால்தான் என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தாரா இங்கே -அந்த சார்ஜண்ட்!
உன் அதிர்ஷ்டத்தை என்னவென்பது... அதோ அவனை பாரேன் .. பெயர் 'ஸ்கின்னி' ஸிட்னி... ஒரு மோசடிக்காக தேடப்பட்டு வரும் நபர்... அவனை கைது செய் மிக் - பயப்படாதே.. அவனால் எந்த கெடுதலும் வராது!
ம்ம்.. வந்து -அப்படி யானால் செய் கிறேன்!
ம்ம்.. வந்து... எக்ஸ்க்யூஸ் மீ.. வந்து.. நீதான் 'ஸ்கின்னி' ஸிட்னி - அப்படீன்னு நினைக்கிறேன்... கொஞ்சம் தயவு செய்து என்னோடு ஸ்டேஷனுக்கு வர்றீங்.. ஸாரி... வருகிறாயா...
ஏய்.. யார் நீ - என்ன உளறு கிறாய்?
உன் பட்டப் பெயர்தான் 'ஸ்கின்னி'.. அந்த ஆள் ஒரு பிரிட்டிஷ் கான்ஸ்டபிள் -இன்னும் என்ன வேண்டும்
ஆ... ஐயோ.. அம்மா
டொம்
பட்டப் பெயரா?


நான் அவரை அடித்து விட்டதாகத்தான் சொல்வார்கள். அது தற்செயலான விபத்து என்று சொன்னால் யாரும் நம்பப் போவதில்லை -எனவே... ஓடப் போகிறேன்!
-என் கால் போச்சு!
ஸிட்னியை கைது செய்யாமல் கோட்டை விட்ட விஷயம் வெளியே பரவியது..
ஸாரி.. ஸார்! அடுத்த முறை வெகு ஜாக்கிரதையாக இருப்பேன்!
அடுத்த தடவையைப் பற்றி அலட்டிக் கொள்ள வேண்டாம்... உனக்கு என்று ஒரு இடத்தை தீர்மானித்து வைத்திருக்கிறேன் - அங்கே போய்ச் சேர்!
அதையடுத்து மிக் டைப்பிங் செக்ஷன் போய்ச் சேர்ந்தான்.
என்ன மிஸ்.. நீங்களும் போலீஸ் படையை சேர்ந்தவர் தானு?
இல்லை.. நான் சாதாரண செகரட்டரி! மனச் சோர்வடைய வேண்டாம்! மீண்டும் உங்களை விரைவிலேயே ரோந்துப் பணியில் அனுப்புவார்கள்.. நீங்கள் சொன்னது போல் இது ஒரு விபத்து போல -அவ்வளவுதான்.
மறு நாள் மிக் தங்கியிருந்த ஹோட்டலில்...
இந்த இடம் ஒரேயடியாக போரடிக்கிறது! மின்னல் வீரனுக நியூயார்க்கை ஒரு முறை வலம் வந்தால் உற்சாகமாக இருக்கக் கூடும்!


தன் வியத்தகு கடிகாரத்தின் விந்தை ஆற்றலால் மின்னல் வீரனாக மாறினான் மிக்..
அடடா... என்ன ஒரு அற்புதமான நகரம்! கான்ஸ்டபிள் மிக்காக சாதிக்கத் தவறியதை மின்னல் வீரனாகி சாதித்து ஈடு கட்டுவேன்!
அதே ஹோட்டலின் வேறொரு அறையிலிருந்து பில்ஸன் நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்..
அதோ போகிறான் மின்னல் வீரன்.. திரும்பி இங்கே வந்து சேரும் போது அவனுக்கு அதிர்ச்சி காத்துக் கொண்டிருக்கும்
அவனுடைய அறையினுள் போய் தயாராக காத்துக் கொண்டிருக்கப் போகிறேன் நான்...
தன் ஹோட்டல் அறைக்கு திரும்பிய மின்னல் வீரனுக்கு குழப்பம்.
ஆச்சரியமாக இருக்கிறதே -போகும் போது விளக்கை எரிய விட்டுச் சென்றேனே!
உண்மைதான்... நான்தான் உனக்காக அணைத்தேன்... மிஸ்டர் மின்னல் வீரன்... ம்ம்... மிஸ்டர் மிக் -எப்படி அழைக்கட்டும் நான் - நீயே சொல்!



நீயும் நானும் ஒரு பாங்க்கை கொள்ளையடிக்கப் போகிறோம். நீ சம்மதிக்காவிடில் உன் இரகசியத்தை ஊர் முழுக்க டமாரம் அடிப்பேன்!
ப்ளாக் மெயிலா! இப்போதைக்கு இவன் சொற்படி கேட்பதை தவிர வேறு வழியில்லை எனக்கு!
சரியாக நள்ளிரவுப் பொழுதில் எண்பத்தி இரண்டாவது தெரு முனையில் உள்ள ஸிடி பாங்குக்கு வெளியே நீ என்னை வந்து சந்திக்கிறாய் -அப்போ நான் புறப்படட்டுமா!
வருகிறேன்!
மணி பன்னிரண்டு அடித்த போது -
சரியாக வந்து சேர்ந்து விட்டாய்.. சபாஷ்... சரி -பாங்க்கை திற..
உன் பொல்லாத் தனம் செல்லாது என்று எச்சரிக் கிறேன்


அந்த இரும்புக் கிராதியை பெயர்த்துத் திறக்க மின்னல் வீரனைத் தவிர வேறு எவராலும் முடியாது...
என்னைப் பற்றி கவலைப்படாதே... நான் சொல்கிறதை செய்வதோடு நிறுத்திக் கொள்.
உன்னால் கூட இதில் துளை போட முடியவில்லையா.... சரி விலகு அப்பால்... இது எனக்கு கை வந்த கலை...
அந்த தாழ்ப்பாளின் சூட்சுமத்தை கண்டறிய பில்ஸனுக்கு ஒரு மணி நேரம் பிடித்தது... அதையடுத்து -
உன்னால் சுமந்து போக முடிகிற அளவுக்கு அள்ளி நகரின் விளிம்பில் நிற்கும் என் காருக்கு பறந்து கொண்டு போ...
மறுத்தால் என் இரகசியத்தை அம்பலப்படுத்தி விடுவான். கேட்பதை தவிர வேறு வழியில்லை.


அவன் சொன்ன மாதிரி அதோ நிற்கிறது கார்.. இவனை எப்படி யாவது தடுக்க வேண்டுமே -என்ன செய்யலாம்?
மின்னல் வீரன் பாங்குக்கும் காருக்குமாக பலமுறை சென்று திரும்பினான்... ஒரு முறை அவன் பாங்க் நோக்கி சென்றிருந்த வேளையில் விதி விளையாடியது..
ரெட்.. காரை நிறுத்து! பில்ஸனின் கார் ஏன் அங்கே நிற்கிறது?
ஏதோ விஷயம் இருக்க வேண்டும்
கெல்லியும், ரெட்டும் ரௌடிகள் - பில்ஸின் பரம எதிரிகள்!
தன்னந்தனியனாக எங்கேயோ கொள்ளையடித் தான் போலும்!
அடடே... கார் நிறைய கத்தை கத்தையாக நூறு டாலர் நோட்டுகள்!
அந்த தருணத்தில் பில்ஸன் அங்கே பிரசன்னமானான்..
ஓடிப் போங்கள் -அங்கிருந்து... இல்லையேல் -
ரெட்.. பயலை கவனி!



செத்தொழிந்தான்...! பணத்தை வாரி நம் வண்டியில் நிரப்புவோம் வா!
டுமீல்!
டுமீல்
ஓ.கே... பாஸ்!
மின்னல் வீரன் கடைசி முறையாக பாங்க்கிலிருந்து திரும்பிய போது கயவர்கள் ஓடிப் போயிருந்தனர்.
பில்ஸன்... யார்.. யார் உன்னை சுட்டது?
கெ.. கெல்லி... ரெ..ரெ.. ரெட்ட்!
செத்து விட்டான் -என் இரகசியம் இனி அம்பலமாகாது..! ஆனால் இவனுடைய மரணத்துக்கு நான் பழி வாங்காமல் ஓயமாட்டேன்...
இவனை கொன்று பணத்தை அபகரித்துச் சென்ற கயவர்களை தீர்த்துக் கட்டுவேன்.
கெல்லி... ரெட் எனப்படும் நபர்கள் யார்? போலீஸ் ஸ்டேஷனில் விசாரித்தால் ஒருவேளை தகவல் கிடைக்கலாம்!


மறுநாள் காலை மிக் பணிக்குச் சென்றான்.
சார்ஜண்ட்.. கெல்லி, ரெட் என்ற போக்கிரிகள் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா?
பொல்லாத ரௌடிகளாயிற்றே... அவர்கள் இருக்கிற பக்கம் கூட நீ போய்விடாதே!
உன்னைக் கண்டாலே கண்ட துண்டமாக வெட்டிப் போட்டு விடுவார்கள்.
பில்ஸனுக்கு ஏற்பட்ட கதிதான் எனக்குத் தெரியுமே!
இந்த பிரிட்டிஷ் கான்ஸ்டபிள் கெல்லியை பற்றி எல்லாம் கேட்கிறான். எனக்கொரு உபகாரம் செய்.. இவனை உன்னுடைய ரோந்துக் காரில் கூட்டிப் போ.. வம்பு தும்புகளில் மாட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்..
ஓ.கே... சார்ஜ்!
வா.. போகலாம்! உனக்கு கார் ஓட்டத் தெரியுமா... தெரியும் என்றால் காரை நீயே ஓட்டு!
டிரைவிங் டெஸ்ட் பாஸ் பண்ணி யிருக் கிறேன்!


சரி... காரை எடு... நேரே போய் வலப்பக்கம் திருப்பு!
வலப் பக்கம் தானே -ஓ.கே!
ஆனால் காரோ பின்னோக்கி நகரத் தொடங்கியது.
ஏய்.. என்ன பண்ணுகிறாய் -முன்னால் போகச் சொன்னேனே
ம்ம்... வந்து.. இங்கே கியர் - லீவர் வேறு மாதிரியாக இருக்கிறதே ஸாரி...
அங்கே உன் தொல்லை பொறுக் காமல் தான் இங்கே அனுப்பி வைத் தார்கள் போலிருக் கிறது... கடவுளே!



மேலதிகாரி யிடம் போனது விவகாரம்..
ஸார்... சின்ன விபத்து.. கார் எண் 25ம் 34ம் பழுதடைந்து விட்டன..
இரண்டு கார்கள்? எந்த சாலையில் நடந்தது இந்த மோதல்?
சாலையில் இல்லை ஸார் -காரேஜில்! மிக் வண்டியை எடுத்தான்.
காரேஜிலா... இது என்ன கேலிக் கூத்து?
ஸார்.. வந்து.. இங்கே கியர் - லீவர் அங்கே மாதிரி இல்லை -
உண்மைதான்... எல்லாவற்றையும் விளங்கிக் கொண்டேன்... வீட்டுக்குப் போய் ஓய்வெடு.. மற்ற கார்களாவது பிழைத்துப் போகட்டும்!
அறைக்குத் திரும்பிய மிக் மின்னல் வீரனுக்குரிய ஆடை அணிகலன்களை மாட்டிக் கொண்டான்.
மிக்கை இங்கே யாரும் பாராட்டத் தயாரில்லை. மின்னல் வீரனாக ஏதாவது சாதிக்க வேண்டும்.. இப்போது கெல்லியை தேடிப் போகப் போகிறேன்.


கெல்லி ஒரு தீவின் மத்தியிலிருந்த பெரிய மாளிகையில் வசித்து வந்தான்.
விளக்கு எரி கிறது... வீட்டில் தான் இருக் கிறான் போலும்!
விசிட்டர் கள் என்றாலே பிடிக்காது போலிருக் கிறது
அங்கே என்ன சப்தம்?
மறு வினாடி -
கெல்லி யின் மெய்க் காப்பாளர் களோ?



கர்ர்ர்.. உர்ர்ர்!
சண்டை போட வந்தீர் களா என்ன...? வாருங் களேன் -ஒரு கை பார்த்து விடலாம்
மாளிகை யின் உள்ளே -
ஹே... பாஸ் -மைதானத்தில் எவனோ இருக்கிறான்... சிங்கங்களிடம் மாட்டிக் கொண்டு!
போர்டை அவன் படிக்க வில்லையோ? இங்கே யாரும் காலடி வைக்கக் கூடாது என்று எச்சரித்து ஏகப்பட்ட போர்டு வைத்திருக் கிறோமே... சரி -அவனுடைய விதி!
மின்னல் வீரன் சிங்கங்களோடு போரிடும் காட்சியை ஜன்னலருகே நின்று ரசித்துக் கொண்டிருந்தார்கள் அவ்விரு கயவர்களும்
இந்தா... இன் னொன்று! போதுமா.. இன்னும் வேண் டுமா!
இம்முறை பயல் வகையாக மாட்டிக் கொண் டான்



தன் சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி அந்த சிங்கத்தை தலைக்கு மேல் உயர்த்தி தூக்கி எறிந்தான்ன மின்னல் வீரன்.
மடேர்!
ஐயோ.. ஆபத்து!
பாஸ்.. அந்த துப் பாக்கியை எடுங்கள் -சீக்கிரம்
கர்ர்..
சிங்கத்துக்கு நீ இரையாகி விட மாட்டாய் ரெட்... தைரியமாக இரு -உனக்கு இடம்... அங்கே ஜெயிலில் ரிசர்வ் செய்திருக்கிறேன்!
கர்ர்


சட்டென்று பாய்ந்து சிங்கத்தை திரைத் துணியில் சுருட்டி எடுத்தான் மின்னல் வீரன்.
ந..ந..நன்றி - நீ யாராக இருந் தாலும்!
என் பெயர் -மின்னல் வீரன்! எனக்கு நீ நன்றி சொல்லத் தேவையில்லை... ஏனென்று சீக்கிரமே புரிந்து கொள்வாய்.
மின்னல் வீரன் அவனை மேஜைக்கு அழைத்துப் போனான்
பில்ஸனை கொலை செய்ததை அப்படியே வாக்குமூலமாக எழுதிக் கொடு... மறுத்தால் கதவை திறந்து விட்டு விடுவேன்.. சிங்கம் வந்து உன்னை சாப்பிட்டு விடும்...
வாக்கு மூலத்தை எழுதி அவன் கையெழுத்திட்டதும் அவனை உச்சி மாடிக்கு கூட்டிச் சென்றான் மின்னல் வீரன்
அடப்பாவி... என்னைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் கெல்லி இப்படி தப்பியோடுகிறானே - படகில்!
அவனை அப்புற மாக கவனித்துக் கொள் கிறேன்.. நீ வா என்னோடு
ஹேய்ய்.. விட்டு விடாதே என்னை



மறுநாள் காலை மீண்டும் வேலைக்குப் போனான் மிக்
கெல்லி பற்றி கேட்டாயே.. இதோ போட்டிருக்கிறது -பேப்பரில்! அவன் நயாகரா நீர்வீழ்ச்சியருகே ஓய்வெடுக்க போயிருக்கிறானாம்!
ஓ.. தப்பி யோடி யவன் அங்கே போய்ச் சேர்ந்திருக் கிறானா?
சார்ஜ்... அங்கே காரேஜுக்கு வந்து பாருங்களேன்
காரேஜில் -
ரெட்!
கொலை செய்தது பற்றி வாக்கு மூலம் கூட இருக் கிறது!
இது மின்னல் வீரனின் வேலையாகத் தானிருக்கும்.. அவன் இங்கே பறந்து திரிந்ததை ஒரு சிலர் பார்த்திருக் கிறார்கள்.
அடுத்து கெல்லியை தேடிப் போகப் போகிறான் என்றும் கேள்விப் பட்டேன்!


அன்றிரவு -
கெல்வி நீ எங்கே போய் ஒளிந்து கொண்டாலும் விட மாட்டேன்!
நியூயார்க்குக்கு போன் பண்ணி லீவு சொல்ல வேண்டும்.. இல்லையேல், ஆளை காணோமே என்று தேடத் தொடங்கி விடுவார்கள்.
அதை யடுத்து -
அந்த பிரிட்டிஷ் இளைஞன் தான் போன் பண்ணுகிறான்.
இலண்டனுக்கு திரும்பப் போகிறேன் என்று நல்ல சேதி ஏதாவது சொல்கிறாரு. ?



சார்ஜண்ட் திடீரென்று முகம் மலர்ந்தார்..
என்ன இரண்டு நாள் விடுமுறை வேண்டுமா? இரண்டு நாள் என்ன ஒரு வாரம் கூட எடுத்துக் கொள்... எங்களுக்கு எந்த கஷ்டமும் இல்லை.
ஹைய்.. ஹைய்.. ஹைய்யா.. மிக் இரண்டு நாட் களுக்கு வர மாட் டான்... விட்டது தொல்லை.
சார்ஜண்ட் தன் சந்தோஷத்தை இவ்வளவு வெளிப்படையாக காட்டிக் கொண்டிருக்க வேண்டாம்..
நியூயார்க் போலீஸ் என்னை பாராட்டுகிற மாதிரி ஏதாவது செய்யத்தான் போகிறேன்.
கெல்லியின் இருப்பிடத்தை தேடிக் கண்டுபிடிக்க மின்னல் வீரன் வேஷம் ஓர் இடைஞ்சல்..
சாதாரண மனிதனாக மாறிக் கொண்டு நான் மிச் சத்தை தொடர வேண்டும்



அதன் பின்னர் -
இம் மாதிரி இடத்தில் தான் கெல்லி மாதிரி யான ஆட்கள் தங்கக் கூடும்.
அதிர்ஷ் டம் மிக்கின் பங்கில் இருந்தது.
ஹே... தம்பி.. இந்த பெட்டிகளை தூக்கி வாயேன் - பணம் தருகிறேன்.
கொண்டு போய் என் காரில் வை!
ஒரே யடியாக கனக் கின்றது... உள்ளே அப்படி என்னதான் வைத் திருப் பான்?
பெட்டியை திறப்பதில் சிரமம் இருக்கவில்லை..
பணம்..! அரை மில்லியன் டாலர்களுக்கு குறையாது! ஏர்-லைன் லேபிளும் இருக்கிறது... எங்கேயாவது தப்பியோட தீர்மானித்து விட்டானோ?


என் கிட்டேயே உளவு வேலை யா?
ஆ... அம்மா!
விமான நிலையம் போய்ச் சேர்ந்து விட்டான் என்றால் அப்புறம் உலகின் எந்த மூலைக்காவது போய்விடுவான்... அதற்கு முன் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.
காரேஜின் மறைவில் -
நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்... கடிகாரத்தில் இன்னும் பதினைந்து நிமிடங்களுக்கான சக்திதான் எஞ்கியுள்ளது...
அதோ போகிறது அவனுடைய கார்! கீழே போய் அவனுக்கு 'ஹலோ' சொல்லப் போகிறேன்!
மின்னல் வீரன்! ஐயோ... தொலைந்தேன்!


மிரண்டு போன கெல்வி காரின் மீதான கட்டுப்பாட்டை இழந்தான்.
அடப்பாவி... ஆற்றுக்குள் பாய்ந்து விட்டானே... நீரோட்டம் அவனை அருவியை நோக்கி இழுத்துப் போகுமே!
ஐ..யோ... உ..த..வி!
ளிச் சென்று உச்ச வேகத்தில் பாய்ந்த மின்னல் வீரன் கெல்வியை பற்றினான்.
நீரில் மூழ்கி நீ செத்து விட மாட்டாய்.. சட்டத்தின் பிடியில் உன்னை கொண்டு சேர்க்கப் போகிறேன்.
ஆனால் ஸூட் கேஸை மீட்க முடியாது போயிற்று.
அரை மில்லியன் டாலர்கள் பெறுமானம் உள்ள திருட்டுப் பணம் நீரில் வாரியிறைக்கப்பட்டு அடித்துச் செல்லப்பட்டது.




என்னை விட்டு விடாதே..
நான் சீக்கிரமே கரை சேராவிட்டால் நம் இருவருக்குமே ஜலசமாதிதான்... இன்றும் மூன்றே நிமிடங் களுக்குத்தான் சக்தி இருக்கிறது என் அற்புத கைக் கடிகாரத்தில்!
ஒதுக்குப் புறமாக இருந்த ஒரு பண்ணை வீட்டருகே தரையிறங்கினான் மின்னல் வீரன்.
என்னை என்ன செய்யப் போகிறாய்?
உள்ளே போ.. முதலில்! இங்கே உன்னை அடைத் வைக்கப் போகிறேன்!
கடிகாரம் மீண்டும் சக்தி பெற முழுதாக இருபத்தி நான்கு மணி நேரம் பிடிக்கும்.. அதன் பிறகே நான் மீண்டும் பறக்க இயலும்... இதற்கிடையே கெல்லிக்கு ஆகாரமும், தண்ணீரும் தேவை... எனக்கு மாற்றுடைகள்!
அந்த பண்ணை வீட்டில் நடமாட்டம் ஏதுமில்லை.
எல்லோரும் பண்ணை நிலத்திற் போய் விட்டார்கள் போலும்!


ஒரு வீட்டினுள் நுழைந்து தனக்குத் தேவையானவற்றை சேகரித்துக் கொண்டே மிக் அப்பொருட்களுக்குரிய விலைக்கு ஈடாக கரன்ஸி நோட்டுகளை அங்கே வைத்தான். ஆனால்...
நான் தப்பி யோடிப் போய்விட வேண்டும்!
ஹே.. யார் நீ? நீ அணிந்திருப்பது என் டைகளாயிற்றே
அற்புத ஆற்றல் மிக்க கைக்கடிகாரம் செயலிழந்து போன நிலையில் மிக்கும் மற்றவர்களைப் போல் ஒரு சராசரி மனிதன் தான்.
ஏய்.. ஓடாதே -நில்!
அம்மாடி... தலை என்னமாய் வலிக்கிறது! ஆனால் படத்தில் பார்க்கும் போது இது ரொம்ப சுலபமான ஸ்டண்ட்டாக தோன்றியதே!
திருடு போன என் பொருளை மீட்க நான் துப்பாக்கியை பயன்படுத்துவதில் சட்ட விரோதம் ஏதுமில்லைதான்!
தற்குள் மிக் தொலைதூரம் ஓடிப் போயிருந்தான்.
சண் ளன்.. பி விட் னே!


துரதிர்ஷ்டவசமாக தோட்டா மிக்கின் தோளில் பாய்ந்து விட்டது.
எப்படியாவது கெல்லி இருக்குமிடத்துக்கு போய்ச் சேர்ந்து விட வேண்டும்!
மிக் உள்ளே நுழைந்த போது குழப்பத்தோடு அவனை உற்றுப் பார்த்தான் கெல்லி...
ஏய்.. யார் நீ?
குழப்பமடையாதே கெல்லி... மின்னல் வீரன்தான் நான் -மாற்றுடையில் இருக்கிறேன்!
கெல்லி ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டான்.
காயமடைந்திருக்கும் நீ விரைவிலேயே நித்திரை வயப்பட்டு விடுவது நிச்சயம்... அப்போது நான் எப்படியாவது தப்பியோடிப் போய்விடுவேன்.
நடக்காது!



நேரம் செல்லச் செல்ல வலியும், அசதியும் மிக்கை வருத்தின..
இன்னும் பன்னிரண்டு மணி நேரம்தான்.. என் கைக்கடிகாரம் மீண்டும் சக்தி பெற்று விடும்.
நானும் மின்னல் வீரனாகி விடுவேன்!
ஆனால் சற்றைக் கெல்லாம் மிக் கண்ணயர்ந்து போனான்...
சொன்னேனில்லையா.. இதோ புறப்பட்டு விட்டேன்
மிக் சட்டென்று சுதாரித்துக் கொண்டு கண் விழித்த போது
கெல்லியை காணோமே!
இஞ்சினின் உறுமல் சப்தம் மிக்கை வாசல் நோக்கி விரையச் செய்தது..
பண்ணையாரின் காரை திருடிப் போகிறான் கெல்லி..



காரேஜில் ஜீப் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.
இதில் போய் அவனை விரட்டிப் பிடிப்பது சாத்தியமில்லை என்றாலும் முயன்றுதான் பார்ப்போமே
கரடு முரடான குறுக்குப் பாதையில் விரைந்தான் மிக்..
அவனை பார்வையிலிருந்து தப்ப விட்டு விடக் கூடாது.. இன்னும் இரண்டு மணி நேரம்தான்... என் கடிகாரம் மீண்டும் சக்தி பெற்று விடும். பிறகு சுலபமாக அவனை பிடித்து விடுவேன்.
சில நிமிடங்களுக்குப் பின் கெல்லி பேரதிர்ச்சிக்கு ஆளானான்.
அவன் எப்படி.... அதற்குள் இங்கே
-அதுவும் அந்த வாகனத் தில்?
ஹலோ.. கெல்லி... சொல்லிக் கொள்ளா மல் வந்து விட்டாயே
தன் காரை உச்ச நேகத்தில் விரட்டினான் கெல்லி
அவன் இனி என்னை பிடிக்கவே முடியாது..



மறுபடியும் குறுக்காக காட்டுப் பாதை வழியே பயணம் செய்து முந்திக் கொண்டு விட்டான் மிக்.
மறு படியும் மாட்டிக் கொண் டான்
அடப் பாவி... மறு படியும் எப்படி எனக்கு முன்னால் வந்தான்?
ஹே.. காட்டுப் பாதையில் என்ன வேகமாக போகிறான் பார்!
ஆனால் சற்று கழித்து -
செத்துத் தொலைக் கப் போ கிறான்.. விரட்டிப் பிடிப்போம்
ஏய்ய்.. நில்!
வேகக் கட்டுப் பாட்டை மீறினேன் என்று வழக்கு பதியப் போகிறார் களா?
மிக் தொடர்ந்து கெல்லியை துரத்த போலீஸ் மிக்கை துரத்தியது..
PULL IN
ஹே.. ஜாக் கிரதை -எங்கே போய் கொண் டிருக் கிறாய் என்று பார்!
என்ன தான் சொல் கிறார்கள்
அவர்கள் விடுத்த எச்சரிக்கை மிக்கிற்கு உறைக்கு முன் விவகாரம் கைமிஞ்சிப் போய் விட்டது.
ஆஆஆ..



அந்த பழைய கட்டிடம் உதிர்ந்து போனது..
அதிக வேகம்.. கவனக் குறைவு... தனியார் சொத்துக்கு சேதம் விளைவித்தது... -அந்த இளைஞன் மீது ஏகப்பட்ட புகார்கள் பதிய வேண்டும்!
அதாவது அவன் உள் ளிருந்து உயிர்த் தெழுந்து வந்தால்!
இன்னும் இரண்டே செகண்டுகள்தான்... என் அற்புத கைக்கடிகாரம் மீண்டும் சக்தி பெற்று விடும்.. இரண்டு... ஒன்று..
..சைபர்.. ரெடி!
மின் அதிர்வு போல் அவ னுடைய நாடி நரம்பு களில் ஒரு வித சக்தி பரவியது...
மீண்டும் அவன் மின்னல் வீரனாகி விட்டான்.
நெடுஞ்சாலை ரோந்து போலீஸாரின் விழிகள் வியப்பால் விரிந்தன.
வ்ர்ர்ர்
ஏதோ பித்த லாட்டம்! மாதிரி தோன்று கிறது...
ஹே.. எ.. என்ன அது?
ஓரிரு நிமிடங்களுக்கெல்லாம் கெல்லியை கண்டு கொண்டான் மின்னல் வீரன்.
வராதே... போ.. போய் விடு - அப்பால்!



பீதியடைந்த கெல்வி காரை தாறுமாறாக ஓட்டலானான்...
இந்த விபரீதத்திலிருந்த கெல்வியை காப்பாற்ற மின்னல் வீரனை தவிர வேறு எவராலுமே முடியாது.
ஐயோ.. பயங்கர சரிவு - விழுந்தான் என்றால் ஒரு எலும்பு கூட மிஞ்சாது!
கெல்வி நீ எங்கே போனாலும் விட மாட்டேன்!
போலீஸாரின் பார்வையில் படுமாறு உன்னை எங்கேயாவது உயரத்தில் விட்டுச் செல்லப் போகிறேன்.
மறு நாள் விடிகாலையில் -
அட.. அங்கே பாரேன்!
எப்படி அங்கே போய்ச் சேர்ந் தானே தெரிய வில்லை
ஏதோ ஒரு போர்டை வைத்துக் கொண் டிருக் கிறான்!
அடுக்கு மாளிகை கட்டிடத்தின் நாற்பத்தி எட்டாவது தளத்தின் பக்கவாட்டு சுவரில்...
என்னை எப்படி யாவது காப் பாற்றி கொண்டு போய் ஜெயிலில் போடுங் கள் - என் பெயர்.. கெல்வி!



இவனை இன்று அதிகாலையில் அரெஸ்ட் செய்தோம் - பெரிய கேடி... பெயர் - கெல்லி!
ஓ.. நோ.. கெல்லியை இங்கே கொண்டு வந்து வைப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை..
அன்று பகலில் வேலைக்குத் திரும்பினான் மிக்..
அவன்... அவன்தான் மின்னல் வீரன்!
பேச்சை திசை திருப்ப மிக் ஒரு யுக்தி செய்தான்.
ஏய்ய்.. நீ -
ஐயோ..
இந்தக் கோமாளியா மின்னல் வீரன்.. உனக்கு என்ன மறை கழன்று விட்டதா... கெல்லி?
ஆமாம்... ஆமாம்... இந்த அரைக் கிறுக்கு அசகாய மின்னல் வீரனாக இருக்கவே முடியாது.
அவ்விடத்தை விட்டு உடனே போய்விட விரும்பினான் மிக்
இன்றோடு உன் பணி இங்கே முடிகிறது மிக்.. உன்னை வேறொரிடத்திற்கு அனுப்பத் தீர்மானித் திருக்கிறோம்.
எங்களுக்கும் நிம்மதி!
முற்றும்.


சூப்பர் ரிப்போர்ட்டர் ஜானியின்
கொலைக் கடிதம்!
ஹ்ம்ம்ம்... மிக மோசமான சாப்பாடு ஜானி! சதா ஈடுபட்டுக் கிடக்கும் எனக்கு இது ஒரு மாற்றம் என்பதுதான் ஒரே ஆறுதல்!
புரபஸர் ஹெர்மிலின் - மோசமான சாப்பாட்டையே இந்தப்பிடி பிடிக்கிறீர்களே?
எப்படியிருந்த போதிலும் என்னை இந்த விருந்துக்கு அழைத்து வந்த உனக்கு நன்றி!
ஹேய்! என்னது...?



இது ஏதோ சதி வேலை!.. சீக்கிரமாக வெளியேறுங்கள் புரபஸர்!
யெஸ்! காரை விட்டு இறங்கு தாடிக்காரா!
மரியாதைக் குறைச்சலான மடையர்களை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது இளைஞனே!
துப்பாக்கி முனையில் நிற்கும் போதுமா?
ஹேய்... அ - அப்படியானால் இது வேறு விஷயம்! இப்ப நான் சொன்னதை மறந்து விடு!
இப்ப உன்னுடைய முறை, ஜானி! தந்திரம் செய்வதில் பலனில்லை! இல்லையேல் உங்கள் இருவரையும் ஒட்டு மொத்தமாகச் சுட்டு விடுவேன்!...
ஓ.கே.!


சமர்த்தன்!
உங்களுக்கெல்லாம் என்ன வேணும்?
ஆ
கும்!
ணங்!
முட்டாள் தனம் போதும், ரிப்போர்டர் ஜானி!


சிறிது நேரம் சென்ற பின் புரபஸர் ஹெர்மிலின் மாளிகையில் -
இப்போது உனக்கு திருப்தி தானே? ஸ்கால் பெல்லை எப்படித் தாக்கியுள்ளாய் என்று தெரிகிறதா? கிட்டத்தட்ட அவரது கண்ணை குருடாகும்படிச் செய்துள்ளாய்!
கண்ணைக் குருடாக்காமல் தவறிவிட்டது தப்புதான்!
இங்குள்ள வேலையாட்களை ஒரு அறையில் வைத்துப் பூட்டி விட்டேன்!
ஏதாவது தில்லு முல்லு பண்ணினால் உங்களுக்கும் அதே கதிதான்!
நான் அவனுடன் சேர்ந்த ஆளில்லை! எனக்கு ஏதாவது என்றால்... உன்னை எச்சரிக்கிறேன்!
தேங்க்யூ புரபஸர்! சரியான பச்சோந்தி நீங்கள் என்பது புரிந்து விட்டது! உங்கள் திறத்தைக் காட்டியதற்கு ரொம்ப நன்றி!
நாங்கள் இருவரும் மோர்கன் சகோதரர்கள்! உன்னுடைய தோஸ்த் - அதுதான் போலீஸ் கமிஷனர் - போர்டன், எங்களை 20 வருடம் ஜெயிலுக்கு அனுப்பி விட்டான்!
உங்கள் "சாதனைக்கு" கிடைத்த பரிசாக இருக்கும்! அதுதானே நீதி!
அட ஆண்டவனே! இந்தப் பயல்களிடம் இப்படி முரட்டுத்தனமாகப் பேசாதே, ஜானி!
உங்களைக் கடத்தி வந்து எங்கள் காரியத்தை சாதிக்கப் போகிறோம்!


அடடே... அருமையான ஆளைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள், ஜென்டில் மென்! "பணயக் கைதி மார்க்கெட்டில்" ஐயாவுக்கு ஏகப்பட்ட மவுசு! என்னைக் கடத்தி வந்ததன் மூலம் உங்களுக்கு ஏராளமான பணம் கிடைக்க -
தாடிக்கார கிழவா - வாயை மூடு! இது உன்னைப் பற்றிய விவகாரமல்ல!
அவனைப் பற்றியது!
கமிஷனரிடம் 2 கோடி டாலர் கேட்டு கடிதம் அனுப்பப் போகிறோம்... வராவிட்டால் உன்னைப் பிணமாக்கி விடுவோம்!
நீ ஒரு கிறுக்கன்! இவ்வளவு பணத்திற்கு கமிஷனர் எங்கே போவார்?
இரண்டு கோடி டாலரா? அற்பத் தொகையாச்சே!
யெஸ்!
உன்னைப் பற்றி அவர் நிஜமாகவே கவலைப்பட்டால் எப்படியும் பணத்திற்கு ஏற்பாடு செய்து விட முடியும்! ...இந்தக் கடிதத்தைப் பார்!
டியர் கமிஷனர், நாங்கள் ரிப்போர்டர் ஜானியைப் பிடித்து வைத்துள்ளோம். பழைய நோட்டுக்களாக 2 கோடி டாலர் தந்தால் அவனை உங்களிடம் ஒப்படைப்போம் இல்லையேல், ஜானிக்கு மலர் வளையம் வைக்கத் தயாராக இருங்கள். எங்களுடைய அடுத்த உத்தரவுக்காக காத்திருங்கள். விரைவில் சந்திப்போம்.
பிரான்ஸில் உள்ள அத்தனை போலீசாரும் உங்களை சுற்றி வளைக்கப் போகிறார்கள்! இந்த தடவை 200 ஆண்டுகள் கழித்துக் கூட நீங்கள் ஜெயிலில் இருந்து வெளியே வரப்போவதில்லை!
அது எங்களுடைய பிரச்சனை! இந்தா - பழிவாங்க இதுதான் சரியான....


"அவசரம் - தனிப்பார்வைக்கு" கமிஷனர் போர்டன், 228, ராஸ்பாயில், பாரீஸ் - 14.
இதை எழுத நான் மறுத்தால்...?
ஸ்கால்பெல் உன்னுடைய நண்பனிடம் தனது திறமையைக் காட்டுவான்... யோசித்து முடிவு செய்ய உனக்கு 20 நிமிடம் அவகாசம் தருகிறோம்! கமான் - உள்ளே போங்கள்!
அதைத் தொடர்ந்து -
ஜானி,.. விஞ்ஞானத்தின் பெயரால் நான்...
போராடாமல் சரணடைவது என் பாணியல்ல புரபஸர்!
அங்கே பாருங்கள்! அங்குள்ள எல்லாவற்றையும் கொண்டு உங்களால் சிறிய அளவில் வெடிகுண்டு ஒன்று தயாரிக்க முடியுமா?
மன்னிக்கணும்! எனது ஆராய்ச்சி இந்தத் திசையில் செல்லவில்லை!
அந்த முகவரியை மட்டும் எழுதிக் கொடுத்து விடு! நமக்கும் கொஞ்சம் அவகாசம் கிடைக்கும்!
அப்படியானால் அவர்கள் சொல்லும்படி செய்ய வேண்டியதுதான்!
இது பயனளிக்கும் என நினைக்கிறாயா?
ஏன் பலனளிக்காது? அவனுக்கு இதை விட்டால் வேறு வழி இல்லை! டேமி ஜன்னல் வழியாகக் கண்காணித்து வருகிறான்!



பத்து நிமிடங்களுக்குப் பின்னர்...
வெல், கொடுத்த அவகாசம் முடிந்து விட்டது! அங்கு என்ன செய்கிறீர்கள்?
உங்கள் மிரட்டல் செல்லாது! உனக்கு எழுதத் தெரிந்தால் - நீயே முகவரியை எழுதிக் கொள்!
ஓ...
பாவம்... கிழவன் நிலைமை பரிதாபம் தான்! ஸ்கால் பெல்! நீ என்ன செய்ய வேண்டும் என்பது தெரியுமல்லவா?
முதலில் சோப்பு தடவாமல்.. உன்னுடைய தாடியை சவரம் செய்யப் போகிறேன்!
ஜானி! என்னைக் காப்பாற்று! இரக்கம் காட்டு!
அவரை விடுங்கள்! நான் கவரில் முகவரியை எழுதுகிறேன்!
வெரி வெல்! முகவரி எழுதும் போது தில்லு முல்லு எதுவும் செய்ய நினைக்காதே!
கவர்! இதில் நீயே கமிஷனரின் முகவரியை எழுது! வேறு ஒருவருடைய கையெழுத்துப் போல் எழுதவும் முயற்சிக்காதே! உன்னுடைய கையெழுத்து மாதிரிகளை நாங்கள் காரிலிருந்து எடுத்து வைத்துள்ளோம்!
கவலையே வேண்டாம் - ஆட்டோ கிராப் போடுவது மாதிரி சுத்தமாகப் போட்டு விடுகிறேன்!



திருப்தியா?
எங்கே பார்ப்போம்.....
யெஸ், சரியாகவே உள்ளது! ஸ்கால்பெல் - கவருக்குள் கடிதத்தை வைத்து தெரு முனையிலுள்ள தபால் பெட்டியில் போட்டு விட்டு வா!
ஓ.கே.!
சில நிமிடங்களுக்குப் பின்னர் -
உன்னுடைய சகோதரனுக்கு கடிதத்தை உள்ளே வைத்து ஒட்டி எடுத்துச் செல்ல இவ்வளவு நேரமா?
எதையும் திருத்தமாகச் செய்ய நினைப்பவன் அவன்! அதோ - அவன் வெளியே கிளம்பி விட்டான்...
காரில் கிளம்பிவிட்டான்! நாளைக் காலை... குட் பை கமிஷனர்!!!



எ - என்ன சொல்கிறாய்?
பணம் கறப்பதற்காகத்தான் உன்னைக் கடத்தி வந்தோம் என்று நிஜமாகவே நம்பி விட்டாயா ஜானி? எல்லாமே செட்-அப்!
உன்னையும் நாங்கள் கொல்லப் போகிறோம்... ஆனால் எங்களுடைய முதலாவது இலக்கு கமிஷனர் போர்டன் தான்! 20 ஆண்டுகள் ஜெயில் தண்டனையை அவ்வளவு எளிதாக மறந்து விட முடியாது! நாங்கள் தப்பி வந்ததிலிருந்தே அவருக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது! எனவேதான் வேறு வழியைக் கையாண்டுள்ளோம்!
ஜானி - எங்கள் திட்டப்படி நீதான் அவரைக் கொல்லப் போகிறாய்! உளவாளிகள் பயன்படுத்தும் சாதனம் ஒன்று எங்களுக்குக் கிடைத்தது... விஷவாயு அடங்கிய மாத்திரை! அதைக் கவரில் போட்டு அனுப்பியுள்ளோம்... நீ உன் கைப்பட முகவரி எழுதியுள்ள அந்தக் கவரை கமிஷனர் திறந்த மறுகணம்
கொலைகாரப் பாவிகளா?
'அவசரம் தனிப்பார்வைக்கு' என்று வேறு எழுதியுள்ளாய்! வேடிக்கையாக இல்லை?
துரோகி!


ஆ
மடேர்
கண்ணாடி ஜன்னல்!
க்ராக்!
காருக்கு ஓடணும்!
டேவி! சீக்கிரம் வா! பயல் தப்பி ஓடுகிறான்!
விர்ரும்...


அந்தக் கடிதத்தைக் கைப் பற்றியாகணும்!
டூமீல் டூமீல்!
தபால் பெட்டிக்குள் அதைப் போடும் முன்பு ஸ்கால் பெல்லைப் பிடித்து விடணும்...!
ஆனால் -


கிளிக்!
ஜானி எவ்வளவோ முயன்றும் கவர் தபால் பெட்டியினுள் போவதைத் தடுக்க முடியவில்லை!
தாமதமாகி விட்டது!?!
யெஸ் ரொம்பத்தான் லேட்டாகி விட்டது, ஜானி!
ஐயோ!
ணங்!


அவனைத் தூக்கி கார் டிக்கியில் போடு! தபால்களை எடுத்துச் செல்ல சின்ன லாரி இப்ப வரும்!
சிறிது நேரத்தில் -
சீக்கிரம்! நேரமாகுது!
சரியான சமயத்தில் கிளம்பி விட்டோம்... அதோ வருகிறது தபால் லாரி!
தபால்காரர் பெட்டியைக் காலி செய்து அதில் கிடந்த தபால்களைப் பையில் திணித்தார்..
..மரணத்தை சுமந்து செல்கிறோம் என்பதை உணராமல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்...


அதன் பின்னர் மோர்கான் சகோதரர்கள் ஜானியை மாளிகைக்கு கொண்டு வந்தனர்...
இந்த அறையில் போய்க்கிடா! உன்னுடைய கிழட்டு நண்பனும் இங்குதான் இருக்கிறான்! குட் பை!
கமிஷனர் சாவு பற்றி கேள்விப்படும்வரை நீயும் வாழ்வாய்!...
அன்றைய இரவு -
அட ஆண்டவனே! எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விட்டனவே!
நான்... நமக்கு என்னதான் நடக்கப் போகிறதோ?...
மறுநாள் காலையில்...
போஸ்ட்!
தேங்க்யூ, போஸ்ட் மேன்!
அங்கிள், தபால்கள் வந்து விட்டன!
இன்னைக்கும் கிளம்ப லேட்டாகி விட்டதா? தபால் பார்ப்பதற்குள் எனக்கு காபியை தயார் செய்!


அங்கே மாளிகையில்...
தபால்கள் விநியோகிக்கப்பட்டு ஒரு மணி நேரம் ஆகியிருக்கும்... ஏதாவது தகவல் கிடைக்கிறதா என ரேடியோவைக் கவனி... ஸ்கால்பெல்...
ஓ.கே.!
அப்புறம்?!
ஒன்றுமில்லையே... அரசியல் சமாச்சாரங்கள்... வழக்கமான வானிலை அறிக்கை... ஹேய்! இதைக் கவனி!
போலீஸ் கமிஷனர் போர்டன் கோழைத்தனமானதொரு கொலை முயற்சிக்குப் பலியாகியுள்ளார். இன்று தபால் மூலம் அவருக்கு ஒரு விஷவாயு மாத்திரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் அவரது மருமகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்!
ஹா, ஹா! அந்தப் பெண்ணும் காலியாகி விடுவாள்! ஜாக்பாட்தான்!
இப்போது இவர்களுடைய முறை, கமான் டேவி!...
வெல்... முதலில் யாரிலிருந்து தொடங்குவது?
உன்னிடமிருந்து தான்!
டேமே!



எல்லாரும் கவரைப் பார்த்து நில்லுங்கள்! ஹேண்ட்ஸ் அப்!..
ஆனால்... ஆனால் நீங்கள் சாகவில்லையா? அ - அந்தக் கவர்...
விஷவாயுவை செயலிழக்கும்படிச் செய்து விட்டோம்! நிபுணர்கள் இந்த விஷயத்தில் சுறுசுறுப்பாகச் செயல்பட்டனர்! தொடர்ந்து எனக்குப் பாதுகாப்பு தேவை என்று காட்டியதற்கு ரொம்ப நன்றி மோர்கான்! நீ ஒரு மாங்காய் மடையன் என்பது எனக்கு முன்னமே தெரியும்! ஆனால் இத்தனை பெரிய மடையனாக இருப்பாய் என்று நான் நினைக்கவில்லை!
இங்கே பார்... உன்னுடைய கவரின் பின்னால் உன் பெயரையும் முகவரியையும் கூட எழுதியுள்ளாய்!...
இ - இது எப்படி?... நான் ... நான் ஒருபோதும் எழுதவில்லையே?
'மார்கன் சகோதரர்கள்' உஷார்!
நானும் புரபஸரும் செய்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை அது! இந்தக் கவரில் ஏதோ சதி உள்ளது என ஆரம்பத்திலேயே சந்தேகப்பட்டேன்...! என்னையும் புரபஸரையும் அறையினுள் போட்டு பூட்டினீர்களல்லவா? அப்போது புரபஸர் கண்ணுக்குத் தெரியாத மை ஒன்றைத் தயாரித்துக் கொடுத்தார். அதைக் கொண்டு எழுதினால் - எழுதியவை சில மணி நேரத்திற்குப் பின்தான் வெளியே தெரியும்! அதன் மூலம் உன்னுடைய பெயரையும் முகவரியையும் கவரில் எழுதி வைத்தேன்! அதன் பின்னர் கமிஷனரின் முகவரியை உன் கண்ணெதிரே எழுதியுள்ளேன்!
இருந்தாலும் - ஏதாவது அஜாக்கிரதையாக கமிஷனர் கவரை உடைத்து விடுவாரோ என்ற குழப்பத்தில்தான் கவரை போஸ்ட் பண்ணுவதை தடுக்க எண்ணிப் போராடினேன்! கமிஷனர் உஷார் பேர்வழி என்பதால் அதற்கு அவசியமில்லாது போய்விட்டது.




# கதை சொல்லும் படங்கள் - 8

S. விஜயன்


கதை தயார்; அதை எத்தனை பக்கங்களாகப் பிரித்திட வேண்டும் என்று தீர்மானித்தாகி விட்டது; பக்கத்துக்குப் பக்கம் எத்தனை கட்டங்கள் - எந்தெந்தக் கோணங்களில் இருக்க வேண்டும் என்பதும் முடிவாகி விட்டது. அடுத்தது....?

பென்சிலிங் (Penciling) வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்!

பொதுவாக அமெரிக்காவில் உருவாகும் காமிக்ஸ்களின் முதல் பக்கத்தைப் பார்த்தீர்களானால் Penciling:............, Artwork:.............., lettering:..................., Colors:....................... என்று 4 வெவ்வேறு நபர்களின் பெயர்கள் போடப்பட்டிருக்கும். அதாவது - சித்திரங்களுக்கான பென்சில் ஸ்கெட்ச் போடுவது ஒரு நபர்; அதன் மேல் கறுப்பு மை பூசுவது இன்னொரு நபர்; வசனங்களை குறிப்பிட்ட இடங்களுக்குள் எழுதுவது மூன்றாவது ஆள்; இறுதியாக வண்ணம் பூசுவது, நான்காவது ஆர்ட்டிஸ்ட்! So - படம் வரைவதைக் கூட பல்வேறு துறைகளாகப் பிரித்து அந்தந்த துறையில் Specialise செய்கிறார்கள்! இத்தகைய பணிப் பரிமாற்றம் இருப்பதால் என்னவோ - ஏராளமான காமிக்ஸை அமெரிக்கர்களால் உருவாக்க முடிகிறது. ஐரோப்பாவிலும், இதர பகுதிகளிலும் பெரும்பாலும் ஒரே நபரே சித்திரப் பணி முழுவதையும் மேற்கொள்வதால் அமெரிக்காவின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடிவதில்லை.

பென்சிலிங் ஆர்டிஸ்டின் முதல் வேலை - படம் சரியான அளவில் உள்ளதா என்று சரி பார்ப்பதே. படத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் வெள்ளை பார்டர் Uniform ஆக வருகிறதா என்று பார்த்திடுவார். அதன்பின் $1\frac{1}{2}$ மடங்கு பெரிதாக படங்களுக்கு ஸ்கெட்ச் போட ஆரம்பிப்பார்.


சுத்தமான வெள்ளை அட்டை ஒன்றை முதலில் தேர்வு செய்து கொள்ள வேண்டியது அவசியம்.




பென்சிலிங் செய்பவரும், அதற்கு கறுப்பு 'இங்க்' வைப்பவரும் ஒரே ஆசாமியாக இருக்கும் பட்சத்தில் - பென்சில் ஸ்கெட்ச் அவ்வளவு துல்லியமாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. ஆனால் 'இங்க்' வைக்கப் போவது இன்னொரு ஆர்டிஸ்ட் என்றால் பென்சிலிங் குழப்பமின்றி மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு : படம் - 1

படம் - 2



பென்சில் ஸ்கெட்ச் & இங்க் வைப்பது இரண்டுமே ஒரே ஆர்ட்டிஸ்ட் என்றால் படம் 1 ல் இருக்கும் அளவிற்கு தெளிவு போதும். ஆனால் 'இங்க்' வைக்கப் போவது வேறு ஆர்டிஸ்ட் என்றால் படம் 2ல் உள்ளது போல பென்சில் ஸ்கெட்ச் Sharp ஆக அமைந்திட வேண்டும்.

காமிக்ஸ் கதை முழுவதற்கும் பென்சில் ஸ்கெட்ச் முடிந்து விட்டவுடன் எடிட்டரின் பார்வைக்கு வரும். திருத்தங்கள் ஏதேனும் செய்திட நினைத்தால் அந்த நிலையிலேயே செய்யப்படும். அதன் பின்னர் இங்க் வைக்க அனுப்பப்படும்.

பொதுவாக இந்த artwork சங்கிலியில் பென்சிலிங் போடுபவரது பணியே பிரதானமானது. அவரது கை வண்ணமே சித்திரங்களுக்கு ஜீவ நாடி. பென்சில் ஆர்டிஸ்டிற்கு நல்ல கற்பனை வளம் மட்டுமல்லாது - நிறைய reference - புத்தகங்களும் தேவை. அமெரிக்காவிலிருக்கும் ஆர்ட்டிஸ்ட் நமது தாஜ்மகாலை வரைந்திட வேண்டுமெனில் அதற்கான மாதிரிகள் அவர் வசம் இருக்க வேண்டும். இன்றைய கம்ப்யூட்டர் உலகில் கிட்டத்தட்ட எல்லா ஆர்டிஸ்டுகளுமே தங்களுக்குத் தேவையான reference களை கம்ப்யூட்டரின் மூளையில் சேகரித்து வைத்துக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு ஆர்டிஸ்டுக்கும் ஒருவித ஸ்டைல் இருக்கும்! கார்டூன்கள் வரையும் ஆர்டிஸ்ட் - கதாபாத்திரங்களின் கோணங்கித்தனத்தை மையமாகக் கொண்டு பேக்கிரவுண்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் வரையலாம். கேப்டன் பிரின்ஸ், XIII போன்ற கதைகளை வரையும் ஆர்டிஸ்ட் ஏராளமான; நுணுக்கமான விபரங்களை படங்களில் தெரியப்படுத்தலாம். பொதுவாக 'கொச கொச' வென்று நிறைய பேக்கிரவுண்ட் இருக்கும் படங்கள் எடுபடுவதில்லை. தற்சமயம் டார்ஜான் கதைகளுக்கு படம் போடும் பிரபல ஓவியர் ஜோ க்யூபர்ட் சொல்வதைக் கேளுங்கள் :

''டார்ஜான் கதைகளை சிறுவனாக இருந்தபோது நான் பெரிதும் ரசித்ததுண்டு. அன்று ஹால் பாஸ்டர் படம் வரைந்து கொண்டிருந்தார். அந்தக் கதைகளில் என்னை மிகவும் கவர்ந்த அம்சம் என்னவென்று நான் யோசித்துப் பார்த்தேன்! தேவையற்ற விஷயங்களை நீக்கி விட்டு, கதையின் போக்கிற்கு அவசியமான கதாபாத்திரங்களை; சம்பவங்களை; மட்டும் focus - செய்யும் அந்த சித்திரப் பாணி என்னை மெய்மறக்கச் செய்திருந்தது. உடனே நானும் அதே போல் தேவையில்லாத பேக்கிரவுண்ட் நுணுக்கங்களை களைந்து விட்டு படம் போட ஆரம்பித்தேன். வாசகர்களின் கவனத்தை திசை திருப்பும் அம்சங்கள் ஏதும் இல்லாததால் அவர்களால் உன்னிப்பாக கதையில் ஈடுபட முடிகிறது''.


அடுத்த சங்கதி கதாபாத்திரங்களின் முக பாவங்களை; கோணங்கள் பற்றியது...! அடுத்த இதழில் அது பற்றி எழுதுகிறேன்.


தொடரும்

கதை நம்பர் 6

# எதிரிக்கு எதிரி... எதிரி!

புதிய எதிரிகள் யாரும் முளைக்காததால் சாகசம் நிகழ்த்தாமல் போரடித்தது ஸ்பைடருக்கு தனது ஹெலிகாரில் மேலே பறக்க எழும்பிய போது தென்பட்டதொரு அதிசயக் காட்சி—













உள்ளே ஒரே பூனை மயமா இருக்கு!
"இங்கே பூனைகள் திரிவதை வைத்துப் பார்த்தால் இது யாருடைய இடமென்று புரிகிறது!"
"கருப்புக் குமிழ்களைக் கொண்டு அவன் என்ன செய்கிறான்?"
திடீரென்று...
ம்.... குகைவாசல் அடைக்கப் பட்டிருக்கக் கூடும்! திடீரென்று இருண்டுவிட்டது!
இருளில் சில உருவங்கள் குளோரோ∴பாம்மூலம் ஸ்பைடரை மயக்கமுறச்செய்தன
'ஆள்' மயக்கம் போட்டுட்டான் ம்... லைட்டை போடு!
மறுநாள் ஸ்பைடரி-ன் பாசறையில்...
என்னாச்சு பாஸுக்கு? இன்னும்காணோம்!
அவர் சென்ற ஹெலிகார் எங்கிருக்கிறதென்று ராடாரில் பார்ப்போம்!
என்ன வாயிற்று பாஸுக்கு?



அதேநேரம் வேறோர் இடத்தில்....
பாஸ்! ஸ்பைடரின் பாசறையில் நாம் வைத்திருந்த ஒட்டுக்கேட்கும் கருவி மூலம் அவனது சகாக்கள் பேசுவது கேட்கிறது! ஆனால் அவர்கள் நம்மைப்பிடிக்க திட்டம் போடுவதாகத் தெரியவில்லை!
ANTONY BENIDICT MICHEAL 1794-
ஸ்பைடரைப் பிடித்துவைத்திருந்த ஆசாமிக்கு எதிரியான 'குரங்கு' என்பவன் உபயோகத்திலல்லாததோர் இடுகாட்டில் நிலவறையில் தனது பாசறையை அமைத்திருந்தான்–
ஆர்டினி! இதோ ராடார் திரையில் பாஸின் ஹெலிகார் தெரிகிறது! உடனே கிளம்பு! அங்கேபோவோம்!
கேட்டீங்களா பாஸ்! பூனை நம்மை முந்திவிட்டான்! அவன்தான் ஸ்பைடரை கடத்திச் சென்றிருப்பான்!
உடனே குரங்கு ஆணையிட்டான்!
..ம்! ஸ்பைடரின் சகாக்களை பின்தொடருங்க! கிளம்புங்க!
பெல்ஹாம், ஆர்டினியை பின்தொடர ஆட்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்–
பூனை, ஸ்பைடரை நமக்குத்தெரியாத இரகசிய இடத்தில்தான் அடைத்திருப்பான்!


அதோ! பாஸின் ஹெலிகார்!
குகையில் ஸ்பைடர் மயக்கம் தெளிந்து நிமிர்ந்தபோது—
ஸ்பைடர்! உன் ஆட்டம் முடிஞ்சதுபோ! நீ இப்போது இருப்பது எனது பாசறையில்!!
பாஸ் இந்தக்குகையினுள் தான் சென்றிருக்க வேண்டும்! ஆனால் ஏன் என்பது-தான் கேள்வி!
ஹலோ பாஸ்! நாங்க குரூப்-4 பேசறோம்! பெல்ஹாமும், ஆர்டினியும் ஸ்பைடரை பூனை அடைத்து வைத்திருக்கும் இடத்தை கண்டுபிடித்து-விட்டது போல தெரிகிறது!




அதேநேரம் குகையினுள்ளே பூனை, ஸ்பைடரிடம் தனது பெருமையை விவரித்துக்கொண்டிருந்தான்-







'குரங்கும்' உனக்கு எதிரிதான், என்ற போதிலும் உன்னைக் கொல்லும்பெருமை எனக்கே கிட்டப் போகிறது!
அதிர்ஷ்டசாலி தான்!
வெளியே-புரபஸரும், ஆர்டினி-யும் தரையிறங்கினர்-
புரபஸர் மேலே பாருங்க! எவ்ளோ ஹெலிகாப்டர்!!
உள்ளே.....
ஸ்பைடரை அவிழ்த்து அடுத்த அறைக்குக் கொண்டுவாங்க! அவர் முக்தி அடைய வழி காட்டுவோம்!
குரங்கு தன் ஆட்களுடன் வந்த ஹெலிகாப்டரைக்கண்ட புரபஸர் பெல்ஹாம்...
ஆர்டினி! வெளியே தலை காட்டாதே! நான் அங்கே ஒளியறேன்!
பெல்ஹாம் ஓடும்போது தரையில் தலைகாட்டிக்கொண்டிருந்த வயரில் கால் சிக்கி, வயர் அறுந்தது-
பட்
அடேய் கிழவா! கொஞ்சம் பார்த்து ஓடக்கூடாது?
ஆ!
குரங்கின் ஹெலிகாப்-டர்கள் ஒவ்வொன்-றாக தரை இறங்கின-


இந்தப்பகுதியில் எதற்காக வயர்?
வயர்ஒன்று அறுந்ததன் காரணமாக குகையில் ஸ்பைடர், பூனை இருந்தபகுதியில் மின்தடை ஏற்பட்டது! அதுவும் வேறொரு அறைக்கு ஸ்பைடரை பூனையின் ஆட்கள் கொண்டுசென்ற நேரத்தில்! விளைவு?
டம்...!
ஆ!
யப்பா..
ஸ்ட்ப்!
க்ராப்...
ஐயோ!
அ! ஆ!
ஸ்பைடரைக் கட்டிப்போடும் அளவுக்கு தைரியமா? பரிசாக குத்து சாப்பிடுங்க!
பூனையின் ஆட்கள் அனைவரும் வீழ்ந்தனர்! நிலைமை தலைகீழாகிப்போனதால் பூனை ஒரு வாளுடன் ஸ்பைடரின் பின்னால் நெருங்கினான்—
நான் சரணடைகிறேன், ஸ்பைடர்!


நான் உனக்கு முன்னால் தான் நின்று கொண்டி ருக்கிறேன்!
ஓங்கியபோது வாள் எரியாத பல்ப் மீது இடித்தது!
க்ளிங்!
பல்ப் உடைந்த சத்தம் கேட்டு ஸ்பைடர் விலக-
சக்!
இந்தா!
கும்!
குத்துவாங்கிய வேகத்தில் பூனை விளக்கு எரிந்துகொண்டிருந்- -ததோர் அறையை நோக்கி—
அது ஆயுதக்கிடங்கு! பூனை துளையிடும் கருவியை எடுக்க முயல-
ஓவ்! ஸ்பைடரின் காலடி ஓசை கேட்குது!








வெளிக்கதவைத்தகர்த்து ஸ்பைடரின் முன்னால் வந்து
நின்றான் குரங்கு!



















"வழக்கமாக சுரங்கத்திலிருந்து தங்கத்தை பிரித்து எடுக்கும் ஆலைக்கு தங்கதாதுக்களை இரண்டு நாளுக்கு ஒருமுறை ரயில் எடுத்துச்செல்லும்,பலத்த பாதுகாப்புடன்! அதை மொத்தமாக கொள்ளையடிக்க திட்டம்போட்டோம்!"





பூனை! நமக்கு இது இரண்டாவது தடவை! பாதுகாப்பு பலமாக இருக்கும்!
ஆமா பாஸ்!
போலீஸ் பக்கத்தில் இருந்தாலும் பயம் போகல!
"நாங்கள் தண்டவாளத்தில் குளறுபடி செய்திருந்தோம்!"
"இரயில் தடம்புரண்டது!"
டமால்!
"எங்களுடைய ஆட்கள் போலீஸ்-காரர்களை முறியடித்துக் கொண்டிருந்த நேரத்தில் பூனை தங்கத்துடன் தப்பிவிட்டான்!"
"அன்றுமுதல் பூனையைப் பழிவாங்க அவனைத் தேடிக் கொண்டிருந்தேன்! இப்..."
திடீரென்று ஸ்பைடர் கீழே கிடந்த துளை--யிடும் கருவியை எடுக்க முயன்றபோது-
சண்டாளா!
ஆ!
ணங்!


ஸ்பைடர் மயக்கப்போட்டதுபோல் நடித்தான்! குரங்கு, பூனையை—
அந்தத்தங்கத்தை எல்லாம் எங்கே வச்சிருக்கே? சொல்!
சொல்கிறேன்! ஆ!
பூனை குரங்கை வேறு பகுதிக்கு கூட்டிசென்றான்
அந்தப் பெட்டிகளில்-தான் இருக்கு
அதேநேரம் அங்கே ஸ்பைடர்...
எல்லாரும் குகையின் கடைசி பகுதிக்கு சென்று-விட்டனர்
குரங்கு....
சீக்கிரம்! எல்லாவற்றையும் ஹெலிகாப்டருக்கு கொண்டு வாங்க!
கொண்டுபோக நான் உதவி செய்யலாமா?
நீ மயக்கம் போடலை? சுடுங்க அவனை!
வலைத்துப்பாக்கி-யால் சுடுகிறான்! ஆ!



குரங்கும், சிலரும் தப்பிப் பிழைக்க ஓடினார்கள்...
வலைத்துப்பாக்கிமூலம் எங்கள் துப்பாக்கிகளை பிடுங்கிடறான் பாஸ்!
அங்கே ஓடும் குரங்கை பிடிக்க வேண்டும்!
ஆ!
ஸ்பைடர் குரங்கைத்தேடிச் சென்றபோது....
இப்போது பெரிய தமாஷ் நடக்கப் போகுது!
ஸ்பைடர் இந்த இருள்பகுதிக்குள் வந்ததும் பாறைகளை வீசுங்கள்! குகை இங்கே முடிவடைகிறது!
குகைக்குக் குறுக்கே சுவரை போல் வலை அமைத்தான் ஸ்பைடர்
பாஸ்! இங்கே பாருங்க! நன்றாக மாட்டிக்கொண்.....
சாதாரண வலையென்று எண்ணி வெளியே ஓட முயன்ற குரங்கின் ஆட்கள் வலையில் மோதி கீழே விழுந்தனர்!
ஆ!
ஐயே
ணங்!









ஸ்பைடர் வெளியே நின்றிருந்த தனது சகாக்களுடன் பாசறைக்கு திரும்பினான். செய்தி பரவியதும் பத்திரிகையாளர்கள் அங்கு சூழ்ந்தனர்—





பான்கேக் பள்ளத்தாக்கில் உள்ள பிரபல மதுபானக் கடை அது. இரட்டைக் கதவை தள்ளிக் கொண்டு நெடிய உருவம் ஒன்று உள்ளே புகுந்தது. இடை பெல்ட்டின் இரு பக்கமும் இருந்த ரிவால்வர்கள் எதிரி களுக்கு எமன்கள். முகத்தில் எதையோ பறி கொடுத்துவிட்ட சோகம்.. ஆனாலும் நடையில் மிடுக்கு குறையவே யில்லை.
ஜாலியைத் தேடி!
இந்தப் பகுதிக்கு நீ வந்த நோக்கம் என்னவோ?
ஒரு கணக்கை நேர் செய்ய வேண்டி யிருக்கு!
தம்பி... இந்த பித்தானை இதற்கு முன் எங்காவது பார்த்த மாதிரி ஞாபகமிருக்கா!


ஆமா.. இது என்னோடது தான் - அறுந்து விழுந்திட்டுது போலிருக்கு
போன வருஷம் என்னோட குதிரை காணாமல் போன இடத்திலே இதை கண் டெடுத்தேன்.. அந்த திருட்டு ராஸ்கேல் அதன் மேலே ஏறி அமர முயற்சிக்கும்போது பட்டன் அறுந்து விழுந்திருக்கணும்.. புரியுதா உனக்கு - நான் ஏன் இவ்ளோ தூரம் கஷ்டப்பட்டு வந்திருக்கேன்னு?
இந்த நெல்ஸன் எப்போதுமே யோக்கியமானவன் கிறதை நீ புரிஞ்சுக்கணும்... இப்பிடி அபாண்டமா பழி சுமத்தின உன்னை -
டுமீல்
பாக்கட் ரிவால்வரை அங்கே நீ ஒளிச்சு வச்சிருக் கிறதை புரிஞ்சுக்க முடியாத மடையன்னு என்னை நெனைச்சியா?
என்னோட குதிரை எங்கே?
சொல்லுடா..! இல்லேன்னு குடலை உரு விப்புடுவேன்!


என்னை வுடு.. நான் உன் குதிரையை திருடவே யில்லை.இந்த பாண்ட்டை நேத்து ராத்திரி பேபி ஃபேஸ்கிட்டேர்ந்து போக்கர் ஆட்டத்திலே ஜெயிச்சேன்!
அப்படியா..! நீ சொல்றது நெஜமா இல் லையான்னு இப்பவே போய் பார்த் திடறேன்!
ஹலோ.. தாத்தா? பேபி ஃபேஸை எங்கே பார்க் கலாம் - அவன்கிட்டே நான் கொஞ்சம் தனியா பேசணும்!
டக்
இப்படி திரும்பிப் பார்..! நீ தேடற பேபி நான்தான் - என்ன விஷயமா தேடி வந்திருக்கே.. சொல்லு?
என் எதிரே நின்னு பேசற யாரும் தொப்பியை
தலை யிலேர்ந்து எடுத்திடணும் - அதான் மரியாதை!


என்னை சிகரட்டை முழுங்க வச்சிட்டேல்ல.. 25 சென்ட் சிகரட் போச்சேடா.. தீயோட விளையாடறதை இத்தோட விட்டேன்னு நீ கதறணும்.. இப்போ பாரு.. உன்னை என்ன செய்யறேன்னு!


புழுதி.. தாங்கலை.. மூஞ்சியை மூடிக்கோங்க!
அறிவு கெட்டதனமா பேஷி பேஸ் மேலே கையை வச்சுட்டானே இந்த ஆசாமி.. திருப்பி துவட்டி எடுக்கப் போறான்!
ஒரு எலும்பு கூட மிஞ்சப் போறதில்லை!
சும்மா சொல்லக் கூடாது.. பயலுக்கு 'தில்' இருக்கு!
இதையே அவனோட சமாதியிலே எழுதி வச்சிடலாம்!
இப்போ.. சொல்லு என் குதிரை எங்கே?
வாயைத் திற.. இல்லேன்னு என் ரிவால் வார்தான் பேசும்!
உன்னோட குதிரையை நான் திருடலை.. என் அப்பன் மேலே சத்தியம்.. இந்த பாண்ட்டை தங்கப் புதையல் தேடற ராக் கிட்டேர்ந்து ஒரு பாட்டில் விஸ்கியை கொடுத்து வாங்கினேன். நான் சொல்றதை நம்பு!
ணங்!


எச்சரிக்கை! உயிரின் மீது ஆசை உள்ள எவரும் அத்து மீறி இதைத் தாண்டி வரக் கூடாது.. - ராக்
ஆளைக் காணோமே! காத்திருக்க வேண்டியது தான்
டாய்ய்ய்... அப்படியே நில்! கைகளை தூக்கு.. இல்லேன்னு என்னோட வின்செஸ்டர் பேசும்..! என்னோட தொழில்லே தோட்டாவுக்குத்தான் முதலிடம்.. கேள்விகள் லாம் அப்புறம்தான்.
உன் இஷ்ட தேவதையை வேண்டிக் கோ..
அ..அ.. அ..க்..க்..



அ..க்..
குகுகு..!
மடேர்
தமாஷ் போறும் தாத்தா..! என்னோட குதிரையை எங்கே ஒளிச்சு வச்சிருக்கே..! போன வருஷம் அதை திருடினப்போ நீ போட்டிருந்த பாண்ட் இதோ இருக்கு பாரு!
தப்பா சொல்றேப்பா! ஆறு மாசத்துக்கு முன்னாடி சவப் பெட்டி செய்யற 'வான் பைர்ஸ்' கடை லேர்ந்து நான் வாங்கின டிரஸ் இது!
உங்களுக்கு என்ன வேணும்? ஓக் மரத்தால் செய்யப்பட்ட உறுதியான பெட்டியா.. இல்லே மலிவான விலையிலே போறுமா?
இந்த பாண்ட்டை அடையாளம் தெரியுதா உனக்கு?


ஓ.. இது பாய்ஸன் பீட்ட ரோட தாச்சே! அவனை பொதைக்கிற அன்னிக்கு இதை அவன் கிட்டேர்ந்து விலை கொடுத்து நான் வாங்கினேன்..
பொதைச் சாச்சா அவனை?
ஆமா..! லைசென்ஸ் இல்லாம குதிரையை வெட்டி கூறு வச்சிட்டான்.. விடுவாங்களா? தூக்கிலே போட்டுட்டாங்க!
ஏன்.. என்ன ஆச்சு உனக்கு திடீர்னு?
!
ஆண்டவன் காப்பாற் றினார்.. அத்தனையும் வெறும் கனவுதான்!
கொர்ர்
???
முற்றும்



விரைவில் வருகிறது!
சூப்பர் கௌ-பாயின் முழு நீள சாகஸம்
டெக்ஸ் வில்லர் தோன்றும்
"மரண தூதன்!"
விலை ரூ. 10/-
லயன் காமிக்ஸ்
லக்கி லூக் தோன்றும்
முழு வண்ண ஸ்பெஷல்
மேடையில் ஒரு மன்மதன்!
ரூ. 6/-

# மாதம் ஒரு ஹீரோ



| | | |
|---|---|---|
| பெயர் | : | ஸ்பைடர் வயது : சத்தியமாய் தெரியாது. |
| கல்வித் தகுதி | : | "மாமேதை" என்பதோடு விட்டு விடலாமே! (சிலந்திக்கு ஏது பள்ளிக்கூடம் ?) |
| தொழில் | : | முன்பு குற்றம்; இப்போது ரொம்ப சுத்தம் |
| பொழுது போக்குகள் | : | அன்றும், இன்றும் – விசித்திர வில்லன்களோடு மோதுவது! |
| விரும்புவது | : | விதம் விதமான எதிரிகளை! |
| விரும்பாதது | : | சவால் இல்லாத வாழ்க்கை! |
| நம்புவது | : | வலைத் துப்பாக்கி; ஹெலி-கார்; பெல்ஹாம் |
| நம்பாதது | : | ஆர்டினி! |
| மற்ற.பெயர்கள் | ; | "குற்றச் சக்கரவர்த்தி," "குரங்கு மூஞ்சி" |
| சாதனை | : | வில்லனை அறிமுகமாகியும் வாசகர்களைக் கொள்ளை கொண்டது! |
| நீண்ட கால சாதனை | : | அட்டைப்படத்தில் ஸ்பைடர் இருந்தால் இதழ் நிச்சயம் விற்றுப் போகும் என்ற நம்பிக்கை! |

## லயன் காமிக்ஸில் ஸ்பைடர்

(துக்கடா கதைகள் நீங்கலாக)

1) எத்தனுக்கு எத்தன், 2) டாக்டர் டக்கர், 3) பாதாளப் போராட்டம், 4) கொலைப் படை, 5) கடத்தல் குமிழிகள், 6) பழி வாங்கும் பொம்மை, 7) சைத்தான் விஞ்ஞானி, 8) யார் அந்த மினி-ஸ்பைடர்?, 9) சதுரங்க வெறியன், 10) குற்றத் தொழிற்சாலை (கோடை மலர் '86), 11) நீதிக் காவலன் ஸ்பைடர், 12) தவளை எதிரி (தீபாவளி மலர் '86), 13) மரண மாஸ்டர், 14) கல் நெஞ்சன், 15) விசித்திர சவால் (லயன் சூப்பர் ஸ்பெஷல் '87), 16) இராட்சஸக் குள்ளன், 17) சூப்பர் ஸ்டார் ஸ்பைடர் (சிறு நாவல்), 18) சிறு பிள்ளை விளையாட்டு, 19) மிஸ்டர் மர்மம், 20) மரண ராகம், 21) மீண்டும் ஸ்பைடர், 22) பாட்டில் பூதம், 23) பனிப் பிரபு (லயன் சென்சுவரி ஸ்பெஷல்)


## க்ரைம் க்விஸ் 19 & 20

இந்த இதழில் வெளிவந்திருக்கும் க்ரைம் க்விஸ் 19 & 20 க்குப் பதில் அனுப்பும் போது இந்தக் கூப்பன்களைக் கட்டாயம் ஒட்டி அனுப்ப வேண்டும்! கூப்பன்கள் இல்லாத விடைகள் போட்டியில் சேர்க்க இயலாது. விடைகளைப் போஸ்ட் -கார்டில் மட்டுமே எழுதுதல் வேண்டும்!

**க்ரைம் க்விஸ் (19)**
C/o. *பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,*
*தபால் பெட்டி எண் 374,*
*சிவகாசி - 626 123.*

**க்ரைம் க்விஸ் (20)**
C/o. *பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,*
*தபால் பெட்டி எண் 374,*
*சிவகாசி - 626 123.*

**விடை அனுப்பக் கடைசித் தேதி : 30-5-95**



# நியூயார்க்கில் பார்னே!

## கேப்டன் பிரின்ஸ் குழு சாகசம்

டிசம்பர் கடைசி வாரத்தில் ஒரு நாள் • வெளிர் மஞ்சள் நிற வான பின்னணியில், உள்ளார் பரபரப்பான இயக்கத்தை வெளிக்காட்டி கொள்ளாமல் இளம் காற்றின் வருடலில் மன மயக்கம் கொண்டது போல் அமைதிக் கோலம் பூண்டு அழகுற காட்சியளித்த மன்ஹாட்டன் பகுதியை நெருங்கிக் கொண்டிருந்தது 'கழுகு'...





நியூயார்க்...! அடேங்கப்பா...! என் கனவிலே வந்ததைவிட படு ஜோரா இருக்கு!
வெளித் தோற்றத்தைப் பார்த்தே இப்படி வாயை பிளந்தா எப்படி.... உள்ளாற போய்ப் பார் - அசந்து போயிடுவே... படு அட்டகாசமா இருக்கும்!
பசங்களா... துறைமுகத்திலேர்ந்து செய் வந்திருக்கு - திடீர் அதிர்ஷ்டமா நமக் 'பிரமோஷன்' கெடைச்சிருக்கு!
நம்மது மாதிரி சின்ன கப்பல்களுக்கான துறையிலே மராமத்துப் பணி நடக்குதாம்... அதனாலே சர்வதேச கப்பல்களுக்கான துறைக்கு நம்மை வரச் சொல்லியிருக்காங்க!
பிரெஞ்சு கப்பல் ஏதாவது இருந்தா அதுக்கு பக்கத்திலே இடம் ஒதுக்கச் சொல்லு.. பேச்சுத்துணைக்கு ஆள் கெடைக்கும்
இல்லை... ஏற்கனவே நமக்கான இடம் ஒதுக்கப்பட்டு விட்டது... S.S. "க்ராம்கஸ்டாவ்"ங்கிற போஸ்லாவியன் கப்பல்தான் நமக்கு 'அண்டை வீட்டுக்காரங்க!'
ரொம்ப வசதியா போயிட்டுது! அவங்களை எனக்குத் தெரியும்... உயர்ரக மது தயாரிக்கிற கம்பெனி அது...
உன் குடிகார புத்தி உன்னை விட்டு போகலை பார்த்தியா... வேலை நெறைய இருக்கு...சரக்கை இறக்கி அனுப்பிக்கிற வரை பாட்டில்லே கையை வச்சே... தெரியும் சேதி!
பாட்டி மேலே ஆணை... வேலை முடியற வரை சத்தியமா பாட்டிலை தொடமாட்டேன்!
பயலே... படு குஷியா இருக்காப்பலே தோணுது!
பின்னே இருக்காதா! போரடிச்ச பயணம் முடிஞ்சுட்டுது.. இனி ஜாலியா ஊர் சுத்திப் பார்க்கலாமில்லே!


டிசம்பர் இல்லியா... ஏகமாத்தான் குளிருது... ஸ்வெட்டரை மாட்டிக்காம வெளியே போகவே முடியாது போலிருக்கே!
வேகத்தை குறைக்கறச்சே எஞ்சின் கரமுரான்னு புலம்புதே - கேட்டியா? அதை என்னன்னு பார்த்தா தேவலை!
...ஆனா நிதி நிலைமை சரியில்லைல... ஒண்ணு - தர்ம சிந்தனையுள்ள மெக்கானிக் எவனாவது கிடைக்கணும் இல்லேன்னு... அட்லான்ஸை தாராளமா வாரி விடற எதனாச்சும் சிக்கணும்... காரியம்
ஏகப்பட்ட ரிப்பேர் வேலை இருக்கு... கம்ப்ளீட்டா செக் பண்ணி சரி பண்ணியாகணும்!
அமெரிக்காவிலே எப்போ, என்ன அற்புதம் நடக்கும்னே சொல்ல முடியாதும்பாங்க... நமக்கும் ஏதாவது வழி பிறக்காமலா போயிடும்... நீ சொன்ன 87ம் நம்பர் ஷெட் இதோ வந்தாச்சு...
கழுகு
போடறேன்... பிடிச்சுக்கோ -
வாகா



மெள்ள பின்னுக்கு போம்மா... ஆங்... கட்டிட்டானுக...
செக் பண்ணிடறது நல்லது... என்ஜினை முடுக்கி இழுத்துப்பார்த்திடலாம்...
ஊவ்வ்... கழண்டுக்கிட்டுதே!
எவன்டா உங்களுக்கு இங்கே வேலை கொடுத்தது... பேசாம கருமாதி பண்ண போங்கடா... போக்கத்த பயல்களா...
இதைக்கூட சரி பண்ணத் தெரியலை ஏண்டா எங்க உயி வாங்கறீங்க?
இந்த மாதிரி சின்ன படகுகளை கையாண்டு பழக்கமில்லை எங்களுக்கு... அதான்
ஹூங்... என்ன சொன்னே - சின்னப் படகா..! இதுவா - சரி.. சரி... மறுபடியும் போடறேன்... கொஞ்சம் சமர்த்தா காரியம் பண்ணுங்க!
யார்ரா அவனுக... பக்கத்து கப்பல்லேர்ந்து என்னை முறைப்பா பார்த்து சிரிக்கிறது...
லெப்டினெண்ட்! இந்த அதிசயத்தை கவனிச்சியா?
நம்பவே முடியாத அதிசயம்... உள்ளே போ சொல்லுவோம் இந்த ஆளை வுட்டடக் கூடா
துறைமுகத்துக்கான வரியை முதல்லே செலுத்திட்டு நானும் ஜின்னும் அப்படியே ஹெல்த் சர்வீஸுக்கு போயிட்டு வந்திடறோம்.. கஸ்டம்ஸ் விவகாரத்தை கவனிக்க நீ இங்கேயே இரு... பார்னே!
ஆமாமா.. வந்து என்னோட அழகு சாதன பெட்டியை எல்லாம் குடையோ குடைன்னு குடைவானுக - ஏதாவது 'செடி'யை கடத்திக்கிட்டு வந்திருக்கிறோமான்னு தெரிஞ்சுக்க!
உன்னோட வாக்ஸினேஷன் சர்டிபிகேட்டை எடுத்துக்கிட்டியா?
அந்த மஞ்சள் அட்டைதானே... ஓ.. அ வாங்கறதுக்குள்ளே பெரு பேஜாராயிடுச்சி!


நாம் போக வேண்டிய இடம் ரொம்ப ட்டத்திலேதான் இருக்குங்கிறது ஆறுதலான சங்கதி
ஹே.. உங்களைத்தான்!
ஹே... கப்பல் துறையிலிருந்து வருகிறீர்களா...? "க்ராப் கஸ்டோப்" கப்பல் ஆசாமிங்கதானே நீங்க?
அந்த அமெரிக்கர்களை பத்தி கேட்கிறாங்களோ?
'ஸண்டே க்ளாரியன்' பத்திரிக்கை நிருபர்கள் நாங்க.. என் பேரு ஆஸ்வால்டு ஆடம்ஸ்... இவன் - நிக் இர்விங்
என்ன விஷயம்?
நீங்க நினைக்கிற மாதிரி 'க்ராப் கஸ்டோப்' ஆசாமிகள் இல்லை நாங்க... எங்க கப்பல் அதுக்கு பக்கத்திலே நிக்குது!
ஹே...! பரவாயில்லை...! உங்களை ஒண்ணு கேட்கட்டுமா..? அந்த "க்ராப் கஸ்டோப்' கப்பல்லே பரட்டை தாடியோட ஒரு ஆசாமி கண்ணில் பட்டாரா..? தோற்றம் கரடி மாதிரி இருக்கும்... எப்ப பார்த்தாலும் சிகரட்டை ஊதிக்கிட்டு...
கரடி..? பரட்டைத் தாடியோட..! எங்ககிட்டே கூட அப்படி ஒரு ஐந்து இருக்கு... ஆனா -
நீங்க சொல்ற மாதிரியான ஆசாமி அந்த கப்பல்லே இருக்காரா இல்லியான்னு எங்களுக்குத் தெரியாது... நாம உண்டு நம்ம காரியம் உண்டுன்னு இருக்கிறவங்க நாங்க
மன்னிக்கணும்.. அவசரமா போயிட்டிருக்கோம்.. குட்பை!
இவனுக சொல்ற அடையாளம் பார்னே மாதிரி தோணுதில்லே?
என்ன இழவு வம்போ... பார்னே மாட்டிக்கப் போறான்னு தோணுது!



கழுகில் கஸ்டம்ஸ் சோதனை எவ்வித வில்லங்கமும் இல்லாமல் செவ்வனே நடந்தேறியது.
கனடியன் கம்பளிகள்.. பதனிடப்படாத தோல் எல்லாமே முறைப்படி சுத்தம் செய்யப்பட்டவை... ஸார்..
எல்லாமே ஓ.கே... மிஸ்டர் பார்னே... சரக்கு பற்றி அக்கறைபட வேண்டியது, உங்க வாடிக்கையாளரோட பிரச்னை...
நியூயார்க்கில் உங்களுடைய நாட்கள் நல்லபடியாக கழிய வாழ்த்துக் கூறி விடை பெறுகிறேன்.
போயிட்டு வாங்க ஸார்.. நன்றி..
ஓ.. ஸாரி!
மன்னிக்கணும்!
க்ராம் கஸ்டோவின் கமாண்டர் காப்டன் கௌண்ட் ருடால்ஃப் ஹால்பக் உங்கள் கப்பலுக்குள்ளே வர அனுமதி கோருகிறே கமாண்டர்..!
?
ரொம்ப உபசாரமா பேசறீங்க... ஆனா நான் கமாண்டர் இல்லே - அஸிஸ்டண்ட்...! பேரு பார்னே! உங்களுக்கு என்ன ஒத்தாசை வேணும்னாலும் செய்யக் காத்திருக்கேன்.. உங்க வீடு மாதிரி நெனைச்சுக்கிட்டு உள்ளே வாங்க.
அதிசயம்! நெருக்கத்திலே பார்க்கையிலே பொருத்தம் கூடுதலா தெரியுது!
கமா..ம்ம்.. லெப்டினெண்ட்பார்னே... நாங்க வந்திருக்கிற விஷயம் பரம இரகசியமா இருக்கட்டும்.. உங்ககிட்டே ரொம்ப ரொம்ப முக்கியமான ஒரு உதவியை நாடி வந்திருக்கோ
என்கிட்டேயா?


அதிசயமான ஒற்றுமை லெப்டினெண்ட் பார்னே... கேட்டீங்கன்னா நீங்க கூட நம்ப மாட்டீங்க... விபரமா சொல்றோம்... ஆனா துக்கு முன்னாடி தற்செயலா பார்க்கிற மாதிரி பின்னாடி கொஞ்சம் திரும்பி பாருங்க...
அப்படி அங்கே என்னதான் இருக்கு?
ஙே...! நி..நி.. நிஜம்தானு -
பணத்தை கட்டி இரசீது வாங்கியாச்சு... கயிலேர்ந்த பணம் மொத்தமும் இதுக்கு சரியா போயிட்டுது... டாக்ஸிக்கு கொடுக்கத்தான் சில்லறை மீந்திருக்கு... இதுவும் இல்லாட்டி கஷ்டமாயிட்டிருக்கும்!
வுனுக்குள்ளாற போறமா?
ஆமா!.. நாம கழுகிலே ஏத்தி கொண்டாந்திருக்கிற சரக்குக்கு பார்ட்டிகிட்டேர்ந்து பணம் வகுலிக்கணும்... ஹே - டாக்ஸி!
மாக்ஸ்வெல் அண்ட் ாம்ப்ஸன்... ஏற்றுமதி - றக்குமதி 42வது தெரு.. இடம் வந்ததும் நானே சொல்றேன்
சரி.. ஸார்!
நம்மோட பார்ட்டிகள்லாம் அங்கே பிளாட் பாரத்துக்கே வந்து காத்துக் கிட்டிருக்கிறதுதானே வழக்கம்.
நாம் ஒரு நாள் முன்கூட்டியே வந்து சேர்ந்திட்டோம் - அதனால் தானிருக்கும்!
செக்தான் கெடைக்கும்... பாங்க் மூட நேரமிருக்கு... எல்லாம் நல்லபடியா நடந்து முடிஞ்சா பணத்தோட கப்பலுக்குப் போய் பார்னேயையும் அழைச்சுக்கிட்டு பிரபல ஹோட்டல்லே நல்லா ஒரு பிடி பிடிக்கலாம் - ராத்திரிக்கு! நாளைய பிரச்சனைகளைப் பத்தி நாளைக்கு விசாரப்பட்டுக்கலாம்!


இந்த ஏரியாதானே - அதோ ... போர்டிலே போட்டிருக்கு!
இங்கேதான்... ராத்திரி பகல்னு வித்தியாசமில்லாம இருபத்தி நாலுமணி நேரமும் சுறுசுறுப்பா இயங்குகிற அதிசய உலகம் இந்த இடம்
BO
REGA
NO
டிரைவர்... அதோ அந்த இடம்தான் - ஓரமா கொண்டு போய் நிறுத்து
அங்கே ஏதோ வேடிக்கை நடக்குது...
பார்வையை அலையவிடாதே - வா... வந்து வேலையை கவனிப்போம்!
மிஸ்டர் மாக்ஸ்வெல்?
மிஸ்டர் மாக்ஸ்வெல்... என்ன இது - என்னால் புரிஞ்சுக்கவே முடியலை!
[redacted] அப்பால்!
ஸாரி [redacted] ரின்ஸ்!
இவர் என்னோட வாடிக்கையாளர்... வடக்கேயிருந்து இவருக்காக சரக்கை ஏத்தி வந்திருக்கேன் - டெலிவரியானதும் பணம் கிடைக்கும்கிற ஒப்பந்தத்தின் பேரிலே!
த்சொ.. பாவம்..! பிரெஞ்ச்சா?


உன்னோட அனுதாபம் இங்கே யாருக்கு வேணும்... அவருக்கு பதிலா நீ பணம் _ ருவியா... ஹும்... என்ன ஒரு உலகமடா இது..
ஹார்லி... இவங்களுக்கு விஷயத்தை சொல்லி அனுப்பு.. சீக்கிரம்
மாக்ஸ்வெல் அண்ட் தாம்ப்ஸன் கம்பெனி அவ்வளவுதான்... ஏகப்பட்ட மோசடி.... அத்தனையும் ஊழல்... பட்டியல் போட்டு மாளாது.. இனி நீ இவங்களை பார்க்கணும்னு வருஷக் கணக்கா காத்திட்டிருக்கணும்...
புரியுதா?
நேரமாயிட்டுது.. நான் ங்கே போய் இனிமேல் ரு புது வாடிக்கையாளரை தேடிப் பிடிக்கிறது?
நீ பேசறது வேடிக்கையா இருக்குது...
சரக்குக்கு கிரயம் கொடுக்கப்படாத போதிலும் உரிமை மிஸ்டர் மாக்ஸ்வெல் பேர்லேதான் இருக்கு... இவரோட கணக்கு வழக்குங்களை மொத்தமா புலன் விசாரணை நடத்தி தீருகிற வரைக்கும் இந்த சரக்குகளையும் நாங்க முடக்கிப்போட வேண்டிய கட்டாயத்திலே இருக்கோம்!
நே..!
ஆனா... எங்க கிட்டே இப்போ சல்லிக்காசு கூட இல்லை! ரொம்ப நாளாகுமோ?
யாருக்குத் தெரியும்? இரண்டு மூணு வாரம் ஆகலாம்! நியூயார்க்கிலே பொழுதை ஜாலியா கழிச்சுக்கிட்டு காத்திருங்க... அவ்வளவுதான்!
வுளே.. இது என்ன சோதனை? என் ழ்க்கையிலே இவ்வளவு மோசமா நான் ப்போதுமே நொந்து போனதில்லை.
கவலைப்படாதீங்க ஸார். கப்பல்லே உணவுப் பொருட்கள் மிச்சமிருக்கு... அது தீருவதற்குள் ஏதாவது நல்லது நடக்காமலா போயிடும்!
அங்கே - ''நல்லது'' நடந்து கொண்டிருந்தது...
நீங்க போகலாம்... ஆயிரம் டாலர்னாலும் நான் சம்மதிக்க மாட்டேன்... ஏழைன்னாலும் யோக்கியமானவன்னு பேர் வாங்கினவன்... வேற யாரையாவது போய் பாருங்க.. இங்கே 'கழுகிலே' உங்க பணம் யாருக்கும் தேவைப்படலை!


மிஸ்டர் பார்னே... நீங்க விஷயத்தை சரியா புரிஞ்சுக்கலைன்னு தோணுது... நான் கெர்ஸ்டன்... அந்தரங்க செயலாளர்...
ஜீலியஸ் சீஸராவோ, நெப்போலியனாவோ நீ இருந்தாலும் என் முடிவை மாத்திக்கப் போறதிலலை!
இவரை ஏன் இப்படி வற்புறுத்திறீங்க..? உங்க யோசனை சரியா படலை... அப்படியொன்னும் இவர் என்னை மாதிரியே இல்லை... தோற்றம் மேலோட்டமா ஒதுப் போகுது - அவ்ளோதான்
ம்ம்... இது நியாயமான பேச்சு!
நான் எங்கே.. இந்த ஆள் எங்கே - காட்டுமிராண்டி மாதிரி இருக்கார்!
என்ன சொன்னே?
என்ன ஒரு நெஞ்சழுத்தம் இருந்தா எங்க கப்பலுக்கே வந்து என்னைப் பற்றி இப்படி பழிச்சுப் பேசுவே?
ஏய்.. மரியாதையா.. விடு - என்னை!
வாங்க போகலாம்... இனியும் நமக்கு என்ன வேலை - இங்கே
அருமையான வாய்ப்பு - அநியாயமா கெட்டுப் போயிட்டுது
?
ஜாக்கிரதை! போய் ஒளிஞ்சுக்கோங்க...!


அதோ... பிளாட்பாரத்திலே வந்திக்கிட்டிருக்கிற ரெண்டு ஆசாமிகளும் பத்திரிக்கை நிருபர்கள்... ''க்ராம் கஸ்டோவ்'லே ஏறப் போறாங்கன்ன நெனைக்கிறேன்.
கடவுளே! இந்த பக்கமால்லே வர்றாங்க!
ஸ்மைல் ப்ளீஸ்!
அப்பாடா... உங்களை எங்கெல்லாம் தேடுறது ஸார்... கடவுள் ஒருவழியா கருணை காட்டிட்டார்..!
''ஸண்டே க்ளாரியன்'' பத்திரிக்கை நிருபர்கள். நாங்க... ஆஸ்வால்ட் ஆடம்ஸ்... நிக் இர்வின்... இங்கே பரபரப்பா விற்பனையாகிற பத்திரிக்கை எங்களோடது! எங்களுக்கு ஒரு பிரத்யேக பேட்டி தரணும் நீங்க... தயவு பண்ணுங்க!
ஸ்மைல் ப்ளீஸ்!
நீங்கன்னு நெனைச்சு அந்த ஆசாமிகிட்டே பேசறாங்க.. நாம உடனே தலையிட்டு நெலைமையை விளக்கியாகணும்
பொறு..! என்னதான் நடக்குது.. பார்ப்போம்!
ஸாருக்கு அப்பப்போ எளிமையா இருக்கப் பிடிக்கும் போலிருக்கு... அடடா.. என்ன ஒரு எளிமை... பழைய்ய, நைந்து போன உடைகள்... பார்க்க ஒரு மாதிரியாக இருந்தாலும் போட்டுக்க சொகமாத்தான் இருக்கும்... இல்லியா ஸார்!
கொஞ்சம் சிரிங்க.. ப்ளீஸ்
போஸ்லாவியாவின் கம்பெனி வேலைப்பாடு பற்றி உரை நிகழ்த்த இங்கே வந்திருக்கீங்க.. அப்படித்தான் எங்களுக்குத் தகவல்... சரிதானே ஸார்?
அஹ்!


'க்ளாரியன்' நிருபர்கள் நாங்க... எங்களை யாரும் ஏமாத்தவே முடியாது... உண்மையிலேயே நீங்க பெட்ரோல் சம்பந்தமா இரகசிய உடன்படிக்கை செய்துக்கத்தான் வந்திருக்கீங்க அப்படீங்கிற இரகசியம் எங்களுக்குத் தெரியும் ஸார்... எங்கே.. எப்போன்னு சொல்லுங்க... ப்ளீஸ்
எல்லாமே உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு... அப்புறம் என்ன? சரி - இதையெல்லாம் யார் உங்களுக்குச் சொன்னது?
ஹா..ஹா..ஹா.. அதெல்லாம் தொழில் இரகசியம் ஸார்! நாங்க சொன்னதை நீங்க மறுக்கலை... அதுதான் எங்களுக்கு வேணும்!
அந்த கோமாளி மாலுமி காரியத்தை ரசாபாசம் பண்ணிக்கிட்டிருக்கான்... காரியம் கைமிஞ்சிப் போறதுக்குள்ளே தடுத்தாகணும்...
எனக்கும் அதே எண்ணம்தான் - வா.. அங்கே போகலாம்!
யாரோ ஏதோ சொன்னதை அரைகுறையா கேட்டுக்கிட்டு வந்து இங்கே உளறிக் கொட்டுறீங்கன்னு நெனைக்கிறேன்... சரி விஷயத்துக்கு வருவோம்.. இப்போ நீங்க இங்கேர்ந்து போறீங்க... எந்தப் பக்கமாங்கிறதை உங்க தீர்மானத்துக்கே விட்டுடறேன்.
..ப்ளாட்பாரம் பக்கமா... இல்லே.. எதிர்திசையிலே தண்ணிக்குள்ளாறயா... வசதி எப்படி?
ரொம்பவும்தான் ஏமாத்திட்டீங்க... ஸார்.. ஓரளவாவது ஒத்துழைப்பு தருவீங்கன்னு எதிர்பார்த்தோம்..
போறோம் - ஆனா... ஒண்ணு... நாங்க நிச்சயம் திரும்பி வருவோம்! எங்களுக்கு தெரியாம இரகசியமா இங்கே நியூயார்க்கிலே நீங்க ஒண்ணுகூட பண்ண முடியாது... ஞாபகம் வச்சுக்கோங்க..
சரிதான் போங்கடா..
என்ன கூத்து நடந்தது இங்கே... யார் அந்த ஆளுங்க?
ஹா..ஹா.. கேட்டா விழுந்து விழுந்து சிரிப்பீங்க!
பிரமாதம்..! அசத்திட்டீங்க... லெப்டினெண்ட் பார்னே! உங்க ரோலை படு ஜோரா பண்ணிட்டீங்க!
அலங்களுக்கு துளி சந்தேகம்கூட வரலை!



மறுபடியும் மன்றாடி கேட்டுக்கிறோம்.. எங்க கோரிக்கையை நீங்க ஏத்துக்கத்தான் வேணும்!
பிரின்ஸ் வந்தாச்சு... பணத்தோடே... இனி - அதை எப்படி செலவழிக்கிறதுங்கிற பிரச்னை தானே தவிர, பணம் சம்பாதிக்கனும்கிற அவசியம் எங்களுக்கு இல்லே!
என்ன விஷயம்... யாராவது கொஞ்சம் விபரமாக சொல்லுங்களேன்!
மிஸ்டர் பார்னே சின்னதா ஒரு 'தமாஷ்' நாடகம் ஆடணும்கிறது என்னோட நண்பர்களோட வேண்டுகோள்... என்னை பார்த்தவுடனே உங்களுக்கு ஓரளவு புரிஞ்சிருக்கணுமே
இந்த தோற்ற ஒற்றுமை பிரமிப்பூட்டுகிறது... தாடி நிறம் மட்டும்தான் ஒத்துப் போகலை!
இப்படி வா.. உன்னோட கொஞ்சம் தனியா பேசனும்!
அந்த தொப்பை ஆசாமி இருக்காரே அவர் ஒரு போஸ்லாவியன் பிரபு... கம்பளி வேலைப்பாடு பற்றி கருத்தரங்கிலே பேச வந்திருக்கிறதா மேலுக்கு சொல்லிக்கிட்டு, உண்மையிலேயே இங்கே இருக்கிற எண்ணெய் வியாபாரிகளோடே இரகசிய வியாபார ஒப்பந்தம் பண்ணிக்கிட்டுப் போக வந்திருக்கிறார். விவகாரம் இரகசியமா இருக்கணும்னு நெனைக்கிறார்.. ஆனா பொல்லாத பத்திரிக்கைகாரங்களுக்கு எப்படியோ மூக்கு வேர்த்திட்டுது... இவர் தன்னிஷ்டத்துக்கு சுதந்திரமா இங்கே அங்கே போக முடியாம போனா இரகசிய ஒப்பந்தம் பண்ணிக்கிறதும் சாத்தியப்படாம போயிடும்...
ம்ம்... இப்ப புரியுது விவகாரம்!
உனக்கும் அந்த ஆசாமிக்குமிடையே இருக்கிற உருவ ஒற்றுமையை வச்சு பத்திரிக்கைகாரங்களுக்கு உன்னைக் காட்டி அவர்னு ஏமாற்றிட்டு அவர் இரகசியமா நழுவி போய் வியாபார ஒப்பந்தங்களை முடிச்சுக்க நினைக்கிறார் போலிருக்கு...
கரெக்ட்!
அட போங்கப்பான்னு சொல்லி விரட்டியடிச்சுட்டேன்.. பீத்தல் காசு ஆயிரம் டாலருக்கு நான் ஆள்மாறாட்ட நாடகம் ஆடத் தயாரில்லைன்னு சொல்லிப்புட்டேன்.
ஆங்.. எவ்வளவு?


தற்காலிகமாக ஆள்மாறாட்ட நாடகம் ஆட உனக்கு எவ்வளவு தொகை தர்றேன்னு சொன்னாங்க?
ஆயிரம் டாலர்... ஆனா ஆசாமி அச்சாக என் மாதிரி இல்லை... ஏதோ ஒண்ணு ரெண்டு அம்சம் ஒத்துப் போகிறது... அவ்ளோதான்!
ஆயிரம் டாலர்கள்! ஒழிஞ்சோம் இத்தோடன்னு நான் மூச்சுத் திணறிக் கிட்டிருக்கையிலே இப்படி ஒரு குருட்டு அதிர்ஷ்டமா..
ஹே... அப்படி என்ன கஷ்டம்ப்பா உனக்கு.. ஏன் அந்த தாம்ப்ஸன் செக்கு கிழிக்கிலியா? மாட்டேன்னுட்டானா?
அங்கே நடந்ததை உனக்கு நான் இன்னமும் சொல்லலை இல்லையா... சொல்றேன் - நானும் பொடியனும் அங்கே போனுமா... அங்கே -
அங்கே..?
இதுதான் நடந்து..
இப்போ... அடுத்து நட ்க வேண்டியதை தீர்மானிக்கிற பொறுப்பு உன்னைச் சேர்ந்தது. நாங்க உன்னை கட்டாயப்படுத்தறதா இல்லை... நீ வேறமாதிரி தீர்மானிச்சாலும் எங்களுக்கு கோபம் வராது உன் மேலே...!
சொகுசு வாழ்க்கை வாழற பெரிய மனுஷருக்கும் காலமெல்லாம் கடல்லே வெயிலிலே காய்ஞ்ச சருகாகிப் போன மாலுமிக்கும் வித்தியாசம் தெரிஞ்சுக்க முடியாத ஜனங்க இருக்கிறப்போ நான் ஏன் மாட்டேன்கணும்?


சரி... நான் டூப்பா நடிக்க சம்மதிக்கிறேன்
ரொம்ப நன்றி... லெப்டினெண்ட் ர்னே
உங்களுக்கு தாராள மனசு... எனக்கு அப்பவே தெரியும் சம்மதிப்பீங்கன்னு!
உடனே காரியத்தை கவனிக்கணும்... ஏற்கனவே நேரம் நிறைய வீணாகி விட்டது.. இவருக்கு நல்ல உடைகள் அணிவிக்கணும்... பழக்க வழக்கங்களில் நாசுக்காக நடந்து கொள்ள கத்துக் கொடுக்கணும்.. ம்ம்... மளமளன்னு காரியம் பண்ணுங்க - எல்லோரும்!
ரேயடியா போரடிக்குதுப்பா எனக்கு! பழைய பத்திரிக்கைகளை எல்லாம் ஏன் இப்பிடி நடையுணும்கிறே? நாமதான் ஆசாமியை கண்டு பிடிச்சுட்டோமே?
பேசாதே... ாட்டோக்களை தேடி எடு!
எனக்கு ஒரு சந்தேகம்! அந்த சின்னக் கப்பல்லே நாம சந்திச்ச ஆள் பைப் பிடிச்சார்..
அதனால் என்ன.. அது அவரோட இஷ்டம்!
ப்படியில்லை தம்பி..! இதுவரை வெளிவந்த த்தனை படங்கள்லேயும் அவர் சுருட்டுத்தான் பிடிச்சுக் கிட்டிருப்பார்... இப்போ புரியுதா ஐயாவோட சாமர்த்தியம்?
டு கில்லாடிப்பா.. நீ!
நாம சந்திச்ச அந்த விசித்திரமான பேர்வழி ஜெர்டெல்ஷோன் இல்லை... சூடத்தை அணைத்து சத்தியம் பண்ணவும் நான் ரெடி! நமக்கு ஏமாளிப்பட்டம் கட்டப் பார்க்கிறானுக..! அவங்க முகமூடியை கிழிக்க எனக்கு ஆதாரம் வேணும்... அதைத்தான் இப்போ இங்கே தேடி செத்துக் கிட்டிருக்கோம்!


ம்ம்... இங்கே இல்லாட்டி என்ன.. அது வேற எங்கே கிடைக்கும்னு எனக்குத் தெரியும்.. டெலக்ஸ் ஆபரேட்டர் நம்பர் என்ன...
317.. ஆனா எமர்ஜென்ஸியிலே மட்டும்தானே நாம அந்த வசதியை கேட்க முடியும்!
இதுவும் எமர்ஜென்ஸி விவகாரம்தானே? ஹலோ... பாப்பி? ஆடம்ஸ் பேசறேம்பா... சொல்றேன் குறிச்சுக்கோ... போஸ்லோவியாவில் காலண்ணுமிலே இருக்கிற நம்ம நிருபருக்கும் அனுப்பணும்!
''ஜெர்டெல்ஷேர்னின் கலர் போட்டோவை தேடிப் பிடிச்சு எடுத்து உடனே அனுப்பவும்.. ரொம்ப அவசரம்! - க்ளாரியன்'' குறிச்சுக்கிட்டேன்... ஆனா ஒரு சந்தேகம்.. ஆஸ்வால்டு - அளவுக்கு மீறி ஊத்திக்கிட்டிருக்கியா?
இல்லை... யாரும் குடித்திருக்கவில்லை... அந்த வேடிக்கை நாடகத்தில் பங்கேற்றிருந்த அத்தனை பேருக்கும் அதற்கெல்லாம் ஏது அவகாசம்..
ஏய்... என் மண்டைத் தோலை உரிச்சு எடுத்துடறதா உத்தேசமா?
ஸாரி.. ஸார்.. உங்க முடிக்குள்ளே பிரஷ்ஷை நுழைக்கத்தான் இத்தனை கஷ்டப்பட்டுக் கிட்டிருக்கேன்.
மிஸ்டர் பிரின்ஸ்... இந்தாங்க மிஸ்டர் பார்னேயோட பழைய உடுப்புகள்... கொஞ்ச நாளைக்கு அவருக்கு இதெல்லாம் தேவைப்படாது!
நேரம் ஓடிட்டிருக்கு!
ஐயோ பாவம் அவங்கதான் என்ன செய்வாங்க... பார்னேயை பெரிய மனுஷ தோரணைக்கு மாத்தறதுங்கிறது என்ன லேசுப்பட்ட காரியமா...
எங்களால முடிஞ்சது இவ்வளவுதான்..! ரெண்டு பேருமே வர்றாங்க - பாருங்க!



ஜின் ஜாக்கிரதை... பார்னே யாருன்னு கரெக்டா நாம கண்டுபிடிக்கணும்
ஓ!
பிரமாதம்... அசத்திட்டீங்கப்பா... பார்க்கிறவங்க எல்லாருமே ரொம்ப சுலபமா ஏமாந்து போயிடுவாங்க பார்னே...
நீங்கதான் பட்டியல்லே முதல் நபர் - மிஸ்டர் பிரின்ஸ்!
?!
பார்னே.. இங்கே இருக்கேன்!
உடையை மட்டும் மாத்திக்கிட்டிருக்கோம்... பிரின்ஸ்.. நான் நியூயார்க்கிலே அணிய வேண்டிய சீருடையை மிஸ்டர் பார்னே போட்டுக்கிட்டிருக்கார்..
நானே ஏமாந்துட்டேனே...
ஒத்திகையிலேயே வெற்றி கெடைச்சாச்சு... நமக்கு!
பாஷை விஷயம்தான் பாக்கி.. ஆனா நானும் மிஸ்டா பிரின்ஸும் மிஸ்டர் பார்னேக்கு இந்த விஷயத்திலே ஒத்தாசை பண்ண எப்பவும் பக்கத்திலேயே இருப்போம்...
என்ன.. நீயுமா?


நீயும் எங்களோட ஓட்டிக்கப் போறியா?
இல்லேன்னு நாடகம் பிசிறடிக்கும்... மிஸ்டர் பிரின்ஸ்!
மிஸ்டர் ஜெர்டெல்ஷோன் செகரட்டரி நான் இல்லாமல் எங்கேயும் போகமாட்டார்.. நான் அவரோட இல்லைன்னாலே சந்தேகத்துக்கு இடமாயிடும்... அதிதோட நெலைமையை அப்பப்போ சமாளிக்க நான் பக்கத்திலே இருக்கிறது நல்லது இல்லியா?
வால்தவம் ... அப்போ... நானும், ஜின்னும் என்ன பண்ணப் போறோம்?
'கழுகிலே' நீங்க ரெண்டு பேரும் நாடகம் நடந்து முடியற வரை பேசாம உட்கார்ந்து ஓய்வெடுக்க வேண்டியதுதான்னு நாங்க முதல்லே நெனைச்சோம்... ஆனா... உங்க நண்பர் நீங்களும் அவருக்கு பக்கத்திலேயே இருக்கணும்னு வற்புறுத்துகிறார்.
...வலை...! ஜின்னை எடுபிடி பையனு ஆக்கிடலாம்... புதுசா சேர்ந்திருக்கிற பத்திரிக்கை அஸிஸ்டண்ட்டா நீங்க ஆக்ட் பண்ணுங்க, இப்போ நாடகத்திலே எல்லோருக்குமே பங்குண்டு! ரொம்ப தமாஷா இருக்கும் - இல்லே!
அதிலே உங்களுக்கு இடைஞ்சல் ஏதாவது.. - ?
இருங்க...! இப்போ நான்தான் நீங்க... இல்லியா! அதை இப்படி கொடுங்க!
ஊஹூம் அப்பிடி ஒண்ணும் கஷ்டமா தெரியலை... என்னோட 'பைப்' மாதிரி வராதுங்கிறது வேற விஷயம்! ஆனா -
லொக்.. லொக்... ஹோ.. ஹொக்.. லொக்..
பழக்கமில்லை இல்லியா அப்படித் தானிருக்கும் - போகப் போகச் சரியாயிடும்!



ஐந்தாவது அவென்யூவிலே இருக்கிற ஹோட்டல் பீட்டரில் தங்கிக்கோங்க... தேவையான உடுப்புகள் அனைத்தும் நாளைக்கு அங்கே வந்து சேர்ந்திடும்... இந்தாங்க - செலவுக்கு ரொக்கம்... புரகிரோம் பற்றிய விபரங்கள்.. பிளாட்பாரத்தின் மறு முனையிலே ஒரு டாக்ஸி உங்களுக்காக காத்திக்கிருக்கு... போயிட்டு வாங்க
அதோ வர்றாங்க...! முதல்லே அந்த கும்பலை படம் பிடி... அப்புறம் அந்த தாடிக்காரனை முடிஞ்சவரை அத்தனை கோணத்திலும் கிளிக் பண்ணிடு.. இரகசியமா நடக்கணும் - முடியுமில்லே?
இருட்டிலேயும் படம் புடிக்கி ... ப்பர் சென்ஸிபிள்... இயற்கை... உத்திரவாதம்... தொழில் சுத்தமா இருக்கும்..
இரவெல்லாம் பனியை போர்த்துக் கொண்டு முடங்கிக் கிடந்த மன்ஹாட்டன் விழித்தெழுந்து சோம்பல் முறித்தபோது கதிரவன் கீழ்வானில் வெகுதூரம் மேலே ஏறிவிட்டிருந்தான்.
பாலிங்களா.. எல்லாமே சில்க்தானா.. பெரும் பணக்காரன்னா குளிர் காலத்திலே கூட முரட்டுத் துணியை போர்த்துக்கக் கூடாது... என்ன கண்றாவியோ - போ
கழுகிலே வெட்டவெளியிலே நீ இப்போ திற்கலை ஜெர்டெல்ஷோன் ஏர்கண்டிஷன் இல்லாத இடத்துத்திலே காவடி வைக்கமாட்டார் மறந்திடாதே!
நரக வாழ்க்கைடா சாமி!
வடியக்காலை எட்டு மணிக்கு டெலிவிஷன் ஓடுது... அவசியமா - இல்லே அவசியமான்னு கேட்கிறேன்.. அநியாயம் அக்கிரமம்..
சரி... சரி.. பாண்ட்டை எடுத்து மாட்டிக்கோ... நாடகம் ஆரம்ப ...கப் போகுது!



ரெடியா?
ரெடியான மாதிரிதான்... இதோ வந்திடுவான்!
சீக்கிரம் கிளம்புங்க... - முதல்லே.. பார்க்கிலே வாக்கிங்... அப்புறம் மியூஸியம் போறோம் - பத்து மணிக்கு நாம அங்கே இருக்கணும்
..பதினொரு மணிக்கு 'பிளாஸா'விலே சிற்றுண்டி... மதிய உணவு ராக்பெல்லர் சென்டர்லே!
என்னாலே தாக்குப்பிடிக்க முடியும்னு தோணலையடி யம்மா!
உங்களை எல்லோரும் கண்டுக்கிற மாதிரி நடந்துக்கணும்கிறதை எப்போதுமே ஞாபகம் வச்சுக்கோங்க.. ஸான்டா க்ளாஸுக்கு நூறுடாலர் கொடுத்திடுங்க... கிறிஸ்மஸ்ஸுக்கு நல்லா விருந்து சாப்பிடட்டும்
அந்த ஆள் தன்னோட பீத்தல் பனிச் சறுக்கு வண்டியை தூக்கி எறிஞ்சுட்டு போயிங் வாங்கிக்கட்டும் அதுக்கு பணம் கொடுன்னு நீ சொல்லாதவரை சரி...
இம்மாதிரி நூறு டாலரை தூக்கி எறிய ஜெர்டெல்ஷோன் ஒருத்தருக்குத்தான் மனசு வரும்!
இப்பவும் சொல்றேன்.. இந்த ஆள் போலி
இந்த குளிர்லே பார்க்கில் வாக் போறது எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கலை... கால்லே நோவெடுக்குது.. மூக்கு விண்டு போயிட்டுது.
ஆனா.. இதெல்லாம் ஜெர்டெல்ஷோனுக்கு பிடிக்குமே... இப்போ நீங்கதான் -- ஜெர்டெல்ஷோனச்சே!
இல்லாததை கற்பனை பண்ணிக்கிட்டு நீ அலட்டல் பண்றேன்னு அடிச்சு சொல்வேன்!
வாயை மூடிக்கிட்டு நான் சொன்ன மாதிரி படம் புடி...!


வெட்டி வேலை..! ஆனா ஒத்துக்கிட்டேன்கிறதினாலே செய்து தொலைக்கிறேன்!
இங்கே மரத்து மேலே இப்படி குரங்கு மாதிரி ஏறி ஆட்டம் போடக்கூடாதுன்னு தடை இருக்குதில்லே - இறங்கி வாடா... சோமாறி..
ஆங்.. அருமையான கோணம்.. ஒண்ணு.. ரெண்டு...
நீங்க நினைக்கிற மாதிரி தறுதலை ஆளுங்க இல்லை நாங்க.. கௌரவமான பத்திரிக்கை நிருபர்கள்.. தொழில் விஷயமா இங்கே காரியம் பண்ணிக்கிட்டிருக்கோம்.. குறுக்கே புகுந்து காரியத்தை கெடுத்திட்டீங்க
அதை எல்லாம் ஸ்டேஷன்லே வந்து சொல்லிக்கோங்க...
அதோ... ரொம்ப நேரத்துக்கு அப்புறம் எனக்கு புடிச்ச சமாச்சாரம் கண்ணிலே பட்டிட்டுது... தம்பிகளா - யாருக்கெல்லாம் சூடா ஸாஸேஜ் வேணும்... வாங்க என்னோட!
ஊஹூம்..! மிஸ்டர் ஜொர்டெல்ஷோன் இப்படி பொது இடத்திலே நின்னு மட்ட ரக ஸாஸேஜை எல்லாம் வாங்கித் தின்ன மாட்டார்.
மிஸ்டர் ஜொர்டெல்ஷோனுக்கு இப்போ அது வேணும்... அவர் இஷ்டப்பட்டா இஷ்டப்பட்டதுதான்... ஏதாவது எதிர்த்துப் பேசினே... டிஸ்மிஸ்.. உன் சீட்டைக் கிழிச்சு அனுப்பிச்சுடுவேன்... ஜாக்கிரதை!
இந்த டேஸ்ட் ஸ்டார் ஹோட்டல் சரக்கிலேகூட வராதுப்பா
மேடம்... நீங்க மட்டும் ஒதுங்கி நின்னா எப்படி - டேஸ்ட் பண்ணிப் பார்க்கிறது!


இவனை எப்படி சமாளிக்கப் போறோம்னு நொந்து போயிட்டீங்களா... பார்னே பிரமாதமா வெளுத்துக் கட்டிடுவான்... அந்தக் கவலையை விடுங்க... வெட்டியா இப்பிடி வாக்கிங் போயிக்கிட்டிருக்கிற நேரத்தை உபயோகமாக்கிடுவோமே... உண்மையான ஜெர்டெல்ஷோன் இந்த நேரத்திலே என்ன காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்னு சொல்லுங்களேன்.
அது.. வந்து...
எங்க நாட்டு கடல்லே கரையோரமா எண்ணெய் வளம் நெறைய இருக்கு... ஆனா அதை தோண்டி எடுக்க ஆகிற பெரும் செலவை சமாளிக்க எங்க அரசாங்கத்துக்கு பணவசதி போறாது...
இங்கே இருக்கிற பிரபல நிதி நிறுவனங்களோட உதவியை நாடி மிஸ்டர் ஜெர்டெல்ஷோன் வந்திருக்கிறார். நாளை நள்ளிரவுக்குள்ளே உருப்படியா ஏதாவது சாதிச்சாகணும்... நிலவரம் இதுவரை சாதகமாத்தான் போயிட்டிருக்கு...
ஒருவேளை தோல்வி ஏற்பட்டா..?
வாய்ப்பு கைமாறி அண்டை நாட்டோட தொடர்பு வச்சிருக்கிற 'காஸ்மோஸ் ஆயில்' கம்பெனிக்கு போயிடும்... அதனாலே அந்த ஆளுங்க மிஸ்டர் ஜெர்டெல்ஷோனின் இந்த முயற்சியை முறியடிக்க கங்கணம் கட்டிக் கொண்டு கிளம்பியிருக்காங்க.. அவங்க கண்ணிலே மண்ணைத் தூவிட்டு காரியத்தை கச்சிதமா முடிக்கத்தான் இந்த ஆள்மாறாட்ட நாடகம்.
ஓகோ.. ஒப்பந்தம் கையெழுத்தான பிறகுதான் இந்த நாடகம் ஒரு முடிவுக்கு வருமா?
இந்த பத்திரிக்கை நிருபர்கள் பொல்லாதவங்க... குறுக்கே புகுந்து குளறுபடி பண்ணிடுவாங்க.. காரியம் கெட்டுப் போயிடும்.. அதான்..
ஆமாம்..! மிஸ்டர் ஜெர்டெல்ஷோனின் வருகைக்கான காரணமாக சொல்லப்பட்ட போஸ்லாவியன் கம்பெனி வேலைப்பாடு பற்றிய சொற்பொழிவு நிகழ்ச்சி நாளை மாலை நடைபெறப் போகும் அரங்கில் இருவரும் மீண்டும் இடமாற்றம் செய்து கொள்வார்கள்.
தேவைதான்.. இந்த மாதிரி சூழ்ச்சி நாடகம் ஆடலைன்னா நெனைச்சதை சாதிக்க முடியாதுதான்.
புரிகிறது..! பார்னே தலைவாசல் வழியாக ஜெர்டெல்ஷோனாக நுழைவான்... உண்மையான ஜெர்டெல்ஷோன் பின்புறமாக இரகசிய நுழைவாயில் வழியே வருவார்.. நிகழ்ச்சி தொடங்கு முன் யாரும் அறியா வண்ணம் இருவரும் இடம் மாறிக் கொள்வார்கள்... சூப்பர் ஐடியா!



சாமர்த்தியமாக காரியம் செய்வதாக அவர்கள் இறுமார்ந்திருக்கையில் விதி வேறுவிதமாக விளையாடியது...
ம்ம்.. நல்ல முயற்சிதான் மிஸ்டர் ஜெர்டெல்ஷோன்
கத்துக்குட்டி நிருபர்கள் கண்ணிலே வேணும்னு நீங்க மண்ணை தூவலாம்.. ஆனா என்னை மாதிரி ஜாம்பவான்கள்கிட்டே உங்க ஜம்பம் பலிக்காது... அப்படியே எழுந்து வாங்க... ஒரு ரவுண்டு போயிட்டு வரலாம்!
இந்த பிரஸ் பாஸ்கள்லாம் அசல் மாதிரிதான் தோணுது.
மாதிரி என்ன மாதிரி.. அசலேதான்!
உங்க கோமாளித்தனத்தினாலே ஒரு ஆள் மாறாட்ட பேர்வழியோட முகமூடியை கிழிச்சு, பித்தலாட்டத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வந்து நாங்க பேரும் புகழும் அடையற வாய்ப்பு மண்ணாகிப் போச்சு... இதைப் பத்தி நாங்க 'க்ளாரியன்'லே எழுதாம விடப்போறதில்லை!
என்ன மிரட்டறியா..?
நீங்க யார்னு அடையாளம் காட்ட வேணும்னு இந்த பாஸ் பிரயோஜனப்படலாம்... ஆனா பிர்ஜான் மாதிரி பார்க்கிலே இருக்கிற மரங்கள்லே ஏறி கொரில்லா மாதிரி ஆட்டம் போட உங்களுக்கு இது அதிகாரம் தரலை... எனவே உங்களை நான் -
ரிங்! க்ரிங்!
இரு.. வரேன் -
என்ன...? ஹோட்டல் எக்ஸெல் ஸனிலிருந்து ஒரு வாடிக்கையாளர் பலவந்தமாக கடத்தப்பட்டதாக அதன் உரிமையாளர் புகார் செய்கிறாரா...?



ம்ம்... உங்க அதிர்ஷ்டம்... வேறொரு முக்கிய வேலை வந்திட்டுது... உங்களை கவனிக்க நேரமில்லை... ஓடிப் போயிடுங்க எங்கேயாச்சும் - கண்காணாம...
தங்க மனசு ஸார்.. உங்களுக்கு
திக்... ஓடு... ஏகப்பட்ட நேரம் வீணாயிடிச்சு... அந்த தாடிக்காரனை தேடிக் கண்டுபிடிச்சாகணும்!
கடத்தப்பட்ட நபரைப் பத்தின விபரங்களை சொல்... குறிச்சிக்கிறேன் - பெயர்... ம்ம்... பார்னே... அப்புறம்...
இந்த அளவுக்கு போவாங்கன்னு நான் நெனைக்கலை..
உங்க யூகம் சரியாயிடுச்சி.. டாடி!
என்னவோ ஏதோ ஆகப்போகதுன்னு பயந்து சாகாதீங்க.. தொடவே மாட்டோம்.. ஒண்ணு ரெண்டு நாளைக்கு உங்களை பிடிச்சு வச்சிருப்போம்.. அவ்ளோதான்!
அதாவது பேரத்தை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள்ளே நான் பேசி முடிச்ச ஒப்பந்தத்தை எழுதி முடிக்க முடியாம பண்ணப் போறீங்க... எங்க நாட்டுக்கு பல கோடி நஷ்டம் ஆகப் போறது... அதுதானே!
இந்த படம் ஜோரா இருக்கு... கடல்லே புயல் அடிக்கறச்சே 'கழுகை' நிலைப்படுத்த நான் போராடறபோது இருக்கிற மனோ நிலைமையை படம் பிடிச்ச மாதிரி இருக்கு..
மிஸ்டர் ஜெர்டெல்ஷோனை பொது மக்கள் கவனிக்கணும் - கவனிக்கிறாங்க..
இந்த ஆள்மாறாட்ட நாடகம் ஒரு 'மோசடி' தான்னாலும் உங்க பாஸோட நோக்கம் உன் தமானதுங்கறதனாலே நியாயமாயிடுது..



சரியான கோணத்திலே சிந்திக்கிறீங்க.. நாட்டுப் பணிக்காக எந்த தொண்டையும் செய்யத் தயங்காதவர் மிஸ்டர். ஜெர்டெல்ஷோன்... இந்த நாடகத்திலே நமக்கும் பங்கு கெடைச்சிருக்கிறதுக்கு நாம பெருமைப்பட்டுக்கலாம்.
காரியம் முடியற மட்டிலும் நாம ரொம்ப விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம்!
...இங்கே இருந்தது போதும்..
அடுத்து எங்கே போறோம்?
யாரது? வில்ஸனா..? ..இப்படியொரு சந்திப்பு புரகிராமில் இல்லையே
தலைவிரி கோலமா அவன் வர்றதை பார்த்தா ஏதோ அசம்பாவிதம் நடந்திட்டதோன்னு தோணுது
உங்களை எங்கெல்லாம் தேடறது?
எக்கச்சக்கமாயிட்டுது நம்மோட நெலைமை... எல்லாவற்றையும் உடனடியா நிறுத்தியாகனும்... இந்த கேலிக்கூத்து நம்மை இக்கட்டிலே கொண்டு போய் நிறுத்திட்டுது..
ஜெர்டெல்ஷோன் காணாம போயிட்டார்... அவரோட அறைக்குள்ளே புகுந்து ரெண்டு பேர் அவரை கடத்திட்டு போயிட்டாங்க... மத்தவங்களை பொறுத்தவரை அவர் பார்னேதானே... எனவே போலீஸ் பார்னேயை கண்டுபிடிக்க தேடி அலையுது!
பயங்கரம்...! சாதாரண மாலுமிதானேன்னு போலீஸ் ரொம்ப மெத்தனமா இருக்கக் கூடும்.
போய் போலீஸ்கிட்டே நிஜத்தை சொல்லிடறதுதான் விவேகம்!
அவசியமில்லை...! இன்னமும் 36 மணி நேர அவகாசம் இருக்கு - நாம உண்மையான ஜெர்டெல்ஷோனை தேடிக் கண்டுபிடிக்க! அந்தப் பொறுப்பு என்னைச் சேர்ந்தது!


உங்க எண்ணம் ஈடேறாது தம்பிகளா.. பேப்பர்லே தடபுடல்படும் - போலீஸ் நாலாதிசையிலும் ஓடி என்னைத் தேடும்!
பேப்பர்லே என் பேர் கூட வருமா?.. அப்படி ஒரு ஆசை ரொம்ப நாளா இருக்கு... இப்போ நிறைவேறப் போகுது.
உஷ்ஷ்.. கொஞ்சம் தொண தொணக்காம இருங்க.. நான் பேசணும்! ஹலோ?
ஹலோ...? மிஸ்டர்.. எக்ஸ்? நான் ப்ராண்டி பேசறேன்... சொன்ன மாதிரி காரியத்தை கச்சிதமா முடிச்சிட்டேன்.. இதுக்கு மேலேயும் என்னோட திறமையிலே உங்களுக்கு சந்தேகம் இருக்க முடியாதுன்னு நெனைக்கிறேன்!
படுபாவி... எங்களை இப்படி நீ கூப்பிட்டு பேசக்கூடாதுன்னு சொல்லியிருந்தோமே - மறந்திட்டியா... சரி.. சரி... ஜெர்டெல்ஷோன் காலக்கெடு முடியறதுக்குள்ளே நம்ம பிடியிலிருந்து தப்பிவிடக் கூடாது.. விபரீதமாயிடும்... ஜாக்கிரதை!
அவனுகளை நம்பி நாம வாளாவிருக்க முடியுமா... சொல்லுங்க
கவலைப்படாதீங்க மிஸ்டர் எக்ஸ்... நாங்க இருக்கிற இடத்தை ஒரு பய கண்டு பிடிக்க முடியாது...
அலட்டிக்காம உட்காருங்க...
சினிமாவிலே வர்ற வில்லன் மாதிரி ஏன் இப்பிடி முழிக்கிறே... மிஸ்டர் எக்ஸ்னு நீ குறிப்பிட்டு பேசின ஆளு காஸ்மோஸை சேர்ந்த மர்ரோதானே... அவனோட நான் கொஞ்சம் பேசணும்.. விலகு
(?!)
ஹலோ..., ம்ர்ரோ... நான் ஜெர்டெல்ஷோன் பேசறேன்! உன்னோட கைக்கூலிங்க என் மேலே கவனமா இருக்காங்க. நான் கொஞ்சம் முரண்டினாலும் சுட்டுடுவானுக போலிருக்கு.. முதல் கட்டத்திலே நீ ஜெயிச்சுட்டே...
...ஆனா உன்னை ஒண்ணு எச்சரிக்கிறேன்... ஒப்பந்தம் ஒருவேளை கைநழுவிப் போகலாம்.. ஆனா... அப்புறம்? உன்னோட இந்த விஷமத்தனமான பிடியிலேர்ந்து இன்னிக்கு இல்லைன்னாலும் சீக்கிரமே நான் கழட்டிக்கத்தானே போறேன்... அதையடுத்து உன்னை கம்பி எண்ண வைக்க அனுப்புறதுதான் என்னோட இலட்சியமா இருக்கும்... உன்னை அதுக்கு தயார்படுத்திக்கோ...



அவ்வளவுதான்...! வலிய கெடச்சிருக்கிற ஒய்வு நேரத்தை நாம ஏன் வீணடிக்கணும், நமக்குள்ளே உறவு எப்படி இருந்தாலும் இப்போதைக்கு சுமுகமா இருக்க வேண்டிய கட்டாயம்... சீட்டுக்கட்டு வச்சிருந்தா எடுத்தாங்களேன்... ரம்மி ஆடலாம்!
அட்ரஸ் சரிதானா.. ஸார்? ரெளடிகளும் போக்கிரிகளும் வசிக்கிற பேட்டை பகுதி இது..
இங்கேதான் எனக்கு காரியம் இருக்கு..
?
என்ன வேணும்?
ஒரேயடியா வாரியடிக்காத ஐயிட்டம் ஏதாவது ஒண்ணை ஊத்திக்கொடு.. மல்லிஹன்...
ஹே..! நீ.. நீ.. உனக்கெப்படி என் பேர் தெரியும்?
ம்ம்... வந்து... நீ.. உன்னை பார்த்தா...
ஆமா.. நான்தான் மல்லிஹன்!



அடடே... கண்டு பிடிச்சுட்டேன்... இன்ஸ்பெக்டர் பிரின்ஸ்! நான் 'தொழில்'லே இருந்தப்போ பிடிச்சு அஞ்சு வருஷம் ஜெயில் களி சாப்பிட வச்ச வஸ்தாது!
ஏய்.. பசங்களா என்னோட பழைய தோஸ்த் பிரின்ஸ் வந்திருக்கார். இண்டர் போலில் கொடிகட்டிப் பறந்தவர்... இதை கொண்டாடற விதமா கடையை மூடிட்டு நமக்குள்ளே ஒரு ரவுண்டு ஊத்திக்குவோம்!
எல்லோருக்கும் வணக்கம்
நான் இண்டர்போலை விட்டு விலகி வருஷங்களாச்சு... ஆனா விட்ட குறை தொட்ட குறைம்பாங்களே அதுமாதிரியான ஒரு காரியமாகத்தான் இங்கே வந்திருக்கேன்.... உங்க ஒத்துழைப்பு எனக்கு வேணும்! சற்று நேரத்தில் என் நண்பர்கள் சிலரும் இங்கே வருவாங்க..
தாராளமா வரட்டும்... வரவேற்க காத்திருக்கிறோம்....
யார்னு தெரிஞ்சதும் மிரண்டு போயிடாதே
பழைய சகாவை இங்கே சந்திக்கப் போகிறோமா... மல்லிஹனின் இடம் சிங்கத்தின் குகை மாதிரி ஒண்ணாச்சே!
பிரின்ஸை பத்தி தெரிஞ்சிருந்தா இப்படி நீ பேச மாட்டே... உள்ளே வா.. மிச்சத்தை நீயே தெரிஞ்சுக்குவே!
போலீஸ் பெரிசா திட்டம் போடறச்சே நான் அவங்க பக்கம் இருக்கிற இந்த அனுபவம் எனக்கு புதுசு -
சைலன்ஸ்.. யாரும் குறுக்கே பேசக்கூடாது... யாராவது மீறி வாயை திறந்தா பல்லு போயிடும் - ஜாக்கிரதை
சரி.. விஷயத்துக்கு வருவோமா.
நமக்குள்ளே இருக்கிற வேற்றுமையை தற்காலிகமா ஒதுக்கி தள்ளி வச்சிட்டு ஒரே இலட்சியத்துக்காக நாம இணைந்து செயல் படணும்..



பத்திரிக்கையாளர்களின் கவனத்தை திசை திருப்ப பார்னே என்ற பெயரில் தலைமறைவான மிஸ்டர் ஜெர்டெல்ஷோனை யாரோ கடத்திச் சென்று விட்டார்கள். ஒரு முக்கியமானன ஒப்பந்தம் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் நடப்பதை தடுக்கவே இந்த முயற்சி... அடுத்த முப்பது மணி நேரத்திற்குள் அவரை நாம் கண்டு பிடிக்கத் தவறினால் காரியம் கைமிஞ்சிப் போயிடும்...
ரொம்ப சுலபமாச்சே! இம்மாதிரி வேலையிலே 'ஸ்பெஷலிஸ்ட்'டுகள் யாருன்னு முதல்லே பட்டியல் தயாரிச்சுக்கலாம்!
தயாரிச்சாச்சு - அப்புறம்?
அதிலே எவன் எவனெல்லாம் காணாம போயிட்டான்னு கண்டு பிடிக்கணும்
ஆமா.. கடத்தப்பட்ட ஆசாமியோட அவனுகளும் தானே தலைமறைவாகி யிருப்பானுக!
நான் வேறொரு கோணத்திலேர்ந்து ஆராய்ச்சியை தொடங்குறேன்
விபரமா... சொல்லு!
எவனுக்கெல்லாம் சமீபத்திலே ரொம்ப பணமுடை இருந்திச்சுன்னு விசாரிக்கலாம்..
காரியத்தை முடிக்க அட்வான்ஸா பெருந்தொகை வாங்கியிருக்கலாம்.. சமீபத்திலே கண்டபடி செலவு செஞ்ச ஆசாமிகள் பற்றியும் விசாரிக்கலாம்.
ஒவ்வொருத்தரும் அவரவர் வழியிலே முயற்சி பண்ணுங்க.. ஆனா.. நேர நெருக்கடியை மறந்திடக்கூடாது!


இதையடுத்து கழிந்த அறுபது நிமிடங்களில் நகரின் பல்வேறு பகுதிகள் குறுக்கும் நெடுக்குமாக ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளப்பட்டன... யார் யாரோ யார் யாருடனோ ஏதேதோ பேசினார்கள். ஆனால் அந்த எண்ணிலா உரையாடல்களின் மையக் கருத்து மட்டும் மாறுபட்டிருக்கவில்லை... - பார்னே என்ற பெயரில் இருந்த ஜெர்டெல்ஷோன்ன கடத்திச் சென்ற இரு நபர்கள் யார்?


இதற்கிடையே -
கலக்கமா இருக்கு.. நேரம் ஓடிட்டே இருக்கு... பிரின்ஸ் கிட்டேர்ந்து எந்த தகவலும் இல்லியே
உங்க ஆளை கண்டுபிடிச்சிடுவேன்னு பிரின்ஸ் சொல்லியாச்சில்லே - கவலையை விடுங்க... காரியத்தை முடிச்சுட்டுத்தான் வருவான்..
அந்த நம்பிக்கை ஒருபுறம் இருக்கட்டும்.. காலம் கடந்துவிடறதுக்கு முன் கண்டுபிடிச்சாகணுமே.. அதுதான் கிலேசம் தருது!
கொஞ்சம் இருங்க.. நான் ஜெர்டெல்ஷோன்.. இல்லே?
ஜனங்க அப்படித்தான் இன்னமும் என்னை பார்க்கிறாங்க...
இந்த டிராமாவை அப்படியே கடேசி வரை கொண்டு போயிட்டா பிரச்னை தீர்ந்திடாதோ
டாப் கிளாஸ் ஐடியா! நாளை மாலைக்குள் உண்மையான மிஸ்டர் ஜெர்டெல்ஷோனை யாரும் கண்டுபிடிக்காம போயிட்டா...
...போஸ்லேவியன் கம்பெனி வேலைப்பாடு பற்றிய கருத்தரங்கில் நீங்கள் கலந்துக்கப் போறீங்க!
மல்லிஹனின் இடத்தில் -
காரியம் ஆகலைங்கிறதுக்காக சாப்பிடாம இருந்தா எப்படி... இதை சாப்பிடு ஸார்.. என்னோட ஆளுங்க மேலே நம்பிக்கை இருக்கில்லே?
ஒருவேளை கடத்தல் ஆசாமிகள் வெளிநாட்டிலேர்ந்து வந்தவங்களா இருந்திட்டா.. நம்ம முயற்சி பலனளிக்காதேன்னு மனசு அடிச்சுக்குது...


அதோ.. டெலிபோன் மணியடிக்குது - நிச்சயம் நல்ல சேதியாத்தான் இருக்கும்!
கிரிங் கிரிங்
மல்லிஹன்...? ப்ராங் பேசறேன்...! கஸ்மாலங்க ரெண்டு பேரும் யார்னு கண்டுபிடிச்சாச்சு... ப்ராண்டி பெர்ஞஸன்... மங்க்கி-தி-சார்மர்... உதவாக்கரைகள்.. ஆனா விஷமிகள் சமர்த்தா நடந்துக்கச் சொல்லு... உன் ப்ரண்ட் கிட்டே
எங்க மேலே நம்பிக்கை வையுங்க.. காரியம் நடந்திடணும்னு சொன்னேனில்லையா... நடந்திடுச்சு... யார் அந்த ரெண்டு பேர்னு தெரிஞ்சாச்சு... கஷ்டமான முதல் கட்டம் - வெற்றி
அடுத்து 25 ச.கி.மீ. பரப்புக்குள்ளே அவங்க எங்கே இருக்காங்கன்னு தேடியாகணும்
அவங்களோட சமீபத்திய நடமாட்டம் பற்றி நண்பர்கள் கிட்டே விசாரிச்சேன்
இதோ இந்த ஏரியாவிலேதான் அவ்வப்போ வெவ்வேற இடத்திலே தங்கியிருந்திருக்கானுக..
மிக் குறுகிய வட்டம்..!
இந்த ஏரியாவிலேதான் எங்கோ ஓரிடத்திலே ஜெர்டெல்ஷோனை அவங்க பதுக்கி வச்சிருக்கணும்
முட்டாள்கள்!
நம்மோட அடுத்த நடவடிக்கையோட வெற்றி அவங்களோட முட்டாள்தனத்தை நம்பித்தான் இருக்கு!
தாராளமா நம்பி இறங்கலாம்!
வேண்டிய மட்டும் கேட்டாச்சு!


அந்த ஏரியாவுக்கு நான் போகப்போறேன்.. அந்தப் பகுதியிலே இருக்கிற உன்னோட தோஸ்த்துகளுக்கெல்லாம் அந்த ரெண்டு பசங்களோட அங்க அடையாளங்களை விபரமா சொல்லி வை! விழிப்போட இருக்கட்டும்
எப்படி கண்டு பிடிக்கப் போறோமோ தெரியலை... அவங்க வெளியே தலை காட்டவே மாட்டாங்களே
ஜெர்டெல்ஷோனை மறந்திட்டியே... கால நெருக்கடி அவரை வினாடிக்கு வினாடி உறுத்திக் கிட்டே யிருக்கும்
அப்படி அவர் என்ன செய்துவிட முடியும்?
நம்மோட முயற்சிக்கு ஒத்துழைப்பு தர ஏதாவது ஒரு யுக்தியை நிச்சயம் கடைப்பிடிப்பார்... நாம் இப்படியொரு முயற்சியில் நிச்சயமா இறங்கியிருப்போம்னு யூகிக்கிற புத்திசாலித்தனத்தையும் அவர்கிட்டே எதிர்பார்க்கலாம்.
பிரின்ஸின் யூகம் பொய்க்கவில்லை...
முழுசா தோத்துட்டீங்க... பிரண்ட்ஸ்! பெரிய்ய கில்லாடின்னு சொன்னீங்க... சுளுவா தோக்கடிச்சுட்டேனே... தாகம் ஒரேடியா வறட்டுது... குடிக்க ஏதாச்சும் மிச்சம் இருக்கா?
நொந்து போயிருக்கேன்.. இவ்வளவு படுமோசமா நான் எப்பவுமே தோத்துப் போனதில்லை
அதுமட்டுமில்லை.. இருந்த பீர் மொத்தத்தையும் குடிச்சு தீர்த்துட்டார்.. வேணும்னு வெளியிலே போய்த்தான் வாங்கி வரணும்
இந்த ஏரியாதான்... வைக்கோல் போரிலே ஊசியை தேடின கதையாத்தான் இருக்கும்!
என் நெஞ்சிலே இருக்கிற கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் தகர்த்து விடாதே...



விடியப் போற இந்த நாள்தான் ஒப்பந்தம் தீர்மானிக்கப்பட வேண்டிய கடைசி நாள். ஜெர்டெல்ஷோனை இன்னிக்கு நாம் கண்டுபிடிக்க முடியலைன்னு அவரோட நாட்டுக்கு ஈடுகட்டவே முடியாத பொருளாதார இழப்பு நிச்சயம்..
கேட்கவே கஷ்டமா இருக்கு
நீ என்னோடவே இருக்கணும்னு நான் என்னை இறக்கிவிட்டு நீ கேட்கப் போவதில்லை.. திரும்பி போகலாம...
அப்போ.. நீ?
கடமைக்கும் மேலே ஒத்தாசை பண்ணியிருக்கிறாய்.. நன்றி
கொஞ்ச நேரத்திலே முதல் காபி கடை திறந்திடும்.. சூடா ஒரு கப் ஊத்திக்கிட்டு பொறுமையா காத்திருக்கப் போறேன் - எதிர்பாராதது நடக்கும்னு
நீ ஒரு பைத்தியம்!
..ஒரு வகையிலே நானும்தான்! மனத்தை தளரவிடாதே... இங்கே தென்படுகிற ஜன்னல் திரைகளின் பின்னால் உனக்கு உதவுகிற நோக்கத்தோடு பல கண்கள் விழிப்போடு இருக்கின்றன... அற்புதம் நிச்சயம் நிகழும் - நாம் காத்திருப்போம்!
ஆமாம்.. நிகழப்போகும் ஓர் அற்புதத்துக்கு வெகு அருகாமையில்தான் அப்போது அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.
ஆறுமணிக் கெல்லாம் பட்ஸ் மார்க்கட் திறந்திடுவாங்க.. அங்கே போயிட்டு வந்திடறேன்.
வெறும் நீர் பாட்டிலோடு வந்திடாதே... கொறிக்கவும் ஏதாச்சும் வாங்கி வா
யாரும் என்னை இங்கே அடையாளம் கண்டுக்கிட்டா ஆபத்துத்தான்.. ஆனா இந்த அகால வேளையிலே யார் வெளியே வரப்போறாங்க?
யாருப்பா..? என் தூக்கத்தை கெடுத்தியேடா பாவி!
!?



லாரி... பெரிசு! இந்தா பணம்... அடுத்த வேளை படுக்கப் போறச்சே கொஞ்சம் வசதியான இடமா தேடிக்கோ... இப்ப என்னை பார்த்ததை கனவா நெனைச்சு மறந்திடு!
அப்படி மறந்திடும் போது 'கனவிலே' கெடைச்ச இந்தப் பணம் மறைஞ்சி போயிடாம இருந்த சரி - கொடு... அப்பனே!
இந்த ஏழைக் கிழவன் எனக்கெதிரா சாட்சியாயிட மாட்டான்.. வீணா கலவரப்பட்டுட்டேன்!
கூலிக்கு மேலே இது போனஸ்... ஆனாலும் அதிர்ஷ்டக் காரன்தான் நான்
இவன் மங்க்கி - த - சார்மர்ங்கிறதிலே துளி சந்தேகமும் கிடையாது.
ஹலோ.. ஹெட் குவார்ட்டர்ஸ்? யாரு... மல்லிஹனு? நான் எர்னி - டல்லே பேசறேம்ப்பா... என்னோட வாடிக்கையான இடம் தெரியுமில்லே... நீ சொன்ன 'பறவை' இங்கேதான் இருக்கு...
எர்னி... அவன் உன்னை தாண்டிப் போறச்சே பின்னாலேயே போ - இரகசியமா! அவனோட அட்ரஸ் வேணும்! உனக்கு ஒத்தாசைக்கு உடனடியா ஆள் அனுப்பறேன்.
போறேன்... ஆளை கடத்தும் பேர்வழிகளை எனக்கு கொஞ்சமும் பிடிக்கறதில்லை... அவனோட குடலை உருவிட்டு வரேனா இல்லியா பார்.
ரேடியோ கூப்பிடுது.. பிரின்ஸ்.. கண் முழிச்சி என்னன்னு கேளு..


வண்டி... 47? ஜோ... நான் மாக் பேசறேன்! சித்தே முன்னே மல்லிஹன் பேசினான். அவனோட ஆளுகிட்டேர்ந்து தகவல் வந்திச்சாம்.. நீங்க இப்போ இருக்கிற இடத்திலேர்ந்து ரெண்டு ப்ளாக் தள்ளித்தான் கடத்தல்காரனுக இருக்கிறாங்களாம்... பிரின்ஸை முயற்சி பண்ணச் சொல்லு... வாழ்த்துக்கள்.
அப்பாடா... வேற பிரசனை ஏதுமில்லாம திரும்பியாச்சு! க்ரைம் நாவல் எழுதறவங்களை எல்லாம் பார்த்து கேலியா சிரிக்கத் தோணுது... கொஞ்சம் சமர்த்து இருந்தா போதும்.. எந்த பிரச்னையையும் சமாளிச்சு தப்பிச்சுக்கலாம்!
SHOE REPAIRING
வீணா அலட்டிக்காதே..! இன்னிக்கு இல்லாட்டினாலும் நாளைக்கு ஜெயில் வாசம் உங்களுக்கு நிச்சயம்!
இந்த பூச்சாண்டி வேலை எல்லாம் எங்கிட்டே வேணாம்.. சீண்டிப் பார்க்கிறியா?
சீண்டிப் பார்க்க நீ என்ன எனக்கு மாமனு... மச்சானு? கடைக்குப் போனானே... இந்நேரம் திரும்பி வந்திருக்க வேணாம் - ஏன் வரலை.. யோசிச்சியா?
ஆமா..
அங்கே என்னதான் பண்ணிக்கிட்டிருக்கான்... சீக்கிரமே வந்து தொலைக்காம?
ஏய்... அப்படியே நில்லு.. உன் பாச்சா என்கிட்டே பலிக்காது
அடேச் சே
கவனத்தை திசை திருப்பிட்டு பாய்ஞ்சு அமுக்கிவிடலாம்னு நெனைச்சியா... அந்த தகிடுதத்தம்லாம் வேற எங்கேயாவது வச்சுக்க


அதோ... மங்க்கி வந்தாச்சு.. - தீர்ந்தது பிரச்னை!
நாசமா போக!
டக் டக்
மங்க்..! உள்ளே வந்து கேளு இந்த பிரலாபத்தை - தமாஷா இருக்கு!
ஓ.. வரேனே!
ஙே.. இந்தக் குரல்? - அப்போ வெளியே யாரு?
ஹலோ.. பிராண்டி.. இந்த பொறுக்கியை தெருவிலே பிடிச்சோம்... நீதான் அனுப்பி வச்சியாமே..
தோலை உரிக்காம... எலும்பை முறிக்காம கொண்டாந்திருக்கோம்னு எங்க தாராளத்தை நீ பாராட்டத்தான் வேணும்
இஷ்டமில்லைன்னா.. விட்டிரு!
கிண்டலா... கோமாளி பசங்களா... உங்களை -
முதல்லே... வாங்கிக்கோ.. - இதை!
டுமீல்


ஏய்.. விடு தொடாதே என்னை!
லெப்ட்டி... உன் நகவெட்டியை கொடு... பயலோட கபால தோலை உரிச்சிடறேன்!
விலகுங்கோ.. என் பங்குக்கும் கொஞ்சம் மிச்சம் வையுங்க.
ஏகப்பட்ட அமளி அங்கே நாம நைஸா காரியத்தை முடிச்சுக்கிட்டு கிளம்பிடலாம்
மிஸ்டர் ஜெர்டெல்ஷோன். இந்தப் பக்கமா வாங்க
வண்டி கொண்டாந்திருக்கீங்களா?
ஆமா.. ஆனா சார்ஜண்ட் டோடது!
நிலைமை சாதகமா இருக்கு.. உங்களை நேரே கப்பலுக்கு கொண்டு போயிடப் போறேன்
இல்லை.. வேறொரு இடத்துக்கு போவோம்
காஸ்மோஸோட பிரதிநிதி ப்ரூஸ் மர்ரோவோட எனக்கு ஒரு கணக்கு ரொம்ப நாளா தீர்க்கப்படாம இருக்கு... இன்னிக்கு தீர்த்துக்கிடலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்... அடுத்து அதுதான் என்னோட முதல் காரியம்
?!


உங்க ஒப்பந்தம்? கெடு நெருங்கிக் கிட்டிருக்கு. அதை மறந்திட்டு ஏதேதோ பேசுறீங்களே
மர்ரோவை உனக்கு தெரியாது... கெடு முடியறவரை பொறுமையா காத்திருக்கிற பெருந்தன்மையை அந்த நரிப்பயல்கிட்டே எதிர்பார்ப்பது முட்டாள்தனம்!
அரக்கத்தனம்தான் என்னோட துருப்புச் சீட்டு .... அதை பிரயோகிக்க வேண்டிய காலகட்டம் இது..
அட.. இவன் யார்ரா குறுக்காலே
இந்தாப்பா பார்த்து ஓட்டு.. அவசரம்தான்.. அதுக்காக நேரே பரலோகமே போயிடக் கூடாது!


அதேசமயம் தலைமை காஸ்மோஸின் பிரதிநிதி ப்ரூஸ் மர்ரோவின் அலுவலகத்தில்
காரணம் இல்லாம எங்களை பாதி தூக்கத்திலேர்ந்து எழுந்து வரச் சொல்லிஆள் அனுப்பியிருக்க மாட்டீங்கன்னு நம்பறோம் மர்ரோ!
காரணம் இருக்கு..
சரி நேரே விஷயத்துக்கு வருவோம்.. போஸ்லேவியன் பெட்ரோல் ஒப்பந்தம் பற்றி அதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடு இன்னமும் முடிவுறாத இந்த நேரத்தில் படு இரகசியமான சில காரணங்களுக்காக இப்போதே சில முன்மொழிவுகளை உங்கள் முன் வைக்கப் போறேன்
என்ன தமாஷ் பண்றீங்களா? ஜெர்டெல்ஹோஸுக்கு தரப்பட்டுள்ள கால அவகாசம் முடிவுற இன்னமும் பல மணி நேரம் இருக்குதே!
அத்தோட நீங்க சொல்ற மாதிரி இது ஒரு இரகசிய பேரமும் இல்லியே!
கொஞ்சம் இருங்க.. போயிடாதீங்க!
ம்ம்... ஜெர்டெல்ஷோன் பேரத்தை முடிக்க நேரத்துக்கு வரப் போறதில்லை... அப்படி ஒரு ஏற்பாடு பண்ணியிருக்கேன்..! இன்னுமா புரியலை?
புரியாமல் என்ன.. உம்மை பத்தி நெறையவே கேள்விப்பட்டிருக்கோம்
இப்போ நாம ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுக்கிட்டோம்னு நெனைக்கிறேன்.. இந்தாங்க.. பேரத்தை நடத்திடலாம் இல்லியா..
நடத்தலாம்.. ஆனா அதிலே நீங்க எந்த சலுகையையும் எதிர்பார்க்க கூடாது.. கறாரா சொல்லிட்டேன்.
போடா.. குறுக்கே வராதே... ஏதா, இருந்தாலும் அப்புறமா பேசிக்கலாம்
டாடி...


போஸ்லோவியன் பெட்ரோல் சம்பந்தமா காஸ்மோனின் எதிர்பார்ப்பு...
நான் ஓடிப் போயிடணும்.. இங்கேர்ந்து
பேயை கண்டவன் போல ஓடறானே.. ஏன்? வெளியிலே யாரோ காட்டு மிராண்டித்தனமா காரை நடைபாதையிலே ஏத்தி நிறுத்தியிருக்கிறதை தவிர...
டொம்!
நான் காரை பார்க் பண்ணி வச்சிருக்கிற விதத்தை கிண்டலடிக்கிறியா.. இதுக்கே நான் உன் முகரையை பெயர்க்கலாம்...
ஜெர்டெல்...
இதைதான் நான் சொல்ல வந்தேன் டாடி... நீங்க என்னை சொல்ல விடலை...
கொலை... கொலை விழப் போகுது... தடுக்கணும்
கண்டுக்காதீங்க.. போஸ்லோவியன் எகனாமிக் சர்வீஸுக்கும் 'காஸ்மோஸுக்கும்' இடையே நடக்கிற 'குடும்ப'ச் சண்டை.. நாம தலையிடறது முறையாகாது.
ஏய்.. எங்கே ஓடறே.. உன் கதை முடிஞ்சதுன்னு வச்சிக்கோ
வேண்டாம்.. ஜெர்டெல்ஷோன்.. கொஞ்சம் நான் சொல்றதை பொறுமையா கேளு..


ஒப்பந்தத்தை பேசி முடிக்க அதிகாரம் உங்க கிட்டேயா இருக்கு..
மர்ரோ ஒரு நாணயமில்லாத பேர்வழின்னு எங்களுக்கு நல்லாவே தெரியும்.
இல்லை.. மிஸ்டர் ஜெர்டெல்ஷோன்தான் அதிகாரபூர்வமான பிரதிநிதி...
கொஞ்சம் பிஸியா இருக்கார். இதோ.. இப்போ ரெடியாயிடுவார்..!
ஜெர்டெல்ஷோன்.. விட்டுடு என்னை.. ஆ.. ஐயோ -
ஆச்சு.. முடிஞ்ச மாதிரிதான் - ஆங்.. இதோ முடிஞ்சிட்டுதுன்னு நெனைக்கிறேன்!
ம்ம்.. நான் ரெடி... போஸ்லேவியன் பெட்ரோல் சம்பந்தமா எங்களுடைய புரபோசல் என்னன்னா...
ஒகே.. நான் பார்னேயோட நெலைமையை தெரிஞ்சுக்கறேன்
யாரு.. பிரின்ஸா.. நல்லவேளை.. அகப்பட்டே... இப்போ என்ன செய்யறதுன்னே புரியலை... என்னோட வேஷம் கலைஞ்சுட்டுதுப்பா!
!?



என்ன சொல்றே.. வேஷம் கலைஞ்சுட்டுதா? அதெப்படி? உண்மையான ஜெர்டெல்ஷோன் இதோ இங்கேல்லே இருக்கிறார்..
அப்படீன்னா அவரை கண்டுபிடிச்சிட்டியா? ஆமு... என்ன பிரயோஜனம்.. நம்ம சாயம் வெளுத்திட்டது... ரெண்டு பயலுக வந்து எங்களை தட்டி எழுப்பி ஏமாத்தவா பார்க்கிறீங்கன்னு மிரட்டறானுக..
ரெண்டு பேரா..? அப்போ அது அந்த 'க்ளாரியன்' ஆசாமிங்களாத்தான் இருக்கும்.. இருக்கட்டும் நான் சொல்றபடி செய்.. விபரமா கேட்டுக்க
ம்ம்... சரி.. ம்ம்..
ஓஓஓஓ... கே
பார்த்தீங்களா.. இத்தினி போட்டோவையும் கண்ணிலே விளக்கெண்ணையை ஊத்திக்கிட்டு ஆராய்ஞ்சு பார்த்திட்டோம்.. உங்க கூட இருக்கிற ஆளுக்கும் உண்மையான ஜெர்டெல்ஷோனுக்கு மிடையே நூற்றுக்கும் மேலே இருக்கு வித்தியாசம்
எங்களை யாரும் ஏமாத்த முடியாது
நீங்க எங்களை சரியா புரிஞ்சுக்கலைன்னு நெனைக்கிறேன் -


எதுக்காக உண்மையை மறுக்கணும்? அவசியமில்லை... பேசாம ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திடலாம்.
அப்போ.. நீங்க உண்மையான ஜெர்டெல்ஷோன் இல்லையன்னு ஒத்துக்கிறீங்களா?
ஆமா.. வாங்க என்னோட ஆபீஸுக்கு போவோம்.. வாக்கு மூலத்தை டிக்டேட் பண்றேன்
எப்போதுமே சத்தியம்தான் ஜெயிக்கும்!
இது துரோகம்.. கோழைத்தனம்..
உள்ளாற போங்க..
வாக்குமூலத்திலே நீங்க கையெழுத்து போட்டுத் தரணும்
பார்னே.. வேண்டாம்.. சொல்வதைக் கேள்
கொஞ்சம் சும்மா இருங்க
மடேர்
டே.. இது - அலுவல் அறையில்லை.. ராட்சஸ சைஸ் அலமாரி!
யேய்... கதவை திற...
நான் ஒரு ட்யூப் லைட்... உங்க தந்திரம் இப்போதான் புரியுது.
இவனுக கத்தி ஆளுங்களை கூட்டறதுக்கு முன்னாடி நாம நைஸா நழுவி ஓடிடலாம் - வாங்க
ஏய்.. கஸ்மாலங்களா.. தொறங்கடா..
டம்! டம்!
ஏன்.. வாள் வாள்னு கத்தறே... சும்மா கிட!


உண்மையான ஜெர்டெல்ஷோனை கண்டு பிடிச்சிட்டதா பிரின்ஸ் போன்லே சொன்னான். திட்டமிட்டபடி கான்பரன்ஸுக்கு முன்னாடி உள்அறையிலே ஆள் மாறாட்டம் பண்ணிக்கலாம்...
ஜோர்.. வாங்க அங்கே போவோம் - இப்பவே!
தெய்வாதீனமான செயல்.. நம்மோட திட்டம் இப்படி சுலபமா முடியும்னு நான் நம்பவேயில்லை!
அவசரப்பட்டு வாயை விடாதீங்க.. என்னோட மாலுமி டிரஸ்ஸை எப்போ எடுத்து மாட்டிக்கிறேனோ அப்போதான் எனக்கு நிம்மதி பிறக்கும்
விரட்டறேனேன்னு நினைக்காதீங்க மிஸ்டர் ஜெர்டெல்ஷோன்.. சட்டுப்புட்டுன்னு ஒப்பந்தத்தை முடிச்சுக்கிட்டு கிளம்புங்க... அங்கே இன்னொரு காரியம் காத்துக்கிட்டிருக்கு!
வந்த காரியம் முடியணும்.. எனக்கு இதுதான் முக்கியம்.. இன்னொரு கப் காப்பி கிடைக்குமா - சூடா?
இதோ.. தரேன்!
இந்த காராக்கிருகத்தை விட்டு வெளியேறவே முடியாதோ.. கடவுளே..
சோர்ந்து போயிடாதே... இரு.. இந்த பூட்டை நோண்டிப் பார்ப்போம்..
பித்தலாட்ட பேர்வழியின் முகமூடியை கிழிச்சு க்ளாரியனின் பெருமையை நான் நிலைநாட்டமா விடப்போறதில்லை, என்னோட பேனாகத்தி ஒடைஞ்சு போச்சு.. உன்னுடையதை கொடு.,
எதுக்காக இப்படி ஆள்மாறாட்டம் பண்ணிக் கிட்டிருக்காங்க? காரணம் இன்னமும் விளங்கலியே!
அதைப்பற்றி அப்புறமா அலட்டிக்குவோம்.. முதல்லே மோசடியை வெளிக் கொண்டாரணும்..


கான்பரன்ஸ் திட்டமிடப் பட்டிருந்த அரங்கத்தில்...
தங்கள் வரவினால் பெருமையடைகிறோம் பிரபு! ஆனால்... தாங்கள் இவ்வளவு சீக்கிரம் வருவீர்கள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... ஏற்பாடுகள் இன்னும் முழுமையாக செய்து முடிக்கப்படவில்லை!
இங்கே இருக்கிற சூழ்நிலைக்கு என்னை பழக்கப் படுத்திக்கலாமேன்னு சீக்கிரம் வந்துட்டேன்.. நண்பரே!
பிரின்ஸ் ஜெயிச்சிட்டிருந்தா ஏன் இன்னமும் அவங்க வந்து சேரலை? நேரமோ பறந்திட்டிருக்குது
டைரக்டர் என்னை பார்த்தாச்சு... என்னோட 'ரோல்' இத்தோட முடிஞ்சுட்டுது..
சுருக்கமா சொன்னா இனியும் நான் ஆள்மாறாட்டம் பண்ணிக்கிட்டு அல்லய வேண்டியதில்லை... உங்க ஆளு வந்து மேடையேறப் போறார்.. ஆளை வுடுங்க... நான் போறேன்!
போகாதே!
இப்பிடியே நீ தெருவிலே போயிட முடியாது... அதுக்கு நீ முதல்லே பார்னேயா மாறணும்.. அது இப்போ நடக்கிற காரியமில்லை... ஒரு வேளை எங்க மாஸ்டர் வந்து சேரலைன்னா நம்ம நாடகம் இதே ரீதியிலே தொடரும்... கான்பரன்ஸிலே நீதான் பேசப்போறே!
என்னது?
போஸ்லேவியன் கம்பளி வேலைப்பாடு பற்றியா? தொலைஞ்சது போ.. எனக்கு அதைப்பத்தி ஒரு அட்சரம் கூட தெரியாதேப்பா
ஒரு மணி நேரம் இருக்கு கத்துக்கோ.. இந்த நெருக்கடியை யெல்லா எதிர்பார்த்து தயாரா வந்திருக்கோம்!


இதோ.. நானும் கையெழுத்து போட்டாச்சு!
ஒப்பந்தம் நல்லபடியா முடிஞ்சுட்டுது... இதைக் கொண்டாட வேண்டாமா..
ஓ.. ஷ்யூர்!
அதை அப்புறமா வச்சுக்கலாம்... அங்கே இன்னொரு அவசர வேலை காத்திக்கிட்டிருக்கு...
பிடிங்க ஓட்டம்...
எங்க திருப்பிச் சொல்லு... பதிமூன்றாம் நூற்றாண்டில் நேஷனல் ஸ்கூல் ஆஃப் டேப்ஸ்ட்ரியை நிறுவிய மூன்று நிபுணர்களையும் போஸ்லேவியன் அரசர் வால்டெமர் தன்னுடைய...
ஒருத்தனு எப்படி இத்தனையையும் ஒப்பிக்க முடியும்?
ஹால் நிரம்பி வழியுது.. நாம ஆரம்பிச்சாகனும்!
ஆனா.. நான் இன்னும் ரெடியாகலையே... பிரின்ஸ் இந்த நேரத்திலே எங்கே போய்த் தொலைஞ்சே?
STAGE
ஆனால் மன்ஹாட்டன் சாலையில் போக்குவரத்து நெரிசல் பிரின்ஸ் குழுவினரை முடக்கிப் போட்டது..
கடவுளே.. அஞ்சு நிமிஷத்திலே பத்து மீட்டர்கூட நகர முடியலியே!
பதறாதே... இளைஞனே.. நெரிசல் மிக்க மையத்தை நாம் தாண்டியாச்சு..
POLICE
வாங்க இறங்கி ஓடுவோம்.. சீக்கிரம் போய்ச்சேர அதுதான் உத்தரவாதமான வழி..
ஆனா.. வந்து..


யே.. யாரது.. வண்டியை நடுரோட்டிலே நிறுத்திட்டு இப்பிடி ஓடினா என்ன அர்த்தம்
அவன் கிடக்கான்.. நீங்க ஓடியாங்க ஜெர்டெல்ஷோன்!
லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்.. போஸ்லேவியன் கம்பளி வேலைப்பாட்டில் நிபுணத்துவமுடைய மிஸ்டர் ஜெர்டெல்ஷோனை உங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமையடைகிறேன்... அவர் இப்போது சொற்பொழிவாற்றுவார்...
ம்ம்... அனைவருக்கும் மாலை வணக்கங்கள்! எல்லோரும் சௌக்கியமா இருக்கீங்களா..? நல்லது.:. இந்த கம்பளி வேலைப்பாடு இருக்கே... ம்ம்.. அதாவது புராதன கலை இது...
அப்பாடா.. ஒரு வழியா வந்து சேர்ந்திட்டோம்!
ம்ம்.. பல நூற்றாண்டுகளுக்கு முன்னாடி.... யாரு.. ம்ம்.. போஸ்லேவியன் மன்னர்.. சரியாத்தான் சொல்றேன்னு நெனைக்கிறேன்.. அவர் என்ன எண்ணினார்னு.. ஆமா அவர் என்ன பண்ணினார்?.. ஹுக்கும்.. ஆங்.. மூணு ஆசாமிங்க.. அவங்களை..



பார்னே.. எல்லாம் முடிஞ்சுட்டுது... நாங்க வந்திட்டோம் -
ஓ..!
ஒரு சின்ன இடைஞ்சல்.. எல்லோரும் மன்னிக்கணும்..
நோ.. ரெண்டு நிமிஷத்திலே வந்திடறேன்..
பிரின்ஸ் இப்படி சிக்கல்லே என்னை மாட்டி விட்டுட்டீங்களேப்பா... திண்டாடிப் போயிட்டேன்.
ஏன் புலம்பறே.. அதான் ஒரு வழியா முடிஞ்சுட்டுதே!
மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்!
திருத்துங்கள்.. இதோ நாங்க வந்து விட்டோம்.. இனியும் நீங்க பித்தலாட்டம் பண்ண முடியாது..
அடப்பாவிங்களா.. இங்கேயும் வந்திட்டீங்களா!
உங்க மோசடியை 'க்ளாரியன்' அம்பலப்படுத்தாம விடாது
இதோ.. இப்பவே மேடையிலே போய் பொதுமக்கள் கிட்டே உங்களுடைய சூழ்ச்சி நாடகத்தை விளக்கி...
..இங்கே நான் ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் ஈட்டிய வெற்றிக்கு காரணமே தேவையான உதவியை அயலாரிடமிருந்து உரிய தருணத்தில் கோரிப் பெற்றதுதான். நெருக்கடியிலும் சோர்வுறாது தோள் கொடுத்த அந்த தோழமை பாராட்டிற்குரியது... நட்புறவுதான் வெற்றிக்கு இன்றியமையாத முதல்படி...




சிரிப்பின் நிறம் சிவப்பு!
ஆஆஆ...
காயம்பட்ட காட்டெருமையின் ஓலம்!
அது எப்படி காட்டெருமை தான் என்று நிச்சயமாக சொல்றீங்க...?
வேறு என்னவாக இருக்க முடியும்?
அது எங்கப்பாவின் காட்டுக் கூச்சல்! இந்தனை நேரமாகியும் நான் வீடு திரும்பவில்லை என்பதால் கொதித்துப் போயிருக்கிறார்!
அப்பாவுக்கு நான் நேரம் கழித்துப் போனால் பிடிக்காது! நீ தான் என்னை வீட்டுக்குப் போக விடாமல் தடுக்கிறாய்!
உங்கப்பனுக்கு பிடித்தால் என்ன - பிடிக்காமல் போனால் என்ன? உனக்குப் பிடிக்கிறதா என்பதுதான் கேள்வி!
பேச்சில் உங்களை மிஞ்ச முடியாது டியர்...
நீங்கள் வைத்திருக்கும் பிரியம் - எனக்கு நரை விழுந்த பிறகும் கூட நிலைக்குமா டார்லிங்?
நிச்சயமாக!
உன்னையும் அதே கேள்வி கேட்கிறேன் முதுகெல்லாம் வளைந்து கம்பை பிடித்துக் கொண்டு நான் நடக்கும் போதும் கூட நீ என்னை விரும்புவாயா? சொல்!
அது சீக்கிரத்திலேயே நேரிந்து விடும் என்று நினைக்கிறேன்!


இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ் -19-
கடத்தல்காரன்கள் ரெண்டு பேர் இன்று சுங்க இலாகா அதிகாரிகளின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு வைரங்கள் கடத்தி வரப் போவதாக நமக்கு துப்பு கிடைத்துள்ளது ஆல்பி.
விமான நிலையம்
சர்வதேச வருகைகள்
வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவது மாதிரியான கேஸ் இது!
அந்தக் கடத்தல்காரன்கள் மாறுவேஷம் போடுவதில் கில்லாடிகள் என்பது மட்டும் தான் நமக்குத் தெரியும்! இந்தக் கூட்டத்தில் அவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?
சுங்க சோதனை
ம்ம்ம்... அடுத்து
இடிக்காமல் வா பெண்ணே!
யோவ்! என்னோட மனைவி வயிற்றுப் பிள்ளையுடன் சிரமப்படுவது தெரியலை?
என் கண்களில் சந்தேகப் படும் படியான ஆசாமிகள் யாருமே படலை இன்ஸ் பெக்டர்!
நான்சென்ஸ்! என்னைப் பின் தொடர்ந்து வா!
வைரம் கடத்தியதற்காக உங்களைக் கைது செய்கிறேன்!
எ-என்னது?
நான் நினைத்தது சரிதான்! திறமையான மாறுவேஷம்!
ச - சரணடை கிறோம்!
பாரேன்... போலி வயிற்றுக்குள் வைரங்கள்!
எப்படி சார் கண்டுபிடித்தீர்கள்?
அதை நீங்களும் கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள்!


புரட்சிக்கொரு பயிற்சி!
இரண்டாவது உலகப் போரில், நேச நாட்டுப் படைகளிடம் நாஜிகள் சரணடைவதற்கு முன்பே பல இடங்களில் பல தோல்விகளைத் தழுவினர். நாஜிப் படையினரால் அடக்கியாளப்பட்ட ஐரோப்பிய மக்கள் சுதந்திரம் பெறப் போராடினார். அப்படிப்பட்டதொரு நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் ''மின்னல் படையினர்'' என்று அழைக்கப்படும் அசகாய அதிரடிப்படை வீரர்கள் ''புரட்சிக் கொரு பயிற்சி'' தரும் ஆசான்களாகவும் மாற நேரிட்டது!
அத்தியாயம் 1. பரம ரகசியம்
1944ம் ஆண்டு ஜுலை திங்களில் ஒரு நாள் - இத்தாலிய எல்லைப் பகுதியில் இந்த ரோந்துப் படையினர் போர் முனையிலிருந்து அமைதியான பகுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்...
துப்பாக்கி முழக்கங்களுக்கு தற்காலிகமாக டாடா!
யெஸ்! காஸினோ தாக்கப் பட்டதி லிருந்தே நமக்கு ஓய்வே கிடைக்க வில்லை!
மரங்கள் அடர்ந்த பகுதிக்குள் நுழைந்த போது மூன்று அதிரடிப் படை வீரர்கள் அவர்களைக் கண்டனர். அவர்களில் ஒருவரை போலந்து படையின் சார்ஜென்ட் அடையாளம் கண்டு கொண்டான்...
மெய்யாலுமே நீங்கள் தானு மிக் பால்ஸ்கி பிரபு?



ஹென்றி கரகோவ்! நீ எப்படி இருக்கே? ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வார்சாவை எதிரிகள் சுற்றி வளைத்த போது லோட்ஸில் மாட்டிக் கொண்டதாகக் கேள்விப் பட்டேன்..!
யெஸ்! 13வது படைப் பிரிவில் லெப்டினன்ட் ஸ்மோல்கா அணியின் கீழ் அப்போது இருந்தேன்!
இந்தப் பெயரைக் கேட்டதும் மிக்கியின் முகம் சிவந்தது..
ஸ்மோல்கா! அவனை அடியோடு நான் வெறுக்கிறேன்! கோழைகள் போல் எதிரிகளிடம் சரணடைந்தது அவனுடைய தலைமையிலிருந்த அணிதானே?
யெஸ். ஆனால் அந்த சமயத்தில் நான் அந்த அணியில் இல்லை! நீங்கள் எப்படி, பிரபு?
'மின்னல் படையினர்' என்று அழைக்கப்படும் அதிரடிப் படையில் இருக்கிறேன்! எங்களுடைய கேப்டனுக்காக காத்திருக்கிறோம்!
மின்னல் படையினரா?! வாவ்!
அவர்களைப் பற்றிக் கேள்விப் படாதவர் யார்தான் இருக்க முடியும்?
சற்றைக்கெல்லாம் கரகோவ் அங்கிருந்து சென்றான். மிக் தன் சகாக்களான ஜான் ஸ்மித் மற்றும் ஜுலஸ் கார்சியாவிடம் திரும்பி வந்தான்...
எங்களுடைய குடும்ப எஸ்டேட்டில் வேலை செய்து வந்தான். போலந்தை நாஜிகள் ஆக்கிரமித்த உடன் ராணுவத்தில் சேர்ந்து விட்டான்!
அது சரி, கேப்டன் மாத்யூஸ் வர இன்னும் நேரமாகுமா?
கேப்டன் மாத்யூஸ் அருகில் உள்ள பதுங்கு தளத்தில், இங்கிலாந்திலிருந்து வந்திருந்தொரு கர்னலுடன் பேசிக் கொண்டிருந்தனர்..
கிழக்கு ஐரோப்பாவில் போர் முனைக்கு முக்கிய பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னீர்களே, சார்...



...ஆனால் எங்கே என்று சொல்ல வில்லையே!
நீங்கள் புறப்படும் போது சீல் வைத்த ஆணை ஒன்று கொடுக்கப்படும் மாத்யூஸ்! தேவையற்ற பேச்சைக் குறைக்கவே இந்த ஏற்பாடு!
உங்களுடன் செல்லவிருக்கும் மூன்று வீரர்களைப் பற்றித் தெரிந்து கொண்டேன்!
அவர்கள் மிகுந்த திறமை சாலிகள் தான் என்று என்னால் உறுதி கூற முடியும், சார்!
அணியினருடன் வந்து சேர்ந்து கொண்டார் மாத்யூஸ் -
கேப்டன், இங்கிருந்து நாம் எங்கே போகிறோம்?
சில நிமிடங்களில் டிரக் ஒன்று நம்மை விமான தளத்திற்கு அழைத்துச் செல்லும் அங்கிருந்து இன்றிரவு பறந்து செல்லப் போகிறோம்!
ஆச்சரியத்துடன் கேப்டன் மாத்யூஸைப் பார்த்தனர்...
எங்கே போகிறோம் கேப்டன்?
விமானத்தில் ஏறும் வரை எங்கே போகிறோம் என்பது நமக்குத் தெரியாது!
இரவு சரியாக மணி 9 ஆன போது, பாரா சூட் வீரர்களைச் சுமந்து செல்ல வசதியாக மாற்றியமைக்கப்பட்ட ஹாலி பேக்ஸ் குண்டு வீச்சு விமானம் இத்தாலியப் பகுதியிலிருந்து புறப்பட்டுச் சென்றது...
முத்திரையிடப் பட்ட உத்தரவை உடைத்துப் பார்க்க இதுதான் நேரம்!


மாத்யூஸ் கவரை உடைத்து உத்தரவைப் படிக்கத் துவங்கினார்...
வார்சா என்ற சொன்னீர்கள்?
யெஸ். வார்சா தான்! அங்கு தான் நாம் போகிறோம்!
மாத்யூஸ் மேலும் தொடர்ந்தார்...
போலந்து தலைநகர் நோக்கி நாஜிக்களை ரஷ்யப் படையினர் விரட்டி வருகின்றனர். தலைநகரில் உள்ள புரட்சிப் படையினர் நாஜிக்களை எதிர்த்திடத் தயாராக உள்ளனர். போர் - கோமரோஸ்கி என்ற ஜெனரல் தலைமை தாங்கியுள்ளார். ஆனால் அவர்களுக்கு ஜெர்மானியர்களை எதிர்த்துப் போரிட பயிற்சி அளிக்கக் கூடிய நிபுணர்கள் தேவை - அதற்குத்தான் நாம் போகிறோம்!
விமானம் எதிரிகள் ஆக்கிரமிப்பிலிருந்த வடக்குப் பகுதி மீது பறந்தது. மாத்யூஸ் செய்ய வேண்டிய பணிகள் பற்றி அவர்களிடம் விளக்கினார்.
''பிளேம் பார்டு'' என்ற புனைப் பெயர் உடைய ஆளுடன் முதலில் தொடர்பு கொள்ள வேண்டும். அதன் பிறகு நமது கை வண்ணத்தைக் காட்டணும்! - ஜூலஸ் நீ வெடிமருந்து நிபுணன். ஜான் - நீ மெக்கானிக் வேலைகளில் கில்லாடி - மிக் - நீ நம்முடைய மொழி பெயர்ப்பாளனாக செயல்படணும்!
விமானியும் கூட பறக்கத் துவங்கிய பின்னரே தன்னிடம் கொடுக்கப்பட்ட ஆணையை உடைத்துப் பார்த்தார்..
விமானத்தி லிருந்து குதிக்க வேண்டிய இடம் வார்சாவின் தென் மேற்குப் பகுதி!
எதிரிகளின் கட்டுப்பாட்டு பகுதி மீது தொடர்ந்து தாக்குதல் நடப்பதால்
நாஜிக்களின் விமானப் படைக்கு நம்மை வரவேற்க நேரமிராது!
எப்படிப்பட்ட அனுபவம் காத்திருக் கிறதோ -தெரியவில்லை!



ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் -
அங்கு தெரிவது வியன்னா நகரம்! அதைச் சுற்றிலும் கடுமையான சண்டை நடக்கிறது.
இல்லாவிட்டால் இந்நேரம் நாம் பெரிய பிரச்சனையில் சிக்கி யிருப்போம்!
யெஸ், ஜெர்மானியர் களுக்கு நம்மை கவனிக்க அவகாச மில்லை!
வியன்னாவைக் கடந்த பின்பு... செக்கஸ்லோவாகியா நாட்டையும் கடந்தனர்... இறுதியில் விமானத்தின் ஒலி பெருக்கியில் ஒரு சப்தம் எழுந்தது...
பைலட் பேசுகிறேன் கேப்டன் மாத்யூஸ்..! நாம் போலந்து மீது பறந்து கொண்டிருக் கிறோம். இப்போ நாம்..
ஒலி பெருக்கியில் ஓசை முடியும் முன்பே பைலட்டின் அலறல் சப்தம் கேட்டது...
இரவு நேரப் போர் விமானம்! தாக்குகிறது!
ஹாலி பேக்ஸ் விமானம் சுதாகரிக்க வாய்ப்பு அளிக்காமல் அந்த விமானம் சுடத்துவங்கியது!
மாத்யூஸ் - நாம் வசமாக சிக்கிக் கொண்டோம்! சீக்கிரம் குதியுங்கள்! குதியுங்கள்!
ரட்டட்டட்ட


வெற்றிகரமாக அதிரடிப்படையினர் விமானத்திலிருந்து குதித்தனர்...
கிழிஞ்சது போ! அந்த ஜெர்மானிய விமானம் நம்மை விடாது போலிருக்கே!
எதிரி தாக்கியதில் விமானத்தின் இறக்கை ஒன்று துண்டிக்கப்பட்டது! விமானம் தரையை நோக்கி பல்டி அடிக்கத் துவங்கியது. இதைக் கண்டும் எதிரி விமானிக்குத் திருப்தி ஏற்படவில்லை...
ஹேய்! நான்கு பயல்கள் விமானத்திலிருந்து குதித்து விட்டனர்!
கீராங்!
நடுவானில் மிதந்து கொண்டிருந்த பாராசூட் வீரர்களை நோக்கி ஜெர்மானிய விமானம் திரும்பியது - ஆனால் அப்போது விதியும் குறுக்கிட்டது! வானில் உருண்டு வந்த ஹாலி பேக்ஸ் விமானம் எதிரியின் பாதையில் குறுக்கிட்டது! மிகப் பெரிய வெடி சப்தத்தோடு இரண்டும் மரணத்தைத் தழுவின -
டமால்!...
பின்னிப் பிணைந்த நிலையில் இரு விமானங்களும் தரையை நோக்கித் திரும்பின!


அத்தியாயம் 2. குரங்குச் சேட்டை
போர் காலத்தில் நாஜிப் படையினர் போலந்து நாட்டில் பல்வேறு ஆராய்ச்சி மையங்களை அமைத்திருந்தனர்! - அவற்றில் ஒன்று கிருமிகளை யுத்த முறையாகப் பயன்படுத்தத் திட்டமிடும் ஆராய்ச்சிக் கூடம்!
ஆராய்ச்சிக்குத் தேவையான மிருகங்கள் மிகக் குறைந்த அளவே உள்ளன புரபஸர்!
இதுதான் நம்மிடமுள்ள கடைசி சிம்பன்சி குரங்கு!
கவலை இல்லை. நம் திட்டத்திற்குத் தேவையான
எல்லா சோதனைகளையும் அநேகமாக முடித்து விட்டேன்!
ஆராய்ச்சி நிலையத்தின் தலைக்கு மேலே பற்றி எரியும் உலோகம் பாய்ந்து வந்தது...
புரபஸர் -சிம்பன்சி கூண்டைத் திறந்து...
மறுகணம் காதைச் செவிடாக்கும் சப்தம் ஆராய்ச்சி நிலையத்தின் ஒவ்வொரு கட்டிடத்தையும் நடுங்கச் செய்தது..
என்ன இழவு இது...?
டம்! டமால்!


விமானத்தின் எரிந்த பகுதி ஒன்று அங்கு காவலர்கள் தூங்கிக் கொண்டிருந்த பதுங்கு தளத்தின் சுவரைத் தரைமட்டமாக்கியது..
கடவுளே! என்ன நடந்தது?
அடுத்த நொடியில் விமானங்களும் பதுங்கு தளமும் கொளுந்து விட்டு எரிந்தன.
வெளியே போங்க புரபஸர்! நம் மீது குண்டு வீசுகிறார்கள்!
பதட்டமடைந்த விஞ்ஞானிகள் கட்டிடத்தை விட்டு வெளியே வந்தனர்...
அங்கே பார் -பாராசூட்கள்! இது எதிரிகளின் தாக்குதல் தான்!
பதட்டமடைந்த ஆராய்ச்சியாளர்கள் ஓடினார். ஆனால் அவர்கள் ஓடத் துவங்கும் முன்பு இடிபாடுகளுக்கிடையே இருந்து எழுந்த வெடிச் சப்தம் நாலாபுறம் தோட்டாக்களை அள்ளித் தெளித்தது.
ஐயோ! ஆயுதக் கிடங்கே வெடித்துச் சிதறுகிறது!


"வாண வேடிக்கை" நடந்து கொண்டிருக்கும் இடத்திற்கு மேலே 50 அடி உயரத்தில் - ஒரு சிறிய உருவம் வந்து கொண்டிருந்தது...
மிக் பால்ஸ்கி, உன் கதை இப்போது அம்பேல்!
பூம்!
வானில் பறந்து வந்த தோட்டாக்களால் மிக்கின் பாராசூட் சல்லடையானது.
டமால்!
சூடான வரவேற்பு காத்திருக்கும்! பாரா சூட்டை துளைத்த தோட்டாக்கள் என் உடலைப் பதம் பார்க்காமல் விட்டது அதிர்ஷ்டம் தான்..!
ஆயுதக் கிடங்கில் இருந்த கடைசி குண்டும் வெடித்துச் சிதறிய போதும் மிக் காயமடையாமலேயே இருந்தான் - ஆனால் அவன் எழுந்திருக்க முயன்ற போது -
ஜெர்மானியர்களே! நிலையமே தீக்கிரையாகி விட்ட போதிலும் இவன்கள் மட்டுமே எப்படியோ தப்பி விட்டனர்!
சரமாரியாகப் பொழிந்த தோட்டாக்கள் மிக்கைச் சுற்றியே முத்தமிட்டன. படுத்துக் கிடந்தபடி மிக் தன் ஸ்டென் கன்னை எடுத்தான்...
முதலில் சுட்டு விட்டுத்தான் கேள்விகள் கேட்பான் போலும்! நானும் அதே போல் செய்ய வேண்டியது தான்!




அதே நேரம் மற்ற மூவரும் ஆராய்ச்சி மையத்திற்கு வெளியே தரையிறங்கி இருந்தனர்
துப்பாக்கிச் சப்தம் கேட்கிறதே!
ஸ்டென் கன்னின் முழக்கமும் வருகிறது! மிக் ஆபத்தில் இருக்க வேண்டும்!
திறந்து கிடந்த வாசல் வழியாக ஆராய்ச்சி மையத்தினுள் ஓடினர்...
இது காவலர்கள் தங்குமிடம்! ஆனால் எல்லாம் காலியாக கிடக்கிறதே!
தங்களது தோழன் ஆபத்தில் சிக்கியிருப்பதைக் கண்டனர்..
அதோ - அங்கே மிக் இருக்கிறான்!
ஜெர்மானியர்கள் தங்களுக்குப் பின்னால் சிலர் ஓடிவரும் சப்தத்தைக் கேட்டனர்...
அச்சச்சோ! மேலும் சில இங்கிலாந்துக் காரர்கள்!
உடனே திரும்பிச் சுட முயன்றனர்!


மரணத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியவர்களைக் காண மிக் தலையை உயர்த்தினான்...
உனக்கு ஒன்றுமில்லையே?
யெஸ் ஜூல்ஸ்! ஆனால் நீங்கள் மட்டும் கொஞ்சம் லேட்டாக வந்திருந்தால் நான் சுக்கா ரோஸ்ட் ஆகியிருப்பேன்!
வீய்ய் வீல்ல்
ஹேய்! அந்தக் கட்டிடத்திலிருந்து ஒரு குழந்தை அழும் சப்தத்தைக் கேட்டேன் - அங்கே கண்ணாடியை உடைத்துப் பார்ப்போம்!
உள்ளே நெருப்பும் புகையும் மண்டிக் கிடந்த அறையிலிருந்து ஒரு சிறிய உருவம் வெளியே பாய்ந்து வந்தது..
யார் அது...? என்ன இது..?
குழந்தையாகக் கூட இருக்கும்! பார்த்தாயா - உன் ஜாடை அப்படியே உள்ளது!
ஹா! ஹா! ஹா! குழந்தை என்று தானே சொன்னாய்! அது உன்னுடைய
பசங்களா -வேடிக்கைக்கு இது நேரமல்ல. ஜான் - குரங்கை கீழே இறக்கி விடு



அவர்கள் வெளிப்புற வாசலை நோக்கி ஓடிய போது எந்தவொரு எதிர்ப்பையும் சந்திக்கவில்லை. ஆனால் அவர்களைப் பின் தொடர்ந்து ஒரு உருவமும் வந்தது...
ஹேய்! இந்த சிம்பன்சியும் நம்முடன் வர விரும்புகிறது!
இவனையும் நம்முடன் கொண்டு செல்வோம்!
புயல் நமது "ஜானை"ப் போலவே இருப்பதால் "ஸ்மித்" என்றே கூப்பிடுவோம்!
ஆனால், கேப்டன் மாத்யூஸ் மறுத்து விட்டார்..
நோ, ஜான்! மிருகக் காட்சி சாலையில் இருக்கவேண்டிய ஒன்று நம்முடன் இருந்தால் நம் வேகம் குறைந்து விடும்!
ஆராய்ச்சி நிலையத்திற்கு வெளியே...
நாம் எந்த இடத்திலிருக் கிறோம் என உன்னால் யூகிக்க முடிகிறதா, மிக்?
கீழே வரும் போதும் வலது புரத்தில் ஒரு ஆறு செல்வதைப் பார்த்தேன். எனவே இது விஸ்டுலா பகுதியாக இருக்க வேண்டும்!
விரைவில் அந்த ஆற்றை அடைந்தனர் - அங்கே ஒரு சிறிய படகுத் துறை இருந்தது!
ஜான் படகை ஓட்டட்டும் -கால்வாய்கள் இருக்கும் நாட்டைச் சேர்ந்தவன் தானே?
சரக்கு ஏற்றும் படகு நிற்கிறது! இந்தப் பகுதி விஸ்டுலாதான் என்றால் இப்படியே போய் நமது 'பிளேம் பார்டை' சந்திக்க வேண்டியதுதான்!


விரைவில் படகைக் கிளப்பினர்..
நாம் வந்து இறங்கிய இடத்தில் என்ன இருந்திருக்கும்?
நாஜிகளின் ஆய்வுக் கூடமாக இருக்கும் கேப்டன்! அங்கு நான் மீட்ட சிம்பன்சிக் குரங்கு அவர்களுடைய சோதனைக்காக வைக்கப்பட்டிருந் திருக்கும்!
ஜான் வேதனையில் பேசினான்
கொஞ்ச நாட்களில் அந்த சிம்பன்சியை சோதனைக்குப் பயன்படுத்தி கொடூரமாகக் கொன்று விடுவார்கள். அந்தப் 'பயலை' நான் அங்கேயே விட்டு வந்திருந்தால் கூட தீயில் கருகி செத்துப் போயிருப்பான் - சோதனையில் சித்ரவதைப்பட்டு சாவதைவிட அது எவ்வளவோ மேல்!
படகு நகர்ந்தபோது குரங்கும் படகில் தாவி ஏறியதை யாருமே கவனிக்கவில்லை. கிராமப்புறத்தை யொட்டிச் சென்ற ஆற்றுப் பாதை மிக் பால்ஸ்கிக்கு நன்றாகவே தெரிந்திருந்தது...
யெஸ். நாம் விஸ்டுலா பகுதியில்தான் இருக்கிறோம். கரையில் இருக்கும் இந்த வீட்டைப் பாருங்கள்! இதுதான் ஸ்மோல்கா பயலின் வீடு!
ஒரு திருப்பத்தில் மற்றொரு படகு அவர்களைத் தொடர்ந்தது..
ஹேய்! அது ஜெர்மானியர் களின் ரேங்கிப் படகு!


பீரங்கிப் படகின் மேல் தளத்திலிருந்து ஒலி பெருக்கியில் சப்தம் எழுந்தது..
ஹால்ட்!
அந்தப் பயல் படகை நிறுத்தும்படிச் சொல்கிறான்!
படகைச் செலுத்தும் கேபினில் இருந்த ஜாண், கேப்டன் மாத்யூஸைப் பார்த்தான்..
பீரங்கிப் படகு மாமூலான ரோந்தில் சுற்றி வருகிறதா? நாம் என்ன செய்வது கேப்டன்?
என்ன நடந்தாலும் சரி - வேகத்தைக் குறைத்து விடாதே! படகை நிறுத்தினால் நமது ஆட்டம் க்ளோஸ்!
படகை படுவேகத்தில் செலுத்தினான் ஜான் ஸ்மித்...
தப்பியோட முயற்சிக்கிறார்கள்! சுட்டுத் தள்ளு! சுட்டுத் தள்ளு!
எதிரிகள் அதிவேகமாக பீரங்கியால் சுட்டனர்...
ஹா! ஹா! ஹா! படகு க்ளோஸ்!
டமால்!


ஒரு குண்டு மின்னல் படையினரின் படகைத் தாக்கியது! மற்றொன்று நீர் மட்டத்தில் படகில் ஒரு ஓட்டையைப் போட்டது!
படகு மூழ்கத் துவங்குகிறது பசங்களா!
சீக்கிரமாகக் கரையை அடையுங்கள்!
கனமான ஆயுதங்களுடன் அவர்கள் நீரில் குதித்ததால் வேகமாக நீந்தித் தப்ப முடியவில்லை..
நனைந்த பெருச்சாளி களை மேலே கொண்டு வாருங்கள்!
மாத்யூஸும் அவரது ஆட்களும் படகில் மேல் தளத்திற்கு இழுத்து வரப் பட்டனர். அவர்களுடைய் ஆயுதங்களும் அகற்றப்பட்டன!
நீங்கள் இங்கிலாந்துக் காரர்களா? இங்கு என்ன செய்கிறீர்கள்?
எங்களிட மிருந்து எந்தத் தகவலும் உனக்குக் கிடைக்கப் போவதில்லை!


ஆ! ஆ!
இதுவரை கண்ணில் தட்டுப்படாமல் இருந்த சிம்பன்சி, திடீரென்று ஒரு ஜெர்மானியன் மீது பாய்ந்து தனது சேட்டையைத் துவங்கியது..
குழப்பம் தலைதூக்கியது..
யா.. ஆ
ஜூல்ஸ்! மிக்! இதுதான் நம்க்குச் சரியான நேரம்!
சூழ்நிலையை மின்னல் படையினர் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர்..
கும்!
சத்!
அந்தப் பக்கமாகத் தாக்குங்கள்!
பீரங்கிப் படகில் இருந்த நான்கு பேரும் மின்னல் படையினரின் அதிரடித் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் ஆற்றில் குதித்தனர்!
இப்ப என்ன சொல்கிறீர்கள், கேப்டன்? இந்தப் பொடியன் நம் அணியில் சேர்ந்து கொள்வதற்கு தகுதி பெற்று விட்டானா?
ரொம்ப ரொம்ப சரி, ஸ்மித்! இவனும் நம் அணியில் இருக்கட்டும்!
இவனை செல்லமாக "ஸ்மித்தி" என்று அழைப்போமா?
வெல்கம் கார்ப்பொரல் ஸ்மித்! நிச்சயம் நமது ஜானை விட இவன் புத்திசாலியாக இருப்பான்!

# அத்தியாயம் 3. கொலைப் பயிற்சி




அப்போது பீரங்கிப் படகின் ரேடியோவில் ஒரு ஜெர்மன் குரல் எழுந்தது!
000 14ம் எண் பீரங்கிப் படகை பிரிட்டிஷ் அதிரடிப் படையினர் கைப்பற்றி யுள்ளனர்.
ஜாக்கிரதை! ஜாக்கிரதை!
நம்மைப் பற்றித் தான் சொல்கின்றனர்!
இனியும் இந்தப் படகிலிருந்தால் ஆபத்து!
மிக் திரும்பிய உடன் பீரங்கிப் படகை ஆற்றுநீரில் போக்கில் கழற்றி விட்டனர்..
நாஜிகள் படகைக் கைப்பற்றும் போது அதை நாம் எங்கே கழற்றி விட்டோம் என்று கண்டு பிடிக்க தடயமே இருக்காது! அதுசரி, உன்னுடைய மாமா இருக்கிறாரா?
யெஸ்! நமது வருகையின் நோக்கம் பற்றி அவரிடம் சொன்னேன் - அவர் சொன்ன விஷயம் என்னைத் திகைக்கச் செய்தது!
மாளிகையினுள் - உரிமையாளர் காத்திருந்தார்..
தோழர்களே - இவர்தான் என்னுடைய மாமா லாடிஸ்லாஸ்! இப்போது போலந்தின் புரட்சிப் படைத் தளபதிகளில் ஒருவரான "பிளேம் பார்டு"ம் இவர்தான்!




மாத்யூஸ், ஜுல்ஸ் மற்றும் ஜான் ஸ்மித் இதைக் கேட்டு ஆச்சரியத்தில் மூழ்கினர்...!
சந்திக்க வேண்டிய இடத்தில் நீங்கள் சந்திக்கவில்லை என்றதும், உங்களைப் பிடித்து விட்டார்கள் என நினைத்தேன்!
இங்கே எல்லா இடங்களிலும் ஜெர்மானியர்கள் உள்ளனர். யாராவது ஒரு துரோகி உங்களுடைய வருகை
பற்றி அவர்களுக்குத் துப்பு சொல்லியிருப்பார்கள் எனப் பயந்தேன்!
மாளிகையில் சாப்பிட்டு சிறிது நேரம் ஓய்வெடுத்த பின் புறப்பட்டனர்..
முழங்கால் வரையிலான ஷூக்களை உங்களுக்கு நான் ஏன் வழங்கினேன் என்பதை விரைவில் அறிந்து கொள்வீர்கள்!
சுரங்கப் பாதையின் படிக்கட்டு வழியாக இறங்கினார்...
இந்த நீரோடை வார்சா நகருக்கு கீழே மேற்கிலிருந்து கிழக்காகச் செல்கிறது. இறுதியில் விஸ்டுலா பகுதியில் என் வீட்டுத் தோட்டம் வரை வருகிறது!
விஸ்டுலாவிலிருந்து விலகி மேற்குத் திசையில் திரும்பினர்...
நகருக்கு கீழே நிறைய சுரங்கப் பாதைகள் உள்ளதால் தகவல் பரிமாற்றத்திற்கு அபாரமாக உதவுகிறது!


தொடர்ந்து சென்ற பின் ஓரிடத்தில் இரும்புக் கதவு வழியாக வெளிச்சம் தெரிந்தது..
மேலே போனால் என்னுடைய தலைமையகத்திற்குப் போய் விடலாம்! புரட்சி துவங்கிய உடன் இங்கிருந்து தான் ஆணையிட முடியும்! இந்தக் கட்டிடம் ஒரு காலத்தில் மோட்டார் வாகன ஒர்க்ஷாப்பாக இருந்தது. இப்போதும் அப்படியேதான் உள்ளது!
இந்த மோட்டார் வாகனங்கள் எல்லாமே நாஜிகளுடையதுதான்! திடீரென்று கொரில்லாத் தாக்குதல் நடத்தி இவற்றை இங்கு கொண்டு வந்தோம்!
துரதிஷ்டவசமாக வாகனங்கள் ரிப்பேராக உள்ளன! எங்களிடம் மெக்கானிக்களும் இல்லை!
கவலைப் படாதீர்கள் கர்னல். இதோ இருக்கும் ஜான் ஸ்மித் மெக்கானிக் தொழிலில் பெரிய கில்லாடி!
மூளைக்குப் பதில் மண்டையில் எந்திரத்தின் பல சக்கரங்கள் தான் இருக்கு!
மறு நாளிலிருந்து ஜான் தன் திறமையை மற்றவர்களோடு பகிர்ந்திட்டான்...
மிக், இதை எப்படி அட்ஜெஸ்ட் செய்வதென்று காட்டி விட்டேன்! நீ இவனுக்கு நான் சொல்வதை மொழி பெயர்த்துச் சொல்!


மொழி பெயர்ப்பாளரான மிக் சுறுசுறுப்பாய் செயல்பட்டான்!
எல்லாருக்குமே ஆர்வம் நிறைய இருக்கு! ஆனால் ஒரு சிலர் எதற்குமே லாயக்கற்றவர்கள்! நாசுக்காக அவர்களைக் கழற்றி விட வேண்டும்!
ஜூல்ஸும் பரபரப்புடன் தன் பணியைச் செய்தான்...
மிக், வெடிகுண்டுகள் பற்றி விளக்கிப் போவதாக இவர்களிடம் சொல். குறிப்பாக "லாலிபப்" வெடிகள் பற்றி!
இத்றகிடையில் கிழக்கே எழுந்த பீரங்கி முழக்கங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன..
அந்தப் புகை மண்டலத்தைப் பாருங்கள் மேஜர்! பயங்கரமான சண்டை நடக்கிறது! ரஷ்யாவின் செஞ்சட்டை வீரர்கள் விரைவில் விஸ்டுலாவுக்குள் வந்து விடுவர்!
சமவெளிப் பகுதியில் ரஷ்யப் படையினர் முன்னேறி வந்தன...
முன்னேறுங்கள் தோழர்களே! தாய் நாடு ரஷ்யா நீடூழி வாழ்க!


ஆகஸ்ட் 1ம் நாள் பிற்பகலில்-
வார்சா முழுவதும் ஆயிரக்கணக்கான நம் படைவீரர்கள் வேட்டை நாய் போல் பாய்வதற்குத் தயாராக உள்ளனர்!
எந்தக் கணமும் டெலிபோன் ஒலிக்கும்! நமது அணியில் எல்லாரும் ஆஜர் தானே, மேஜர் க்ரோட்நோர்?
கர்னல் நமது அணியில் அளவுக்கு அதிகமாகவே ஆட்கள் உள்ளனர்! புதிதாக ஒரு லெப்டினன்ட் கூட தலைமையகத்திலிருந்து 10 நிமிடங்களுக்கு முன்பு வந்தார். அவரை உடனடியாக உங்களைச் சந்திக்கும்படிக் கூறினேன்..
மேஜர் பேசிக் கொண்டிருந்த அதே நேரம் ஒரு இளைஞன் அறையினுள் நுழைந்தான். சல்யூட் அடித்தபடி நெருங்கினான்...
ஸ்மோல்கா!-ஸ்மோல்கா!
சப்தம் கேட்ட திசை நோக்கித் தலையைத் திருப்பியவன் மிக்கை உற்று நோக்கினான்...!
நீ ஜெர்மனியில் போர் கைதியாக இருப்பதாக வல்லவா நான் நினைத்தேன்!
சில வாரங்களுக்கு முன்பு தப்பி வந்தேன்!
என்னை அவமரியாதை செய்ய உனக்குத் தகுதி கிடையாது மிக் பால்ஸ்கி! நாவை அடக்கிப் பேசு!


மிக்கின் கண்கள் கோபக் கனலைக் கக்கின. ஆனால் -
என்னை என்னவென்று நினைத்தாய்...
துப்பாக்கி முழக்கம்! ஒல்கா பகுதியிலிருந்துதான் கேட்கிறது!
அத்தியாயம் 4. சுதந்திரப் போராட்டம்
முதலில் "பிளேம் பார்டு அணியினர்" செயலில் இறங்கினர். ராணுவ வாகனத்தைத் தொடர்ந்து ஒரு பட்டாளம் வீதிகளில் அணிவகுத்து வந்தது.
க்ருக்ஜா தெருவில் உள்ள நாஜிகளின் இடத்திற்கு நேராகப் போ, ஜான்!
ஓ.கே.! மேலே சரியாகப் பிடித்தபடி நின்று
அதே நேரம் டெலிபோன் ஒலித்தது. கர்னல் ஜரிம்பா அதை எடுத்தார்..
போர் துவங்கி விட்டது! தனிப்பட்ட சச்சரவுக்கு இது நேரமல்ல! நாஜிகள் பின் வாங்கி வருகின்றனர். அவர்களை வென்று விட்டால் வார்சா நகரம் நமதே!
பட்டாளத்தினரிடையே ஒரு கோமாளித் தனமான உருவம் புகுந்து முன்னேறியது..
ஜான், 'ஸ்மித்தி' நம் பின்னால், நாம் தயாரித்துக் கொடுத்த ராணுவ சீருடையில்
ஸ்மித்தியா? யாரிடமாவது சொல்லி அவனைப் பத்திரமாக பூட்டி வைக்கச் சொல் மிக் -அவனுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது!



அனுப்பப்பட்டது. மிக் வழிகாட்ட ஜான் வாகனத்தைச் செலுத்தினான். எதிரிகளின் தோட்டா மழை வரவேற்பளித்தது -
எதிரே இருப்பது க்ருக்ஸா வீதி! வலது புற மூலையில் இருக்கும் கட்டிடம்தான் நாஜிக்களின் இருப்பிடம்! அதுதான் நமது இலக்கு!
திடீரென்று எழுந்த "கிறச்" சப்தம் மிக்கின் கவனத்தைத் திருப்பியது..
ஜான், நம்முடைய கூட்டாளியும் வந்து விட்டார்!
வாகனத்தை ஓட்டி வந்த ஜானின் இருப்பிடத்தைப் போய் அடைந்தது சிம்பன்சி..!
நீ இங்கே இருக்கக் கூடாதுடா ராஸ்கல்! சொல்லப் போனால் - நான் கூட இங்கே இருக்கக் கூடாதுதான்! இது போலந்துக் காரர்களின் போராட்டமாம்! ஆனால் -
வெடிகுண்டு ஒன்று வாகனத்தின் இரும்புத் தகட்டைப் பெயர்த்தது...!
அமைதியாக இரு "ஸ்மித்தி"! பயப்படக் கூடாது -இப்போ நீயும் ஒரு ராணுவ வீரன் அல்லவா?


உனக்கும் ஸமித்திக்கும் ஒன்றுமில்லையே ஜான்?
யெஸ் மிக்! ஆனால் புரட்சிப் படையினர் விரைவில் கை வரிசையைக் காட்டினால் தேவலை!
வார்சா நகரை மீட்க நடந்த போரில் பங்கேற்க மாத்யூஸுக்கு ஆணையிடப்படவில்லை என்றாலும் அவரால் அதில் கலந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை..!
எங்களுக்குப் பயிற்சி அளிப்பது மட்டுமே உங்கள் பொறுப்பு கேப்டன்! நீங்கள் நாஜிக்களிடம் அகப்பட்டுவிட்டால்... நிலைமை மோசமாகிவிடும்!
மேஜர் க்ரோனோ! யுத்தம் உங்களுக்குத்தான் புதுசு -எனக்கல்ல!
ஒவ்வொரு மாடியாகக் கடந்து சென்ற அவர்கள் இறுதியில், க்ருக்லா தெருவின் மூலையில் இருக்கும் கட்டிடத்தை அடைந்தனர்...
அட ஆண்டவனே! நம்மை எதிர் பார்த்தல்லவா ஜெர்மானியர்கள் காத்திருக்கின்றனர்!
.எதிரிகளின் எந்திரத் துப்பாக்கிகள் எழுப்பிய முழக்கத்தை மாத்யூஸ் வீசிய கை வெடிகுண்டு அமைதிப்படுத்தியது..
ஐயோ!
அற்புதம், கேப்டன்!



நேரத்தை வீணாக்காது மாதயூஸும் மேஜரும் இரும்புக் கொக்கிகளுடன் கூடிய கயிற்றைத் தயார் படுத்தினர் -
இரும்புக் கொக்கிவ்ய எதிரே உள்ள புகைக் கூண்டில் சீக்கிரம் மாட்டும்படி சொல்லுங்கள், மேஜர்!
மற்றவர்கள் - எதிரே உள்ள கட்டிடத்தின் ஜன்னல்கள் மீது ஒரு கண் வைத்திருங்கள்! உள்ளே எதிரியின் நடமாட்டம் தெரிந்தால், சுட்டுத் தள்ளுங்கள்!
புரட்சிப் படையினர் எந்த இடையூறு மின்றி கட்டிடத்தை அடைந்தனர்! பின்னர்.எதிரிகளை அழிக்கும் வேலையில் இறங்கினர்...
செத்துத் தொலையட்டும் கொலைகாரப் பாவிகள்!
ஜானின் கனரக வர்கனத்தை சேதப்படுத்திய ஜெர்மானியன் முதலில் பலியானார்..
ஒ!


மற்றப் புரட்சிப் படையினரும் கட்டிடத்தினுள் நுழைந்தனர்...
துப்பாக்கி முழக்கங்கள் நின்னு போச்சு -அவ்வளவுதான் -ஆட்டம் முடிந்தது!
நோ! இது நமது முதல் இலக்கு மட்டுமே! இன்னும் ஜெர்மானிய டாங்குகளைக் கவனித்தாகனும்!
ஏராளமான நாஜி டாங்குகள் அங்கு விரைந்து கொண்டிருந்தன...
எல்லா இடங்களிலும் நமது வீரர்கள் தாக்கப்பட்டுள்ளனர்! போலந்துக் காரர்களுக்கு பிரிட்டிஷார் பயிற்சி அளிப்பதாக கூறப்பட்ட வதந்தி உண்மையானதுதான் போலும்!
ஜூல்ஸும் அவனிடம் பயிற்சி பெற்ற புரட்சிப் படையினரும் திடீர் தாக்குதலில் இறங்கினர்!
ஆபத்து! நம்மையும் தாக்குகிறார்கள்!
பின் பக்கமாகத் தாக்கிய புரட்சிப் படையினருக்கு எதிராக எந்திரத் துப்பாக்கியைப் பயன்படுத்த முடியாத நிலையில் - டாங்குகள் தப்பியோட முயன்றன!
மேல் மூடியை மூடுங்கள்! நமது ஆட்கள் உள்ள சதுக்கம் நோக்கித் திருப்புங்கள்!



ஒவ்வொன்றாக வெடித்துச் சிதறின!
வீரர்களே, நமக்கு கிடைத்த பெரும் வெற்றி இது!
மறுநாள் காலைக்குள் வார்சா நகரம்; அதன் உடமையஸ்தர் களின் பிடிக்குள் வந்தது!!
கேப்டன் மாத்யூஸ்! நாங்கள் நகரைப் பார்வையிடப் போகிறோம்! "பிளேம் பார்டு" அணியைச் சேர்ந்த அனைவரும் வெற்றி பெற்றது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது!
ஆனால், மீண்டும் ஜெர்மானியர்கள் தாக்கினால் என்ன செய்யப் போகிறீர்கள்?
உங்கள் ஆட்கள் தாக்குப் பிடிப்பார்களா, கர்னல்?
கர்னல் ஜரிம்பாவின் குரலில் உறுதி தெரிந்தது...
விரைவில் ரஷ்ய ராணுவம் எங்களுடைய உதவிக்கு வந்து விடும்! உங்களுடைய பணி வெற்றிகரமாய் முடிந்து விட்டது கேப்டன் மாத்யூஸ்! போலந்து முழுவதுமே உங்களுக்கும் உங்கள் அணியினருக்கும் நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது!
கர்னல் - சுதந்திரத்தை தக்க வைத்துக் கொள்ளும் கலையில் உங்கள் வீரர்கள் நிபுணர்களாகி விட்டார்கள்! இனி ஒரு போதும் வார்சா அடிமையாகாது என்ற திருப்தியே எங்களுக்குப் போதும்!
முற்றும்.

# புக் மார்கெட்

வாசக நண்பர்களே,

உங்களுக்குத் தேவையான / தேவையில்லாத நமது முந்தைய காமிக்ஸ் வெளியீடுகளை பரிமாற்றம் / விற்பனை செய்து கொள்ளுவதற்கு உதவும் பகுதி இது. இந்த விளம்பரத்தை பார்த்து பிற வாசகர்கள் உங்களோடு தொடர்பு கொள்வார்கள். அவ்விதம் தொடர்பு கொள்ளும் வாசகர்களுக்கு சரியான முறையில் - உடனே பதில் போடுங்கள். ப்ளீஸ்! சரிவர பதிலளிக்காவிட்டால் இந்தப் பகுதிக்கே பிரயோஜனம் இல்லாது போய்விடும்!

– ஆசிரியர்.

*வாசகர்:*

**G. ஆனந்த்**

2/94, மாரியம்மன் கோவில் தெரு.

தாசநாயக்கன்பட்டி (P.O.) - 636 201.

**தேவை**

1. லயன் சூப்பர் ஸ்பெஷல்
2. பயங்கர நாடகம்
3. மீண்டும் ஹிட்லர்
4. திக்குத் தெரியாத தீவில்
5. அதிரடிப்படை
6. பழி வாங்கும் பாவை
7. பளிங்குச் சிலை மர்மம்
8. தலைவாங்கிக் குரங்கு

**விற்பனைக்கு**

1. புரட்சித் தலைவன் ஆர்ச்சி
2. வாரிசு வேட்டை
3. பலி கேட்ட புதையல்

மினி லயன்

4. மரண சர்க்கஸ்
5. ஸ்பைடர் படை
6. தென்னமெரிக்காவில் மாயாவி

*வாசகர்:*

**M. ஜோசப்**

S/o. V. முத்துசாமி, மளிகை கடை (OPP.)

15, வேலம்பாளையம் (P.O.) திருப்பூர்,

**விற்பனைக்கு**

1. லயன் சென்சுவரி ஸ்பெஷல்
2. டிராகன் நகரம்
3. மிஸ்டர் ஜெட்

திகில்

4. திகில் 1 - 59 அனைத்தும்

மினி லயன்

5. நீலப் பேய் மர்மம்
6. ஸ்பைடர் படை
7. விற்பனைக்கு ஒரு ஷெரீப்?

# கேள்விக்கு என்ன பதில்?

1) தற்சமயம் புக் சைஸ் எப்படி? : பிரமாதம்! [80%] பரவாயில்லை [18%] பாக்கெட் சைஸே போதும் [2%]

*ஆசிரியர்: பாக்கெட் சைஸிற்கு 'மவுசு' குறைந்து விட்டது புரிகிறது! காரணம் - தெளிவான படங்கள், எழுத்துக்கள் பாக்கெட் சைஸில் கிடைப்பதில்லை!*

---

2) 1995-ல் வரவிருக்கும் பல கதைகள் அளவில் மிகப் பெரியவை. படத்தின் அளவையோ - கதையின் நீளத்தையோ குறைக்காமல் வழக்கம் போல் போடவேண்டுமெனில் - இதழ்களின் விலை ரூ. 5/- அல்லது ரூ. 6/- என்று இருக்கும். இது பற்றி உங்கள் கருத்து? :

[100%] விலை கூடினால் பரவாயில்லை.

[X] சைஸை குறைத்து விலையையும் குறையுங்கள்.

[ ] வேறு யோசனை :

1) தனியார் விளம்பரம் வெளியிட்டு செலவைக் குறைக்கலாமே?
2) எப்படி வேண்டுமானாலும் போடுங்கள் - ஆனால் புக் வந்துவிட வேண்டும்.

*ஆசிரியர்: உங்களின் ஏகோபித்த ஆதரவு என்னை மலைக்கச் செய்கிறது! தரமான கதைகளைப் படித்திட எப்போதும் நீங்கள் தயாராக இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு Vitamin tonic போல! லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் செயல்படும் நமது Policy நிச்சயம் தொடரும் என்று உறுதி சொல்கிறேன்! விளம்பரம் வாயிலாக செலவைக் குறைப்பது நல்ல யோசனைதான் - பரிசீலனை செய்கிறோம்.*

---

3) 1994ல் நமது லயனின் Best Story எது? :

a) மரண மண்டலம் - 50% மார்க்
b) மந்திர மண்ணில் மாடஸ்டி - 45% மார்க்
c) மற்றவை - 5% மார்க்

*ஆசிரியர்: வாவ்! நிச்சயமாக நான் எதிர்பாரா முடிவு இது! 1994ல் வந்த கதைகளிலேயே பெஸ்ட் -என தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது மின்னும் படைகளின் "மரண மண்டலம்!" வாசகர்களின் மாறுபட்ட ரசனைக்கு இது எடுத்துக்காட்டு! வழக்கமான பாணியிலான துப்பறியும் கதைகளை மட்டும்தான் என்றில்லாமல் நல்ல கதையிருந்தால் war comics ஐ கூட ரசிக்க முடியும் என்று உணர்த்தியுள்ளதற்கு மிக மிக நன்றி! (அதற்காக war comics நிறைய போட்டு விடுவேன் என்று பயப்பட வேண்டாம்!)*

---

4) மிகவும் மோசமான கதை : [100%] நடுக்கடல் நரகம்

*ஆசிரியர்: No Comments Please!*

---

5) மிக அழகான அட்டைப்படம் :

a) வேங்கை வேட்டை - 60%
b) பச்சை வனப் பாவை - 30%
c) நடுக்கடல் நரகம் - 10%

6) சொதப்பலான அட்டைப்படம் : மரண மண்டலம்

7) தற்சமயம் நமது லயனில் உள்ள சுவையான பகுதிகள் என்னென்ன? :

1) ஹாட் - லைன் : 57%
2) கதை சொல்லும் படங்கள் : 25%
3) க்ரைம் க்விஸ் : 10%
4) மாதம் ஒரு வாசகர் : 5%
5) விரைவில் வருகிறது விளம்பரங்கள் & மற்றவை : 3%

*ஆசிரியர்: 'தில்'லென்று தலை நிறைய நல் வைத்துள்ளனர் வாசகர்கள்! 'ஹாட் - லைன்' பகுதியை பெரும்பாலான வாசகர்கள் கூர்ந்து படிக்கிறார்கள் என்பதைக் கவனிக்கும்போது லேசான நடுக்கம் ஏற்படுகிறது - 'தத்துபித்து'என்று ஏதாவது உளறி வைத்தால் உடனே மூக்கை உடைத்துவிட வாசகர்கள் தயாராக இருப்பார்களே என்று! "கதை சொல்லும் படங்கள்" தொடரைப் பொறுத்தவரை காமிக்ஸ் எனும் கலையின் பல பரிமாணங்களைத் தெரிந்து கொள்வதில் அனைவருமே ஆர்வமாய் இருப்பது புரிகிறது. முடிந்தளவிற்கு தொடரை தெளிவாகக் கொண்டு செல்ல முயற்சிக்கிறேன்.*

8) புதிதாக என்ன செய்யலாம்? :

a) பொது அறிவு சமாச்சாரம்
b) கார்ட்டூன்கள்
c) பேனா நண்பர்கள் பகுதி

*ஆசிரியர்: விரைவில் இந்தப் பகுதிகளை இணைத்திட முயற்சி செய்கிறேன்!*

9) லயன் Top 10 கதைகள் தேர்வு பற்றி : *ஆசிரியர்: வாசகர்களின் ரசனை விதம் விதமாய் இருப்பதால் கதைத் தேர்வு uniform ஆக இல்லை. ஆனால் கீழ்க்கண்ட கதைகள் மட்டும் எல்லோரது தேர்விலும் இருந்தது.*

*1) பாலைவனப் பரலோகம்*
*2) எதிரிக்கு எதிரி = எதிரி*
*3) லக்கி லூக்*
*4) மனைவி + மரணம்*
*5) திருயார்க்கில் பார்வே*

10) 1994ல் லயனின் performance எப்படி? :

40% வெரி குட்
40% பரவாயில்லை
20% இன்னும் Improvement தேவை

*ஆசிரியர்: '94ன் நிறைகளைத் தொடர்ந்து, குறைகளைத் தவிர்த்து - '95ல் இன்னும் பல வாசகர்களை எட்டும் முயற்சிகளைத் தொடர்கிறோம்!*

# மனைவி = மரணம்!


புதியதொரு பணி விஷயமாக வெளியூர் சென்றிருந்த ஏஜெண்ட் பிலிப் காரிகன் கிரீன் விச்சில் இருந்து தன் வீட்டுக்குத் தொடர்பு கொண்டார்...
வேலை கொஞ்சம் தாமதமாகி விட்டது, வில்டா... ஆனால் எப்படியும் நாளை மாலை வீட்டில் விருப்பேன்!
அப்படி யானால் உங்களுக்குப் பிடித்த டின்னர் ஏற்பாடு செய்கிறேன்!
ஓ.கே. டியர்!
சிறிது நேரம் சென்ற பின்பு..
இதோ அவளே வருகிறாள்... காரிகனின் மனைவி!
யா! போட்டோ வில் பார்த்தது போலவே இருக்கிறாள்!



தன்னை யாரோ வேவு பார்ப்பதை உணராத வில்டா ஷாப்பிங் செல்ல வீட்டை விட்டு வெளியேறினாள்...
தெரு வெறிச் சோடிக் கிடக்கிறது.. 'பட்சியை' கவருவது ரொம்ப எளிதாகி விடும் ஐஸ்!
நோ செஸ்டர்! நாளைக் காலை தான் செயலில் இறங்குகிறோம்! இந்த வேலைக்கு எனக்கு ஒரு ஆம்புலன்ஸ் வேண்டும்!
ஆம் -புலன்ஸா? ஐஸ், அது பெரும் கூட்டத்தைக் கூட்டி விடுமே!
ஆம்புலன்ஸ் என்றால் மக்கள் ஞாபகத்தில் வைத்திருப் பார்கள் -ஆனால் இடையூறு செய்ய மாட்டார்கள்!
இந்த ஏஜெண்ட் -அதுதான் காரிகன்...
நீயும் அவனும் நேருக்கு நேர் மோதி யுள்ளீர்கள் அல்லவா?
யா! அவன் என்னை வென்று விட்டான். இந்த ஜோஜஸை தோற்கடித்த ஒரே ஆசாமி அவன்தான்!
ஆனால் அவன் ஒரு தவறு செய்து விட்டான் செஸ்டர். வாய்ப்புக் கிடைத்த போதே என்னைக் கொல்லவில்லை. காயமடைந்த நான் முழுவதும் குணமடைந்தேன்... அவனை விட வல்லவனாகும் வரை தொடர்ந்து பயிற்சி பெற்றேன்... நாங்கள் இருவரும் இப்போது மோதினால்...
அதற்காகத் தானே அவனது மனைவியை கடத்த நினைக் கிறாய்?
நோ! என் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இங்கே இடம் கிடையாது! இதைச் செய்து முடிக்க எனக்கும் பணம் கொடுத்துள்ளனர்!



மறுநாள் காலை -
காரிகன் வீட்டிற்குள் ஒரு ஆம்புலன்ஸ் நுழைகிறதே?
காரிகன் வீட்டில் -
இதில் ஏதோ தவறு நடந்திருக்க வேண்டும்...
இந்த முகவரியைத்தான் எங்களிடம் கொடுத்தனர், மேடம். ஆஸ்பத்திரியில் விபரம் கேட்க உங்களுடைய போனை நான் பயன் படுத்தலாமா?
ஓ -தாராளமாக! இந்த வழியாக வாங்க!
அட ஆண்டவனே! மிஸஸ் காரிகனுக்கு என்னாச்சு?
வழி விடுங்கள்... விலகி நில்லுங்கள்... இந்தப் பெண்ணின் உடல்நிலை ரொம்ப மோசமாக உள்ளது!
அவர்கள் அவனைக் கொண்டு போகும் வேகத்தைப் பார்த்தால் நிலைமை
ரொம்ப சீரியஸாக இருக்கும் போல் தெரிகிறதே!
எந்த ஆஸ்பத்திரியில் இருந்து வந்தனர் என்பதை யாராவது கவனித்தீர்களா? ஆம்புலன்ஸ் மீது ஆஸ்பத்திரி பெயரை நான் பார்க்கவில்லை!
அன்று மாலையில்!
வில்டா! ஹனி, எங்கே இருக்கிறாய்? வில்டா?



பில் வீடு திரும்பிய போது வீடு காலியாக இருந்தது...
சாப்பிட்டுக் கொண்டிருந்த வில்டா, நடுவில் எழுந்து போனது 'போல் தெரிகிறதே!
சின்னக் குறிப்பு கூட எழுதி வைக்காமல் அவள் போக மாட்டாளே
மிஸ்டர் காரிகன்!
நல்ல நேரத்தில் திரும்பி விட்டீர்கள்.
உங்கள் வீட்டில் விளக்கு எரிவதைக் கண்டதும் ஓடிவந்தேன்!
உங்களுடைய மனைவிக்கு திடீரென்று உடம்புக்கு முடியாமல் போய் விட்டது!
நடந்தது அத்தனையையும் அடுத்த வீட்டுப் பெண் மூலம் அறிந்தார் காரிகன்...
ஒரு ஆம்புலன்ஸ் அவளை எடுத்துச் சென்றதா?
யெஸ். ஆனால் எல்லா ஆஸ்பத்திரியிலும் விசாரித் தோம்...
..எந்த ஆஸ்பத்திரியிலும் உங்கள் மனைவியை அட்மிட் செய்ய வில்லை!
ஆம் புலன்ஸில் வந்தவர்கள் எப்படி இருந்தார்கள்?
சற்றைக்கெல்லாம் அமெரிக்க எப்.பி.ஐ. தலைமை அலுவலகத்தில்...
அவளைக் கடத்திச் சென்ற வாகனத்தைக் கண்டுபிடித்து விடலாம் காரிகன்.. குற்றவாளி களின் போட்டோ பைலில் ஏதாவது சிக்கியதா?
யெஸ், டாம்!



பக்கத்து வீட்டுப் பெண் சொன்னதை வைத்துப் பார்க்கும் போது ஆம்புலன்ஸில் வந்தவர்களில் ஒரு ஆசாமி எனக்குப் பரிச்சயப்பட்டவன் என்பது தெரிகிறது...!
ஜோஜஸ் பணத்திற்காக கொலை செய்யும் ஆசாமி. கொஞ்ச நாள் முன்பு தானே நீ இவனை மடக்கினாய்?
...அது இவனாகத் தான் இருக்கும் டாம்! இதில் எனக்குச் சந்தேக மில்லை!
கொடுக்கப்பட்ட பணியைக் கச்சிதமாக செய்து முடிப்பவன் -எந்திரம் போல சண்டை செய்யக் கூடியவன்...
ஆனால் இது போல திட்டமிட்டு செயல்படுவது அவனுடைய ஸ்டைல் இல்லை!
காரிகன் -ஆம்புலன்ஸ் பற்றி நமக்கு ஒரு துப்பு கிடைத்திருக் கிறது!
ஆம்புலன்ஸ் பற்றிய தகவலை அறிய இருவரும் விமான நிலையம் சென்றனர்...
ஒரு ஆம்புலன்ஸ் பெண் பயணி ஒருத்தியை இங்கு இறக்கியதா?
யெஸ், சார்! ஆனால் அடையாளம் சொல்லும் அளவிற்கு அவளை நெருங்கிப் பார்க்க வில்லை!
அவளைக் கொண்டு வந்த உதவியாளர் களில் இவனும் இருந்தானா?
ஓ நோ சார்..
...அந்தப் பெண்ணின் சகோதரன் என்று அவன் சொன்னான்.. மொராக்கோ சென்ற விமானத்தில் இருவரும் போய் விட்டனர்!


வில்டாவை மொராக்கோவுக்குக் கடத்திக் கொண்டு போயிருந்தால் இந்த வழக்கு நம் எல்லையைத் தாண்டி விடுகிறது காரிகன்!
டாம், இது என் மனைவி சம்பந்தப் பட்டது.
முறைப்படி நாம் அனுமதி வாங்கி செயலில் இறங்குவதற்குள் ஜோஜஸ் அவளுடன் மறைந்து போய் விடுவான்! லீவு போட்டுவிட்டு ஒரு
ஏஜெண்ட் எங்கு போனாலும் அது அவனது சொந்த வேலையாகிவிடும்! அதற்குப் பின் எல்லைகளே இருக்க முடியாது!
மொராக்கோ செல்லும் விமானத்திற்கு முன்பதிவு செய்ய வேண்டுமா? யெஸ் சார்!
நீ விடுப்பு எடுத்துக் கொண்டு போவதால் இந்த விவகாரத்தில் எந்தப் பிரச்சனை வந்தாலும் அதை நீயே சமாளிக்க வேண்டியதுதான்! நம் இலாகா உதவிக்கு வராது!
எனக்கு வேறு வழியில்லை டாம்!
தன் மனைவியைத் தேடிப் புறப்பட்டார் காரிகன்...!
ஜோஜஸுக்குப் பின்னால் யாரோ இருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆனால் அது யார்? கடத்தலின் நோக்கம் தான் என்ன?
இதற்கிடையில்...
என் பெயர் ஜஸ்! என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக் கின்றனர்!
நல்வரவு! மிஸ்டர் ஓமாருடைய நண்பர்கள் மரியாதைக் குரிய விருந் தினர்கள்!


காஸப்ளான்கா நகரின் சிறிய ஓட்டல் அது!
மிஸ்டர் ஓமார் வரும் வரை உங்களை நன்கு கவனித்துக் கொள்வோம் மிஸ்டர் ஐஸ். உங்களுக்கு ஒரு அறையும் உங்களுடன் வந்த...
..இளம் பெண்ணுக்கு ஓர் அறையும் ஒதுக்கி யுள்ளோம்
அவள் இன்னும் சுகவீனமாகத் தான் இருக் கிறாளா?
அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறாள். நான் அனுமதி கொடுக்காத வரை அவளை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது!
என்னுடைய சின்ன ஹோட்டல் காஸப்ளான்காவின் ஸ்டார் ஓட்டல்களுடன் போட்டியிட முடியாது மிஸ்டர் ஐஸ்...! மிஸ்டர் ஓமாருடைய நண்பர் இங்கு வந்து தங்குவது எனக்குப் பெருமை சேர்க்கிறது!
உங்களுக்கு எது தேவைப் பட்டாலும் கேளுங்கள்!
என் அனுமதி யில்லாமல் அந்தப் பெண்ணை யாரும் தொந்தரவு செய்து விடாதபடி மட்டும் பார்த்துக் கொள்ளுங் கள்!
மயக்கத்திலிருந்த வில்டாவை அவளுடைய அறைக்குக் கொண்டு வந்தனர்.
காரிகன் என்ற தொரு ஆசாமி விரைவில் இங்கு கேள்விகள் கேட்டுக் கொண்டு வருவான். அவனை என்ன செய்ய வேண்டும் என்பது தெரியுமல்லவா?
விஷயம் சரியான முறையில் கவனிக்கப் படும், சார்!



அதற்குள் மொராக்கோவில் காரிகன் இறங்கியிருந்தார்..
இங்கு தான் வில்டாவுடன் ஐஸ் இறங்கினான் என்பதை விமான நிறுவனம் உறுதியாகச் சொல்லிவிட்டது. இங்கு துப்புக் கிடைப்பதில் அவ்வளவு கஷ்டம் இருக்காது...
ஸ்ட்ரெச்சரில் ஒரு பெண்ணா? எனக்கு ஞாபகம் இருக்கு சார். ஒரு தனியார் ஆம்புலன்ஸ் விமானம் வரை வந்து அவளைக் கொண்டு சென்றது...
கையில் கொஞ்சம் காசு வைத்தால் அந்த ஆம்புலன்ஸ் முதலாளி யார் என்பதையும் என்னால் நினைவு படுத்திச் சொல்ல முடியும்!
விரைவில்...
சீக்கிரம் முன் வாசலுக்கு வா! நேற்று விமான நிலையத்தில் இருந்து ஒரு பெண்ணைக் கொண்டு வந்தோமே, அது பற்றி ஒரு அமெரிக்கன் கேள்வி கேட்கிறான்!
ஐஸ் நம்மிடம் எச்சரித் தாரே!.. அது காரிகன் தான்!
வில்டாவையும் ஐஸையும் விமான நிலையத்திலிருந்து அழைத்து வந்த ஆசாமிகளிடம் காரிகன் விசாரித்தார்...
அவர்களை எந்த ஹோட்டலில் கொண்டு போய் விட்டோம் என்பது ஞாபகம் இல்லையா?
காஸப்ளான் காவில் ஏராளமான ஹோட்டல்கள் இருக்கே சார்...
...அமெரிக்கர்களைப் போல சிற்சில விஷயங்களையும் நினைவு கொள்ளும் பழக்கம் எங்களிடமில்லை! ஆனால் - கொஞ்சம் பணம் கொடுத்தால் ஞாபகசக்தியை உலுக்கிப் பார்க்கத் தயார்!
பின்னர் நீண்ட நேரப் பயணத்திற்குப் பின் -
இந்த இடத்தில்தான் சார்!
கஞ்சத் தனமான ஹோட்டல் போல... ஒரு விளக்கு கூட எரிய வில்லையே!



இந்த இடத்தைப் பல ஆண்டுகளாக யாரும் பயன்படுத்த வில்லையே! நான் என்ன நினைக் கிறேன் என்றால்...
...இது என்னை மடக்க விரிக்கப் பட்ட வலை என்றுதான்! நம்முடைய உல்லாசப் பயணம் இப்படித்தான் முடியும் என்று எனக்குத் தெரியும்!
இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்தை 'சட்டுபுட்'டென்று முடித்தால்தான் உங்களுக்குத் தெரிந்த விஷயங்களை என்னிடம் சொல்வீர்கள்!
அதைத் தெரிந்து கொள்ள நீ உயிருடன் இருக்க மாட்டாய்!
இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளிடம் 'கோல்மால்' செய்வது சுலபமாக இருக்கலாம் பசங்களா! ஆனால் இன்று இரவு ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டீர்கள்!
ஜோவையும் என் மனைவியையும் எங்கு கொண்டு போய் விட்டீர்கள் என்பதைச் சொல்லி விட்டால் இந்த ஆட்டத்தை சீக்கிரத்தில் முடித்து விடுவேன்!
பின்னர்... நேற்று ஒரு பெண்ணை ஸ்டிரெச்சருடன் இந்த ஹோட்டலுக்குக் கொண்டு வந்துள்ளனர். அவளுக்கு என்னாச்சு என்பது எனக்குத் தெரிய வேண்டும்!
சார், நீங்கள் தவறான இடத்திற்கு வந்து விட்டீர்கள் என் நா - நான் நினைக் கிறேன்..


தம்பி.. தத்து பித்தென்று உளறாமல் விஷயத்துக்கு வந்தால் உனக்கு நல்லது!
உன் ஹோட்டலுக்கு ஜோஜஸ் கடத்திக் கொண்டு வந்தது என் மனைவியை? இப்போது சொல் -அவர்கள் எங்கே?
ப்ளீஸ், சார்.. நீங்கள் தவறு செய்கிறீர்கள். உங்களிடம் நான் ஏன் பொய் சொல்லனும்?
பொய் சொல்ல நிறைய பணம் கொடுத்துள்ளனர்..! அதனால் தான்!
உ -உங்களுக்கு எல்லாமே தெரிந்து விட்டதா? அப்படியானால் அந்த இருவரையும் பேச வைத்து விட்டீர்களா?
என்னை நம்புங்கள், சார்.. ஐஸ் அந்தப் பெண்ணுடன்
இன்று காலை இங்கிருந்து போய் விட்டார்!
பொய் சொன்னால் உன் குரல் வளையை நெறித்து விடுவேன் -ஜாக்கிரதை!
ஓட்டலில் இருந்து வில்டாவை எங்கே கொண்டு போனார்கள்?
படகுத் துறைக்கு சார். அவர்களுடைய முதலாளியின் படகு வரும் வரைதான் என் ஹோட்டலில் தங்கினர்!


..இன்று காலை முதலாளி வந்து விட்டதாகத் தக்வல் வந்தது
அவன் பெயர்.. அதுதான் அந்தப் படகின் முதலாளி பெயரைச் சொல்!
ஓ - ஓமார், சார்.. லூசியன் ஓமார்! அத்தனை பெரிய முதலாளியிடமிருந்து கட்டளை வராமலிருந்தால் ஒருபோதும் மிஸ்டர் ஐஸுக்கு ஒத்துழைப்புத் தந்திருக்க மாட்டேன்!
டாக்சி பிடித்து படகுத் துறையை அடைந்தார் பிலிப் காரிகன்..
ஓமார் என்பவருடைய படகை உனக்குத் தெரியுமா? அடையாளம் காட்ட முடியுமா?
யெஸ் சார் நோ.. சார்..
அந்தக் கலம் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் ஏற்கனவே புறப்பட்டுப் போய் விட்ட கப்பலை நான் எப்படி உங்களுக்கு அடையாளம் காட்ட முடியும்?
காரிகன் நீ ரொம்பத் தாமதமாக வந்து விட்டாய்... ரொம்ப ரொம்பத் தாமதம்!
நீ யார் என்பதோ - ஏன் வில்டாவைக் கடத்தினாய் என்பதோ எனக்குத் தெரியாது ஓமார்! ஆனால் இந்த உலகின் எந்த மூலை முடுக்கில் நீ ஒளிந்தாலும் உன்னைக் கண்டு பிடிக்காமல் விட மாட்டேன்!


மறுநாள் காரிகன் உள்ளூர் அதிகாரிகளைச் சந்தித்தார்...
நான் விடுப்பு எடுத்துக் கொண்டுதான் இங்கு வந்துள்ளேன்.
எனவே இது அதிகாரப் பூர்வ விஜயமல்ல!
பரவா யில்லை! நான் செய்யும் உதவிகூட ரொம்பவும் சிறியதுதான்! லூசியன் ஓமார் பற்றிய எங்களது பைல் போலவே!
இந்தப் பகுதியில் நிறையப் பேசப்படும்
-ஆனால் பார்க்க முடியாத நபர்தான் லூசியன் ஓமார்!
கள்ளத் தனமான ஆயுத விற்பனை யிலும், போதை மருந்து
வியாபாரத் திலும் ஏராளமாய் பணம் ஈட்டியதாய் கேள்வி!
வில்டாவை ஓமாருடைய படகிற்குத்தான் ஐஸ் கொண்டு சென்றான் என்று ஹோட்டல்காரன் உறுதியாகச் சொல்கிறான்... அந்தக் கப்பல் எங்கு செல்கிறது என்பது தெரிந்தால் போதும்!
வெறும் சந்தேகம் தான்...! உங்களுடைய மனைவியை கடத்தியுள்ளதாகச் சொல்வது கூட ஆதாரத்தோடு இல்லையே!
மீண்டும் படகுத் துறைக்கு வந்தார் காரிகன்..
மாலுமிகள் பொழுதைப் போக்கும் இடம் இதுதான் என்று சொன்னார் கள்!
ஓ யெஸ்.. மிஸ்டர் ஓமாருடைய ஆட்கள் சிலர் இங்கு வந்தனர். "தீவுக்குத்" திரும்புவது பற்றிப் பேசிக் கொண்டிருந் தனர்!
ஓமாரின் பைலில் ஏகியன் தீவில் அவனுக்கு
ஒரு மாளிகை இருப்பதாக எழுதி யிருந்தது!



இதற்கிடையில் மத்திய தரைக் கடல் பகுதியில் விஷேச விமானம் ஒன்று ஓமாரின் கப்பலை நெருங்கியது...
மிஸஸ் காரிகன் நித்திரையில் இருந்தால் கப்பலின் மேல் தளத்திற்கு வா, ஐஸ்! என்னுடைய முக்கிய விருந்தாளி இப்போது வரப்போகிறார்!
திட்டமிட்டிருந்தபடி கடல் விமானம் கப்பலை அடைந்தது -
என்ன நடக்கிறது ஐஸ்?
பெண்களே -இப்போது நடப்பது பிசினஸ். அது முடியும் வரை கப்பலின் மேல் தளத்திற்கு வர அனுமதி கிடையாது!
அங்கே - காரிகன் ஏசியன் தீவுக்குச் செல்லத் தயாரானார்...
ஏதேன்ஸ் நகரிலிருந்து மீதப் பயணத்திற்கு நீங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் சார். ஹிலியோஸ் தீவுக்கு வர்த்தக விமானங்கள் செல்வது கிடையாது... அது தனியாருக்குச் சொந்தமான சொகுசுத் தீவு!
ஓமாரின் மாளிகையை நெருங்கவது கஷ்டம்தான்! முதலில் அவன் வில்டாவை கடத்தியது எதற்காக என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்!


அதே நேரம் மத்திய தரைக் கடலில் -
இந்த வழியாக வாருங்கள், சார். மிஸஅடர் ஓமாரும் டாக்டரும் மேல் தளத்தில் காத்திருக் கின்றனர்!
..நமக்கு விருந் தளிக்கும் புதிய பார்ட்னர் லூசியன் ஓமாரின் நலனுக்காக இதைக் குடித்து மகிழுவோம்!
எவ்வளவு நேரம் பிசினஸ் பற்றிய பேசிக் கொண்டிருப் பார்கள் ஐஸ்? எங்களுக்கு ரொம்ப போரடிக் கிறது!
ஜென்டில்மென், மதிப்பிற்குரிய இரு பெரும் புள்ளிகளுடன் இணைந்திட எனக்கு வாய்ப்புக் கிடைத்ததை நினைத்து நான் பெருமைப் படுகிறேன்! கோர்பியூ... ஐரோப்பாவின் குற்ற உலகின் தலைவர்!
இங்கேயே இருந்தால் போரடித்தால் கூட ஆரோக்கியமாக இருப்பாய்! மேல் தளத்திற்குப் போனால் உன்னை சுறாவுக்கு இரையாக்கி விடுவார்கள் - ஜாக்கிரதை!
- மற்றொரு டாக்டர் செவன்.. ஈடிணையற்ற விஞ்ஞான மேதை..
திட்டமிடு வதில் நிகரற்றவர்!
நம் மூவரையும் பார்ட்னர் களாகக் கொண்ட
'டிரியாட்' அமைப்பை உலகம் வியக்கும் அளவுக்கு வளர்ப்போம்!
உலகினை ஆளப் புறப்பட்டுள்ள புது சக்தியாக நமது டிரியாடின் வெற்றிக்கு ஒரு பெக் மது அருந்து வோம்!


நல்ல கேள்வி, கோர்பியூ..!
இனி விஷயத்துக்கு வருவோம்! ஏஜெண்ட் காரிகனின் மனைவியைக் கடத்தி வந்ததற்கு என்ன காரணம்? பழி வாங்குவதில் எந்த லாபமும் இல்லையே!
..டாக்டர் செவனின் திறமை மீது எலக்குள்ள மரியாதை காரணமாகவே இந்தக் கேள்வியை இத்தனை நேரமாய் நான் கேட்காமல் இருந்தேன்!
டிரியாட்டை எதிர்ப்பது எத்தனை பெரிய தப்பு என்பதை உணர்த்திடப் போகிறேன் ஓமார்!
டிரியாட் தலைதூக்கிய போதே அதற்கு எதிராக காரிகன் போராடினான்... அவனல் நமது பார்ட்னர்களில் ஒருவரின் உயிர் போனது. உண்மை தானே, கோர்பியூ?
அதனால் என்ன? அவருக்குப் பதிலாகத்தான் நாம் புது பார்ட்னரை சேர்த்துக் கொண் டுள்ளோம்!
எதிர்ப்புக்குத் தண்டனை வழங்காவிட்டால் - அது தொடர்கதையாகி விடும்! பதிலடி தர வேண்டும்... அதுவும் கொடூரமாக -என்றும் நினைவில் இருக்கும்படியான பதிலடி!
அவனுடைய மனைவி மூலமாக காரிகனுக்குத் தண்டனை என்கிறீர் களா?
அழகான ஒரு பெண்ணை அழிப்பது தேவையற்ற செயல்! இருப்பினும்
டிரியாட்டின் வளர்ச்சிக்கு அவசிய மென்றால் -
கொல்லப் படப் போவது காரிகன்தான்! அவனுடைய மனைவி இதற்கு ஆயுதமாகப் போகிறாள்!
வாட்? காரிகனின் மனைவியையே அவனைக் கொல்லும்படி செய்யப் போகிறீர்களா?... உங்களுக்கென்று ஒரு தனி ஸ்டைல் இருக்கு டாக்டர்! தூள் கிளப்புங்க!
டாக்டர் செவன்...


உங்கள் கற்பனை எல்லை யற்றது!
கனவையும், நனவாக்குவது என் பொழுது போக்கு!
என்னை மேதை என்று அழைப்பது புகழ்ச்சிக்கு மட்டுமல்ல கோர்பியூ!
உங்களுடைய நிபுணத்துவத்தை நான் நம்புகிறேன் டாக்டர்! ஆனால், சொந்தக் கன்வனையே கொன்று விடச் செய்வது அத்தனை சுலபமான வேலையல்ல!
மை டியர் பார்ட்னர் -
நானே தயாரித்துள்ள சில மருந்துகள் மூலமும் மனோவசியம் மூலமும் இதை சாதிக்கப் போகிறேன்!
ஆனால்... காரிகனை எப்படி இங்கு வரச் செய்வது?
ஓமாருடைய ஆள், ஜோ கவனமாக பல தடயங்களை விட்டு வந்திருக்கிறான்! நமது "ஹீரோ" மனைவியைக் காப்பாற்ற இங்கேதான் வந்து கொண்டிருக்கிறான்
-இங்கே வந்து சமாதியாகப் போகிறான்! சூப்பர்!
என்னுடைய திட்டத்தைப் பற்றி என்ன நினைக் கிறீர்கள் கோர்பியூ?
அவன் வந்ததும் கால விரயமின்றி கணக்கு முடிப்பது நல்லது என்று நினைக் கிறேன், டாக்டர்!




காப்பாற்ற வரும் காரிகனை, அவனுடைய மனைவியே கொல்லப் போகிறாள் என்னால்...
டிரியாட்டை எதிர்க்க நினைப்பவர்களுக்கு சரியான பூச்சாண்டி!
ஓ.கே.! பிரச்சனை தீர்ந்தது! இனி கோர்பியூ நமது ஐரோப்பிய நடவடிக்கைகளைக் கவனிக்க புறப்பட்டுச் செல்லலாம்!
நாமும் ஹெலியோஸ் தீவுக்குப் புறப்பட்டு சென்று
திட்டமிட்டபடி காரிகனைச் சந்திப்போம்! கமான்!
பிரியாட்டின் ஆலோசனைக் கூட்டம் முடிவடைந்தது கோர்பியூ வடக்கு நோக்கி புறப்பட்டுச் சென்றான்..
..ஓமாருடைய கப்பல் ஏகியன் நோக்கிப் புறப்பட்டது..
மிஸ்டர் ஓமார், எங்களுக்கு ரொம்ப போரடித்து விட்டது! இவ்வளவு நேரம் அப்படி என்ன தலைபோகிற வேலை உங்களுக்கு?
கவலைப் படும்படி எதுவுமில்லை! ஒரு பெரிய விருந்து பற்றி திட்டமிட்டுக் கொண்டிருந்தோம்!
இதற்கிடையில் வில்டாவிற்கு கொடுக்கப் பட்டிருந்த மயக்க மருந்து வேகம் குறையத் துவங்கியது..
யா - யார் அங்கே? யாரோ இருப்பது போல் தெரிகிறதே!
நண்பன் தான் மிஸஸ் காரிகன்.. நான்தான் உன்னுடைய டாக்டர் - டாக்டர் செவன்!
வில்டா விழித்தெழுந்தாள்...
எ - எனக்கு தலை சுற்றுவது போல இருக்கு..., நாம் இப்போது கப்பலில் தானே இருக்கிறோம்..?
யெஸ்! ஒரு படகில் இருக்கிறோம் மிஸஸ் காரிகன். மயக்க மருந்து காரணமாக நீ இப்படி இருக்கிறாய்!



நீ சுகமில்லாமல் இருந்தாய்! நான் தான் படகில்
உல்லாசப் பயணம் செல்லும்படி சிபாரிசு செய்தேன்!
நீ - நீங்கள் தான் டாக்டர் செவனு? நன்கு தெரிந்த பெயர் போல உள்ளது. ஆனால் சரியாக ஞாபகமில்லையே... ம்ம்ம்.. காரிகன்.. என் கணவர்! அ - அவர் எங்கே?
ஒரு ஆபத்தான வேலையை முடித்திடப் போன அவர் உன்னை என் பொறுப்பில் விட்டுச் சென்றுள்ளார்!
இந்த வைரத்தை உற்றுப்பார் மை டியர் -நான் எல்ல வற்றையும் விவரித்துச் சொல்கிறேன்
ஓமாருடைய கப்பல் ஏசியன் தீவை நெருங்கியது..
மிஸஸ் காரிகன் இப்பொழுது நன்றாக இருக்கிறாள்!
இது நல்ல ஐடியா தானு டாக்டர்?
அவளுடைய முன்னேற்றம் அபாரமா உள்ளது ஓமார்! மருந்துகள் அவளது மனநிலையைத் தளர்வடையச் செய்து விட்டதால் எனது மனே வசியக் கட்டளைகளுக் நன்றாகவே கீழ்படிகிறாள்!
உங்களுடைய தோழிகளை சிறிது நேரம் அப்புறப்படுத்தினீர் களானால் என் மருந்து வேலை செய்வதை செயல் முறையில் காட்டுகிறேன்! இதற்கு ஒரு ரிவால்வர் வேண்டும் மிஸ்டர் ஐஸ்!
துப்பாக்கியை மறைவாகவே வைத் திருந்தும்
எப்படிக் கண்டு பிடித்தீர்கள் டாக்டர்?
மிஸ்டர் ஐஸ்! உன்னிடம் துப்பாக்கி இருந்திரா விட்டால் தான் நான் ஆச்சரியப் படுவேன்!
இது உங்களுடைய தொழிலா யிற்றே


இதில் தோட்டாக்கள் நிரப்பப் பட்டுள்ளதும் - உங்களுக்கு தெரியும் தானே?
யெஸ்! தெரியும்! கவலை வேண்டாம்!
வில்டா, மை டியர் - இந்த ஆயுதம் உனக்குத் தான்!
டாக்டர் செவன் தன்னுடைய சோதனை நடவடிக்கையைத் தொடர்ந்தார்...
துப்பாக்கியை அவளிடம் தூக்கிக் கொடுத்து விட்டது சரியாகப் படவில்லை! மனோவசியக் கட்டுப்பாட்டில் இருப்பதாக அவள் நடிக்கக் கூடும்!
பொறுத் திருந்து பார்ப்போம்!
நீ நண்பர்கள் மத்தியில் தான் இருக்கிறாய் வில்டா! ஆனால், நான் விவரித்த நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளது! நீ தயார் தானே?
யெஸ். டாக்டர் செவன்!
மிஸ்டர் ஐஸ்... இப்போது நீங்கள் அந்தப் பெண்ணிடம் போய், ''டார்லிங் நான் தான்... காரிகன்!'' என்று மெல்லிய குரலில் சொல்லுங்கள்...
வில்டாவிடம் சென்று ஐஸ் மெல்லிய குரலில் கிசுகிசுத்தான்...
டார்லிங், நான் தான்... காரிகன்!


மறுகணம் வில்டா ஆக்ரோஷ மாக திரும்பினாள்
க்ளிக்! க்ளிக்! க்ளிக்!
நல்ல வேளைக்கு துப்பாக்கியைக் கொடுக்கும் முன்பு தோட்டாக்களை எடுத்து விட்டீர்கள்! இல்லையேல் என்னை சுட்டுப் பொசுக்கியிருப்பாள்!
உன்னை யல்ல... மிஸ்டர் ஐஸ்... அவளுடைய கணவன், பிலிப் காரிகனை!
பின்னர்
மை டியர் ஓமார்...
-அற்புதம் சார். 'காரிகன்' என்ற பெயரைக் கேட்ட வுடனேயே வேட்டைப் புலி போல் மாறி விட்டாளே!
...என்னுடைய மருத்துவ ஆராய்ச்சிக்கும், மனோதத்துவ முறைகளுக்கும் தான் நன்றி சொல்ல வேண்டும். வில்டா இப்போது ஒரு வேங்கை! ஹீலியோஸ் தீவுக்கு வந்து அவளைக் காப்பாற்ற முயற்சி செய்யும் போது காரிகனே இதை அறிந்து கொள்வான்!
இதற்கிடையில்..
மிஸ்டர் காரிகன், டிராவல் ஏஜெண்ட் என்கிற முறையில் என்னுடைய வாடிக்கையாளர்களை எகியனில் எங்கு வேண்டுமானாலும் என்னால் கூட்டிச் செல்ல முடியும். ஆனால் ஹீலியோஸ் தீவுக்கு கூட்டிப் போக முடியாது!
டாக்டர் செவன் -ஒரு வருடைய விருப்பத்திற்கு எதிராக, மனோவசியப் படுத்துவது இயலாத காரியம் என்றல்லவா நான் நினைத்தேன்!
வழக்கமான சூழ்நிலை களில் நீ சொல்வது சரிதான் ஓமார்... ஆனால் -


மயக்க மருந்து காரணமாகப் பலவீனமாக இருக்கும் வில்டாவிடம் மனோவசியக் கட்டளைகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன! காரிகன் என்பது எதிரியின் பெயர் என்று அவளை நம்ப வைத்திருக்கிறேன்!
ஹீலியாஸ் தீவில் காரிகனுக்கு பயங்கர ஆச்சரியம் காத்துள்ளது!
அது தனியாருக்குச் சொந்தமானது. அங்குள்ள மாளிகையின் சொந்தக் காரர்கள், விருந்தினர்கள், ஊழியர்கள் மட்டுமே நுழைய அனுமதிக்கப் படுகிறார்கள்!
அப்படி யானால் நானே வேறு ஏற்பாட்டை செய்து கொள்ள வேண்டியது தான்!
கிரேக்க விமான தளம் ஒன்றில்..
இளவரசி, உங்களுடைய பைலட் நம்மை இப்படி 'அம்போ'வென தவிக்க விட்டு விட்டானே? இன்று இரவு ஹீலியாஸ் தீவில் நடக்கும் விருந்திற்கு சரியான நேரத்தில் போக முடியாதே!
எக்ஸ்கியூஸ் மி, உங்கள் பிரச்சனைக்கு நான் உதவக் கூடும். இதுபோன்ற விமானங்களை ஓட்டிச் செல்வதற்கு நான் தகுதி பெற்றவன். எனது பெயர் காரிகன்!
அதே சமயம் அருகில் உள்ள மதுபானக் கடையில் -
டாமி, ஏன் இந்தத் திடீர் கொண்டாட்டம்?
அந்த இளவரசியின் பைலட் வேலையிலிருந்து விலகிவிட ரொம்ப நாளாய் நினைத்துக் கொண்டிருந்தேன்! இன்றைக்கு எவனோ ஒரு பயல் வந்து வேலையிலிருந்து நின்று கொள்ள இவ்வளவு பணம் கொடுத்தான்! உடனே ராஜினாமா செய்து விட்டேன்!


தம்பி! விமான தளத்தில் சுற்றித் திரியும் யாரோ ஒருவனை தனது விமானியாக இளவரசி ஏற்றுக் கொள்வாள் என நினைக்கிறாயா?
ஐயா பெரியவரே... இப்போது இக்கட்டிலிருப்பது நீங்கள்தான் என்பதை மறந்து விடாதீர்கள்! உங்களிடம் இல்லையென்றால் -வேறு யாரிடமோ நான் வேலை வாங்கிக் கொள்வேன்!
வெயிட் மிஸ்டர் காரிகன்!
ஹீலியாஸ் தீவினுள் நுழைய வழியை கண்டார் காரிகன்...
என்னுடைய பைலட் வேலையை விட்ட உடன், நீங்கள் அங்கே இருந்தது ரொம்ப வசதியாகிப் போய்விட்டது மிஸ்டர் காரிகன்!
இது அதிர்ஷ்டம் என்றே நினைக் கிறேன் இளவரசி!
அத்துடன் எங்களுடைய முன்னாள் பைலட்டுக்கு நான் கொடுத்த இலஞ்சமும் தான்!
இதற்கிடையில்..
மிஸ்டர் ஓமார்.. நல்வரவு! மாளிகை தயாராக உள்ளது!
என்னுடைய விருந்தினர்களை நன்றாகக் கவனித்துக் கொள். குறிப்பாக டாக்டர் செவனையும் அவருடைய அழகிய நோயாளியையும் நன்கு பார்த்துக் கொள்!


ஹீலியாஸ் தீவில் விமானத்தை இறக்கினார் காரிகன்..
சிறிது நேரம் சென்ற பின்பு..
மிஸ்டர் ஓமார்! விமான நிலையத்திலிருந்து நமது ஆள் பேசுகிறேன்.. காரிகன் இங்கு வந்து விட்டானாம்!
அபாரமான செய்தி ஐஸ்! டிரியாட்டின் பழி தீர்க்கும் படலம் நெருங்கி விட்டது என்று டாக்டர் செவனிடம் சொல்ல வேண்டும்!
குட் நியூஸ் டாக்டர் செவன்! நம்முடைய "நண்பர்" வந்து விட்டார்!
பயிற்சி போதும் வில்டா... போய் உன்னுடைய ரூமில் ஓய்வு எடு!
அண்டை வீட்டில் வசிக்கும் இளவரசிக்குப் பைலட்டாக காரிகன் இங்கு நுழைந்துள்ளான். அவனுடைய வருகைக்கு நாம் தயார் தானே?
தாயார் தான் - மிஸஸ் காரிகனும் தயார் தான்!



டிரியாட்டில் உங்களுடைய பார்ட்னர் களில் ஒருவராக
நானும் இருப்பது மிகவும் பெருமையாக இருக்கு சார்!
வில்டா எந்த நிலையிலும் தன் கணவனை சுட்டுக் கொல்ல மாட்டாள்! ஆனால் எதிரி ஏஜெண்ட் ஒருவன் காரிகன் போல ஆள் மாறாட்டம் செய்துள்ளான் என்று நான் கூறியுள்ளதால் அவள் நம்பிவிட்டாள்!
இதுதான் எனது மாளிகையின் பழைய பகுதி மிஸ்டர். காரிகன்... ஆனால் வேலை யாட்கள் இங்குதான்...
இங்கே தங்குவதில் எனக்கு மகிழ்ச்சிதான் இளவரசி!
குறிப்பாக இந்த அறையிலிருந்து பார்த்தால் ஓமாருடைய மாளிகை தெரிகிறது! ஹ்ம்ம்ம்... கோட்டை மாதிரியுள்ளது அந்த மாளிகை!
காரிகனுக்கு மரண அடி எப்போது டாக்டர் செவன்?
முதலில் அவன் கோட்டை போலுள்ள இந்த மாளிகைக்குள் நுழைய நாம் வழி செய்ய வேண்டும்! ஒரு விருந்து ஏற்பாடு செய்வோமா?
காரிகன் ஓமாரின் மாளிகையை பைனுகுலர் மூலம் நோட்டமிட்டார்..
அந்த மாளிகையினுள் போவது கடினம்... அங்குள்ள வேலைக்காரர்களில் பெரும்பாலோர் காவலர் களாகவும் இருக்கலாம்!



ஆனால் வில்டா அங்கு இருந்தால் -எப்படி யாவது எந்த வழியிலாவது - நான் உள்ளே நுழைந்து விடுவேன்!
விருந்துக்கா, டாக்டர் செவன்? அற்புதமான ஐடியா! நான் விருந்து களைப் பெரிதும் விரும்பு பவன்!
அது காரிகனுக்கு நமது கோட்டை யினுள் நுழைய பல வாய்ப்பு களைத் தரும்!
கடற்கரையை ஒட்டியுள்ள குன்றுப் பகுதியில் அதிக காவலர்கள் இல்லை. இன்று இரவு - அட -பால்கனியில் வில்டா தெரிகிறாளே! ஜோஜஸ் அவளுக்குப் பின்னால் வேட்டை நாய் போல் நிற்கிறான்!
மை டியர் ஓமார்... காரிகன் தயாராகி விட்டான்... அவனைக் கண்ட உடன் "சூடான வரவேற்பு" கொடுக்க அவனது மனைவி காத்திருக்கிறாள்!
அபபடி யானால் விருந்து பற்றி இப்பவே எல்லோ ருக்கும் சொல்லி விடு கிறேன், டாக்டர்!
காரிகன் இவ்வளவு நேரம் எங்கு போயிருந் தீர்கள்? நான் ஏதன்ஸுக்கு உடனே போகணும்!
இளவரசி, என்னுடைய விமானி வேலை பற்றி... உண்மையைச் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது -


என்ன சொல்ல வேண்டுமானாலும் போகும் வழியில் சொல்லுங்கள்! ஓமார் ஒரு விருந்து கொடுக்கப் போகிறார். அதில் கலந்து கொள்ள எனக்கு புதிய பாஷனில் கவுன் இல்லை!
ஓமார் விருந்து கொடுக் கிறாரா?
யெஸ்! இதெல்லாம் பெண்கள் சமாச்சாரம்! எல்லாரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் புதிய உடையைக் கண்டு பிடித்து அணிய வேண்டும்! நீங்கள் ஏதோ சொல்ல வந்தீர்களே..?
ஒன்றுமில்லை இளவரசி!
விரைவில் ஏதன்ஸ் சென்று விட்டு... மீண்டும் திரும்பினார்கள் -
காரிகன் - நான் வாங்கி வந்திருக்கும் உடை எல்லோரை யும் கலக்கப் போகிறது!
என்ன பைத்தியக் காரத்தனமாய் உளறுகிறேன் என்று நினைக் கிறாயா, காரிகன்?
நோ! நோ!
மாளிகையில் நுழைந்து வில்டாவைக் காப்பாற்ற இதுதான் சரியான வழி!
வலை விரிக்கப் பட்டிருந்தது காரிகனுக்குத் தெரியவில்லை!
ஆளுக்கொரு வேஷம் போட்டுக் கொண்டு விருந்தில் பங்கேற்பது சூப்பர் ஐடியா டாக்டர் செவன்!


பிரச்சனையே இல்லை பார்ட்னர்..
என்னுடைய ஆட்கள் கையில் ஆயுதத்துடன் திரிவதற்கு சரியான காரணமாகி விட்டது! காரிகன்தான் எந்த உடையில் வருவான் என்பது நமக்குத் தெரியவில்லை!
...காரிகன் வந்த உடன் தன் மனைவியைக் கடத்திச் செல்ல முயற்சிப்பான்! அது போதுமே நமக்கு! வில்டா தானே நம் ஆயுதம்!
அந்த அருமையான வேளை நெருங்கி விட்டது -
என்னுடைய வழிமுறையில் திடீரென்று சந்தேகம் வந்து விட்டது போல் தெரிகிறதே?
ஒருக்கால் மிஸஸ் காரிகன் அவளது கணவனைக் கொல்லாமல் இருந்து விட்டால்...
நான் இருக்கிறேனே மிஸ்டர் ஓமார்! காரிகன் அவளுடைய மனைவியிடம் உயிர் பிழைக்கலாம்... ஆனால் இந்த ஜோஜஸை தாண்டி உயிருடன் போக முடியாது!
உங்களுடைய பணி தேவையிராது மிஸ்டர் ஐஸ்!
மிஸ்டர் ஓமார்தான் எனக்கு சம்பளம் கொடுக்கிறார் நான் என்ன செய்ய வேண்டும்... என்பதை அவர் சொல்லட்டும்!



மதிப்பு மிக்க கூட்டாளியே, உன்னுடைய விருப்பம்?
எல்லாமே கச்சிதமாக நடக்க வேண்டும் என்பதே என் அவா டாக்டர்! முன் ஜாக்கிரதை யில் என்ன தவறு?
தவறில்லை தான் பார்ட்னர்..! கடைசி கட்டமாக மிஸ்டர் ஐஸ்ஸைப் பயன் படுத்துங்கள் -அதுவரை அவனை நிறுத்தி வையுங்கள்!
மண்டைக் கனம் பிடித்த கிழவன்!
நிபுணர்களின் வழிமுறை கொஞ்சம் வினோதமாகத் தானிருக்கும்!
...நீ நெருக்கடி ஏற்பட்டால் மட்டும் வெளியே வா! இப்போது நான் விருந்துக்கு -அதாவது மிஸ்டர் காரிகனின் வருகைக்குத் தயாராக இருக்க வேண்டும்!
அதே நேரம் இளவரசியின் மாளிகையில் -
விரைவில் விருந்தினர் கள் வருவார்கள். அவர்களுடன் நானும் கலந்து விட வேண்டும் -அதற்கு எனக்கு மேக்கப் தேவைப் படுகிறதே!
காரிகன் உங்களுக் கொரு வேலை!
இளவரசி அழைத்தாள்...
இந்தப் பொம்பளை இப்பவும் எங்காவது பறந்து போக வேண்டு மென்று சொன்னால்..


காரிகன், விருந்தில் பங்கேற்க உங்களுடைய உதவி தேவைப் படுகிறது!
எ - என்ன உதவி?
நான் "பச்சை வனப் பாவையாக" வேஷமிட்டு வரப் போகிறேன்! என்னோடு ஒரு ராபின்ஹுட் இருந்தால் தான் பொருத்தமாக இருக்கும்!
ராபின் ஹுட் வேஷத்தில் விருந்துக்கு, உங்களுக்குத் துணையாக நான் வரவேண்டும் என விரும்பு கிறீர்களா?
எப்போதும் நான் சிடுமூஞ்சி முதலாளி யம்மா
இல்லை என்பதை உங்களுக்குக் காட்ட இது ஒரு சந்தர்ப்பம்!
அதைத் தொடர்ந்து -
இந்த வேஷம் மாளிகை யினுள் நுழைய வழி செய்து விட்டது!
ஆனால், இளவரசியின் கூடவே இருக்க வேண்டுமே?
காரிகன் வந்து விட்டான் ஓமார். அவனுடைய மனைவி வெளிவர இதுதான் தருணம்!
வில்டா, இப்போது நீ நான் சொன்ன ஆளைப் பார்க்க வேண்டிய வேளை வந்து விட்டது -விருந்தினர்களில் அவனும் ஒருவனாக இருப்பதைப் பார் - நான் சொன்னதில் எச்சரிக்கையாக இரு!
நான் தயாராகவே இருக்கிறேன் டாக்டர்...


மாளிகையின் கீழ்த் தளத்தில்...
காரிகன், நாம் கொஞ்ச நேரம் நடன மாடலாமே!
இளவரசியிட மிருந்து கழற்றிக் கொண்டு வில்டாவை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று கண்டு பிடிக்க வேண்டும் - அட -வில்டா! அவளருகே இருப்பது டாக்டர் செவன் அல்லவா?
ஓஹோ! டாக்டர் செவன் தான் பின்னணியில் இருந்திருக்கிறான்! அப்படியானால் 'டிரியாட்' மீண்டும் செயல்படத் துவங்கி விட்டது. ஓமார் புதிய பார்ட்னராகச் சேர்ந்திருக்கலாம்...! என்னைப் பழி தீர்க்க வில்டாவைக் கடத்தி வந்திருக்கிறான்!
செயலில் இறங்கிட வேண்டியது தான்!
காரிகன் -என்னை 'அம்போ' வென விட்டு விட்டு எங்கே போகிறீர்கள்?
ராபின் ஹுட் வேஷத்தில் ஒரு ஆசாமியைப் பார்த்தாய் அல்லவா...? அவன் நம்மை நோக்கி வருகிறான்! என்ன செய்ய வேண்டும் என்பது தெரியுமல்லவா?
யெஸ், டாக்டர்! நான் கொல்ல வேண்டிய ஆசாமி அவர் தான்!
இளவரசியை உதறிவிட்டு - விருந்தினர்கள் இடித்துத் தள்ளிவிட்டு வில்டாவையும் டாக்டர் செவனையும் நோக்கி ஓடினார் காரிகன்!


ஓமாரும் ஜோஜஸும் தூரத்திலிருந்தனர் -
காரிகன் தனது முடிவை நோக்கி போய்க் கொண்டிருக் கிறான்!
நானும் அவனைப் பின் தொடர் கிறேன்... அவனது மரணத்தை உறுதிப் படுத்திக் கொள்கிறேன்!
தற்செயலாக காரிகன் ஒரு நடமாட்டத்தைக் கவனித்தார் -
ஐஸ்! வில்டாவை என் கண்ணில் பட வைத்து -இவனிடம் என்னை மாட்டி விடத் தானு?
கொஞ்ச தூரத்திற்கு அப்பால்...
வில்டா -தயாராக இரு!
ராபின் ஹுட் வேஷத்தில் வந்தவன என் கணவனைப் போல இருக் கிறானே... அவனைத் தான் நான் கொல்ல வேண்டும்?!
டாக்டர் செவன் நடக்கப் போவதைக் கண்காணிக்க டி.வி. அறைக்கு வந்தான்...
காரிகனை பரலோகத் திற்கு அனுப்பும் காட்சியை பார்த்து ரசிக்க வேண்டியது தான்!
பழி வாங்கும் திட்டத்தில் சிக்கல் ஏற்பட்டது டாக்டருக்குத் தெரியாது!
ஐஸ் தொடர்ந்து வருகிறான்!


வேட்டைக்காரனை வேட்டையாட இதுதான் வேளை!
தொழில் முறையிலான இரு திறமைசாலிகள் மோதலில் இறங்கினர்! ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் காரிகன் ஜோஐஸ் மீது பாய்ந்தார்...
ஆனால் - திறமை மிக்க எதிராளியை மடக்குவது கடினமாயிருந்தது...
வெறும் கையால் உன்னைக் கொல்ல ஆசைதான்!.. ஆனால் உன்னைப் போன்ற திறமைசாலிகளோடு மோதும் போது ஆட்டத்தை 'சட்'டென்று முடிப்பதே விவேகம்!
ஐஸ் துப்பாக்கியை உருவிய போது காரிகனின் கைகள் தரை விரிப்பைப் பிடித்தன!
சரிசம மோதலில் எந்த ஒரு திருப்பமும் நிகழலாம்..


...இதைப் போல்!
இந்த வேஷத்தில் ஜஸ் என்னை அடையாளம் கண்டு விட்டான் என்றால் மற்ற காவலர்களுக்கும் தெரியும் என்று அர்த்தம்! வேஷத்தை மாற்றி விடுவது நல்லது!
கண்காணிப்பு அறையில் டாக்டர் செவனுடன் ஓமாரும் சேர்ந்து கொண்டான்...
ஏதாவது நடந்ததா? காரிகன் உங்களையும் வில்டா வையும் தொடர்ந்து வந்ததைப் பார்த்தேனே...
விரைவில் எதிர் பாருங்கள் தோஸ்த் - விரைவில்!
வில்டா இருந்த அறையின் கதவு திடீரென்று திறந்தது!
டார்லிங்! நான் தான்... காரிகன்!
வா - இங்கிருந்து தப்பி விடுவோம்!
அதற்குள் ஜோஜஸுக்கு சுய நினைவு திரும்பி யிருந்தது...
காரிகன் உடுப்பை மாற்றிக் கொண்டு விட்டானே! டாக்டர் செவனின் திட்டம் வெற்றி பெறுமா என்பது உறுதியாகத் தெரியவில்லை..!



...நான் 'ரிஸ்க்' எடுக்கப் போவதில்லை! திரும்பவும் என்னை முட்டாளாக்க அனுமதிக்க மாட்டேன்! இந்தத் தடவை அவன் சாக வேண்டும்!
கண்காணிப்பு அறையில்..
உன்னுடைய ஆள் ஜோஇஸ் போட்டிருந்த வேடத்திற்கு காரிகன் மாறி விட்டானே! என் திட்டத்தில் குறுக்கீடு செய்யாதே என்று உன்னை எச்சரித்திருந்தேன் -
ஆனால்... இதனால் பாதிப்பு எதுவும் இல்லை. அங்கே பாருங்கள்!
வில்டா, நான் தான் - காரிகன்! உனக்கு என்னாச்சு? நீ என்ன செய்கிறாய்?
அதிர்ந்து போய் நின்ற அவளது கணவனை முறைத்தபடி வில்டா நின்றாள்! அவளது விரல்கள் துப்பாக்கியின் விசையை இறுகப் பற்றின..
துப்பாக்கியை கடவிருந்த சமயத்தில் மூன்றாவது உருவம் ஒன்று அறையினுள் நுழைந்தது - அது ஜோஇஸ்!
என்னை வீழ்த்தி விட்டு வந்த போதே என்னைக் கொன்றிருக் கணும் பயலே...
..அந்தத் தவறுக்கு இப்போது வருந்தப் போகிறாய்!



திடீரென்று வில்டாவின் மனதில் டாக்டர் செவனின் மனோவசியத்தின் போது சொன்ன இரு உத்தரவுகளில் எதை நிறைவேற்றுவது என்ற குழப்பம் ஏற்பட்டது!
ராபின் ஹுட் வேஷத்தில் இருப்பவனைக் குறி வைப்பதா..? அல்லது என் கணவர் காரிகன் போன்று இருப்பவனைக் கொல்வதா?
காரிகன் ராபின்ஹுட் வேஷத்தை ஜோஜஸுக்கு மாட்டி விட்டதால் வில்டாவின் மனதில் குழப்பம்!
ராபின் ஹுட் வேஷத்தில் இருப்பவனைக் குறிவை என்று சொன்னார்! அதற்கு முன் - காரிகன் போல் இருப்பவனை குறிவை என்று சொன்னார்! யாரைச் சுடுவது?
அதே நேரம் கண்காணிப்பு அறையில்...
ஓமார்! நீயும் உனது மூளை கெட்ட முண்டம் ஜோஜஸும் சேர்ந்து எல்லாவற்றையும் நாசமாக்கி விட்டீர்கள்! உன் ஆட்களை சீக்கிரம் அந்த அறைக்கு அனுப்பு!
அப்போது கண்காணிப்பு அறையிலிருந்து ஒலி பெருக்கியில்...
தோட்டா சப்தம்!
டாக்டர் செவன்! அவள் யாரைச் சுட்டாள்?
குழப்பம் வில்டாவின் மனதைப் பெரிதும் பாதிக்க அவள் மயங்கி விழுந்தாள். தற்செயலாக துப்பாக்கி வெடித்தது...
..தோட்டா சப்தம் ஒரு கணம் ஜோஜஸ் கவனத்தைத் திருப்பியது. அதுவே காரிகனுக்குப் போதுமானதாக இருந்தது.



நாமிருவரில் யார் கில்லாடி என்பதை பின் ஒரு நாள் சாவகாசமாய் தீர்த்துக் கொள்வோம் ஜஸ். இப்போது இந்தத் திரைச் சீலைகளிலிருந்து நான் கயிறு தரிக்க வேண்டும்!
காவலர்கள் வில்டாவின் அறையில் நுழைந்து பார்த்த போது...
காரிகன் கயிற்று ஏணி தயாரித்து அவனுடைய மனைவியுடன் தப்பி விட்டான்!
அவர்கள் இருவரையும் பிடிக்க வெறித்தனமான வேட்டை துவங்கியது..
இந்தக் குன்றுக்கு கீழே நாம் அவர்களைக் கண்டு பிடித்து விடலாம். எல்லாரும் கீழே போய்த் தேடுங்கள்!
..அதேநேரம் காரிகன் வில்டாவுடன் ஹீலியாய் விமான தளம் நோக்கி விரைந்தார்..
இளவரசியின் விமானத்தை ஏதன்ஸிலிருந்து இங்கு திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்து விடுவேன்.. எனக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தை அவளே வைத்துக் கொள்ளட்டும்!
வானில் -
காரிகன்! என்ன நடந்தது? ஆழ்ந்த தூக்கில் இருப்பது போலவே உணர்கிறேன்.. எல்லாமே கெட்ட கனவாகத் தெரிகிறது!
பிரச்சனை முடிந்து விட்டது, டார்லிங்!
மீண்டும் டாக்டர் செவனையும் அவனுடைய டிரியாட்டையும் சந்திக்கும் போது அவனுக்கு சமாதி கட்டாமல் விட மாட்டேன்! இது உறுதி!
முற்றும்


லயன் காமிக்ஸ்
லயன் காமிக்ஸின்
11-வது
பிறந்த நாளைக்
கொண்டாடும் வகையில்
ஜூலை 1-ல்
வருகிறது
ஒரு மலர்!


ஜூலையில் வருகிறது! லயன் ஆண்டு மலர்!
லயன் காமிக்ஸ்
முழு நீள முழு வண்ணக் காமெடி ஸ்பெஷல்!
லக்கி லூக் தோன்றும்
பூம் பூம் படலம்!
விலை ரூ. 5/-


இன்ஸ்பெக்டர் டேநசரின் க்ரைம் க்விஸ் -20-
ஐந்து நிமிஷத்துக்கு ஒரு முறை இந்தக் காமெரா செயல்படும்! ஆனால் இதை முட்டாளாக்க ஒரு அருமையான ஐடியா வைத்திருக்கிறேன்!
இந்த போட்டோவை இப்படி காமெராவுக்கு முன்னால் வைத்து விட்டால் - நாம் இரும்புப் பெட்டியைக் காலி பண்ணும் வரை, யாரும் தெரியாது!
அதே சமயம் பாங்கின் கட்டுப்பாட்டு அறையில் -
பிரமாதம்! அது சரி - எல்லா காமெராக்களும் ஓடிக் கொண்டே இருக்குமா?
நோ சார்! ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை காமெராக்கள் இயங்கும்!
எல்லா வாடிக்கையாளர்களையும் கவனித்துக் கொண்டே இருப்பீர்கள் அப்படித் தானே?
யெஸ் சார்! காமெராக்கள் இயங்கமாலிருக்கும் ஐந்து நிமிடத்திற்குள் கொள்ளையடித்து விட்டு ஓடுவது என்பது சாத்தியம் கிடையாதல்லவா?
தொடர்ந்து -
ஹெ! ஹெ! காமெரா ஓடிக் கொண்டுள்ளது!
பெட்டியை நொடியில் திறந்து விடுவேன்!
ஆல்பி... இங்கே வா! ஏதோ தில்லுமுல்லு நடக்கிறது ஸார்!
எ - எப்படி கண்டு பிடித்தீர்கள் இன்ஸ்பெக்டர்?
அது தானே? இன்ஸ்பெக்டர் எப்படிக் கண்டுபிடித்தார்?

# கதைகள் செலக்ஷன் பற்றி...

வாசக நண்பர்களே,

16 கதைகளுக்கான விளம்பரத்தை வெளியிட்டு - அதிலிருந்து 10 கதைகளைத் தேர்வு செய்யச் சொல்லியிருந்தேன் அல்லவா? நிறையப் பேர் 8 கதைகளை யூகித்து விட்டனர். எனது செலக்ஷனுக்கான கரணங்களை தெரியப்படுத்த வேண்டுமல்லவா?

**கதை 1 : டெக்ஸ் வில்லர்**

No Surprises! லயன் வாசகர்களின் ஏகோபித்த நம்பர் - ஒன் ஹீரோ என்பதாலும்; கிட்டத்தட்ட ஒரு வருடமாக லயனில் சாகஸம் செய்யவில்லை என்பதாலும் - டெக்ஸ் வில்லர் எதிர்ப்பேயின்றி இடம் பெறுகிறார்! சரி தானே?

**கதை 2 : 'ஆர்டிக்கில் ஆர்ச்சி!'**

சமீபத்தில் வந்த "ஆர்ச்சியோடு மோதாதே" இதழுக்கு mixed reactions என்று ஏற்கனவே எழுதியிருந்தேன். 'காதில பூ' சமாச்சாரங்களை அவ்வளவாக ரசிக்க முடிவதில்லை என்று பலரும் அபிப்ராயப்படுவது புரிந்தது. இருந்தாலும் - தீவிர ஆர்ச்சி ரசிகர்களை (கொஞ்சமாவது) திருப்படுத்துவதற்காக இந்த செலக்ஷன்!

**கதை 3 : மாடஸ்டி பிளைஸி**

யதார்த்தமான - அதே சமயம் வித்தியாசமான பாணி மாடஸ்டியினுடையது! கார்வினின் take it easy policy ம், மாடஸ்டியின் அமைதியான ஆக்ரோஷமும் இந்தக் கதையின் சிறப்பம்சங்கள்! தரமான கதை என்பதால் இதற்கும் automatic செலக்ஷன்!

**கதை 4 : 'மின்னல் மனிதன்'**

புது ஹீரோ என்பதால் இவருக்கு சான்ஸ் அடித்துள்ளது. தனி இதழாகப் போடும் அளவிற்குப் பெரிய கதையும் அல்ல என்பதால் 'கூட்டத்தோடு கோவிந்தா' போட வைத்தேன்.

**கதை 5 : ரிப்போர்ட்டர் ஜானி**

திகில் காமிக்ஸ் தற்சமயம் வெளிவருவதில்லை என்பதால் ரிப்போர்டர் ஜானியின் கதைகளைப் படிக்க முடியவில்லை என்று பலர் ஆதங்கப்பட்டிருந்தனர்! மின்னலாய் செயல்படும் ஜானியின் மனோ வேகத்தை சித்தரிக்கும் இந்த சித்திரக் கதைக்கு அதனால் சான்ஸ்.



கதை 6 : ஸ்பைடர்

இந்த இதழின் to attraction! இந்தக் கதை உருவானது லண்டனிலோ - அமெரிக்காவிலோ அல்ல! நமது வாசக ஓவியர் (ரமேஷ், பெருங்களத்தூர்) தானே கதையெழுதி, அற்புதமாய் சித்திரம் வரைந்து அமர்க்களப்படுத்தியுள்ளார்! இது போன்ற அதீத திறமைசாலிகளை நமது வாசகர்களாகக் கொள்வதில் பெரிதும் பெருமிதம் கொள்கிறேன்! Great work ரமேஷ்! Congrats!

கதை 7 : லக்கி லூக்

காமெடி கௌ-பாய் லக்கியை தேர்வு செய்வதில் சிரமம் இருக்கவில்லை! முதலில் விளம்பரப் படுத்தியிருந்தபடி "மேடையில் ஒரு மன்மதன்" என்ற முழுநீளக் காமெடியை வண்ணத்தில் வெளியிடவிருந்தேன்! வண்ணத்தில் அச்சிடுவதற்கு அயல்நாட்டு நியூஸ் பிரிண்ட் தேவை. ஆனால் கடந்த 3 மாதங்களாக விண்ணை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும் காகித விலைகள் என் திட்டங்களை தரைமட்டமாக்கி விட்டன. முழு நீளக் கதையையே வெளியிடுவதென்றால் விலையைக் கூட்டியாக வேண்டும் - அல்லது பக்கங்களைக் குறைத்தாக வேண்டும்! இரண்டும் எனக்கு சம்மதமில்லை. So குட்டிக் கதையைப் போட்டு சரிக்கட்ட வேண்டியதாகியுள்ளது. Sorry!

கதை 8 : கேப்டன் பிரின்ஸ்

இன்னொரு உடனடித் தேர்டு இது! பிரின்ஸ் குழு அனைவரின் favourite என்பதால் என் வேலை லேசாகி விட்டது.

கதை 9 : மின்னல் படை

1994ன் best story ஆக தேர்வு செய்யப்பட்டுள்ள கதையின் (மரண மண்டலம்) நாயகர்கள் என்ற அந்தஸ்தில் செலக்ட் செய்யப்படுகிறார்கள்!

கதை 10 : காரிகன்

நவீன யுக ஜேம்ஸ்பாண்ட் இவர்தான் என்பது எனது opinion அமைதியான; ஆழமான ஸ்டைல்; உலகெங்கும் அலை பாயும் கதை பாணி; நம்பக் கூடிய எதிரிகள் அன்று பல ப்ளஸ் பாய்ண்ட்ஸ் இருப்பதால் காரிகனை தேர்ந்தெடுத்தேன்!

இந்தப் 10 ஹீரோக்கள் செலக்ட் ஆகியுள்ளனர் என்பதால் - வாய்ப்புக் கிடைக்காத பாக்கி 6 பேருக்கு பதவி இறக்கம் என்று ஆகாது! அவர்களது நேரம் நிச்சயம் வரும்!



S. விஜயன்

நண்பர்களே,

உங்களில் பலர் இப்போதுதான் பரீட்சைகளை எழுதி முடித்து விட்டு மார்க்குகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள்! இதோ - நீங்கள் மார்க் போட ஒரு சந்தர்ப்பம்! இந்த இதழ் முழுவதையும் படித்து விட்டு கதைகளுக்கு மார்க் போட்டு அனுப்புங்கள்! ஆவலுடன் ரிசல்ட்டிற்காக நானும் காத்திருப்பேன்!



– ஆசிரியர்

# லயன் Top 10 ஸ்பெஷல் மார்க் - ஷீட்!

1) அட்டைப்படம் ................................ [ ]

கதைகள் :

2) டெக்ஸ் வில்லர் ................................ [ ]

3) ஆர்ச்சி ................................ [ ]

4) மர்டஸ்டி பிளைஸி ................................ [ ]

5) மின்னல் மனிதன் ................................ [ ]

6) ரிப்போர்ட்டர் ஜானி ................................ [ ]

7) ஸ்பைடர் ................................ [ ]

8) லக்கி லூக் ................................ [ ]

9) கேப்டன் பிரின்ஸ் ................................ [ ]

10) மின்னல் படை ................................ [ ]

11) காரிகன் ................................ [ ]

12) கார்டூன் & புதிய பகுதிகள் ................................ [ ]

மொத்தம் [ /120 ]


வாசகர் பெயர் & முகவரி :


அடுத்த
வெளியீடு!
லயன்
காமிக்ஸ்
"இரத்தக் கரம்"
ரூ.4.50

லயன்

# Top 10 ஸ்பெஷல்!

லயன் காமிக்ஸ்




Tamil Comics Ulagam - King Viswa